கழக வெளியீடு: [illegible]௯௦

# தேவார ஒளிநெறிக் கட்டுரை

## [அப்பர்]

★

தணிகைமணி
ராவ்பகதூர், வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.
எழுதியது

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை—1

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

First Edition: Jan., 1959.

# THEVAARA OLINERIK KATTURAI
[APPAR]

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

98, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1100.

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

மருக்கு லாவு மறைவனத் தொன்றிய
திருக்க பாடம் திறந்தசொல் வேந்தனை
அருட் குலாவும் அறிவினை மூடிய
இருட்கபாடம் திறக்கவும் ஏத்துவாம்.

—திருக்கூவப் புராணம்.

திருஞானசம்பந்தப் பெருமானுடைய தேவார ஒளிநெறிக் கட்டுரை 1944 ஆம் ஆண்டிலும், ஒளிநெறி முதற்பகுதி 1946 ஆம் ஆண்டிலும் அடியேனால் வெளியிடப்பட்டன. பின்னர், சிவபிரான் திருவருட்டுணையாலும், சைவ சமயத்தின் ஏற்றத்தையும், தேவாரங்களின் பெருமையையும் நன்குணர்ந்து, ஒளிநெறியின் பதிப்புரிமையைப் பெற்ற திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முயற்சியாலும், ஒளிநெறியின் இரண்டாம் பகுதி 1950 ஆம் ஆண்டிலும், மூன்றாம் பகுதி 1954 ஆம் ஆண்டிலும் அச்சேறி வெளிவந்தன. அதன்பின் அடியேன் முருகவேள் பன்னிரு திருமுறை என்னும் நூல் வெளியீட்டில் ஈடுபட்டிருந்தமையால் அப்பர் பெருமானுடைய தேவார ஒளிநெறியும் கட்டுரையும் வெளிவரக் காலதாமதம் ஆயிற்று. இப்போது ஆண்டவன் திருவருள் கூடின நற்பயனால் அப்பர் தேவார ஒளிநெறிக் கட்டுரை அப்பர் பெருமானது திருப்பெயரைக்கொண்ட அச்சகத்திலேயே அச்சேறி வெளியாகின்றது. ஒளிநெறிப் பகுதிகளும் அச்சேறி வருகின்றன.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' எனவரும் அப்பர் திருவாக்கைக் கடைப்பிடித்துப் போற்றிக் கழகத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று ஊக்கத் துடனும், ஆக்கம் பெருகவும், நடத்திவரும் தலைவர் திருவாளர் வ. சுப்பையா பிள்ளை அவர்களும், அவர் களுக்குப் பக்கத்துணைவர்களாய் உடனிருந்து கழக வேலைகளை ஏற்று இயக்கிவரும் பிற பெரியார்களும், உதவியாளர்களும் திரு. நெல்லையப்பர் திருவருட் டுணையால் நீடூழி எல்லா நலங்களையும் பெற்று வாழ்வார்களாக.

"நாவரையர் புகழ்மொழிகள் வரைந்து கூறி
நயந்தவர்செய் திருத்தொண்டு வியந்து வாழ்வாம்"
—சேது புராணம்.

திருச்சிற்றம்பலம்

292, லிங்கசெட்டித்தெரு,
சென்னை-1.
15-12-1958.

வ. சு. செங்கல்வராய பிள்ளை.

# பதிப்புரை

தமிழகத்தின் தொன்மையான நன்மை நெறி சிவனெறியாகும். அந் நெறியின் சிறப்பு அருவுருவத்திருமேனியாகிய சிவக்குறியின் சீரிய வழிபாடாகும். சிவக்குறி எனினும் சிவலிங்கம் எனினும் ஒன்றே. சிவலிங்க வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்தது. அவ்வுண்மை மொகஞ்சதரோ, ஆரப்பா என்னும் இடங்களில் அகழ்ந்தெடுத்த புதைபொருள்களான் உணரலாம். அப்பொருள்கள் ஐயாயிரம் ஆறாயிரம் யாண்டுகளுக்கு முன்னுள்ளன என்ப.

சிவலிங்கப் பிழம்பானது நிலம், நீர், நெருப்பு, வளி, வெளி என்னும் ஐம்பூதங்களின் நடுவாகிய நெருப்புருவமாகும். நிலம் படைத்தலையும், நீர் காத்தலையும், நெருப்புத் துடைத்தலையும், வளி மறைத்தலையும், வெளி அருளலையும் குறிக்கும் அடையாளங்கள். சிவலிங்கம் நிலத்தை மறைத்து நிற்கும் ஆவுடையார் மேல் நிற்கின்றது. ஆவுடையார் பள்ளமாய் நீர்தங்கும் நீர்மையது. அது நீரின் அடையாளமாகும். தூண் போன்று மேலோங்கும் பிழம்பு தீயின் அடையாளமாகும். எனவே உருவாகத் தெரியும் மூன்று பூதங்களின் அடையாளம். இம் மூன்று தொழில்களும் உருவாகிய உடம்பைப் பற்றியன. வளியும் வெளியும் கட்புலனாகா அருவென்ப. அவ்விரண்டும் புலனாகா உணர்வின்கண் நிகழ்வனவாகிய மறைத்தல் அருளல்களைக் குறிப்பன. ஞாயிறுந் திங்களும் தீயின் இனமாவன. ஆருயிர்கள் ஆண்டவன் அடிமையாவன.

சிவலிங்க அருவுருவத்தினின்று முதற்கண் தோன்றிய திருவுருவம் கூத்தப்பெருமானாகிய அம்பலவாணர் திருவுருவமாகும். இத் திருவுருவம் ஐந்தொழிற் பண்பும் ஒருங்கமைந்த திருவுருவமாகும். இத் தொழிற் பண்புகள் தனித்தனியமைந்த திருவுருவங்கள் முறையே வருமாறு: பிள்ளையார், முருகர், தென்முகச் செல்வர், அம்மை, சிவலிங்கம். இவைகளே திருக்கோவில்களி

வின்றியமையாது இருக்கவேண்டிய படிமங்களாகும். இம் முறையாகத் தனித்தமிழ்த் திருக்கோவில் விரிவடைந்துள்ளது. இவ் விரிவு "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின்" என்னும் செந்தமிழ்மறையுடன் மாறுபடுமோ? எனின், படாதென்க; என்னை? இவையனைத்தும் ஒன்றனுடைய பல்வேறு பண்புகளாகத் திகழ்கின்றமையான் என்க.

இத்தகைய ஒரு விழுமிய முழுமுதலாகிய சிவபெருமானை முதன்மையாகக் கொண்டு அழியா வழிபாடு தனித்தமிழால் செய்துய்ய வழிகாட்டுவது திருமுறைகள் என்ப. அவை பன்னிரண்டென்ப. அவற்றுள்ளும் ஏழு திருமுறைகள் தேவாரம் என்ப. திருவருளாற்றல் ஏழாதலின் முதன்முறைகள் ஏழாயின. திருவருட்டொழில்கள் ஐந்தாகலின் எஞ்சிய திருமுறைகளும் ஐந்தாயின. மேலும் நம் அருந்தமிழ் மொழியின் ஆவி எழுத்துக்கள் ஏழும் ஐந்தும் ஆகிய பன்னிரண்டாதலின் திருமுறைகளும் பன்னிரண்டாயின என்றலுமொன்று எனவே திருமுறைகள் செந்தமிழ் மொழிக்கு ஆவி போன்றன என்பது துணிபு.

ஏழு திருமுறைகளுள் முதன் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தப் பெருமானாராலும், அடுத்த மூன்று திருமுறைகள் திருநாவுக்கரசு நாயனாராலும், மற்றொரு திருமுறை நம்பியாரூரராலும் நவின்றருளப்பட்டனவாகும். முதன் மூன்று திருமுறைகளுக்கும் கழக வாயிலாகத் "தேவார ஒளிநெறிக் கட்டுரை" வெளிவந்துள்ளது. அதுபோல் அடுத்த மூன்று திருமுறைகளுக்கும் "தேவார ஒளிநெறிக் கட்டுரையாக" இது வெளிவருகின்றது. கட்டுரையின் சிறப்பியல்பு, ஆசிரியரின் தனி மாண்பு அனைத்தும் அந் நூற்பதிப்புரையின்கண் விரிவாக எழுதப்பட்டுள்ளன. ஈண்டுச் சுருக்கமாகத் தருகின்றோம்.

திருநாவுக்கரசு நாயனார் கைத்தொண்டும் வாய்த்தொண்டு மாகிய இருவகைத் திருத்தொண்டும் ஒருங்கு புரிந்த பெருந் திருவினராவர். முன்பு சமண சமயம் புகுந்து பின்பு தமக்கையார் வேண்டுகோளின்படி திருவருளால் பழைய சைவ சமயம் வந்தாராவர். அதனால் அவர் அருளிய திருமறை மிக்க உறுதியுடையதாகும். அவ்வுண்மை வழிபாட்டுக்குச் சிறந்த "திருவங்க

மாலை ''யாலும், ஐந்தொழில் கடவுளர்க்கும் வேண்டப்படும் தனித்தனியாகிய " ஐந்து போற்றித் திருத்தாண்டகங்க ''ளாலும் நன்கு பெறப்படும். இது பற்றியே " சொற்குற்றிக்கு அப்ப ரெனச் சொல் ''என்னும் பெருவழக்கும் தோன்றிற் றென்க.

இதன்கண் 1. கணபதி முதல் 194 சீவராசிகள் ஈருகப் பெருந்தலைப்புக்கள் காணப்படுகின்றன. உட்டலைப்புக்கள் பல. இவற்ருல் பெறப்படும் பொருள்கள்: நாயனார் திருவரலாற்றுக்கு வேண்டும் அகச்சான்றுகள், அகப்பொருட் பகுதிகள், இலக்கண இலக்கியங்கள், அடியார்க்கு ஆண்டவன் செய்யும் அருளிப் பாடுகள், அல்லாதார்க்குச் செய்யும் ஒறுத்தல்கள், ஆண்டவன் பால் வேண்டும் வேண்டுகோள்கள், அறிவியற்றுறைகள், உலகியன் முறைகள், பழமொழிகள், திருவுருவச் சிறப்புக்கள், திருவிழாச் சீர்மைகள், வழிபாட்டு முறைகள், மெய்ப்பொருள் நூற்கருத்துக்கள், அடியாருடனுறையும் இன்பப்பேறுகள், திரு ஊர்ச் சிறப்புக்கள், மன்னர் முறைமைகள், யாப்பு, அணி முதலிய வனப்புக்கள், வழிபாட்டின் இன்றியமையாமை, பிறவிப் பெரும் பயன் முதலிய பலவாம். தேவாரத்தில் ஆங்காங்குக் காணப் படுவனவற்றை முறைப்படுத்தி எளிமையும் இனிமையும் பொதுள ஆசிரியரவர்கள் அரிது முயன்று நன்ருக யாத்துள் ளார்கள். இந்நூலைக் கற்பார் தேவாரத்தின் முழுப் பயனையும் உணர்வதோடு அதனைக் கற்கும் வாயிலையும் வேட்கையினையும் ஒருங்கு பெறுவர்.

இவ்வரும் பெருந் திருத்தொண்டினைச் செய்ய அளவிறந்த பொறுமையும், பல்லாண்டுகளின் இடைவிடா முயற்சியும், வல்ல தவநிலையும், நல்ல அருட்டுணையும், பன்மொழிப் புலமையும் ஒருங்கமைந்த நம் சிவத்திருவினர் தணிகைமணி ராவ்பகதூர், வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. அவர்களே தக்கவராவர். இவர்களால் யாக்கப்பெற்ற சம்பந்தப் பெருமானின் "தேவார ஒளிநெறி '' மூன்று பகுதியும், "தேவார ஒளிநெறிக் கட்டுரை '' யும் கழக வெளியீடாக வந்துள்ளன. அப்பரடிகளின் "தேவார ஒளிநெறி '', அச்சாகிக்கொண்டிருக்கின்றது. இதுபோல் நம்பி யாரூரரின் "தேவார ஒளிநெறியும் கட்டுரையும் '' விரைவில் வெளிவரத் திருவருள் தண்ணளி புரியுமாக. மெய்யன்பர்களும்

இவைகளை வாங்கியும் வாங்குவித்தும் ஊக்குவிப்பார்களாக. இவ்வருந் திருத்தொண்டினைப் புரிந்தளித்த நற்றவப் பெரியார்க்குக் கழகத்தார் நன்றி என்றும் உரித்தாகுக.

இந் நூலினைப் பொதுவாகச் செந்தமிழன்பர்களும், சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் வாங்கியும் வாங்குவித்தும், கற்றும் கற்பித்தும் பெரும்பயன் எய்துவார்களாக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| கட்டுரைத் தலைப்பின் எண் | பொருள் | ஒளிநெறியில் இத் தலைப்பிற்குரிய தலைப்பின் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | கணபதி | 1 | 1 |
| 2. | அகப்பொருள் | 3 | 1 |
| 3. | அங்கங்களுக்கு வேலை, பயன் முதலிய | 4 | 4 |
| 4. | (1) அடியார் நிலை, செய்கை | 5 (1) | 5 |
| ,, | (2) ,, தொண்டு வகை, தொண்டின் சிறப்பு | 5 (2) | 6 |
| ,, | (3) ,, பெருமை | 5 (3) | 6 |
| ,, | (4) அடியார்களும் இறைவனும் | 5 (4) | 7 |
| ,, | (5) அடியார் அல்லாதாரும் இறைவனும் | 5 (5) | 9 |
| 5. | அடுக்குச் சொற்கள் | 6 | 10 |
| 6. | அப்பர் தமது பழைய நிலையைப் பற்றிக் கூறுவது | 7 (1) | 10 |
| 7. | ,, தம் குறைகளை எடுத்துக் கூறுவது | 7 (6, 7) | 14 |
| 8. | அப்பர் இறைவனிடம் வேண்டும் வேண்டுகோள்கள் | 7 (8) | 16 |
| 9. | ,, தம் நிலையை எடுத்துக் கூறுவது | 7 (10)-8 | 18 |
| 10. | அப்பரும் இறைவனும்-பத்திநிலை பெற்ற பேறு | 8 | 20 |
| 11. | அப்பரது தீரம், உறுதி | 7 (10) | 21 |
| 12. | அப்பர் திருவாய்மூரிற் கண்ட காட்சி | 7 (11) | 23 |
| 13. | ,, திருப்பூவணத்திற் கண்ட காட்சி | 7 (12) | 24 |
| 14. | ,, பிற தலங்களிற் கண்ட காட்சி | 7 (13)-8 | 25 |
| 15. | ,, கனவில் இறைவனைக் கண்டது | 7 (14) | 24 |
| 16. | தில்லையிற் பெருமானது நடன தரிசனத்தைக் காண விரும்பினது | 7 (15) | 25 |
| 17. | தரிசனம் பெற்ற விவரங்கள் | 7 (16) | 25 |

| | | | |
|---|---|---|---|
| 67. | சிவபிரான் கோவணமும் கீளும் | 55-6 | 74 |
| 68. | ,, காதில் அணிவன | 56 | 74 |
| 69. | ,, காலில் அணிவன | 57 | 75 |
| 70. | ,, கையில் (தோளில்) ஏந்துவன | 58 | 75 |
| 71. | ,, அபிடேகப் பொருள்கள் | 59 | 76 |
| 72. | ,, அர்த்தநாரீசுரர் | 60 | 76 |
| 73. | ,, அழகர் | 61 | 77 |
| 74. | ,, அறம் உரைத்தது | 62 | 77 |
| 75. | ,, ஆடை, உடை (போர்வை) | 63 | 78 |
| 76. | ,, இருவர்க்கு அரியர் | 64 (1) | 78 |
| 77. | ,, சிவனும் இருவரும் | 64 (2) | 79 |
| 78. | ,, உறைவிடம் | 65 | 79 |
| 79. | ,, கொடி | 66 | 81 |
| 80. | ,, சடை | 67 | 82 |
| 81. | ,, தன்மை முதலிய | 68 | 82 |
| 82. | ,, தக்ஷிணாமூர்த்தி | 69 | 118 |
| 83. | ,, திருவுருவம் [திருவடி முதல் முடிவரை, நிறம், வண்ணம் முதலிய] | 70, 77, 83 | 118 |
| 84. | ,, திருஓலக்கக் காட்சி | 71 | 127 |
| 85. | ,, திருநாமமும், நாமவிசேடமும் | 72, 73 | 128 |
| 86. | ,, தேர் | 74 | 130 |
| 87. | ,, நஞ்சு உண்டது | 75 | 130 |
| 88. | ,, நடம் | 76 | 131 |
| 89. | ,, படை | 78 | 134 |
| 90. | ,, பராக்ரமம் | 79 | ,, |
| 91. | ,, பலி ஏற்பது | 80 | 135 |
| 92. | ,, பாம்பாட்டுதல் | 81 | 136 |
| 93. | ,, மணாளன் | 82 | ,, |
| 94. | ,, வாகனம் | 84 | ,, |
| 95. | ,, விரும்புவன | 85 | 137 |
| 96. | ,, வேடங்கள் | 86 | 138 |
| 97. | ,, வைதல் | 87 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 98. | சிவனும் இசையும் | 88 | 138 |
| 99. | ,, எண்ணும் | 89 | 139 |
| 100. | ,, கதிர்களும் | 90 | 140 |
| 101. | ,, காரியும் | 91 | ,, |
| 102. | ,, கொன்றையும் | 92 | ,, |
| 103. | ,, சித்தியும், சித்தரும் | 93 | 141 |
| 104. | ,, சுடரும் சோதியும் | 94 | ,, |
| 105. | ,, ஞாயிறும் | 95 | ,, |
| 106. | ,, தமிழும், வடமொழியும் | 96 | 142 |
| 107. | ,, தானவரும் | 97 | ,, |
| 108. | ,, திருநீறும் | 99 | ,, |
| 109. | ,, திருமாலும் | 98-1, 128 | 143 |
| 110. | ,, தேவர்களும் | 98-2 | ,, |
| 111. | ,, நாளும் | 100 | 144 |
| 112. | ,, பாட்டும் | 102 | ,, |
| 113. | ,, பார்வதிதேவியும் | 103 | 145 |
| 114. | ,, பிரமனும் | 104, 152-3 | ,, |
| 115. | ,, மந்திரமும் | 105 | 146 |
| 116. | ,, மூவரும் | 106 | ,, |
| 117. | ,, வெண்மையும் | 107 | ,, |
| 118. | சைவ ஒழுக்கம், சின்னம் | 108 | ,, |
| 119. | சொல்லழகு, பொருளழகு | 109 | 147 |
| 120. | ஞாயிறு | 110 | ,, |
| 121. | ஞானம்—சிவனும் ஞானமும் | 111 | ,, |
| 122. | தலங்கள்—தலங்களைப்பற்றிய குறிப்புக்கள் | 112 | 148 |
| 123. | ,, ஆற்றங்கரையன | 113 | 194 |
| 124. | ,, கடற்கரையன | 114 | ,, |
| 125. | தலநாமங்களைக் கூறுதலின் விசேடம் | 115 | 195 |
| 126. | தலப்பெயர்ப் பாகுபாடு | 116 | ,, |
| 127. | தலமும் கோயிற்பெயரும் | 117 | 196 |
| 128. | தலம்—சுவாமி பெயர்—தேவி பெயர் | 118 | 197 |
| 129. | தலத்துக்கு ஏற்ற சுவாமி பெயர் | 119 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 130. | தலப்பெயரே கடவுளின் பெயர்— கடவுட்பெயரே தலப்பெயர் | 120 | 197 |
| 131. | தலங்கள்—தேர்விழாத் தலங்கள் | 121 | 198 |
| 132. | தலமும் பதிக எண்ணும் முற்சேர்க்கை II III | | ,, |
| 133 | (1) திங்கள் | 122 | 199 |
| | (2) திங்களும் சிவனும் | 123 | ,, |
| 134. | தியானம்—பலம் | 124 | ,, |
| 135. | திருநீறு, நீற்றணி பெருமை, திருநீறிடும் முறை | 125 | 200 |
| 136. | திருமால் | 126, 127 | ,, |
| 137. | திருவிளையாடற் சரிதங்கள் | 129 | 201 |
| 138. | தீர்த்தங்கள் - தீர்த்தங்களும் சிவனும் | 130 | 202 |
| 139. | தென்றல் | 131 | 203 |
| 140 | தேவர்—தேவதைகள் | 132 | ,, |
| 141. | தொகை | 133 | 204 |
| 142. | நகைகள் | 134 | ,, |
| 143. | நடையழகு | 135 | ,, |
| 144 | நாகரிக நிலை | 136 | 207 |
| 145. | நாடும் நிலமும் | 137 | ,, |
| 146 | நாயன்மார் | 138 | 208 |
| 147. | நீதிவாக்கியங்கள் பழமொழிகள் | 139 | 210 |
| 148 | நெஞ்சம்—மனம் | 140 | 214 |
| 149. | நோய், நோய்தீரும் வழி | 141 | 215 |
| 150. | பஞ்சம் | 142 | 216 |
| 151. | பதிக வகைகள்—பண்களும் பதிகங்களும் பதிகங்கள் — இயற்றமிழின் படி | 144, 143 | ,, |
| 152. | பதிகங்களின் பாகுபாடே பொருள் வழி | 145 | 217 |
| 153. | பயனற்ற செயல்கள் | 146 | 218 |
| 154. | பழக்க வழக்கங்கள் | 147 | ,, |
| 155. | பழங்கள் | 148 | 220 |
| 156. | பாடல் விசேடங்கள் | 149 | ,, |
| 157. | பாடல் அமைப்புக்கள் | 150 | ,, |
| 158. | பார்வதிதேவி | 151 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 159. | பிரமன் | 152 | 223 |
| 160. | பூதம், பூதமும் சிவனும் | 154 | ,, |
| 161. | பேய்கள், பேய்களும் சிவனும | 155 | 224 |
| 162. | பொழில்—சோலை | 156 | ,, |
| 163. | பொன்—மணி முதலிய | 157 | ,, |
| 164. | போற்றித் துதிகள் | 158 | 225 |
| 165. | மக்களைக் குறிப்பன | 159 | ,, |
| 166. | மரமும் மலரும் | 160 | 226 |
| 167. | மலரும் சிவனும் | 161 | 228 |
| 168. | மழை—மேகம் | 162 | ,, |
| 169-1. | மறை-வேதம் | 163 (1) | ,, |
| 169-2. | மறை, மறையோர் | 163 (2) | ,, |
| 170. | மாணிக்கவாசகர் | 165 | 229 |
| 171. | மாதர்கள் | 166 | ,, |
| 172. | மார்க்கண்டர் | 167 | 231 |
| 173. | முனிவர்கள் | 168 | ,, |
| 174. | முருகவேள் | 169 | 232 |
| 175-1. | யாக்கை வர்ணனை | 170 (1) | ,, |
| ,, -2. | மூப்பு வர்ணனை | 170 (2) | 233 |
| ,, -3. | வாழ்க்கை வர்ணனை | 170 (3) | ,, |
| ,, -4. | பிறப்பு அறுக்கும் வழி முதலிய | 170 (4)-(6) | 235 |
| 176. | ராமரும் ராமாயணமும் | 171 | ,, |
| 177. | ராவணன்—செய்திகள் | 172 | 236 |
| 178. | வண்டு | 173 | 238 |
| 179. | வயல்—கழனி | 174 | 239 |
| 180. | வர்ணனைகள் | 175 | ,, |
| 181. | வரலாறுகள் | 176 | 241 |
| 182. | வழிபட்டுப் பேறு பெற்றோர் | 177 | 242 |
| 183. | வழிபாடு—பூசை முதலிய | 178, 179 | 243 |
| 184. | வழிபாடு—தேவர்கள் செய்வது | 180 | 244 |
| 185. | வழிபாட்டின் பயன் | 181 | 245 |
| 186. | (1) வாத்தியங்கள்<br>(2)—(5) வாத்தியங்களும் சிவனும் முதலிய | 182 | 246 |

(2) தலைவர் நோக்கு: கண் அம்புகொண்டு எய்வது போல உள்ளது.

(3) தலைவர் பேச்சு: அவர் இட்டம்பேசுவார், கனலப் பேசுவார், சீறிப் பேசுவார், சுவைபடப் பேசுவார், பட்டிமையும் படிறும் பேசுவார், பித்தர் போலப் பெருமை பேசுவார் மாயம் பேசுவார்.

(4) தலைவர் ஊர்: தமது ஊர் திருவொற்றியூர் என்பர்; அவர் சென்ற ஊர் புறம்பயம், அவர் செல்லும் ஊர்கள்—ஆமாத்தூர், நல்லூர், நனிபள்ளி, நள்ளாறு, பாசூர், மறைக்காடு, வலம்புரம், வீழிமிழலை. அவரது புராதன ஊர் பழனம்.

(5) தலைவர் பலிகொள்ள வரும் கோலம்: தோள்மேல் ஐந்தலைய நாகம்; கையில் ஆடரவு, ஓடு, தலைமாலை, புத்தகம், மான், மழு, வீணை; ஆமைபூண்டு, இசைபாடிக் கொண்டு வருவார்; மனத்திலே கள்ளம், தலையிலே மூளைத் திங்கள், கங்கை, கொன்றை; மார்பிலே முந்நூல்; அரையிலே கோவணம், பட்டுடை, புலித்தோலுடை; மேலெலாம் திருநீறு; ஏறேறிவருவர், பூதஞ்சூழ வருவர், முனிகணங்களுடன் வருவர்.

(6) தலைவி தான்கண்ட காட்சியையும் தன் நிலையையும் கூறுதல்: அடிகள் பலி என வந்தார், பலியும் கொள்வதில்லை, போவதும் இல்லை; அவர் நோக்கின நோக்கு என் கண்களில் அப்படியே நிற்கின்றது; பிச்சை இடு என்றார், வந்து பார்த்தாற் காணோம், கள்ளவிழி விழிப்பார், தமது இருப்பிடம் ஒரிடமாகச் சொல்கின்றாரில்லை. கனவில் அவரைப் பார்த்தேன். பார்த்தது முதல் அவர் என் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை. நீர் கள்ளரோ புகுந்தீர் என்றேன்; அதற்கு அவர் சிரித்து, இல்லை நாம் வெள்ளர் தாம் என்றார். என் கை வளையை ஒன்றொன்றாக எண்ணிப் பார்த்தார். இனி ஒருநாள் நான் அவரைப் பார்த்தால் அவரை என் மார்பகத்தே அணைத்து அவரைப் போக

...ட்டேன். அவர் தவிர வேறு துணை இல்லை எனக்கு; அவர்மீதே எனக்கு மயக்கம் - ஆசை.

(7) தலைவியின் நிலையைத் தாயும் தோழியுங் கூறுவது: என் பெண்கொடி தலைவர் வரமாட்டாரோ என்று கண்ணீர் விடுகின்றாள்; வருவாரா என்று கூடல் இழைத்துப் பார்க்கின்றாள்; கிளி, குயில், குருகு, தென்றல், நாரை, பூவை, வண்டு, தாழை, நெய்தல் இவைகளிடம் முறையிட்டுத் தூது விடுகின்றாள்; தலைவரை இவள் பார்த்திருப்பாள்போலத் தோன்றுகின்றது. ஏனெனில்—"ராவணனை அடர்த்தவனே! அப்பாலைக் கப்பாலானே! சூலபாணியே! மழுஏந்திய மைந்தா! பட்டு உடையனே! வெண்டலையிற் பலி கொள்பவனே! ஊரூராய்த் திரிபவனே! புரமெரித்தவனே! பளிங்குக் குழைக் காதனே! வெண்ணீற்றனே! கங்கைச் சடையனே! மாலை மார்பனே! குங்கும மேனியனே! நிகர்புன் சடையனே! வீணை பயிலும் விரலவனே! பாடலோடாடலனே! ஆனேற்றனே! பானீற்றனே! பவள நிறத்தினனே! திங்கள் சூடியே! நால்வர்க்கு அறம் உரைத்தவனே! பிஞ்ஞக வேடத்தனே! மணிமிடற்றனே! அரவச் சடையனே! கொன்றைச் சடையனே! வானவர்க்கும் தானவனே! எருக்க மலர் அணிபவனே! முக்கண்ணனே!"—என்றெல்லாம் கூறுகின்றாள்: உள்ளம் உருகுகின்றாள்; என்னை ஏன்றுகொள் என்கின்றாள்; தலைவர் இருப்பிடமோ சுடுகாடு, உற்றாரோ பேய்க்கணங்கள், உண்பதோ வெண்டலை ஓட்டில், உடலிலேயோ ஒரு பெண்கொடி—இங்ஙனம் தலைவரது கோலம் இருக்க இவள் எப்படி—எதைக் கண்டு அவரிடம் அன்பு கொண்டாள்! அவர் நாமங்களிலேயே அவள் உள்ளம் ஊசலாடுகின்றது; அவரைக் காணவேண்டுமென்று கைகூப்புவாள், கண்ணீர் விடுவாள்; முக்கண் மூர்த்திக்குத் தன்னையே அர்ப்பணம் செய்வேன் என்கின்றாள். ஆவடுதுறை அரன்தான் என்னை உடையவன் என்கிறாள். அவரது பக்கத்தில் இமவான் மகளைக் கண்டும் அவரை விரும்புகின்றாள்; அவரது தலைமேல் ஒரு பெண்ணைக் கண்டும் அவருக்கு நல்லவளாயிருக்கின்றாள். அவருக்கு நான் தாதி என்கின்றாள். புகலூரரே

என்பாள்; உடனே வைவளை சோரும்; அவர் தமது கொன்றைமாலையை இவளுக்குக் கொடுத்தால் இவளது சித்தம் தேறும்; கைவளை நிற்கும், பசலை தீரும். நீ இப்படி இருப்பது நன்றன்று, வீட்டிலேயே இரு என்றால்—நீ யார் எனக்கு நீதி சொல்ல—என்கின்றாள். அவர் நாமங்களையே கூறி அரற்றுவாள்; அவர் மாலையை வேண்டி முறையிடுகின்றாள்; கங்கைக்கும், பக்கத்திலுள்ள மங்கைக்கும் தெரியாமல் இந் நங்கைக்கு எங்கு வாங்கிக்கொடுத்தார் கொன்றைமாலையை? அவருடன் லீலை செய்வதால் இவள் இறுமாந்து யாரையும் மதிப்பதும் இல்லை, அஞ்சுவதும் இல்லை; முதலில் அவர் பெயரைக் கேட்டாள், அவர் இருக்கும் தன்மையைக் கேட்டாள். பின்னர் அவர் ஊர் ஆரூர் என அறிந்தாள், அவருக்கே இவள் பிச்சி ஆனாள்; தாயையும் தந்தையையும் துறந்தாள்; உலகினருடைய ஆசாரங்களை விட்டொழித்தாள்; தன்னையே மறந்தாள், தன் பெயரையும் மறந்தாள்; தலைவன் தாளிலேயே ஒன்றுபட்ட மனத்தினளாயினள்.

## 3. அங்கங்களுக்கு வேலை, பயன் முதலியவை

[4]

ஆக்கை: அரன் கோயிலை வலம் வரவும், கையாற் பூசித்துத் தொழவும், வாயாற் போற்றவும் வேண்டும்.

கண்: இறைவனுடைய ஆடல், உடுத்த துகில், கச்சின் அழகு, கழுத்தில் விளங்கும் பன்றி எயிறு, சிரித்த முகம், சூடியுள்ள மத்தமலர், திருவடி, கால்விரல், நெற்றிக்கண்—இவைகளைக் கண்டபின் வேறு காண்பதற்கு ஒன்றுமில்லை. முகமெலாம் கண்ணீர் மல்க இறைவனைப் பணிந்தேத்த வேண்டும்.

கால்: இறைவனது தலமாம் கோகரணத்தை நாடிச் சூழவேண்டும்.

கை: இறைவனைக் கூப்பித் தொழவும், நகமெலாம் தேயப் (பூப் பறித்தும் மலர்மாலை கட்டியும்) புதுமலரிட்டுத் தொழவும் வேண்டும்.

செவி: இறைவனது திறத்தையே எப்போதும் கேட்க வேண்டும்.

தலை: இறைவனை வணங்கி ஏத்த வேண்டும். அதன் பொருட்டே இறைவன் (நமக்குச்) சென்னியைத் தந்துள்ளார்.

நா: இறைவனைப் புகழவும், ஐந்தெழுத்தை (நமது) படைக்கலம் எனக் கொண்டு ஓய்வின்றி நவிலவும் (ஜெபிக்கவும்) வேண்டும்.

நெஞ்சு: தன்னை நினைப்பதற்கே இறைவனால் நெஞ்சம் நமக்குத் தரப்பட்டது.

மூக்கு: (இறைவனுடைய திருவடி மலரின் மணத்தை) மோத்தல் வேண்டும்.

வாய்: 'சிவாயநம' எனக்கூறித் (திருநீறணிந்து) இறைவனை வாழ்த்தவேண்டும்.

இங்ஙனம் பணிசெய்யா அங்கங்களாற் பயன் ஒன்றும் கிட்டாது.

## 4. (1) அடியார் நிலை, செய்கை [5 (1)]

அடியார்கள் அகங்குழைந்து மெய்வருந்தி அழுவார்கள். பக்தி மேலீட்டால் விம்முவர், வெருவுவர், விழிப்பர், தெழிப்பர், வெருட்டுவர், தம்மை மறந்து தலையால் முட்டுவர், வாயாரப் பாடுவர், பேயர்போலிருப்பர், சிலம்பணிந்து கூத்தாடுவர், வெள்ளைத் திருநீறு அணிவர்; இரவில் துயிலின்றி ஏத்துவர்; குறையாத உவகைக் கண்ணீரும் ஆறாத ஆனந்தமும் கொள்வர்; திருநீறணிந்து தரையிற் புரள்வர், தாள் சரணென்று கூறி ஆனந்திப்பர்; சித்தம் உருகுவர்; சிவன் எம்பிரான் என்பர்; பித்தரைப்போலப் பிதற்றுவர்; தனத்தினை விரும்பார்; சிவயநம என ஓதித் துன்பக் கடலை நீந்திக் கரை ஏறுவர்; நகம் தேய மலர் பறித்துப் பூசித்துக் கண்ணீர் மல்கப் பணிவர்; கூட்டங்

களில் தரிசனத்துக்கு முன் செல்லும் அடியார்களிடம் 'நானும் நுழைகின்றேன், அழைத்துச் செல்லுங்கள்' எனக் கூறுவர். இரவும் பகலும் தொண்டு பூண்டு இறைவனை விடார்கள். இறைவனை ஏத்தும் நாள்தான் இன்பநாள்; ஏத்தாத நாள் துன்ப நாள்—என நினைவர்; தமது உள்ளத்துள்ளே இறைவனுடைய உருவை இழைத்து இரவும் பகலும் அவரை அழைப்பார். திருநீறு முதலிய சிவ சின்னங்களை அணிந்த தொண்டர்களைக் கண்டால், கண்ட போதே வேறு சிந்தனையின்றித் தொழுது வணங்குவர். இறைவன் குணங்களைப் பேசிக் கூடிப் பாடித் திரிவர். சிவனைத் தவிர வேறு ஒருவரைத் தஞ்சமென்று எண்ணார்.

## (2) தொண்டுவகை; தொண்டின் சிறப்பு [5 (2) ]

பணிதல், பாடுதல், பல்லாண்டிசைத்தல், திருநாமங்களை ஓதுதல், திருநீறு பூசுதல், இசைக் கருவிகளை முழக்குதல், மறைகலந்த மந்திரங்களை ஓதுதல், நீர்கொண்டு வழிபடுதல், மலரிட்டுப் பூசித்தல், மாலைகட்டிப் புனைந்து ஏத்துதல், தூபதீபம், சாந்தம் முதலிய தருதல்—தொண்டுகளாம்.

திருக்கோயிலைப் பெருக்குவதால் பெறும் இன்பம் கோயிலை மெழுகினால் பதின்மடங்கு பெருகும்; மலர் தொடுத்துப் புனைந்தால் விண்ணுலகம் கிடைக்கும்; திருவிளக்கு இட்டால் மெய்ந்நெறி கிட்டும்; கீதங்கள் பல பாடினால் ஞானம் பெறலாம்.

## (3) அடியார்களின் பெருமை [5 (3) ]

இறைவனை வலம் கொள்வாரை வானோர் வலங்கொள்வர்; இறைவனுடைய அடியவர்க்கு அரிதான ஒருபொருள் இல்லை, ஒரு செயல் இல்லை; பிறரால் தொழப்படும் தேவர்களால் தமது தொண்டர்களைத் தொழும்படி வைப்பார் பிரானார்; வானம் நிலைகுலைந்தாலும், பூகம்பம் ஏற்பட்டாலும், மலைகள் நிலைகெட்டாலும், கடலில் மீன்கள் அழிபட்டாலும், ஞாயிறும் திங்களும் நிலையிழந்து விழுந்தாலும்

சிவனடியவர்கள் சிறிதும் கவலை கொள்ளார், கலங்கார். அண்டர் வாழ்வையும் அமரர் இருக்கையையும் அவர்கள் மதியமாட்டார்கள். அத்தகைய தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் நமக்கும் கிடைக்குமோ! சிவவேடம் பூண்டவரே துணை எனக் கருதித் தொண்டுசெய வல்லவர்கள் பிணிசெயும் யாக்கையை நீக்குவர் (இனிப் பிறவார் என்றபடி).

யமதூதர்களே! நீங்கள் சிவனடியவரைக் கிட்டாதீர்கள்; அவர்களை அஞ்சிப் போற்றுங்கள்; அவர்களை நீங்கள் காய்ந்தால் சிவன் கழல் உங்களைக் காயும்; ஐந்தெழுத்து மந்திரம் ஒன்று வல்லாரையும் அணுகாதீர்கள்; கை விளக்கு, மலர் மாலை, தூபம், சாந்தம் (சந்தனம்), ஏமம் (திருநீறு) இவை கொண்டுள்ள அடியார்களுக்கு எதிரே செல்லாதீர்கள். கைத்தாளம், கொடுகொட்டி, தாளம் இவைகொண்ட தொண்டர்களை நெருங்காதீர்கள்; சிவன் என்னும் நாமத்தைச் சொல்லி ஆரவாரிப்பார் யாராயிருந்தாலும் அவர்களை அணுகாது நீங்குவீர்களாக. சிவன் சேவடியைக் களிப்புடன் போற்றுவோர் பக்கத்திலும் போகாதீர்கள். எப்படிப்பட்ட மன நிலையிலும் சிவபிராற்கு வாத்தியம் வாசிப்பவர்களுக்கு உதவுபவர்களுக்கு யாதொரு துன்பத்தையும் செய்யாது விலகுவீர்களாக. திருநீறும் கோவணமும் பூண்ட சிவனடியார்களின் திருவடிப்பற்றொழிய வேறு பற்று இல்லாதவர்கள்மீது படை ஏந்திச் செல்லாதீர்கள். சிவனடியாரின் வேடத்தைக் கண்டால் அவர்கள் பக்கத்திலும் அணுகாது அவர்களைப் போற்றி விலகிப் போவீர்களாக.

### (4) அடியாரும் இறைவனும்; இறைவன் அடியார்க்கு அருளுதல் [5 (4)]

இறைவன் அடியார்க்கு அன்பர்; அடியார்களின் பிழையைப் போக்குவர், இடரை நீக்குவர், துயரைத் தீர்ப்பர், பாவத்தை அகற்றுவர்; துன்பம், நோய், வினை, பழமை—இவை அடியார்களைத் தீண்டாத வண்ணம் காப்பார். அவர் அடியார்க்கு எளியர், புகலிடமாவார்

அடியார்கள் அமருலகத்தை ஆள அருள்புரிவார். அடியார்களின் மனத்து அன்பை அளந்து பார்ப்பார்; அடியார்களுக்கு அமுதாவார், அவரிடத்தே குடியிருப்பார்; இன்பம் தருவார்; அருமையான நன்மைகள் பலவற்றையும் அளிப்பார். அவர் அற்றவர்க்கு அன்பர்; யாராயிருந்தாலும் தம்மை அடைந்தால் அவர்க்கு அருள்புரிவார். ஐந்தெழுத்தை நினைப்பவர்க்கு மருந்தாவார்; அவர் அருள்புரிந்தால் நாம் அஞ்சுகின்ற இறப்பையும் பிறப்பையும் அறுக்கலாம். இருக்கு மறையால் ஏத்தினால் நமது துயரைக் குறைப்பார். மகிழ்ந்து நிற்கும் அடியவர்தம் உச்சியில் விளங்குவார்; உத்தமர்களுக்கு அவரது திருவடி ஞான ஒளிதரும்; தம்மை நினைப்பவருக்கு அவர் உயர்கதி தருவார்; அவர்களின் மனவேகத்தை ஒடுக்குவர்; பக்தர்களின் பக்திக்கு இரங்குவார்; தொழுது அழுகின்ற பக்தர்களுக்கு அருள்புரிவார்; கள்ளத்தைத் தீர்ப்பார்; செல்ல முடியாத செந்நெறியிற் செல்ல வைப்பார்; ஞானத்தையும் நன்னெறியையும் காட்டுவார்; அடியார்களின் பாரத்தைத் தாங்குவார்; அவர்களுக்கு வருத்தம் வராமற் காப்பார்; குற்றங்களைப் பொறுப்பார்; அவர்தம் இதய கமலத்தில் விளங்குவார்; அவர்தம் கண்மணி போல்வார், அவர்க்கு முத்தியளிப்பார்; அவர்கள் விண்ணுலகேற ஏணிப்படிபோல உதவுவார்; அவர்களின் உள்ளத்தில் வித்தாய் விளங்குவார்; அவர்கள் நரகத்தில் வீழாமற் காப்பார்; [1]பத்து இலக்கணங்களையும் உடைய அடியார்களுக்குப் பாங்கனாவார்; வாயாரப் பாடும் தொண்டர்களின் கூட்டத்தில் விளங்குவார்; இரவும் பகலும் விடாது தம்மை அழைக்கும் அடியார்கள் அண்டங்களை ஆளும்படி அருள்புரிவார்; ஐம்புலன்கள் என்னும் மதக் களிற்றை அடக்கவல்ல யானையாய் விளங்குவார்; வஞ்சமில்

1. அடியார்களின் பத்து இலக்கணங்களாவன :—

(1) கண்டம் தழுதழுத்தல் (2) நா அசைதல் (3) இதழ் துடித்தல் (4) நடுக்கம் உறல் (5) மயிர் பொடித்தல் (6) அங்கம் வெதும்பி வியர்த்தல் (7) தள்ளாடி வீழ்தல் (8) கண்ணீர் பிலிற்றல் (9) கலுழ்ந்து இரங்கல் (10) ஆர்வத்தால் பரவசப் படுதல்.

ளார்க்கு அருள்புரிவார்; கீதம் பாடும் அடியார்க்கு வானுலகு அளிப்பார்; கற்றவர்க்குக் கற்பகமாய் விளங்குவர்; நற்குணத்தைப் பாலிப்பர்; வானுலகு அளிப்பர்; தாமரை மலரால் பூசிக்கும் தொண்டர்களின் பணியை மகிழ்வர்; 'தயாமூல தன்மம்' என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்பவர்க்கு நலம்பல அளிப்பர்; தொண்டர்களைத் துயர்வெயில் சுட்டால் அவர் திருவடி நிழல்தந்துதவும்; சொன்மாலை புனைபவருக்கு நற்றுணையாய் நிற்பார் பிரானுர்; தூபதீபம் காட்டித் தொழுகின்ற அடியார்க்கு அருள் பாலிப்பர்; தொழுபவர்கள் இவர் இவர் என்னும் கணக்கு வைத்துள்ளார்; தோத்திரம் சொல்லி அழுகின்ற அடியார்க்கு அன்பராவார். நினைந்து உருகும் அடியார்களின் மனத்தை நைய வைத்துக் கசக்கி அவர்தம் தீவினைகளை அகற்றுவர். திருநீறிட்ட தொண்டர்களுக்கு ஊன்றுகோல்போல உதவுவர். அடியார்களுக்குத் தமது திருவுருவை-நெற்றிக்கண்ணை, நிலவைப், பாம்பைக், கங்கையைப், பொற்றேளைக்— காட்டி அருளுவர். இந்திரியங்களை நல்வழியில் இனிமைதர அளித்துள்ளார். அடியார் நெஞ்சிற் குடியாயிருந்து நினைவூட்டுவர். மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு பூசிப்பவர்க்கு வானுலகளிப்பர்; அடியர்களை மீளா ஆளாக்குவர். மறைகள் ஓதி மனத்தினுள் விளக்கு ஒன்றை ஏற்றித் தியானிப்பவர்களின் உள்ளத்தில் உள்ளார் அவர்.

## (5) அடியார் அல்லாதவரும் இறைவனும் [5 (5)]

தம்மை அணுகாதவரை இறைவன் அணுகமாட்டான்; உருகா மனத்தரைப் புறக்கணிப்பான். ஏத்தாதார் மனத்தில் இருளாயிருப்பான்; அவர்களுக்கு அகப்படான்; இறைவன் திருவடியைச் சிந்தியாதவர்களின் தீவினைகள் தீயனவாகவே நிற்கும்; அவர்கள் தீநெறியிற் சேர்வார். தம்மைப் புறக்கணிப்பவர் இவர் இவர் என்னும் கணக்கையும் பிரானுர் எழுதி வைக்கின்ருர். அவர் வஞ்சகர்பால் அணுகார்; தம்மை வைது திரிபவர்தம் காமத்தையும் பொய்யையும் நீக்கார். இறைவனை விரும்பாதவர் எவர் இட்ட சோற்றையும் உண்டு திரியவேண்டி வரும்.

## 5. அடுக்குச் சொற்கள் [6]

'அஞ்சல் அஞ்சல்,' 'ஊறி ஊறி,' 'ஓட ஓட,' 'தோன்றும் தோன்றும்,' 'வேறுவேறு' முதலிய 78 அடுக்குச் சொற்கள் 'ஒளிநெறியில்' எடுத்துக் காட்டப்பட்டுள.

## 6. (1) அப்பர் தமது பழைய நிலையைப் பற்றிக் கூறுவது [7 (1)]

முதலில் நான் தமிழோடிசை பாடுதலை மறந்ததில்லை; சலம், பூவொடு தூபம் மறந்ததில்லை. நன்மை தீமைகள் வந்த போதிலும், சிவனே! உன்னை நான் மறந்ததில்லை. பின்னர், என் வினைவசத்தால் சமணர் தம் பேச்சைக் கேட்டு, சிவனே! உனது திருவடிகளை மறந்தும் நினையாத மதியிலி ஆனேன். இப் பிறப்பை வீணாக்குபவர்களின் பேச்சைக் கேட்டேன்; அதிகைப் பெருமானுடைய திருவடிகளை அணைந்து வாழாது ஏழையேன் இகழ்ந்திருந்தேன்; அறிவிலியாய் என் வாழ்நாளில் நெடுங்காலம் வீணாக்கினேன். என் இளமைப் பொழுதெல்லாம் இங்ஙனம் வீணாகத் தொலைந்தது. முதலில் எம்பெருமான் என்னைச் சற்றும் அறியாது இருந்தார்—நானும் அவரைச் சற்றும் அறியாதிருந்தேன்; பின்னர் எம்பெருமான் என்னை இவன் நம் அடிமை என அறிந்தார்; நானும் அவரை நம்பிரான் என்று அறிந்தேன்; இப்போது எம் பிரானுடைய திருநாமங்களைப் பிதற்றி அவரது திருவருளைப் பெரிதும் பெற்றேன். இனி அவரை விடேன்.

### (2) சூலைநோயிற் பட்டபோது கூறினவை [7 (3)]

பெருமானே! இச் சூலைநோய் கூற்றுவன்போல என் உள் நுழைந்து குடரைப் புரட்டுகின்றது, வலிக்கின்றது, சுடுகின்றது, வயிற்றைக் கலக்கி மலக்குகின்றது, விஷம் போல வேதனை தருகின்றது, வேர்க்கின்றது, நோய் தாளாது புரண்டு, விழுந்து எழுகின்றேன. அடியார்கள் இங்ஙனம் நோயிற்பட்டால் எம்போலியர் உன் பெருமையை எங்ஙனம் உணர்வார்கள்!

### (3) நோய் தீரப்பெற்றுக் கூறினவை [7 (3)]

பெருமானே! சூலை நோயைத் தீர்த்து அடியேனை ஆட்கொண்டீர். இப்பொல்லா நோயைத் தீர்த்த பெருமானே! உன்னை நான் மறந்து உய்வேனோ! என்னைத் தண்டித்த நோயை நீக்கின உன் பேரருளை வியக்கின்றேன்; உன் பணியிற் பிழைசெய்தால் புளியம் வளாரால் மோதுவிப்பாய் என உணர்ந்தேன். என் பிழைகள் யாவற்றையும் பொறுத்தனையே! என் பிணியை ஒழித்த மருந்து நீ; என்னைச் சோதித்த புனிதன் நீ; அறிவிலியாய் உன்னை மறந்திருந்த என்னை மடக்கி ஆட்கொண்டாய்; நானும் உனக்கு ஆளாகிவிட்டேன்.

### (4) சமணிற்பட்டு அலைச்சலுற்ற விவரம் [7 (2)]

அமணர்களுடைய சொல்தான் திடமானதென்று கொண்டேன்; துன்பத்துக்கும் குற்றத்துக்கும் ஆளானேன்; எண்ணிலாத சமணர்களொடு சேர்ந்து காலம் போக்கினேன்; குருடனுக்கு ஊமை வழிகாட்டிச் செல்லும் வழியில் என்னை வஞ்சனை செய்து மாட்டி வைத்தாய்; கையில் உண்டு, பெண்கள் முன்னிலையில் அமணே நிற்கும் சமணர் தம் சொற்கேட்டு, உணர்விலாது திரிந்தேன். கறியுடன் நெய் சோறு உண்டு பொல்லாத காட்சிக்கு இடம் தந்தேன் இங்ஙனம் பலகாலம் வீணாக்கி விட்டேன்.

### (5) சமண் தீர்ந்ததும் இறைவனது திருவருளைப் பெற்றதும் [7 (4)]

அமணரை விட்டேன், உய்யும் வழி கண்டேன், உய்ந்தேன்; எம்பெருமான் எண்ணிலாச் சமணரினின்றும் எனைப் பிரித்து ஆட்கொண்டார். சமணர்களுடைய வார்த்தையை மெய்யென்று எண்ணி, அவர்களுடைய மயக்கில் வீழ்ந்து அழுந்தின என்னை, அவர்களினின்றும் விலக்கி, ஆளாகக் கொண்டு, என் பிறவிப் பிணியைத் தீர்த்து அருள் புரிந்தார் பெருமானார். சமணர் திறம்பட்ட என்னை, அத்திறம் ஒழியும்படி செய்து 'தயாமூல தன்ம

நெறியை' எனக்கு அளித்து என் மனத்தைத் திருத்தினார் பிரானார். சமணிற்பட்ட குற்றம் தவிர்த்து என்னை ஆட்கொண்டு "நற்றிறத்தைக் காட்டினார் இறைவர். சமணர் உரைத்த பொய்யெல்லாம் மெய்யென்று கருதி, அம் மதத்திற் புகுந்தேன்; நல்லவேளை—அவர்களிடம் அகப் படாமல் உய்யப் போந்தேன்; இங்ஙனம் வெஞ்சொற் சமண் சிறையினின்றும் என்னை மீட்ட பெருமானைத் திருப்திப் படுத்த இனி யான் என்ன செய்யவல்லேன்?

## (6) சமணிற்பட்டதை நினைந்து நினைந்து வருந்துதல் [7(2)(4)]

சமணிற்பட்ட தமது பெரும் பிழையை எண்ணி எண்ணி அப்பர் பலவாறு வருந்துவர். சமணிற்பட்டு உறி தூக்கித் திரிந்தேனே; என் செயல் கனியிருக்கக் காய் கவர்ந்த திருடனது செயலை ஒக்குமன்றோ! என் வினையை ஒழித்து என் நோயைத் தீர்த்து அன்புடனே ஆட்கொண்ட ஆரூரரின் முன்பு இருக்கும் விதியை இழந்த நான் முயலை விட்டுக் காக்கையைப் பிடிக்க ஓடினவனை நிகர்ப்பனன்றோ! அறமிருக்க மறத்தை விலைக்கு வாங்கினதை ஒக்குமன்றோ என்செயல்; என்னைப் புனிதப்படுத்தி அடியார்கள் புகழ்ந்து பாடும்படி தமது திருவடிக் காட்சியை எனக்குத் தந்த பெருமானை அறியாமல் இந்நாள் காறும் பனிநீரால் பாவை செய முயன்றேனே! என்னே என் அறிவீனம்: பொல்லார் தம் பேச்சைக்கேட்டுத் துவர் வாயனாய் இரு கை ஏந்தி உணவு உண்ட ஏழையேனைப் பொருட்படுத்தி ஆட்கொண்ட பெருமானை என் இதயத்தே இருத்தாது வீண்போர் இட்ட அறிவிலியா யிருந்தேனே! பறிதலையனாய்த் திரிந்த எனக்கு உறுதி நிலையைக் காட்டி அமுதம்போல இனிக்கும் ஆரூர்ப் பெருமானை எப்போதும் நினைத்துத் தொழும் பாக்கியத்தை இழந்து இருட்டிலே மலட்டுப் பசுவைக் கறந்து இளைத்தவன் ஆனேன் நான். கண்ணினின்றும் தீப்பொறி வரும்படி அத்துணை வேதனையுடன் தலைமயிரைப் பறித்தவனாய், கையேற்று உண்பவனாய்த் தெருவெலாம் பலர் கண்டு நகைக்க, நாணத்தை இழந்து திரிந்த நான்—ஆரூ

பெருமானாம் தேனின் சுவையைப் பருகும் பாக்கியமின்றி விளக்கிருக்க மின்மினித் தீயில் காய்ந்த அறிவிலியாய்க் காலத்தைக் கழித்தேனே! சமணர் சொல்லைக்கேட்டு, மாதர்களைக் கண்டதும் உள்ளே ஓடிக் கதவை அடைத்து நின்ற கள்வனாகிய எனது ஆவி உய்யும் வண்ணம் ஆட்கொண்ட பெருமானது திறத்தை அறியாமல் பாழூர் ஒன்றிற் பிச்சை எடுக்கப் புகுந்து இளைத்தவனைப்போல அறிவிலியாய் நின்றேனே! அப் பெருமானைச் சார்ந்தொழுகும் தவநெறியை விட்டு அவநெறியிற்பட்டு அழிந்து துள்ளின நான், கரும்பிருக்க இரும்பைக் கடித்து வேதனைப் பட்டவன் ஆனேன்.

## (7) அருள் பெற்றதற்கு நன்றி கூறுதல் [7(5)]

அம்மையார் நமக்கு இல்லையே என்று வருந்திக்கிடந்த எனக்கு அம்மையாரை (என் தமக்கையாரை)த் தந்து இறைவன் உதவினர். ஐந்தெழுத்தை ஓதி உய்யுமாறு வழி காட்டி என் அச்சத்தை ஒழித்தார் பெருமானார். இங்ஙனம் ஆட்கொளப்பெற நான் என்ன பாக்கியம் செய்தேனோ! பெருமானுடைய திருவடித் தாமரையன்றோ என்னை ஆண்டது; அடியேனை அவர்தம் பொன்னடிக் கீழ்ச் சிறப் பித்தது என்ன வியப்பு! என் வினையை ஓட்டினார், என்னைத் தொழவைத்தார், என்னை ஆளாகக் கொண்டார். என் பிறப்பை அறுத்தார்; தமது அருள் நோக்கினால் என்னைப் புனிதனாக்கினார்; என்னைத் துன்பக் கடலினின்றும் எடுத்து இதுதான் நெறி எனக் காட்டினார்; இருளாய உள்ளத்தின் இருளை நீக்கினார்; என் இடர் பாவங்களைக் கெடுத்தார்; தெருளாத சிந்தையைத் தெருட்டித் தெளியவைத்தார்; சிவலோக நெறியை அறியும் மனத்தைத் தந்து உதவினார்; பக்தி வழியைக் காட்டினார்; பண்டை வினைப்பயனை அழி வித்தார்; என் மனத்துள்ளே ஊறுந்தேனாய்த் தித்திக் கின்றார்; பக்தனாய்ப் பணிய வைத்தார்; பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தார். என் மனக்கோயிற் புகுந்துள்ளார்; என் பழவினையை ஆய்ந்தறுத்தார். என் பிறவித் துயரைத் தீர்த்தார்; காணாதன எல்லாம் காட்டுவித்தார்; சாவாதே

காத்தென்னை ஆண்டருளினார்; என் சித்தத்தை ஒன்ற வைத்தார்; அடியேனை என்றும் தமக்கு ஆளாகக்கொண்டார்; நற்பான்மை அறியாத நாயேனை நன்னெறியிற் செல்ல வைத்தார்; என் பந்தங்களை அறுத்து என்னை ஆளாக்கிப் பணிகொண்டு, தமிழ்மாலை பாடவைத்து என் சிந்தை மயக்கை ஒழித்தார்; போகாதே என் உள்ளத்தில் இடம் கொண்டுள்ளார்; மீளா ஆளாய் என்னை ஏன்று கொண்டார்; மெய்யடியாரொடும் கூட்டிவைத்தார். அவரே என் தாய், அவரே என் தந்தை; உலகறிய என்னை ஆட்கொண்ட பெருமான் அவர்.

## 7. அப்பர் தம் குறைகளை எடுத்துக் கூறுதல் [7 (6)]

1. ஐம்புலன்களால் அடர்க்கப்பட்டு இங்கு நான் அலைகின்றேன்! இந்த ஐம்புலன்களும் எனக்கு ஒரு அப்பர் போல வந்து 'அதைத் தா, இதை விடு' என்று கூறி என்னை நலிவிக்கின்றன. 'அறுகயி றாசல்போல' அலமருகின்றேன்; இரக்கும் குணம் உளதே ஒழிய ஈயும் குணம் என்னிடம் இல்லை. இருதலைக் கொள்ளியில் அகப்பட்ட எறும்புபோல என் உள்ளம் கலங்குகின்றது. இருமலால் இருமி இருமி உடலும் இளைத்துப் போகின்றது. இன்று இருக்கின்ற உடல்நிலையும் மனநிலையும் அடுத்த நாள் இல்லை; நான் என்ன செய்யப் பிறந்தேனோ; என்னுடைய உள்ளம் ஒரு நீர் இறைக்கும் தாழி (கவலை, தோல் கூடை); நான் படும் துயரமும் துன்பமும் ஏற்றக்கோல்; அவைகொண்டு நான் பாழுக்கு நீர் இறைக்கின்றேன்; ஊசல்போல் என் நெஞ்சம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுகின்றது. இந்த ஊனக் கண்ணை விட்டு ஞானக்கண்ணைத் திறந்து பார்க்கின்றேனில்லை. 96 தத்துவங்களும் என்னைக் கலக்க நான் அலைச்சலுறுகின்றேன். என் பக்தியோ எத்து (வஞ்சகம்) கொண்டது; ஏழிசையால் இறைவனை ஏத்துகின்றேன் இல்லை; ஒன்றுபட்ட—நிலைத்த மனத்துடன் ஈசனைத் தியானிக்கின்றேன் இல்லை; கண் களிகூர்ந்து பார்க்கக், கை தொழ, இறைவனை எண்ணும்வழி தெரியாது இளைக்கின்றேன்; கல்வி என்பதே எனக்கு இல்லை; காமநோயையும்

படிக்கின்றேன் இல்லை. கற்றவரோடு சேர்வதில்லை; அதனால் எனக்கும் ஞானத்துக்கும் வெகுதூரமாகின்றது. காம்பில்லாத அகப்பைபோல எண்ணிய எண்ணத்தை முடிக்கும் நெறியற்று இருக்கின்றேன்; மாதர்களுடன் கூடினதால் நான் பெற்றது பெருந்துன்பமே; என் குலம், என் குணம், என் குறி யாவும் தீயன; குற்றந்தான் பெரிதாயுள்ளது; இறைவனை ஏத்தாது மாதர்களைப் பற்றிப் பேசியே காலத்தை வீணாக்கினேன். செந்நெறியிற் போகும்வழி தெரிந்திலேன்; ஞானத்தால் இறைவனை வழிபடுகின்றேன் இல்லை; இந்த உடலைவிட்டு யமதூதுவர்கள் கொண்டுபோக இறந்துபடுவேன்; இறந்தால் மேலுலகம் செல்வேன்; மீண்டு வந்து பிறப்பேன்; பிறந்தால், பிறையணி பெருமானை மறப்பனோ என்று இப்போதே என் உள்ளம் கலங்குகின்றது; என்ன தொண்டு என் தொண்டு! காவிரியினின்று நீர் கொண்டு வந்து, மறைகள் ஓதி, இறைவனுக்கு (ஆட்டி) அபிஷேகம் செய்தேனா; அவருக்குச் செஞ்சாந்து சாத்தினேனா; தொண்டைமாலை சூட்டினேனா! ஒன்றும் செய்து எம்பெருமானை நான் தியானிக்க இல்லையே; காலமெல்லாம் வீணே கழித்து விட்டேனே! இந்த உடற் பிண்டத்தைச் சுமந்து, ஆசை வலையிற்பட்டு வினைக்குழியில் அன்றோ வீழ்ந்துள்ளேன்! நான் மனிதருள் ஞானியும் அல்லேன்; ஞானமற்ற விலங்கு (மிருகமும்) அல்லேன்; நல்லவரோடு சேர்தலும் இல்லை; ஒழிந்த பாடுமில்லை. எது நன்று, எது தீது என்பதை அறியும் அறிவும் இல்லை. பொல்லாதவன் நான்; புவிக்குப் பாரம் ஆனேன்; நீதிநெறி தெரியாதவன்; அன்புடன் இறைவனை நினைக்க மாட்டேன்; பக்தனைப் பாடமாட்டேன்; பரவ மாட்டேன்; பாம்பின் வாயில் அகப்பட்ட தேரைபோல என்ன என்ன எண்ணமோ எண்ணுகின்றேன்; செந்தமிழ் அறியேன். பாடவும் தெரியாது; என் பாலப் பருவம் தொலைந்தது; மாதர்களுடன் காலம் போக்கின குமரப் பருவமும் தொலைந்தது; மூப்புப் பருவத்திலும் குறிக்கோள் இலாது பலகாலம் தொலைந்தது; எவ்வண்ணமா என் வாழ்நாள் கெடவேண்டும்? இந்தப் பிறவியைப் பிய்த்து எறியமாட்டேனோ! புழுவினும் இழிந்த

வன் நான்; பேய்க்கும் கோட்டானுக்கும்தான் நான் இணையாவேன்; பொதுவெளியில் உள்ள புன்னைமரம் படுந்துயரம் படுகின்றேன்; முற்பிறப்பிலும் ஒரு தவம் செய்திலேன் போலும்! மெய்யனாய் வாழ்கின்றேன் இல்லை. வஞ்சம் என்கின்ற பெண்ணைத்தான் மணந்துள்ளேன்; மெய் என்னும் விளக்கை ஏற்றவோ, தூண்டவோ முடியாமற்போம்படி என்னுள்ளே ஐவரை இறைவன் வைத்துள்ளான்! அந்த ஐவரே வலியர்; அதனால் இன்னது செய்வதென்று அறிய முடியாது இளைக்கின்றேன்; வினை எனப்படும் சரக்கு வியாபாரம்தான் செய்கின்றேன்; வெறுப்புப் பேச்சுத்தான் நிரம்பப் பேசத் தெரியும்; நாளும் நாளும் வேதனைக்கே இடம் கொடுத்துத் தவிக்கின்றேன்.

2. அப்பர் தம்மை நிந்திக்கும் சொற்கள் [7 (7)]

ஆதன் (அறிவிலி), இழுதையேன், கள்ளத்தேன், செடியனேன், நீசனேன், பாவியேன், பித்தனேன், பேதையேன், பேயேன், பொல்லேன், பொறியிலேன், மதியிலேன், வஞ்சனேன், வல்வினையேன்.

## 8. (1) அப்பர் இறைவனிடம் வேண்டும் வேண்டுகோள்கள் [7 (8)]

அடியேனைக் குறிக்கொள் என்றே பதிகம் பாடி உள்ளார் (95, 126); அடியார் பொருட்டு ஒரு விண்ணப்பப் பதிகமும் (110) பாடியுள்ளார்.

### வேண்டுகோள்கள்

1. அடியேன் இனிப் பிறவாதவாறு அருள்புரிக.
2. பிணி நோய்களை ஒழித்தருள்க.
3. இடபம் பொறித்து என்னை ஏன்றுகொள்.
4. இறைவா! உன்னை நினைந்தே என் ஆவி போம்; ஆவி கழிந்தபின் என்னை மறந்துவிடாதே.
5. என் பாசங்களை அறுத்து என்னை ஆண்டுகொண்டருள்க.
6. வழிவழி யாளாகும் வண்ணம் எனக்கு அருளுக.

7. ஐவர் என்னைக் கலக்காமல் காத்தருள்க.

8. ஒரு பற்றும் இல்லாத என்னைக் கண்டு இரக்கம் கொள்வாயாக.

9. வினை என்னைப் பீடியா வண்ணம் காத்தருள்க.

10 சிவகதியைத் தந்தருள்க.

11. திருநீறு எனக்குப் பூசு.

12. யமன் தமர் வருமுன்னே உன் திருவடியை என் நெஞ்சத்தில் எழுதிவைத்தருள்.

13. அஞ்சாதே என ஒரு வாக்கு அளித்தருள்.

14. நான் இறக்கும்பொழுது, உனது ஐந்தெழுத்தை ஓதும் நினைவைத் தந்தருள்க.

15. நோய் என்னைப் பீடித்தால் நீதான் அதைப் போக்கி அருளவேண்டும்.

16. உன் திருவடித் தரிசனத்தைத் தந்தருள்க.

17. இவ்வுடல் பிரிந்ததும் உன் திருவடிக்கீழ் ஒரு தலை மறைவைத் தந்தருள்க.

18. என் புன்மைகளைத் தவிர்த்தருள்க.

19. நான் புழுவாய்ப் பிறந்தாலும் உன்னடி என் மனத்தில் வழுவாதிருக்க வரம் தந்தருள்க.

20. யமன் என்னிடம் வாராதிருக்க, உனது சூலத்தை என்மேற் பொறித்தருள்க.

21. நாம் சாவும் தினத்தில் அடியேன் 'இறைவா நீ எங் குற்றாய்' என்றால், 'இதோ இங்குற்றேன்' என வந்தருள்க.

(2) அடியார் பொருட்டுச் செய்யும் வேண்டுகோள் [7(9)]

இறைவா! துன்பந்தரும் பிறவிக் கடலைக் கடக்கவேண்டி உனது திருவடியைப் பரவும் அடியார்களுக்குத் துன்பம் வராமல் அவர்களைக் காத்தருள்க. உன் தாளே சரணம் என ஏங்கி ஆசைகொள்ளும் அன்பர்கள் மீது இரக்கம் கொள்ளுக; அவர்களுக்கு வரும் நோயை விலக்கியருளுக;

துன்பத்தைத் தொலைத்தருளுக; அவர்களை வினை தொடராத வண்ணம் காத்தருளுக. திருநீற்றைப் பூசி உன் தாளைப் பரவி வீழ்ந்து வணங்கி நீயே சரண் என்று அவாக் கொள்ளும் அடியார்களுக்கு இரங்கி அருளுக. சிவனே பிரான் என்று பித்துப் பெருகிப் பிதற்றும் அடியார்களின் பிணிகளைத் தீர்த்தருளுக.

## 9. அப்பர் தம் நிலையை எடுத்துக் கூறுதல்

[8]

இறைவன் எனக்குள் உணர்வுருவாய் நிற்கின்றான். மூச்சு வருந்தோறும் என் நாதன் என்னுள் உலவி நிற்கின்றான். நினைப்போதளவும் அவனை நான் மறவேன். எம்பெருமான் என்னைத் தன்னுள்ளே ஒளித்து வைக்கின்றான்; என் மனமே இறைவனுக்குக் கோயில்; என் தலை உச்சியில் அவன் வீற்றிருக்கின்றான். இரவும் பகலும் பிரியாது அம்பலக்கூத்தன் கழல் என் நெஞ்சிற் குடிகொண்டுள்ளது; எனக்கு அவன் என்னிலும் இனியன்; என் அஞ்ஞானத்தை ஒழித்து என்னை ஆண்டுள்ளான்; அவனை நான் ஞான விலங்கிட்டுப் பிடித்து வைப்பேன். என் நெஞ்சம் ஒரு சரக்கு அறை. என் நெஞ்சத்துள்ள சரக்குகளாவன:— இறைவன் அணிந்துள்ள சடை, எலும்பு, நீறு, அரவு, ஆமை, பிறை, கங்கை, கண்டிகை, கொன்றை, சிரமாலை, வன்னி; இறைவன் ஏந்தும் தமருகம், தாளம், மழு, வீணை, மான்; அவரைச் சூழ்ந்துள்ள பூதப்படை; அவர் சந்நிதியில் முழங்கும் தக்கை, தத்துணிச்சம்; அவரது புலித்தோல் ஆடை, மான்தோல், சரிகோவணம்; அவர் வீற்றிருக்கும் கயிலை; அவரது பூந்தாமரை மேனி.

சிவனே நமக்குப் புகல்; நரகர்க்கு நமன் வருவான்; நமக்குச் சிவன் வருவான். ஞானத்தால் தொழுபவர்களைக் கண்டு நானும் ஞானத்தால் இறைவனைத் தொழுகின்றேன்; இறைவனைச் சிந்தை செயச் செய அவன் கரும்புச் சாற்றிலும் அதிகமாகத் தித்திக்கின்றான். திருநீறணியும்போது நான் 'சிவாயநம' என்று வாயாரக் கூறுவேன். வலம்புரத்து

ஈசனைத் தேன்மலர்களைக்கொண்டு பூசித்தேன்; ஆனஞ்சும் அன்புடன் ஆட்டினேன்; இங்ஙனம் அவனை ஏத்தப் பெற்று நல்வினைப்பயனை அடைந்தேன்; தொண்டு செய்து பாடினேன்; தூமலர் தூவினேன்; இண்டைகட்டி ஏத்தினேன்; தோள் குளிரத் தொழுதேன்; மலர்கொய்து, நீரில் மூழ்கி, வாழ்த்தி என் துன்பங்களை ஒழித்தேன்; இறைவன் திருவடியை என் உள்ளத்தின் நடுவே நான் நாட்டியுள்ளேன்; என் நா 'நமச்சிவாய' என்று கூறிக்கொண்டே இருக்கும். என் உள்ளத்தின் உள்ளே ஒலிக்கின்ற (கத்து) ஒலியே (Inner Voice) இறைவன். ஐந்தெழுத்தைத் தியானித்து இறைவன் திருவடியை நான் காணும் இடம் என் நெஞ்சமும் திருப்புகலூரும். என் கண்ணிலும், மனத்திலும், சென்னியிலும் இறைவன் உள்ளான். திருவையாற்றிற்புக்க எனக்கு இறைவன் திருவருள் தேனாறு பாய்வது போலப் பாய்ந்து வந்தது. நான் அறியா வண்ணம் என்னுளே நின்று நல்லது, தீயது இஃதென இறைவன் விளக்குகின்றான்; என் நெஞ்சில் அவன் நிலையாக நின்று விட்டான். இறைவனை நினைக்க, வஞ்ச ஆறுகள் வற்றி போயின. ஐந்தெழுத்தை நான் படைக்கலமாக என் நாவில் வைத்துக்கொள்வேன்; அதையே செபித்துக் கொண்டிருப்பேன்; என் நெஞ்சத்தில் இறைவன் அவனது மலரடியைச் சூட்டியுள்ளான்; நான் பிழைத்த பிழைகளை எல்லாம் அவன் பொறுத்துக்கொண்டான். அவன் என் தலையில் வைத்த திருவடி வருந்துமே என்று நான் வாடி ஒடுங்குகின்றேன். மூன்று கண்ணினன் மூன்று போதிலும் என் சிந்தையில் மூழ்கியுள்ளான். வலஞ்சுழி வலங்கொள்வார் அடி என் தலைமேலதாம். வாட்போக்கியார்க்கு என் உள்ளம் ஊறிஊறி உருகும். பெருமானை நான் விருப்பால் விழுங்கிவிட்டேன். திருவதிகைவீரட்டத்தை நான் உரையாவிட்டாலும், காணாவிட்டாலும், நண்ணாவிட்டாலும், என் கண்கள் துயில்கொள்ளா. இறைவனது கடன் அடியேனைத் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பது; தொண்டர்க்குத் தொண்டாம் புண்ணியம் எனக்குக் கிட்டுமா!

## 10. அப்பரும் இறைவனும்

### அப்பரது பத்திநிலை—அவர் பெற்றபேறு—அவரது ஒழுக்கநெறி [8]

#### இறைவனை நோக்கிக் கூறிய வகையில்.

இறைவா! எனது ஆர்வத்தை உனக்கே தந்தேன்! எனது ஆருயிரை உனது திருவடி நீழலில் வைத்தேன்; உன்னை நினைக்கும்போதெல்லாம் என் நாவில் இனிப்பு ஊறுகின்றது; உன்னை 'அரவா, பரமா! என அழைக்கும் ஆசை, பற்று தவிர வேறு ஆசை, பற்று எனக்கு இல்லை; உன் அன்பர்களோடு கலந்து நான் உன்னை அனுபவிப்பேன்; என் நெஞ்சை நீ ஆலயமாகக் கொண்டுள்ளாய்; அறநெறியில் நின்று, ஆர்வம், செற்றம், குரோதம் இவைகளை நீக்கி, உன்னையே சார்பாகக் கொண்டேன்; உன்னை அன்பொடும் அணைந்தேன், இனித் துடைக்கினும் போகேன்; உன்னை நினைக்க, நினைக்கப் பத்திவெள்ளம் பரவுகின்றது; இடர்க் கடலிற்பட்டு அவத்தைப்படும் நான் அக்கரையிற் சேர்க்கும் தோணியாகிய உன்னை அடைந்து உய்ந்தேன். நான் என்ன வேதனைப் படினும் உன்னைத் தவிர வேறு ஒருவரைப் 'பிரான்' எனக் கொள்ளேன் எழு பிறப்பும் உனக்கு நான் அடிமை, உன் திருவடித் தரிசனத்தைத் தந்தருளுக; உன் திருவடிக்கு அடிமைப் பட்டால் எத்தகைய தீங்கும் வாராது; நினைப்பவர் நினைப்பை எல்லாம் உடனிருந்தே நீ அறிகின்றாய் என்பதை நான் உணரும்போது வெட்கமும் அச்சமும் பெருஞ்சிரிப்பும் கொள்கின்றேன். என் உள்ளத்தில் நிற்கின்றாய், மூச்சில் வருகின்றாய்—ஆனால் கள்ளமாய் நிற்கின்றாய்; உன்னை நான் காண்பது எங்ஙனம்? எனது ஆகத்தில் இருக்கின்றாயே; என்னைக் குறிக்கொண்டருளுதி; உன்னை அல்லால் தெய்வம் ஒன்று இல்லை. கருவாய்க் கிடந்து உன் கழலையே நினைக்கும் கருத்துடையேன் நான்; உன்னைக் காணும் கருத்தையே கொண்டுள்ளேன்; நினையாத எனக்கு

நினைப்பை ஊட்டுகின்றாய்; உன்னைப் பேசாத நாள் எல்லாம் நான் பிறவாத நாளே; எனக்கு மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை வேண்டும்; என் தந்தை நீ, என் தாய் நீ, என் உறவு நீ, என் ஊன் நீ, என் உயிர் நீ, என் பிரான், பெம்மான், பெருமான் நீ, என் உறுதுணை நீ, என் வைப்பு நீ, என் கற்பகம் நீ, என் மணி நீ, என் துணைவன் நீ, என் மனக் கருத்து நீ, காணுதவைகளைக் காட்டும் கண் நீ; என் ஆனைக்கன்று நீ; நீயே என் அடைக்கலம்.

## 11. (1) அப்பர் பெருமானுடைய தீரமும், உறுதியும் [7 (10)]

பெருமானுடைய உண்மை அடியார்க்கு இருக்கும் இடம் உலகமெலாம்; ஊர்களிற் கிடைத்ததைச் சமைத்து அவர் உண்பர்; பிறர்க்கு இட்டு உண்பர்; பொது இடங்களில் தங்குவர்; வெறுந் தரையிலே படுப்பர்; இது உண்மை. எம்பெருமான் என்னை ஏன்று கொண்டான்; இனிக் குறையோ, இடரோ என்னை அணுகா. கடலே புரண்டு மூடினும் உமைபங்கன் திருவடி எனக்கு அடைக்கலத் தானமாக இருக்கின்றது; ஆதலால் இந்த உலகில் எனக்கு எதிராவார் ஒருவரும் இல்லை. என்ன வேதனை நான் பட்டாலும் 'பிரான்' என்று வேறொருவரையும் நாடமாட்டேன். எனக்கு உடை-கீளும் கோவணமுமே; எனக்கு உறவு சிவனடியார்களே. பிணிகள் என்னை விட்டு ஓடிப்போயின. இனிச் சூரியன் கிழக்கே உதித்தால் எனக்கு என்ன, வேறு எத்திசையில் உதித்தால் தான் எனக்கு என்ன கவலை; இறைவன் என் சிந்தையிற் குடிகொண்டுள்ளான்; ஆதலால் என் வருத்தங்கள் எல்லாம் ஒழிந்தன. இறைவனை நினைந்து நினைந்து என் கண்கள் மழைபோல நீரைச் சொரிகின்றன; என் கல்மனம் உருகி மெழுகாகக் கரைகின்றது. கூற்றுவன் திடீரென வந்தால் அவனை ஓட்டும் வழியைக் கண்டுள்ளேன். இறைவனுக்குத்

தமர் (நெருங்கின பந்து) ஆய்விட்டேன்; ஆதலால் நான் அஞ்சவேண்டிய பொருளோ, அஞ்சும்படி வருவதான பொருளோ கிடையா; இறைவனுக்கு 'மீளா ஆள்' ஆய் விட்டேன் நான்; சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தந்தாலும் மகாதேவனுக்கு ஒன்றிய மனத்தர் அல்ல என்றால், அத் தகையோருடைய செல்வத்தை நான் மதிக்கமாட்டேன்; சிவனே என்னும் நா உடையவர்தாம் எம்மை ஆளுதற்கு உரிமை உடையவர்; சிவன் என் சிந்தையிற் பிரியாதிருப்ப தால், தீவினை என்னை அணுக முடியாமல் விழிக்கின்றது. சிறு தெய்வங்களை நான் சிந்திக்கமாட்டேன்; பூகம்பம் வந்தாலென்ன! அரசர்கள் ஒன்றுகூடிச் சீறினால் என்ன; சிவபிரானது துணையுளது; ஆதலால் எதற்கு நான் அஞ்சு தல் வேண்டும்? தீமைகூட நன்மையாக மாறிவிடும்; உயரிய ஆடை உடுத்தும், பொற்பணி பூண்டும் திரிபவர் சொல்லைக் கேட்கக் கடவேனல்லேன்; நமனுக்கு அஞ்சேன், நரகத்தில் இடர்ப்படேன்; யார்க்கும் அடிமை அல்லேன்; இப் பூமிக் கெல்லாம் காவலராயிருப்பவர் ஏவி விடுத்தாரேனும் அவர்க் குப் பணிசெயக் கடவேன் அல்லேன்; நாவார எம்பெரு மானைப் பாடப்பெற்றேன். இறைவனுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டே உயிர்போகப் பெறுவேனாகில், எத் தனை நோய் வந்தால்தான் என்ன! அதைப்பற்றிக் கவலை யில்லை; சமணர் எனக்கு உபதேசித்த வாசகங்களை அப் போதே மறந்துவிட்டேன்; திருநீறு அணியப்பெற்றேன்; இனி யாரையும் பணியேன்; பாசங்களை வீசி எறியும் தன்மையேன் நான் இப்போது; பிணி என்பதையே இனி அறியேன்; இனிப் பிழை கிடையாது; பிறப்புக் கிடையாது. மண் பாதலத்திலே ஆழ்ந்திடினும், கடல்வெள்ளம் பொங்கி உலகை மூடவரினும், அஞ்சேன். இனி எம்பெருமானை விடமாட்டேன்; ஐம்புலன்களுக்கும் இனி என்னிடம் காரியம் ஒன்றும் இல்லை. மாதர்களின் மனையிடத்தைச் சேரேன்; சிவபிரான் விருப்புடன் என் உள்ளத்தே அமர்ந் துள்ளான்; ஆதலால், துன்பம், வினை என்னைச் சாரா; யமனையும் அஞ்சேன்; அவனும் என்னை அணுகான்; பொன் னாசை, பெண்ணாசை இனி எனைச் சாரா. தொழுநோய்

கொண்ட புலையராயினும் சங்கரற்கு அன்பராகில், அவரே நாம் வணங்கும் கடவுளார்.

## (2) அப்பர் உலகினர் பொருட்டு வருந்துதல்

பெருமானை அறியாத சில அறிவிலிகள் காலத்தை வீணாக்குகின்றார்கள். இந்த மனிதர்களின் வாழ்க்கையைக் காணும் போதெல்லாம் வருந்துகின்றேன். இறைவனைக் குளிர்ந்த மனத்துடன் பணிவதால் வரும் இன்பத்தை இழக்கின்றார்களே சில அறிவிலிகள் !

## 12. அப்பர் திருவாய்மூரிற் கண்ட காட்சி

## [7 (11)]

(அவர் கூறுவது)

இறைவனது திருக்கையில் அனல், யாழ், வீணை, கங்கணம், மான், மழு, கலையோடு, வரிசிலை இவைகளைக் கண்டேன்; காலிற் சிலம்பும், கழலும் ஆர்ப்பக் கண்டேன்; மார்பில் திருநீற்றையும், புரிநூலையும் கண்டேன்; காதிற் குழை கண்டேன்; திருமேனியில் நீலகண்டத்தையும், நாகத்தையும், யானைத்தோற் போர்வையையும் கண்டேன். சடைமுடியிற் கொக்கின் இறகு, கங்கை, அரவு, பிறை, கரந்தை இவைதமைக் கண்டேன்; விநாயக மூர்த்தியையும், பாகத்தில் தேவியையும் கண்டேன்; இடபக் கொடியையும் பூதப்படையையும் கண்டேன்; பிரமனும், மாலும் நண்ணி வருதலைக் கண்டேன். பத்தர் கூட்டம், பதினெண்கணம் இவை போற்றி நிற்பதைக் கண்டேன். முழவம், கொக்கரை, சச்சரி, தக்கை, தாளம் இவை ஒலிக்கக் கண்டேன்; இறைவனது கருணையை, அவர் இராவணனுக்கு அருள் பாலித்து ஈந்த பெருமையை, அவர் அடியார்க்கு அருளும் பரிசை, அவர் இருவர்முன் அழலாய் நீண்ட காரணத்தை, அவர் வேடுவனாய் நின்ற நிலையை, ஐயம் (பிச்சை) பெற அவர் திரிதலை—ஆக இவையெலாவற்றையும் கண்டு களித்தேன்.

## 13. அப்பர் திருப்பூவணத்திற் கண்ட காட்சி [7 (12)]

இறைவனுடைய ஆணும் பெண்ணும் ஆய வடிவு, பொடியேறு திருமேனி, களிற்றுரிவைப் போர்வை, தேவி பாகம், ஏனமருப்பு, இருண்ட கண்டம், நெற்றிக்கண், சிர மாலை, கோவண ஆடை, கல்லாலின் கீழ் இருப்பு, கீளுடை, விரிசடை, சடையிற் கங்கை, வெண்பிறை, அரவு, கூவிளம், கொன்றை, மத்தம்; காதில் வெண்குழை, தோடு; கரத்தில் மான், மழு, திரிசூலம்; விடைவாகனம், விடைக்கொடி, பூதப்படை, மறைஒலி—இவைஎலாம் அப்பர் பெருமானது காட்சியில் தோன்றின; பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை யும் காட்சி தந்தனர். சிவபிரானுடைய வீரச் செயல்களான காலனை உதைத்தல், காமனை எரித்தல், திரிபுரத்தை எரித் தல், பிரமனது சிரத்தைக் கொய்தல் ஆகிய இவைகளும் புலப்பட்டன; சண்டேசர்க்கு அருளிய திறம், இராவணனை அடர்த்துப் பின்னர் அருளிய கருணை, வைகைக் கரையில் மண்வெட்டியுடன் சென்றுநின்ற கருணை - இவையும் புலப் பட்டன; எங்ஙனம், யார் யார் எவ்வெவ் வுருவில் தியானிக் கின்றார்களோ அங்ஙனம் அவ்வவ் வுருவில் அவரவர்களுக் குத் தோன்றி அருள் பாலிப்பதும் புலப்பட்டது.

## 14. பிற தலங்களிற் கண்ட காட்சி [7 (13)]

கஞ்சனூர், கழுக்குன்றம், கற்குடி, செங்காட்டங்குடி, திருத்துருத்தி, நாரையூர், பாசூர், பூந்துருத்தி இத் தலங் களில் தாம் இறைவனைக் கண்டதையும், கண்ணாரக் கண்ட தையும் அப்பர் தமது பாடலிற் சொல்லியுள்ளார். நாகைக் காரோணப்பெருமானைக் கங்குலும் பகலும் கண்டு களித் தாராம். வெண்ணித் தலத்தை முதல்நாள் நனவிலோ கனவிலோ கண்டு மறுநாள் அத்தலத்தைத் 'தரிசித்தார் என்பதை "நெருநற் கண்டவெண்ணியே' எனவரும் பதிகத் தில் தெரிவித்துள்ளார்.

## 15. கனவில் இறைவனைக் கண்டது [7 (14)]

திருவொற்றியூர்த் திருத்தாண்டகத்தில் 'கண்டேன் நான் கனவகத்தில், கண்டேற்கு என்றன் கடும்பிணியும், சுடுந்தொழிலும் கைவிட்டவே' என்றும், திருவதிகைத் திருத்தாண்டகத்தில் 'கனவின் கண் திருவுருவம் தான் காட்டும்மே' என்றும், வினாவிடைத் திருத்தாண்டகத்தில் "சிட்டனைத் திருவாலவாயிற் கண்டேன் தேவனைக் கனவில் நான் கண்டவாறே' என்று தாம் கண்ட காட்சிகள் இவ்வாறு என்றும் விளக்கியுள்ளார். திருநல்லூரில் இறைவரைக் கனவிற் கண்டு தாம் தொழுததையும், தம் நெஞ்சில் அவர் அகலாது நின்றுள்ளதையும், துயிலும்போது காஞ்சி ஏகாம்பரநாதர் மெள்ள வந்து தமக்குத் தரிசனம் தந்ததையும் விளங்கக் கூறியுள்ளார்.

## 16. தில்லையிற் பெருமானது நடன தரிசனத்தைக் காண விரும்பினது [7 (15)]

அம்பலத்தே ஆடுகின்ற அத்தா உன் ஆடலைக் காண விரும்பி அடியேன் வந்துள்ளேன்; நீ சிற்றம்பலத்தே செய்யும் திருக்கூத்தைத் தரிசிக்க வந்துள்ளேன் என்று தமது விருப்பத்தை ஆண்டவனிடம் முறையிட்டுள்ளார்.

## 17. இறைவனது தரிசனத்தை அப்பர் பெற்ற விவரங்கள் [7 (16)]

(அப்பர் கூறுமாறு)

பெருமானது கொன்றை மாலையைக் கண்டேன், சடையிற் கங்கையைக் கண்டேன், பிறையைக் கண்டேன், ஏறேறிப் போதலைக்கண்டேன், கறைக் கண்டத்தைக் கண்டேன், கையிற் கனலைக் கண்டேன், மழுவாளைக் கண்டேன், கொடுகொட்டி, கையலகு இவைகளைக் கண்டேன், நீறேறு திருமேனியைக் கண்டேன், கையிற் பாம்பைக் கண்டேன், புலித்தோல் உடையைக் கண்டேன், பொன்

ஒத்த மேனிமேல் பொடி (திருநீற்றைக்) கண்டேன், அரையில் மான்தோலையும் பாம்பையும் கண்டேன், பாகத்தில் தேவி இருப்பதைக் கண்டேன், ஞாயிறன்ன கண்கள், சிலம்பொலி, முறுவற் செவ்வாய்—இவை எலாம் என் மனத்தில் அப்படியே குடிகொண்டுள்ளன.

நான் கண்டதற்கு அடையாளங்கள் கூறுவேன்: கோவண ஆடை, இரை உண்டறியாத பாம்பு, வீணை, சுரை (கறவைப் பசு), சூலம், கண்டு, கோல் (அம்பு), தோல், நறுமண நீறு, வெண்டலை—இவை எலாம் எம்பிரானிடத்தில் உள்ளன.

## 18. இறைவனுடைய அடையாளச் சின்னங்களைக் கூறி இவை அவனிடத்தில் உண்டல்லவா என அடியார்களை வினவுதல் [7 (18)]

அண்டங்கடந்த சுவடு, அரவம், அதனருகே பிறை, அங்கை அனல், ஆறுடைய சடை, ஒருபால் இலங்கிழை (தேவி), ஊழித் தீப்போன்ற ஒளி, இளஞாயிறன்ன மேனி, ஏற்றுக் கொடி, கறுத்த கண்டம், கண்மேற் கண், கொன்றைமாலை, கொடுமழுவாள், கொல் புலித்தோல் உடை, தோல்மேல் அரவம், சூலம், தொண்டர் குழாம் சூழ இருக்கை, சாந்தமாம் நீறு, வீணைஒலி, பூதப்படை, எலும்பாபரணம், அரவச் சடை, வெண்ணூல், வெள்ளேறு, வேழத்து உரி—இவை எலாம் எம்பெருமானிடத்தில் கண்டீர்கள் அல்லவா; சொல்லுங்கள். இப்படித்தானே நீங்களும் கண்டீர்கள்.

## 19. திருவடி தீட்சை பெற்றது [7(17)]

கழலடி யிரண்டும் வந்து என்மேல் இருக்கப் பெற்றேன்! என்னை ஆளாகக்கொண்டு நல்லூர்ப்பெருமானார் தமது திருவடியை என் தலைமேல் வைத்தார்; 'அவரது

திருவடியைச் சுமந்துகொண்டு நான் திரிகின்றது காணலாகும். [திருநல்லூரில் திருவடி தீக்ஷை பெற்றபின் திருவையாறு, மழபாடி, திருநெய்த்தானம், திருமுதுகுன்றம், திருவாரூர்-ஆகிய தலங்களை அப்பர் தரிசித்தனர்.]

## 20. அப்பரும் அடியார்களும்; அப்பருக்கு அடியாரிடத்துள்ள பக்தி [7 (19)]

(அப்பர் கூறுவது)

சிவனடியவர்களின் திருவடிகள் என் தலைமீது சூட்டப்பெற்று விளங்குமாயின் அண்டர் வாழ்வையும், தேவர் இருக்கையையும் பெற்று வாழவேண்டும் என்னும் கருத்தே எனக்குக் கிடையாது. ஈசனுக்குச் சுற்றமாயினவரைக் கொலையானைகூடக் கொல்ல வல்லதன்று. எனக்கு உகந்த தொண்டர்களே! ஆடுமின், அழுமின், தொழுமின், அடி பாடுமின், பரமன் இடமாம் திருக்குரங்காடுதுறையைக் கூடுமின்.

## 21. அப்பர் இறைவனிடம் ஆசுதி ஆடல், விண்ணப்பங்கள் [7 (21)]

(1) இறைவனே! இந்தச் சிறுத்தொண்டன் என்னை மதித்தான் எனத் தெரிந்து எனது பிணி நோயை நீ நீக்காவிட்டால் பழி உன்னைச் சேரும்.

(2) கங்கையைச் சடையில் ஒளித்து வைத்துள்ளீரே; இந்தக் கள்ளச் செயலை உமைநங்கை மெல்லத் தெரிந்து கொண்டால் பெருமானீர்! உமக்கு ஆபத்துத்தான்.

(3) உம்மிடத்துள்ள (பிறை, கங்கை, அரவு, எலும்பாபரணம், மான், மழு முதலிய எல்லாச்) சரக்குகளையும் சேமித்துள்ள உமது சாமான் அறையோ அடியேனுடைய நெஞ்சம்.

(4) இறைவனே! உன் பெருமை உன்னை ஒப்பாரே காண முடியாதே, அப்படியிருக்க (நானும்) என்னை ஒப்பாரும்

உன்னை எங்ஙனம் காணமுடியும் (காணமுடியாது என்றபடி)

(5) உமது செஞ்சடையில் தண்கொன்றை, கங்கை; உமது கையில் எரியும் எரி; இதுவும் ஒரு வேடிக்கைதான்.

(6) நான் "பவன், பவன்" என்று சிவனுடைய திருநாமங்களைச் சொல்லிச் சொல்லித் திரிந்து அழைப்பேன். ஐயோ! பன்னாள் அழைக்கின்றானே இவன் என்று எனக்குப் பெருமான் தரிசனம் தருவர்.

(7) பெருமானீர்! ஒன்று சொல்லக் கருதுகின்றேன். தொண்டர்கள் துன்பப்படுதலைக் கண்டு பின் அவர்களுக்கு என்ன (ஆறுதலைத்) தருகின்றீர்?

(8) என்கடன் பணிசெய்து கிடப்பது, பெருமானது கடன் அடியேனைத் தாங்குதல்.

(9) பாகத்தில் ஒருபெண், தலையிற் பிறை—இவையுடன் பாம்பை வைக்கலாமா!

(10) உன்னை எப்போதும் நினைக்க முடியாமற் செய்கின்றாய், நான் நினைக்க முயற்சி செய்தால் உடனே அம் முயற்சியை மறப்பித்து வேறு ஏதேனும் நினைக்க வைக்கின்றாய்; இங்ஙனம் உன்னை எப்போதும் மறந்த நிலையில் நான் இருந்தும் உனக்கு வேண்டியவனாய் இருக்கின்றேன்; இது என்ன பாக்கியம்; என்னைப்போலப் பாக்கியம் பெற்றவர்கள் யாரேனும் உண்டோ? சொல்லுக, பெருமானே!

(11) பெருமானே! ஒரு சிறு வேண்டுகோள்: கங்கை அலை ஓரத்தில் தவழுகின்றதே இளம்பிறைக் குழவி, [தவறி அலையில் அது விழுந்து அடித்துக் கொண்டு போய் விடப் போகிறது—பாவம்] சற்று அதைக் கவனிக்கவும்.

(12) பெருமானீர்! பிறையின் பக்கத்தில் பாம்பை ஏன் வைத்துள்ளீர்? காரணம் தெரியவில்லையே; பிறை அகப்படின் பாம்பு அதைச் சும்மா விடாதே; இரக்கமின்றிப் பிடித்துக் கொள்ளுமே, ஐயா.

## 22. (1) அப்பரது வாழ்க்கை வரலாறு [9]

அப்பர் சமண் மதத்திற் புகுந்ததும், சமண மதத்தை விட்டுச் சிவநெறியைக் கடைப்பிடித்ததும், சூலை நோயுற்று அது தீரப் பெற்றதும் தலைப்பு 6-ல் விளக்கப்பட்டன.

(1) சிவபிரான் அப்பருக்கு அறவுரை காட்டி நல்வழிப் படுத்தினார். தமக்கை திலகவதியாரே தம்மைச் சைவ நெறியிற் கூட்டி உதவின காரணத்தால் "அம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே" என நன்றி பாராட்டினர்.

(2) சமண மதத்தை விட்டுப் போய்விட்டார் என அறிந்த சமண அரசன் ஆள்களை அனுப்பி அப்பரை அழைத்து வரச் சொல்லத், தம்மைக் கூப்பிட வந்த ஆள்களை நோக்கி அப்பர், 'யான் சங்கரற்கு மீளா ஆளானேன், இனிச் சமணர் பேச்சைக் கேளேன்; யான் யார்க்கும் குடி அல்லேன், எமனையும் அஞ்சேன், என்னைக் கூப்பிட வந்த நீங்கள் ஆர்; உங்கள் மன்னவன் ஆர்; உலக மன்னர் இடும் பணியை யான் பொருட்படுத்தேன்' என்று எல்லாம் கூறி, அவர்கள் வேண்டவே சென்றனர்.

(3) பின்னர்ச் சமணர்கள் இவரை நீற்றறையில் இட்டபோது இவர் 'நான் இறைவன் திருவடி நீழலில் உள்ளேன்; (இந்த நீற்றறை) குற்றமில்லாத வீணைபோலவும், மாலை மதியம் போலவும், வீசு தென்றல் போலவும், இள வேனில் போலவும், நன்னீர்ப் பொய்கை போலவும் எனக்கு உள்ளக் குளிர்ச்சியையும் இன்பத்தையும் தருகின்றது' என மகிழ்ந்திருந்தார்.

(4) நஞ்சங் கலந்த பால் சோற்றினை வஞ்சனையாகச் சமணர் தர, அந்த நஞ்சு அமுதம்போல ஆகும்படி இறைவன் அருள, உண்டார்.

(5) மதயானையைச் சமணர்கள் இவரைக் கொல்ல ஏவினபோது 'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதும் இல்லை' எனத் துணிவுடன் கூறி, 'யானையை உரித்த பிரானுக்கு வேண்டியவன் நான்; ஈசனுக்கு வேண்டிய

வர்களைக் கொலையினை ஒன்றும் செய்யாது,' எனத் திடம் படக் கூறி அஞ்சாது நின்று வென்றார்.

(6) கல்லோடு இவரைக் கட்டிச் சமணர்கள் கடலில் இட்டபோது சிவனது திருநாமத்தை ஓதி, ஐந்தெழுத்துத் துணைகொண்டு இறைவன் திருஅருளாற் கரை கண்டு ஏறினார். இவ்வண்ணம் சமணரின் கொடுமைகளினின்றும் உய்ந்தனர் அப்பர் பெருமான்.

(7) சமண மாசு ஒழியப், பெண்ணாகடம் என்னும் தலத்தில்—'இறைவா! எனக்குத் திருநீறு பூசு, இடபக்குறி-சூலக்குறி என்மீது பொறித்து வை' என வேண்டிக் கொண்டார்.

(8) (பண் மலிந்த மொழியவருடன்) திருஞான சம்பந்தப்பெருமானுடன் கூடிச் சென்று சிவத்தலங்களைத் தரிசித்தார்.

(9) வா, வா என இறைவன் இவரை அழைத்துச் சென்று திருவலம்புரத்திற் புக்கு மன்னினன்.

(10) திருச்சத்திமுத்தம் என்னும் தலத்தில், 'இறைவா! இம்மையிலேயே, கூற்றுவன் வருமுன் உனது திருவடிச் சுவட்டை என் மேலே பொறித்துவை' என வேண்டி நின்றார்; அவர் வேண்டுகோட்கிரங்கிப் பெருமான் இவருக்குத் திருநல்லூரில் திருவடி தீட்சை செய்தார்.

(11) 'ஒன்று கொலாம்' என்னும் திருப்பதிகத்தைப் பாடி அப்பூதி அடிகளின் மகனுக்கு உற்ற விடத்தைத் தீர்த்து. அப்பூதி அடிகளை 'இவர் கலி மெலியப் படி அழல் ஓம்புவர், இவரது சிரசின்பூ இறைவனது திருவடி'—எனச் சிறப்பித்துப் பாடினார்.

(12) சம்பந்தப் பெருமான் கேட்கத் திருவாரூர்த் திருஆதிரை விழாவைச் சிறப்பித்து 'முத்துவிதானம்' என்னும் பதிகத்தைப் பாடி, அதில் "உலகம் எங்கும் எடுத் தேத்தும் ஆரூரன்தன் ஆதிரை நாளால் அது வண்ணம்" எனத் தெரிவித்தார்.

(13) திருவீழிமிழலையில் (விலக்கப்படாத, நல்ல) படிக்காசு பெற்றார்.

(14) திருமறைக்காட்டில் வேதங்களால் மூடப்பட்டிருந்த திருக்கதவம் திறக்கப் பாடினர்.

(15) திருமறைக் காட்டிலிருந்த இவரை இறைவனே வழி வந்து 'திருவாய்மூருக்கு வா' என்று சொல்லிப்போக, இவர் உடனே திருவாய்மூருக்குப் போக இறைவன் அங்கே ஒளித்துக்கொள்ளத், திருஞானசம்பந்தர் அங்கே வர, மறைக் கதவம் திறக்கப் பாடிய என்னினும் (சிறந்த) செந்தமிழ்ப் பா பாடிக் கதவத்தை அடைப்பித்தவர் (சம்பந்தர்) உள்ளார், இனி, இறைவா! நீ ஒளித்துக் கொள்ள முடியாது' என்று இவர் கூறி, இறைவனது காட்சியைப் பெற்றுப் 'பாட அடியார் பரவக் கண்டேன்' என்னும் திருத்தாண்டகத்தைப் பாடினர்.

(16) திரு ஆவடுதுறையைத் தரிசித்துச் சம்பந்தப் பெருமானுக்கு இறைவர் ஆயிரம்பொன் கொடுத்த நிகழ்ச்சியைச் சிறப்பித்துப் பாடினர்.

(17) பழையாறை வடதளியில் சமணர்களால் மூடப்பட்டு மறைபட்டுக் கிடந்த சிவலிங்கப் பெருமான் வெளிப்படுமாறு தவங்கிடந்து, சிவலிங்கம் வெளிப்படவும், சமணர்கள் அழிவுறவும் செய்தனர்.

(18) திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியில் சிவபெருமான் பொதிசோறும் நீரும் அளித்துப் பசிநோய் [illegible]லத்தைத் தீர்த்ததைக் குறிப்பாகப் பதிகத்திற் குறித்துள்ளார்.

(19) கயிலையைக் காண ஆசைகொண்டு பலநாடு கடந்து வடக்கே காசி முதலிய தரிசித்து, கயிலையைக் காணாது விடுவதில்லை என்று பிடிவாதமாக வேதனைகள் பாராமே சென்றார்; சக்தியற்றுச் சோர்வடைந்தார். அப்போது இறைவர் ஒரு பொய்கையைக் காட்டி 'இப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றை அடைந்து அங்கே நமது கயிலைக் கோலத்தைக் காண்பாயாக' என அசரீரியாக

உரைத்தார்; அவ்வாறே அப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து திருக்கயிலைத் தரிசனத்தைப் பெற்றார்; இதனை 'யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது' எனவும் 'நெடுநீரில் நின்றேற நினைந்தருளி ஆக்கின வாறடியேனை ஐயாறன்,' 'நெடுநீரில் நின்றேறி நினைந்தருளி உருக்கினவா றடியேனை ஐயாறன்'—என்றெல்லாம் தமது பதிகத்தில் குறித்துள்ளார்.

(20) திருவையாற்றில் தாம் பாடிப் புகுந்த விதத்தையும், ஆணும் பெண்ணுமாக அவர் கண்ட கோலத்தையும்; "மலையான் மகளொடும் பாடி", 'காடொடு நாடும் மலையும் கைதொழுதாடா வருவேன்', 'மூகமலர்ந்தாடா வருவேன்,' 'கலைபெடையொடாடி'; 'மடப்பிடியோடும் களிறு,' 'கோழி பெடையொடுங்கூடி'; 'பெடையொடாடிச்சேவல்,' 'பெடையொடாடி நாரை', 'பெடைமயிலொடுங் கூடி,' 'பைங்கிளி பெடையொடாடி,' 'வரிக்குயில் பெடையொடாடி'-வருவன கண்டேன்,'' எனவரும் அருமை இடங்களால் தெரிவிக்கின்றார்.

(21) தாம் வயது ஏறி மூத்தவர் என்பதும், வயது மூத்தபிறகே சிவனுக்கு அன்பரானார் என்பதும்—'கோதை நல்லார் தங்களோ டின்பம் எய்த இளையனும் அல்லேன்' 'நாட்பட்டு வந்து [1]பிறந்தேன்,' 'வெண்மயிர் விரவி' என வருவனவற்றால் அறிகின்றோம்.

(22) 'உன் அடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' எனக் கூறித் திருப்புகலூரில் சிவத்தொடு கலந்தார்.

## (2) அப்பரும் காலதூதரும் - காலதூதர்களுக்கு அப்பர் செய்யும் எச்சரிக்கை [10]

காலதூதர்களே! இராவணனுடைய பத்துத் தலைகளையும் தாளினால் நெருக்கின பிரானுடைய அடியார்களை அணுகாதீர்கள்; அணுகினால் உதைபடுவீர்கள் பத்திரம்.

1. 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்றதனால் - பிறந்தேன் என்பது இறைவனைப் பேசினேன் எனப் பொருள் தரும்.

கிறைய நீறணியும் அடியார்களின் எதிரிலும், ஐந்தெழுத்தில் ஓரெழுத்து வல்லாரிடத்தும், சிவன் என்று அரற்றுவார் ஆராகிலும், ஆக அவர்களிடத்தும், தாளம், கொடு கொட்டிகொண்டு பஜனை செய்யும் அடியார்களிடத்தும், சிவனது திருவடியைப் போற்றி மகிழ்பவர்களிடத்தும், இன்பம் வந்துற்றாலும், துன்பம் வந்துற்றாலும் இறைவனுக்குக் [1]'கொண்டும் கொடுத்தும்' ஆட்செய் தொண்டர்களிடத்தும், சிவனடியார் கூட்டத்தின் பக்கத்திலும், சிவன் திருவடியே நமக்குப் பற்று என்று இருப்பவர்களிடத்தும், சிவாலயத்துக்குத் தீபதூபம், சாந்து, சந்து அலங்கரிப்பவர்களிடத்தும் அணுகாதீர்கள். அவர்களைப் போற்றி ஒதுங்கிப் போவீர்களாக.—என்க் கால தூதர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றார் அப்பர்.—பக்கம் 7 - தலைப்பு 4 (3)ம் பார்க்க.

## (2) அப்பர் உலக மாயைகளை வெருட்டுதல் [11]

(1) புண்ணியங்களே! தீவினைகளே! திருவே! உங்களுக்கு என்னிடத்தில் இடம் கிடையாது! நான் திருவாரூர்ப் பெருமானது திருவடியைப் பற்றித் திரிகின்றேன்! எனக்கு இடர் செய்தால் நீங்கள் கெட்டுப்போவீர்கள்.

(2) ஐம்பெரும் பூதங்களே! உலகத்தையே உம் வசப்படுத்த வல்லீர்கள் நீங்கள்; உங்களுக்கு உணவு ஆக மாட்டேன் நான்; திருஆரூர்ப் பரமனை நோக்கத்தில் உடையவன் காண்; உங்கள் தருக்கை விட்டு விடுங்கள்.

(3) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐம்புலங்களே! பஞ்சேந்திரியங்களே! உங்களுக்கு இவ் வையகமே போதாது! உங்களுடைய ஆட்சி பெரிது; ஆரூர்ப் பெருமான் என் உள்ளத்துள்ளான்; உங்கள் ஜெபம் என்னிடம் சாயாது.

---

1. 'கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்காட் செய்ம்மின்'- திருப்பல்லாண்டு. இது சிவனடியார்களுக்கே தம்குலப் பெண்களைக் கொடுப்பதும், சிவனடியார் குலத்துப் பெண்களையே தாம் கொள்வதையும் குறிக்கலாம்.

(4) விறலே! சூழ்ச்சியே! சுகமே; உலகை எல்லாம் நீங்கள் ஆட்டவல்லீர்; ஆனால் ஆரூரனைச் செப்பும் நான் உங்களால் ஆட்டுண்ணேன்; ஓடிப்போங்கள், அலையாதீர்கள்.

(5) மதமே, மானமே, ஆர்வமே, செற்றமே, குரோதமே, லோபமே, பொறையே உங்கள் ஆட்சி பெரிது தான்; ஆரூர்ப் பெருமானைச் சேர்ந்துள்ளேன்; உங்களால் செலுத்துண்ணேன்.

(6) வறுமையே! செல்வமே! வெகுட்சியே! மகிழ்ச்சியே! வெறுப்பே! மாநிலம் எல்லாம் உங்கள் உணவு; ஆனால் உங்கள் உணவு நான் ஆகமாட்டேன்; நான் ஆரூர்ச் சோதியை நோக்குபவன்; ஓடிப்போங்கள்; உங்கள் ஆட்சிக்கு நான் உட்படேன்.

## 23. அப்பரும் வடமொழியும் [12]

அப்பர் பெருமான் சமண நூல் கற்றவராதலின் அவருடைய திருவாக்கில் 'அர்ச்சிதன்', 'அனுசயம்', 'ஆசாரம்', 'தயாமூலதன்மம்', 'புரோதாயம்', 'பூலோக, புவலோக, சுவலோகம்', 'பஞ்சேந்திரியம்' முதலிய வடசொற்பிரயோகங்களைக் காணலாம்.

## 24. அப்பரும் இசையும் [7 (20)]

தமிழோடு இசைப் பாடலை மறவாதிருந்தும், இறைவன் திருவடிக்கு இன்னிசைப் பாடல்களைப் பாடிவந்தபோதிலும், ஏழு இன்னிசைகளையும் கொண்டு இறைவனை ஏத்துகின்றேன் இல்லையே, சீகாமரம் (நாதநாமக்கிரியை) ஆகிய பண்களைக் கற்றறிந்தேன் இல்லையே என அப்பர் வருந்துகின்றார்.

## 25. அரக்கர், அசுரர் [13]

### (1) பொது

அசுரர்: திருமால், வானவர் இவர்களொடு கூடி அசுரர் கடலைக் கடைய விடம் எழுந்தது.

அரக்கர்: அரக்கர் தம்மின் வல்லவர் எவரும் இல்லை எனக் கொண்டவர், போர் செய்பவர், குன்றுபோலத் தோள்களை உடையவர், கோடிக் கணக்கான பெருந்தவம் செய்தும் நன்னெறி குன்றினவர், உணர்விலாதவர், குண மிலாதவர், பலநாளும் தீமை செய்தவர், கூட்டமாய் வந்து கொலைபுரியுங் கொடியர், பாசத்தை நீக்க முயலாதவர், பொலிவு அழிந்தவர், இனிய சொல் இல்லாதவர், நல்வாழ்வு ஒன்றும் அறியாதவர்.

தானவர்: *சிவனுக்கு அன்பு செய்பவர், வானவரை ஒக்கத் தானவர்க்கும் இன்சுவை அளித்தவர் சிவபிரான்.

## (2) சிறப்பு

1. இரணியன்: நகத்தால் அல்லாமல் வேறு வகையால் வெல்லப்படாத திறல் வாய்ந்தவன்; இவனது உடலைக் கீண்டனர் திருமால்.

2. இராவணன்: தனித் தலைப்பு-177 காண்க.

3. கயாசுரன்: கயாசுரனைக் கொல்லவேண்டி ஆனை முகக் கடவுளை இறைவன் படைத்தனன்.

4. சலந்தரன்: 'சிவபிரான் சலந்தரனை அட்டது' என்னுந் தலைப்பு 65(4) பார்க்க. சலந்தரன் மலைபோன்ற தோளைக் கொண்டவன்; போர்வேண்டி வலியவந்த இவனை இறைவன் சக்கரத்தாற் பிளந்தான். அந்தச் சக்கரத்தைத் திருமால்வேண்ட அதை அவருக்கு அளித்த கருணையாளன் இறைவன்.

5. சூரபன்மா: போருக்கு உற்ற சூரபன்மாவைக் குமரக்கடவுள் அட்டனர்.

6. தாரகன்: தாரகன் என்னும் அசுரன் ஏழுலகையும் நலிவிக்க, அக்கொடுமையைப் பொறுக்க முடியாத தேவகணங்கள் இறைவனைத் துதித்துத் தொழக், காளி தோன்றி ஓடின தாரகனது உடலைப் பிளந்தாள்; அங்ஙனப்

பிளந்த பின்னும் சினம் தணியாதிருந்த காளியின் சினம் தணிவதற்காகச் சிவபிரான் அரிய கூத்தினை ஆடி அவளது சினத்தைத் தணிவித்தார்.

7. வக்கரன்: வக்கரனது உயிரை வவ்வவேண்டித் திருமால் தமது கண்ணையே இறைவன் திருவடியில் மலராக இட்டுப் பூசிக்க, இறைவனால் சக்கரம் அருளப்பெற்றார்.

## 26. அரசர் [14]

சோழ அரசர், முடி அரசர், நாவலந்தீ அரசர், தலையாலங்காட்டுப் போர் நிகழ்ச்சி, அரசர்கள் யானைமீதேறி வருவது குறிக்கப்பட்டுள. அரசர்களுள் கூறப்பட்டவர்கள் :—

(i) இமயமலை அரசன்: இவன் பெருந்திரு உடையவன். இவனுடைய மகள் பார்வதியின்மீது இறைவன் விருப்புளான். 'சிவனும் தேவியும்' என்னும் தலைப்பு 113 பார்க்க.

(ii) காகுத்தன்: (ஸ்ரீராமர்) இவர் சிவபிரானைத் திருநாரையூரிற் பூசித்தனர்.

(iii) கோச்செங்கட் சோழன்: 'நாயன்மார்' என்னுந் தலைப்பு - 146 பார்க்க.

(iv) சகரர்கள்: இறைவன் இவர்களைத் தடுத்தாட்கொண்டார். இவர்கள் காலம் மிகப் பழைய காலம்.

(v) தசரதன்: இவ்வரசனுடைய குமாரன் ஸ்ரீ ராமபிரானது தளர்ச்சியை இறைவர் நீக்கினார்.

(vi) பகீரதன்: ஐம்புலன்களையும் அடக்கி அனேக காலம் மெய்யான தவத்தைத் தூய மனத்துடனும் திட பத்தியுடனும் செய்த பகீரதன் பொருட்டு அதிவேகமாய்ப் பூமியும் நெளியும்படிப் பாய்ந்து பல முகங்களாகப் பரந்து இழிந்துவந்த கங்கைப் பெருக்கைத், தேவர்களின் திட உணர்ச்சியுடன் கூடிய வேண்டுகோளுக்கு இரங்கிப், பனியளவு ஆக்கி இறைவர் தமது சடையில் ஏற்றருளினார்.

(vii) மாவலி: மறைக்காடு என வழங்கிய வேதாரணியத்தில் (கர்ப்பக் கிரகத்தில் இருந்த தீபத்து நெய்யை உண்ண வந்த) ஒரு காரெலி தன் மூக்கை அத்தீபக்கனல் சுட்டிட ஆற்றாது மூக்கால் (வத்தியைத்) தூண்டிட அதனால் தீபம் நன்கு தூண்டப்பட்டு எரிய, இறைவர் மகிழ்ந்து அந்த எலியை (மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறப்பித்து) மண், விண் முதலிய உலகங்களை ஆளும் பேற்றினைக் குறைவறக் கொடுத்தருளினார்.

## 27. ஆறுகள், நீர்நிலைகள் [15]

அரிசில்: முத்துக்கள் ஊர்ந்துவரும் நீரைக்கொண்டது.

கங்கை: பகீரதன் வரமாகக் கேட்க, ஆயிர முகமாகப் பரந்து, பூமியும் நெளியும்படி, தேவர்கள் ஏத்த வந்து இறங்கிய ஆறு இது. தெளிந்த நீரை உடையது. கும்பகோணத்தில் மகாமக தீர்த்தத்தில் வரும் நதிகளுள் ஒன்று. கங்கையில் ஆடினாலும் ஈசன் ஒருவன் உளன் என்னும் உணர்ச்சி யில்லையாயின் ஆடின பயன் கிட்டாது.

கடுவாய்: இது குடமுருட்டி யாறு: சங்கும் மலர்களும் இதன் அலைகளில் வரும்; இந் நதியிற் பூச நீராடுதல் சிறப்பு.

கன்னி: கும்பகோணம் மகாமக தீர்த்தத்தில் தோன்றும் நதிகளுள் ஒன்று இது.

காவிரி: மலையினின்று இழியும் அருவிகளைக் கொண்டது. கால்களை (கிளைகளை)க் கொண்டது; சோணாட்டிற் பரவுவது. கொய் மீன்களையும், முத்துக்களையும், மணிகளையும், பவளங்களையும், மயிலிறகுகளையும், வண்டல் மணலையும், மந்தாரம், மல்லிகை, செண்பகம் முதலிய புது மலர்களையும், மலைப் பண்டங்களையும் அடித்துக்கொண்டு வரும்; வயல்களுக்கு வேண்டிய நீரைத் தரும். காவிரியின் கரையிற் கொக்கினங்கள் பயிலும். பக்தர்கள் காவிரிநீரில் ஆடிக் கனிந்த அன்புடன் இறைவனைப் பணிவார்கள்.

இருக்கு வேதம் ஓதிக்கொண்டு தூய காவிரியின் நன்னீர்கொண்டு இறைவனுக்கு ஆட்டுதல் வேண்டும் காவிரி நீரில் ஆடினாலும் ஈசன் ஒருவன் உளன் என்னும் உணர்வு இல்லையேல் ஆடின பயன் கிட்டாது.

குமரி: குமரி தீர்த்தத்தில் ஆடினாலும் ஈசன் உளன் என்னும் உணர்ச்சி இல்லையேல் ஆடினது பயனற்றதாகும்.

கெடிலம்: மலைகளினின்றிழிவது, கட்டித் தேன் போலும் நீரைக்கொண்டது; கெண்டை மீன் நிரம்பியது தோண்டும் இடங்களில் பொன் கிடைக்கப்பெறுவது செம்மையான நீரைக் கொண்டது, தூய வாளொளிபோன்ற தெள்ளிய நீரை வீசும்; தென்னையின் மடல் கிழிய ஓடும் நீரில் மணிகள் சிந்தும்; கயல், கெண்டை ஆதிய மீன்கள் பாயும் நீர் வாய்ந்தது; திரைகளில் மலையிடையுள்ள வயிரத் திரள், மாணிக்கம் ஆதிய மணிகள் கிடக்கும்; மாதர்கள் குடைந்து ஆடுவது; தெய்வ நதி, தென்திசைக் கங்கை (தக்ஷிண கங்கை) எனப்படும் இந் நதி திருஅதிகைத் தலத்தைச் சூழவரும்.

கொட்டாறு: காவிரியின் கால் இது.

கோதாவிரி: கும்பகோணத்து மகாமக தீர்த்தத்தே வரும் நதிகளுள் இது ஒன்று.

பெண்ணை: மலைப் பண்டங்களைப் பறித்து வருவது; திருமுண்டீச்சரம் என்னும் தலத்து இறைவனை வலங் கொள்வது இந் நதி.

மண்ணி: இருண்ட பொழில்களாற் சூழப்பட்ட நதி.

வைகை: இதன் நீரில் மணிகள் புரளும்.

கொள்ளிடம், கோமி (கோமதி), சரஸ்வதி, சாமி, யமுனை, வெண்ணி (பாமணி) நதிகளும் கூறப்பட்டுள்ளன. கயல்மீன், சேல்மீன் பாயுங் கயங்கள், வண்டுகள் உலவ நாள்தோறும் மலரும் தாமரைத் தடங்கள், வண்டுகள் மூசும் பொய்கைகள், ஆம்பல் மலரும் குளிர்ந்த பொய்கை

கள், வண்டுகள் பறந்தோட மீன்கள் பாயும் பொய்கைகள்—செங்குவளை மலரும் குளங்கள் கூறப்பட்டுள.

## 28. இசையும் பண்ணும் [16]

இசைகளுள் இருக்குவேத இசையும், ஏழிசையும்; பண்களுள் காந்தாரமும், (சீ)காமரமும், செவ்வழியும், பஞ்சமமும், வண்டின் பண்ணும்; வாத்திய இசைகளிற் கின்னரம், குழல், வீணை, யாழ், பாலையாழ் இசைகளும் பாடல்களில் தமிழோசைப் பாடலும், பண்பொருந்த இசை பாடுதலும் கூறப்பட்டுள. பண் பொருந்தப் பயின்று பாடும் அடியார்கள் திருக்கோளிலி என்னும் தலத்தில் இருந் தார்கள்.

## 29. இந்திரன் [17]

இந்திரன் தேவர்களுக்குத் தலைவன். ஈறு உற்று மாண்ட இந்திரர்களின் எண்ணிக்கை கங்கை யாற்றின் மணலின் எண்ணிக்கையை நிகர்க்கும். இந்திரன் வழிபட்ட விவரங்களைத் தலைப்பு 182-ல் பார்க்கவும்.

## 30. இலக்கண விசேடங்கள் [18]

அப்பர் பெருமானது திருவாக்கில் அசைச் சொற்கள் அணிவிசேடங்கள், இடைக்குறை, கடைக்குறை, இடை நிலைத் தீபம், எதுகை—மோனை விசேடங்கள், போலி மரூஉ, உருபு மயக்கம்—முதலிய இலக்கண விசேடங்களைக் காணலாகும்

## 31. இலக்குமி [19]

இலக்குமி—திரு, திருமகள், பூமகள், செய்யாள் எனக் கூறப்பட்டுளள். இலக்குமி சிவனைப் பூசை செய்வாள், சிவபிரானது திருவடியில் விளங்குவாள் இலக்குமி

## 32. இலிங்கம் [20]

இங்குள்ளேன் என்று இலிங்கமாக எரியிடைத் தோன்றினன் இறைவன்.

## 33. இறந்தல் நிலை—இறந்தபின்—இறப்பதன்முன் [21]

இறப்பு என்பது நிச்சயமாக வருவது; அது அஞ்சுதற்குரியது. இறந்தால், பிணத்தின் கையையும் காலையும் கட்டி முருட்டு மெத்தையிற் கிடத்துவர்; ஐம்புலன்களும், 96 தத்துவங்களும் கூடிக் கலக்கம் செய்யும் இந்த உடலினின்றும் ஆவி பிரியும்போது, இறைவரை அறிய மாட்டேன். இறந்தால் இறைவர் தவிர வேறு யார் புகல் அளிக்க வல்லார்! அவரே நம்மை மரணத்தின்பின் புரந்தருளுவார். உடல் சுடுகாட்டில் எரிபடுமுன் திருவான்மியூர் நாதரைப் புதுப்பூக் கொண்டு பூசித்து வலஞ்செய்தால் அவர் நமது சோர்வைத் தொலைத்தருளுவார்.

## 34. இன்பம் தருவன [22]

குற்றமிலாத வீணை, மாலை நிலா, குளிர் பொய்கை, இளவேனில், வீசு தென்றல்—இவை இன்பம் தருவனபோல ஈசன் திருவடிநீழல் இன்பம் தருவதாம்.

கட்டிபட்ட கரும்பு, கனி, தனிமுடி அரசு, பாவை நல்லார் இந்நான்கினும் மேலான அழியாத இனிமையைத் தன்னைச் சரண் அடைந்தவர்க்குத் தருபவன் இறைவன்.

## 35. இனமொழிகள் [23]

"ஆடல் பாடல்," "எண் எழுத்து," "தூபம் தீபம்" போன்ற இனமொழிகளாயுள்ளன முப்பத்தைந்து ஒளிநெறிப் பகுதியிற் காட்டப்பட்டுள.

## 36. (1) உலகினருக்கு உபதேசம் [24 (1)]

1. வழிபாடு: ஆய்ந்தெடுத்த மலர்கொண்டு பூசித்து வணங்குக. அகிற் புகையிட்டு வணங்குக. எப்போதும் நெஞ்சில் இறைவனை இருத்துக. ஐந்தெழுத்தோதிச் சிவனைத் தியானிக்க. திருநீறிட்டுத் தொண்டு செய்க;

இறைவன் புகழையே பேசுக; எப்போதும் இரவும் பகலும் ஏத்தித் துதிக்க. இறைவனுடைய ஆயிரக் கணக்கான திருநாமங்களை எண்ணித் துதி செய்க. புலன்களை அடக்கிக் கருத்துடன் தொழுக. ஆசைகளை விலக்கிக் கடவுளை வணங்குக; விரும்பிப் போற்றுக. காலையில் வெண்ணீறு பூசிச் சிவனே எனப் பணிக. மறவாது ஏத்தி அன்புடன் தொழுக. சிவாயநம என ஓதித் திருநீறு அணிக.

2. வழிபாட்டின் பலன்: நாள்தோறும் இறைவனை ஏத்தினால் இன்பம் பெறலாகும். இறைவனைத் தியானித்தால் பிறவிச் சேற்றைக் கடத்தல் கைகூடும்; இடர்கள் விலகும், யமதண்டனை நீங்கும், துன்பம் அணுகாது, துயர் அணுகாது, தேடி அவரது திருவடியை நாம் போற்றினால் நாடி அவர் வந்து நம்மை ஆட்கொள்வர். ஈசன் தமர்களைக் கொலை யானையும் கொல்லாது; சாம்போது எதையும் உணரமுடியாது; ஆதலால் முன்னரே தெளிவுபெற்று ஈசனை வணங்கினால் அவன் அருள் கைகூடும்! பூக்கொண்டு இறைவரைப் பூசித்தால் அவர் நம்மைக் காத்தளிப்பார்.

3. பிற உபதேசங்கள் [24]: சூரியனையே முழுமுதற் கடவுளாகக் கருதாதீர்கள். அவன் யாரை வழிபட்டு வணங்கினனோ அவர்தான் ஆதிமூர்த்தி. இறைவர் ஈபவர்க்கு அருளைத் தந்து இரப்பவர்க்கு ஈய வைத்தார். கங்கைக்கும் பார்வதிக்கும் இடம்தந்துள்ள இறைவனுடைய திருவடிகளை உள்ளத்தே நாம் தரித்தால் உய்யலாம்; தமது தொண்டர்களைத் — தொழப்படும் தேவர்கள் யாவரும் தொழும்படி வைப்பார். திருநீறு ஆதிய சிவ சின்னங்களை அணிந்துள்ள சிவனடியார்களை மகிழ்ந்து தரிசியுங்கள்; ஆசை, கோபம், விரோதம் ஆதிய துர்க்குணங்களை நீக்கினால் இறைவன் நமக்குப் புனித மூர்த்தியாய் விளங்குவான். இறைவனை விரும்பி வணங்காமையால் பாவ வேதனைகள் உண்டாகி, யாரார் சமைத்த உணவையோ வீடு வீடாகத் திரிந்து இரந்து, ஆதரவின்றி உண்ணவேண்டி வரும். தாராள மனத்துடன் ஐயமிடவேண்டும்; நன்னறிவு இன்றிச் சும்மா சந்நியாசி வேடம் பூண்பதிற் பயனில்லை;

ஞானத் தீயால் கள்ளத் தனத்தை எரித்துவிட வேண்டும்; பழம் தந்தால் பழத்தை உண்பீர்கள்; ஈசன் திருவடி என்னும் ஒரு பழம் உண்டு; ஆசையுடன் அதை உண்போர்க்கு அது மிக இனிக்கும். ஈதற்குள்ளமில்லாத வஞ்ச மனத்தினர் நரகில் இடர்ப்படுவர்; சமணர், சாக்கியர்களின் பொய்யுரைகளை மெய்யெனக் கொள்ளாதீர்கள். காளையரைத் தங்கள் பேச்சினால் மயக்கி வஞ்சிக்கும் மாதர்களைச் சேராதீர்கள்; மாதர்களின் அழகில் மயங்கி மனத்தை வைக்காதீர்கள்; பொருள்களும், மாதரும், உறவினரும் சமயத்தில் உதவி தரா, உதவி தரார்—இறைவர் தாம் துணை. ஆதலால் அஞ்சுவதேன்; அஞ்சவேண்டாம்; யார் வணங்கும் தேவர்களுக்கும் தேவன் மஹாதேவன் ஒருவனே.

## (2) நெஞ்சுக்கு உபதேசம் [24 (2)]

நெஞ்சமே! அரனுடைய திருநாமங்களை நித்தலும் நினைப்பாயாக; புலன்கள் வேண்டியவையே நீ விரும்பி நின்றாய்; அது கூடாது; உள்ளதே போதுமென்று எண்ணி 'சிவாயநம' என்று ஓதி இருந்தால்தான் நீ சிவனது திருவருளைப் பெறக்கூடும். இரவும் பகலும் இறைவனை ஏத்தி வாழ்த்தி, பிழைத்த எல்லாம் பொறுத்தருள்செய் பெரியோய் என வேண்டி நிற்பாயாக. நான் சொல்ல வேண்டியதை நெஞ்சே! உனக்குச் சொல்லிவிட்டேன். என்மேல் இனிக் குற்றமில்லை. நிலையாத இந்த உடலே பொருள் என்று எண்ணிப் பேராசை கொள்ளும் ஆங்காரத்தை, நெஞ்சே! நீ விடுவாயாக. 'ஊறலே உவர்ப்பு நாறி, உதிரமே ஒழுகும் வாசல்' இதைப் புடைவையால் மூடியுள்ள மாதர்களின் கோலத்தைக் கண்டு மயங்குகின்றாய்; அம் மயக்கை ஒழித்தல் வேண்டும் நீ.

நமது குலம் இழிந்தது; நம்மாட்டுக் குற்றம் பலவுள என நெஞ்சமே நீ அஞ்சிக் கலங்காதே; திருச்சேறைப் பெருமான் துணைசெய்வர்; இடபக் கொடியைக் கொண்ட சிவனை நீ கடைப்பிடித்தால் உனக்கு அவர் புகல் அளிப்பார். சிவனது திருநாமம் 'நமச்சிவாய' என்பதை ஓதி வரின் விண்ணுலகில் நீ எளிதில் இருக்கலாகும். தந்தை, தாய்,

உடன்பிறந்தார், தாரம், புத்திரர், தாம்தாம் ஆரோ, எங்ஙனம் வந்தோம், எப்படிப் போவோம்—இவையெலாம் ஒரு மாயம்—இவை தம்மை நம்பி மகிழாதே, நெஞ்சே. இந்த உயிர்போங் கூட்டை ஒரு பொருளென்று மதித்து உலகெலாம் ஆளலாம் என்று நீ ஆகாசக் கோட்டை கட்டு கின்றாய்; நெஞ்சமே! உனது ஆங்காரத்தை விட்டொழிக நீதியால் நித்தமும் சிவனை நினைந்துய்க; அப்போதுதான் விடுதற்கரிய பிறவியை நீ விடலாகும். பஞ்சம் வந்ததே என்று அஞ்சாதே, நெஞ்சே! சிவனெனும் முக்கட் பொன்னெடுங்குன்றம் துணை உளது; முன்செய்த பாவங் கள் இப்போது வந்து உன்னைச் சந்திக்கின்றன; அது ஏனென்றால் நீ முற்பிறப்பில் சிவனுக்கு ஆட்செய்யாத காரணத்தால்; இந்தப் பாவங்கள் பற்றற வேண்டினால், ‘உன்னையல்லால் வேறு துணை எனக்கு இல்லை, பெருமானே!’ என நீ ஆரூர்ப் பெருமானைப் போற்றி நிற்பாயாக, நெஞ்சமே! சேற்றிற் கிடக்கும் பன்றிபோலப் படுதலைவிட்டு, நீ தேறிச் சிவனை நினைப்பாயாகிற் சிவகதி அடைதல் திண்ணம்; நெஞ்சே! என்மீது பழைய பகை உனக்கு ஏதேனும் உளதோ; புண்ணியமும் நன்னெறியும் வேண்டு மாயின் நீ ஆரூரா என்று ஏத்தி நிற்பாயாக; கடல் சுருங்கி னும், கடல் மேலெழுந்து மூடினும், மழை மறுக்கினும், திசை கெடினும், சுடர்கள் வீழினும், மண் பாதலம் புகினும், நெஞ்சே நீ அஞ்சாதே! இறைவன் திருவடி நமக் குத் திண்ணமாகத் துணைபுரியும்; அமணர், புத்தர் கூறும் பொய்யுரையை மெய்யென்று நம்பி இடரிற் படாதே; இறை வனுக்கு உகந்தது தமிழ்மாலை; ஆதலால், நெஞ்சமே! நீ தமிழ்மாலைகளை அவருக்குச் சமர்ப்பிப்பாயாக; அதுவே உய்யும் வழி. அவ்வழியைக் கடைப் பிடித்து உய்வாயாக. என்ன புண்ணியம் செய்தனையோ, நெஞ்சே! இறைவன் திருவடி மனத்தினும் சிரத்தினும் விளங்குதற்கு.

## (3) இறைவனைக் காணும்வழி [64, 24(4)]

இறைவனைக் காண வேண்டுமென்றால் இறைவனை வணங்கவேண்டும், ஒழுக்கநெறி வேண்டும், பணிசெய்ய

வேண்டும். உதாரணமாகக், கோவண உடையே போதுமென உணர்ந்து உடுத்தல் வேண்டும், அஷ்டாங்கமாக வீழ்ந்து பணியவேண்டும். திருநீறு, கண்டி (ருத்ராக்ஷம்) அணிதல் வேண்டும். சாணம், நீர் கொண்டு திருக்கோயிலை மெழுகிச் சுத்தி செய்தல் வேண்டும்; மரங்களில் ஏறி மலர்கள் பறிக்க வேண்டும்; உள்ளத்தில் களிப்பூறப் பூக்களைப் பறித்தல் வேண்டும், பூக் கூடையைச் சுமத்தல் வேண்டும்; இறை உருவை நெய், பால், நிரம்ப நீர்கொண்டு ஆட்டி மகிழ வேண்டும்; எருக்கமாலை, குவளைமாலை, நறுமலர் மாலைகளால் இறையை அலங்கரிக்க வேண்டும்; அவரை அணைந்து மலரிட்டுப் பூசிக்க வேண்டும்; கையிற் கபாலம், கட்டு வாங்கம் விளங்கவும், நெற்றியில் திலகம், கழுத்திற் கண்டி, விளங்கவும், வாயாற் சங்கம் ஊதியும் (பைரவ கோலத்த ராய்) விளங்கவேண்டும்; பொய், வஞ்சனை முதலிய துர்க் குணங்களை நீக்கி, இறைவனைப் புகழ்ந்து போற்றுதல் வேண்டும். இத்தகைய தொண்டு ஒன்றும் செய்யாது அரியும் அயனும் இறைவனைக் காண முயற்சி செய்தார்கள். அவர்கள் முயற்சி எங்ஙனம் கைகூடும்! அதனால்தான் தங்கள் முயற்சி கைகூடாது இறைவனைக் காண முடியாமல் இருவரும் திகைத்தனர்.

## (4) உலகினர் பொருட்டு வருந்துதலும், அவர்களுக்கு மெய்ந்நெறி காட்டுதலும் [24(3)]

1. அரக்கனும் இராவணனுடைய அகங்காரத்தை அடக்கி அவனுக்குப் பேரருள் செய்த பெருமானுடைய பெருந்தன்மையை அறியப் பெற்றிலர் கருத்திலாத சில கயவர்கள் (கீழ்மக்கள்).

2. அந்திப் பொழுதிற் சூரியனை வணங்குகின்றார்கள்; அந்தச் சூரியன் சிவனுடைய திருவுருவத்தன்தானே; இருக்கு ஆதிய வேதங்கள் ஈசனைத்தானே தொழுகின்றன; இக் கருத்தைச் சில கல்மனத்தினர் நினைப்பதே இல்லை

3. சிவனுக்கு அடிமையாவதுமில்லை, அடிமையான வர்களை அடைந்து உய்வதுமில்லை; அங்ஙனம் ஆட்பட்டு

மெய்ந்நெறியில் நிற்பதுமில்லை, இவர்கள் செவி—தொளை படாத சுரைக்காய்தான்; இவர்கள் வீணுக மாய்ந்து மண்ணுக்கு இரையாகிக் கழிகின்றூர்கள்.

4. தேவர்கள் இறைவனுக்குப் பணி செய்வதைக் கண்டு உண்மையை அறிகின்றூர் இலர் தீவினையாளர்.

5. அக்கினி பெருக்கிப் பூஜை (அக்கினி கோத்திரம்) செய்கின்றூர்கள். அந்த எரி ஈசனுடைய திருவுரு வர்க்கம் என்பதை அவர்கள் உணர்ந்தாரில்லை. அரிக்கும் அயனுக்கும் அரியனுய் நின்ற ஈசனை உணராது அவர்கள் நரி விருத்தக் கதைபோல—(நரி எப்படி நீரில் நிழலில் தெரிந்த மாமிசத் துண்டை எடுக்க முயன்று வாயிலிருந்த மாமிசத் துண்டையும் இழந்ததோ அவ்வாறு) அக்கினியையும் திருப்திப் படுத்தாது ஈசனையும் திருப்திப் படுத்தாது பலனை இழப்பார்கள்.

6. கங்கை, காவிரி, குமரித்துறை, கடல்நீர்—இவைகளில் நீராடினுலும், வேள்வி இயற்றினும் ஈசன் எங்கும் உளன் என்னும் உணர்ச்சி யில்லாதவர்க்குப் பயனே கிட்டாது. நாடும், காடும் நடந்து திரியினும், பெருந்தவம் செய்யினும், ஊன் உண்ணுது மேனேக்கி நின்றுலும், ஞான மூர்த்தியை உணராதார்க்கு நன்மை பிறவாது. ஒழுங்காகக் கோயிலுக்குப் போவதும், அங்கு மூர்த்திகளின் திருவுருவங்களைத் தரிசிப்பதும், ஆயிரக் கணக்கில் வேதங்களை ஓதுவதும்—மனம் ஈசனிடத்திற் புகாவிடின்—யாதொரு பயனையும் தரா.

7. வேடங்களைப் பூண்பதும், தேகத்தை விரதாதிகளால் வருத்துவதும்—அம்பலத்தரசைப் பாடாத பண்பினருக்கு யாதொரு பயனையும் தரா.

8. அரனிடத்தில் அன்பில்லாமல் கோடி தீர்த்தம் கலந்து குளிப்பது—ஓட்டைக் குடத்தில் ஓடும் நீரை மூடிவைப்பதற்கு நிகராகும்.

9. செத்துச் செத்துப் பிறக்கும் தேவர்களைத் துதித்துப் பத்தி செய்யும் மனப்பாறைகளுக்கு அரியும்

அயனும் துதிக்கும் பெருமானது பெருமை எங்ஙனம் விளங்கும்—விளங்காது என்றபடி.

10. பூதகி என்னும் பேயின் முலையை உண்டு அப் பேயை மாள்வித்த மாயனது மாயத்திற்பட்ட மனத்தார்க்குத் தாயினும் நல்ல சங்கரனுடைய அன்பர்கள் உண்ணும் அமுதத்தைப் பருகும் பாக்கியம் கிட்டாது.

11. பட்டராய் இருந்தால் என்ன, சாத்திரங்கள் கற்றிருந்தால் என்ன, மந்திரங்கள் தெரிந்திருந்தால் என்ன, ஈதல் அன்னதானம் முதலிய செய்தால் என்ன, வேதம் ஓதினால் என்ன, வேள்வி செய்தால் என்ன, நீதி நூல்கள் கற்றிருந்தால் என்ன, ஆறங்கமும் ஓதியிருந்தால் என்ன, இவர்களுக்கு ஒரு பயனும் இல்லை, ஈசன் என்னும் உணர்ச்சியுடன் தியானிக்காவிடின்.

12. வாது யாது செய்யினும் எத் தேவருக்கும் தேவராவார் மஹாதேவரே தவிர வேறொருவர் இலர்.

## (5) தலங்கள் சம்பந்தமான உபதேசங்கள் [24(5)]

### (i) நெஞ்சுக்கு உபதேசம்

நெஞ்சமே! நீ அன்பிலாலந்துறைப் பெருமானை நினையாது கெடுகின்றாய்; திருவாரூரா என்று சிந்திப்பாயாக; இடர்கெட வேண்டில் ஆரூரா ஆரூரா என்று அலறுவாயாக; அவர் சேவடியை வாழ்த்தி வணங்குவாயாக; நீ என்ன மாதவம் செய்தாயோ ஆரூர் அரனெறி சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் தங்குதற்கு; திருஆலம்பொழிலானைச் சிந்திப்பாயாக; நீ அன்புடன் ஆனைக்கா அண்ணலை நினைப்பாயாக; பாசங்கள் அற்றுப் பராபரனிடத்தில் ஆனந்த ஆசை உண்டாகும்; நன்மையை நீ அறிவாயாயின் திரு இராமேசுரத்துக்குப் போய்த் தொழுது பிழைப்பாயாக; திருவையாற்றுத் தேனன்ன தேவை அடுத்து நினைப்பாயாகில் அருந்தவஞ் செய்த பேற்றினை அடைவாய்; ஐயாறனை நீ மறவாதிருக்கின்றாய், அதனால் உனக்கு நல்ல புத்தி வந்துளது;

ஆதலால் உன்மீது எனக்கு மிக்க மகிழ்ச்சி; திருஒற்றியூரான் திருவடியை அடைவாயாக; தீவினைகள் தொலையும் வண்ணம் நீ 'கச்சிக்கம்பா' என்று கதறுவாயாக; கடம்பந்துறையைத் தக்கபடி நினைப்பாயாக; பண்ணொடு பாடல் இயற்றிக் கடம்பூர்க்கரக் கோயிலை மனத்தால் தொழுவாயாக; குலம் இழிந்தது, குற்றம் பெரிது என அஞ்சற்க, சேறைப் பெருமானார் உனக்குத் துணை உளர். நீ ஆணிபோல் அழுந்திய வன்மை கொண்டுள்ளாயே, திருச்சோற்றுத்துறையர்க்குப் பணிசெய்வாயாக; நீ திரிச்சிராப்பள்ளி எனச் சொல், தீவினை உன்னை நசிக்க வேதனை தராமல் ஓடிப்போம்; நாகை ஐயனை நீ உணர்ந்தபடியால் நிச்சயமாக நாம் உய்ந்தோம்; நெய்த்தானம் என்னும் தலத்தை நினைக்கவேண்டிய முறையால் நீ நினைத்தால் உய்திபெறலாம். ஒரு விரதமாகக்கொண்டு நீ பாண்டிக்கொடுமுடியைத் தொழுவாயாக; உனக்கு ஒரு பற்று என்று திருப்பாதிரிப்புலியூர்ச் சிவனார் திருக்கழலை நினைப்பாயாக; அதுவே உனக்கு அடைக்கலத் தானமாம்; நீ மியச்சூரை நினைந்திருப்பாயாக; திருவக்கரை உறையும் ஈசனை நாள்தோறும் வணங்குவாயாக; ஊன் இன்பம் வேண்டாது வான் இன்பம் வேண்டில் திருவெண்காட்டை அடைந்து உய்வாயாக.

### (ii) உலகினருக்கு உபதேசம்

உலகினரே! திரு அண்ணாமலையை முந்திச் சென்று முப்போதும் வணங்குங்கள்; திரு அதிகை வீரட்டத்தானை விரும்பாமையால் வரும் வேதனை—ஆர் ஆரோ சமைத்த உணவை—வீடு வீடாகத் திரிந்து இரந்து உண்ணச் செய்யும்; இந்தப் பிறவி என்கின்ற மாயையில் வீழ்ந்து அழுந்தி இருப்பினும் அன்பிலாலந்துறையை மறவாது தொழுது ஏத்தி வணங்குங்கள்; திரு ஆமாத்தூர் பிரானையே நாளும் நினையுங்கள்; ஆரூர்ப்பெருமான் அடி கிழக்கீழ்த் தொண்டுபட்டு உய்ம்மின்கள்; பாடை என்கிற மூட்டு மெத்தையில் உங்களைக் கிடத்தா முன்னம், ஐம்புலன்களை நல்ல பண்பில் இருத்தித் திருவாரூரை அடைவீர்களாக நேசத்துடன் திரு இராமேச்சுரத்தை நினைப்பீர்களாக

திருவையாற்றைத் தொழுவீர்களாக—அதுவே தவநெறி. பொருள் பொருள் என்று பொருளைத் தேடி மகிழ்கின்றீர்களே! நீங்கள் ஐயாறு ஐயாறு என்பீராகில் அல்லல் தீரும்; அமருலகம் ஆளலாம்; திருஒற்றியூரை எப்போதும் தொழுவீர்களாக; உங்கள் வினை தீர வேண்டில் ஒற்றியூர் உடைய கோவை மனத்தினுள் விளக்கேற்றித் தியானியுங்கள்; புதுமலர்கொண்டு அவர் பாதத்தை ஏத்த நம் பாவங்கள் விலகிப்போம்; கச்சிஏகம்பனைத் தொழுவீர்களாக—அவர் நம்மை ஆண்டருளுவர்; நமது அஞ்ஞான இருள் விலகும்; நம்மைச் சிறைப்படுத்தியுள்ள வினை தீர வேண்டில் கடம்பந்துறையைச் சேருங்கள், தொழுமின்கள்; வாழ்க்கை வேதனைகளை அறுக்க நீங்கள் வல்லராக வேண்டில் விரைவில் கடம்பூர்க் கரக்கோயிலைச் சென்று சேருங்கள்; தொழுது வணங்க எழுமின்கள்; நீங்கள் "கண்டியூர் கண்டியூர்" என்பீராகில் உங்கள் வல்வினை கழன்றுபோம்; நீங்கள் உய்யும் வழியைக் கூறுகின்றேன், கேளுங்கள்—மாதர் வலையிற்படாது, காலன் வருமுன், நறுமண மலரொடு கருவிலிக் கொட்டிட்டையைச் சேருங்கள்; நாள்தோறும் சிந்தியுங்கள்; மலர்கொண்டு பூசியுங்கள்; உங்கள் பிறவி நோய் தொலையும்; வாடி வருந்த வேண்டாம்; கழுமலத்துப் பெருமானுக்கு ஆளாவதன்றி வேறு கதியுண்டோ இவ்வுலகிடையே; இன்றுள்ளவர்கள் நாளை இல்லை என்னும் உண்மையை உணராது திரிகின்றவர்களே! நீங்கள் இவ்வுடலை விடுமுன்பு திருக்காட்டுப்பள்ளியைத் தரிசித்து உய்வீர்களாக. மாதர்களை விரும்பி ஒழுக்கம் இழந்து திகைக்கின்றீர்களே! பேதைகளே! திருக்காட்டுப் பள்ளியில் உறையும் நீலகண்டனைத் தினந்தோறும் காலையிலேயே தொழுவீர்களாக.

தாயத்தார், தமர், பெண்டிர், மக்கள், நிதி என்னும் மாயத்திற்பட்டும், கவலைப்பட்டும் மயங்குகின்றீர்களே! கானூர்ப் பெருமானை வணங்குங்கள்; உங்கள் வினை மாயும்: அவர் பாதங்களை அடைதலே நல்வழியாம்; நீங்கள் குடமூக்கே குடமூக்கே என்பீர்களாகில் உங்கள் பொல்லா

வினைகள் தீர்ந்து நீங்கள் அரனைக் குறுகமுடியும்; மரக் கொக்குப்போல ஏன் வாய்விட்டு அலறி வேதனைப் படுகின் கின்றீர்கள், குரக்குக்கா என்னும் தலத்தை அடையுங்கள்; உங்கள் குற்றங்கள் யாவும் தொலையும்; துன்பத்திலும் நோயிலும் அழுந்திச் செல்ல நினையாமல் திருக்கொண்டீச் சரத்தைத் தொழுவீர்களாக; உங்கள் வினை மாயும்; அத் தலத்துப் பெருமானைப் பாடிப் பணியுங்கள்; உங்களைப் பரலோகத்தில் இருத்துவார் அவர்; நீங்கள் கோடிகா ஈசனைப் பரவி நாடோறும் போற்றுங்கள்; அங்ஙனம் ஈசனைக் கூறுவிட்டால் நீங்கள் மாதர் மயக்கிற்பட்டு வாடுவீர்கள்; ஊர்க்காவலர் செய்யும் தண்டனையில் உங்கள் காலம் கழியும்; நீங்கள் கோழம்பா எனக் கூறின் பெருஞ்செல்வம் உங்களுக்குச் சேரும்; திருக்கோளிலி நாதனை இரவும் பகலும் பாடுங்கள்; சிவகதி கூடுவீர்கள்; மனையாள், சிறுவர், சுற்றத்தார்—இவை யெலாம் நிலைத்திரா. நம்முடைய நாளும் நிச்சயமில்லை, நமக்கே தெரியாது; நோய்களோ தொண்ணூற்றெட்டு வகையனவாயுள்ளன. ஏன் வேதனைப் படுகிறீர்கள்—யமன் வருமுன்பே திருக்கோளிலி அரனர் திருவடியை வாழ்த்துங்கள்; ஆசை, கோபம், விரோதம் இவைகளை விட்டால் திருச்செம்பொன்பள்ளி ஈசன் நமக்குப் புனிதமூர்த்தியாய் விளங்குவார். பொருள் வேண்டும் எனத் திரிந்து அம் மயக்கில் விழாதீர்கள். சேறைப் பெருமானர் திருவடியை அடைந்து உய்ம்மின்கள். மாய மனைவாழ்க் கையை மகிழ்ந்து வாழ்கின்றீர்களே! நீங்கள் சோற்றுத்துறை சோற்றுத்துறை என்பீர்களாகில் உங்கள் துயர்நீங்கி நன்னெறியிற் சேர்வீர்கள்; உங்கள் காலம் கழிவதன்முன் திருச்சிற்றம்பலத்தை அடையுங்கள்; பெருமானது நடன கோலத்தைத் தரிசியுங்கள். அவரைப் புகழாத நாள் எல்லாம் நீங்கள் பிறவாதநாள் என்று அறிமின்கள்; உங்கள் உரைதளர்ந்து, உடல் நடுங்குமுன் திருநல்லத்தைப் பரவுங்கள்; மலர்தூவித் தொழுமின்கள், பணிமின்கள், பணிபவர்களுடன் சேருங்கள், பணியாதவரை விட்டு விலகுமின்கள். கொல்வதற்கு யமனர் குறுகும்போது திருநல்லத்துப் பெருமான் கழலை நீங்கள் சொல்ல

வல்லீராகில் உங்கள் துயர் தீரும்; நல்லம், நல்லம் எனச் சொல்ல வல்லவர் தூய நெறியைச் சேர்வார்கள்; பொய் பேசிக் காலத்தைக் கழிக்காதீர்கள்; துக்கம் தீரும் வழியைக் கூறுவேன்; கேளுங்கள், திருநல்லம் என்னும் தலத்தைச் சேருதல் உங்களுக்கு நன்மை தரும்; வினைக் கடல் வற்றி நீங்கும், சிவகதி கூடும்; நல்லூர்ப் பெருமானைத் தியானியுங்கள்; நின்றியூரை அன்புடன் தொழுதாலும், உரைத்துத் தொழுதாலும், வினை ஓயும். ஆவி நீங்குமுன் நீலக்குடி அரனார் சேவடியைக் கைதொழுது உய்மின்களே; ஏனெனில் உயிர் போம்போது தொழவேண்டும் என்னும் நினைவு கூடுதலரிது. மாய மனைவாழ்க்கையை நினைந்து வாழ்கின்றீர்களே! நெய்த்தானம், நெய்த்தானம் என்று சொல்வீர்களாகில், புலால் தானமாகிய இப் பிறவியை நீங்கள் நீக்க முடியும்; பழனம், பழனம் என்று சொல்வீர்களாகில் உங்கள் பழவினை நோய் அற்று ஒழியும்; நல்ல மலர் கொண்டு மாலைகள் புனைந்து பராய்த்துறை நாதனை—'எங்கள் வேதனையைத் தீர்த்தருளுக' என்று கூறிப் பணிந்து உய்வீர்களாக; திருப்புகலூரைத் தொழுவீர்களாக; விருப்புடன் மாதருடன் வாழும் வாழ்க்கையை வெறுத்து, இட்டத்துடன் திருப்புத்தூர்ப் பெருமானை நீங்கள் சிந்திக்கச் சிந்திக்க அவர் கரும்புச் சாற்றைவிட அதிகமாகத் தித்திப்பார். இறப்பதன்முன் — திருப்புள்ளிருக்குவேளூர் நீலகண்டனை வாழ்த்துங்கள்.

தண்டு ஊன்றி மெய்தளர்வதன் முன்பே பூந்துருத்தி, பூந்துருத்தி என்று நீங்கள் சொல்வீர்களாகில் பொல்லாத புலால் துருத்தியான பிறவியை நீங்கள் ஒழிக்கக்கூடும்; பூவனூர் ஈசனை வாழ்த்துங்கள்; உங்கள் தீவினையை ஒழிக்கக் கூடும். திருப்பைஞ்ஞீலி அமுதனை அடைந்து உய்மின்கள்; திருமணஞ்சேரி ஈசன் தன்மையை வாழ்த்துங்கள்; மருகற் பெருமானது திருவேடத்தைக் கைதொழுதால் வீடு எளிதாகும். திருமாற்பேற்றீசர் நோய், பிணியை நீக்கவல்ல மருந்தாவார்; சாத்திரம் பேசிப் பயனில்லை, கோத்திரம் குலம் சிறந்தன என்று பெருமை பேசிப் பயனில்லை.

மாத்திரம் சிவம் என்று நீங்கள் அவரைப் பணிந்தால் ஒரு மாத்திரை நேரத்தில் உங்களுக்கு அவர் அருள்பாலிப்பார்; அவர் திருவடியை ஏத்தினால், உங்கள் பழவினை, கவலை எல்லாம் ஒழியும். கூற்றை விலக்கி உங்களை அவர் ஆட்கொள்வார் திருவலஞ்சுழிப் பெருமானைச் சில அறிவிலிகள் நாடுவதில்லை; அவர்கள் பாவிகள்; நீங்கள் கிழமாவதற்கு முன்பு வலஞ்சுழி ஈசன் தான் நமக்குக் கதியென்று கருதி உய்வீர்களாக. வலஞ்சுழியே, வலஞ்சுழியே என்று கூறுவீர்களானால் உங்கள் வல்வினை நோய் தீர்ந்து வான் ஆள்வீர்கள் நீங்கள்; மெய்யான அன்புடன் தம்மை நினைப்பவருடைய வல்வினையை வான்மியூர் வள்ளல் தீர்த்தருளுவார். திருவாட்போக்கியாரை நினைந்து அஞ்ஞான இருள் நீங்க வேண்டி விளக்கை அவர்பால் ஏற்றுங்கள்; அவர் நிரம்ப அருள்புரிவார்; அவரது புகழை எடுத்து ஓதுங்கள்; யமதூதர்கள் வந்து வினைக்குழியில் ஆழ்த்தும்போது பிழைக்கும் வழி இல்லை; வாட்போக்கியாரை ஓதி ஓதி ஏத்தி இன்புறுங்கள்; 'உமை பங்க' என்று அச்சத்துடன் புதுமலர் தூவி அழுது வாழ்த்தினால் வான்மியூர் ஈசர் அருள் புரிவார்; இறந்துபடுமுன் நாண்மலர் தூவி அவரை வலஞ்செய்க; உங்கள் வாட்டத்தைத் தீர்ப்பார், உங்கள் மயக்க அறிவையும், பாவத்தையும் தீர்ப்பார் அவர். தம்மை நினைப்பார்களை விசயமங்கை ஈசர் தமக்குப் பந்துவாக்கி உய்விப்பார். மாதர்மீதுள்ள மயக்கால் வேதனைப்படும் இவ்வுடலுக்கு ஊனளிக்கும் பேதைகளே! நீங்கள் நெருப்பை மடியிற் கட்டிக் கொள்கிறீர்கள்; திருவீழிமிழலையான் அடியைச் சாருங்கள்; விண் ஆள்வீர்கள்; வெண்காடே, வெண்காடே எனச் சொல்வீர்களானால் தொலையாத வல்வினைகளைத் தொலைக்க முடியும்; திருவேட்களம் தொழ வல்லீராகில் உங்கள் அல்லலும் வினையும் தீரும்; துன்பமும் துயரும், இடரும் அணுகா; வினை அறும்; இன்பம் தழைக்கும்.

## 37 உலக இயல் [26]

(உலகர் பொருட்டு வருந்துதல் என்னும் தலைப்பு 11-2-ம் பார்க்க.)

இவ்வுலகில் உடல்போனவழியே உயிரும் போகின்றது; உலகோர் உண்மை ஒன்றையும் அறிந்திலர்; நிகழ்ந்த நினைப்பும் இலர். இன்பத்தை நாடி முயலுவார்; முயற்சி பலிக்காவிடின் இடர்கள் குறுக்கே வந்தால் சீ! இது ஒரு மாயம் எனக் கையிழந்து நிற்பர்.

## 38. உலகங்கள் [27]

உலகங்களுள்—மண்ணுலகம், விண்ணுலகம், சிவலோகம், சுவலோகம், நாகர் உலகம், பரலோகம், பாதாளம், புவலோகம் கூறப்பட்டுள.

உலகங்கள் மூன்று என்றும், ஏழு என்றும், இந்தப் பூமி நீண்டது, அகன்றது, ஊர்கள் நிறைந்தது, கரிய ஆழ் கடலால் சூழப்பெற்றது என்றும் குறிக்கப்பட்டுள.

விண்ணுலகம்—மேலுலகம், பொன்னுலகம், வானோர் உலகம் என்றும், சிவலோகம் 'வாராஉலகு' என்றும், நாகர் உலகம்—உரகர் (பாம்பு) உலகமென்றும், பாதாளம்—ஏழு என்றும் அறிவிக்கப்பட்டுள.

## 39. உவமைச் சொற்களும் உவமைகளும் [28, 29]

அடுத்த, உலாவிய, கொப்புளித்த, தழுவிய—போன்ற சில அரிய உவமை உருபுகள் ஆளப்பட்டுள.

பிடியுங் களிறும் போல வரால்கள் பயில்கின்றன எனவும், எவ்வண்ணம் எந்த எண்ணை ஒன்பதாற் பெருக்கினும் பெருக்கி வந்த எண்ணின் இலக்கங்களைக் கூட்டினால் ஒன்பதே வருகின்றதோ அவ்வாறு எனது உரை மொழிக

ளெல்லாம் 'நான்' என்ற அகங்கார நிலையைப் பற்றியே நிற்கின்றன எனவும், உலைநீரில் தனது முடிவு தெரியாது திளைக்கும் ஆமை போலவும், பட்டிநாயின் வாழ்க்கை போலவும், சேற்றிற் படிந்து கிடக்கும் பன்றியின் வாழ்க்கை போலவும் வாழ்க்கையின் தன்மை உளது எனவும், படைகள் போலவும், ஆட்டிறைச்சியை மொய்க்கும் காக்கைகள் போலவும் வல்வினைகள் நம்மை மொய்த்துப் பிடுங்குகின்றன எனவும் அருமையான உவமைகள் சில விளக்கப் பட்டுள.

## 40. உறவினர் [30]

தாய், தந்தை, புத்திரர் (மக்கள்), உடன் பிறந்தார், கொழுநன், மனைவி, மாமன், மாமி, ஏனைய ஒத்தும் ஒவ்வாதும் உள்ள உறவினர்கள்—கூறப்பட்டுள்ளார்கள்.

## 41. எண்கள் [31]

அரை, ஒன்று முதல் பத்துவரை, ஒன்றரை, பதினொன்று, பன்னிரண்டு, பதினெட்டு, இருபது, முப்பது, முப்பத்தாறு, அறுபது, எழுபத்தெட்டு, எண்பது, தொண்ணூற்றாறு, நூறு, எண்ணாயிர நூறு, ஆயிரம், எண்ணாயிரம், நூறாயிரம், ஆறு நூறாயிரம், நூறு நூறாயிரம், கோடி, ஆறு கோடி, நூறு கோடி, எண்ணாயிரங்கோடி, என்னும் எண்கள் கூறப்பட்டுள.

## 42. எதிர் மொழிகள் [32]

"அடி முடி", "அருமை எளிமை", "வரவு செலவு" போன்ற எதிர் மொழிகளாயுள்ளன நூற்று எண்பத்தொன்று ஒளிநெறிப் பகுதியிற் காட்டப்பட்டுள.

## 43. ஐந்தெழுத்து [33]

ஐந்தெழுத்து—சொல் விளக்காயது, சோதியாயது, நாவினுக்கு அருங்கலமாவது, பலவற்றையும் விளக்குவது, பலருங் காண்பது; அதுவே ஞானம், கல்வி, விச்சை; அத

தம்மை அடைந்தவர்க்கு நன்னெறியைக் காட்டும்; இல்லறத்தார்க்கு ஒளிகாட்டும் விளக்காகும், இருளை விலக்கும், உய்யும் வழியைக் காட்டும், அச்சத்தைத் தீர்க்கும், நடுக்கத்தைக் கெடுக்கும், படைக்கலம்போல உதவும், குலத்துக்கேற்ற நலத்தைக் கொடுக்கும், தவநெறியைக் கூட்டுவிக்கும்.

ஐந்தெழுத்து—சுருதிபோல நமது சிந்தையில் நிலைத்திருக்கவேண்டும்; அதை எப்போதும் நாம் நாவில் நவிலுதல் வேண்டும். ஐந்தெழுத்தைக் கசிவுடன் ஓதினவர்களுடைய உள்ளத்தே மாதும் தாமுமாய் இறைவன் விளங்குவான். அதை மறவாது நினைவார்க்கு அவன் மருந்தாய் நின்று நோய், பிணிகளைத் தீர்ப்பான், அவரிடம் சிறந்து நிற்பான், அவருக்குத் தேன் போலவும், கருப்பஞ்சாறு போலவும் இனிப்பான்; அவருக்கு வானகத்தில் இடங் கொடுப்பான்; ஐந்தெழுத்தே கதி என்றிருந்தால்தான் அவனது அருளைப் பெறலாகும். வஞ்சனையுடன் அஞ்செழுத்தை ஓதுபவர்க்குத் தூர நிற்பான் இறைவன்.

'சிவாயநம' என்று வாய் குளிரக் கூறித் திருநீறு இடுதல்வேண்டும். ஐந்தெழுத்தை ஓதினால் அரனிடம் அன்பு உண்டாகும், ஐம்பூதங்களின் சேட்டை ஒழியும், வினைப் பகை அறும், விண்ணுலகு கிட்டும், கல்லுடன் கட்டிக் கடலில் எறிந்தாலும் அது நல்ல துணையாய் நின்று உய்விக்கும்; ஐந்தெழுத்தை ஓதாது ஒழியின் நோய் நலியப் பிறத்தலும்; இறத்தலுமே தொழிலாக முடியும்; ஐந்தெழுத்தை ஓதித் திருநீறு அணிந்தால் இடுக்கண் வாராது, வினையும் நோயும் தீயிலிட்ட விறகுபோல மாய்ந்தொழியும், பாவங்கள் அற்றுப்போம். ஐந்தெழுத்து ஒன்று வல்லாரையும் நமன் தூதுவர் அணுகலாகாது. 'நமச்சிவாயப் பத்து' ஆகிய 'சொற்றுணை வேதியன்' என்னும் திருப்பதிகத்தை ஓதினால் இடுக்கண் வாராது.

ஐந்தெழுத்தை ஓதினதால் இறைவன் கழல் நமது நெஞ்சகத்தே தோன்றக் கிடக்கின்றதெனவும், இறக்கும் பொழுது நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தை ஓத, இறைவ!

அருள் புரிதி எனவும், 'இறுதிக் காலத்தில் நான் விக்கி ஐந்தெழுத்தை ஓத மறந்தாலும், இறைவா! என்னைக் குறிக்கொள்வாயாக' எனவும் அப்பர் பெருமான் இறைவனிடம் முறையிடுகின்றனர்.

## 44. ஐம்புலன்களின் சேட்டை; ஐம்புலன்களை வெல்லும் வழி [34]

ஐம்புலன்களும் அதைத் தருக, இதை விடுக எனக் கூறி நம்மை நலிவிக்கின்றன. இரவும் பகலும் ஆட்டி வைக்கின்றன; அவைகள் ஆட்டிவைக்க நான் ஆடுகின்றேன். இறைவனே! நீ என்னை ஐவர்க்கும் ஒற்றிவைத்துள்ளாய். ஐவருங் கள்வர்; வஞ்சகர்; சங்கடம் பலவும் செய்பவர்; நன்னெறியிற் செல்லவிடார்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் உறுப்புக்களை உடையவர்; அவர்தமைத் தடுத்து வெல்ல முடியவில்லை. அவர் வேண்டும் வழியே போய் ஆழ் குழியில் வீழ்கின்றனர்கள் அறிவிலிகள். அவர் தமை அடக்கி ஆள்பவர் கருத்தில் இறைவன் வீற்றிருப்பான். இறைவன் திருவடி நீழலில் நின்று உணர்வு என்னும் அம்பால் அவ் வஞ்சக் கள்வரை எய்து வெல்லலாம். அவர்தம் கட்டில் நின்று நம்மை மீள்வித்தருளுவன் இறைவன். ஐம்புலன் என்னும் மதக்களிற்றை வெல்ல வல்லவன் இறைவனே.

## 45. ஐம்பூதம், ஐம்பூதங்களின் விளைவு [35, 101]

நிலம், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐம்பூதங்களாய் நிற்கின்றனர் இறைவர். பொறையுடைய பூமி, பாய்கின்ற நீர், சுடுகின்ற தீ, சுழல்கின்ற காற்று, நீங்காத நாதத்துக்கு (ஒலிக்கு) இடமாகிய விண்—ஆய இவையெலாம் ஆகி நிற்கின்றனர் இறைவர். விண்ணகத்தே* ஒன்றாகவும், காற்றி

* 1. விண்ணில் ஒன்று. ஓசை. 2. காற்றில் இரண்டு - ஓசை, ஊறு; 3. தீயில் மூன்று - ஓசை, ஊறு, ஒளி: 4. நீரில் நான்கு - ஓசை, ஊறு ஒளி சுவை; 5. மண்ணில் (பூமியில்) ஐந்து - ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்.

னுள் இரண்டாகவும், தீ உருவில் மூன்றாகவும், நீரிடத்தே நான்காகவும், பாரதனில் ஐந்தாகவும் அவர் கலந்துவிளங்குகின்றார். 'வான் ஆகாசம் ஆனான்'† என்றதனால் வான் வேறு, ஆகாசம் வேறு என்பது போலத் தெரிகின்றது.

இந்த ஐம்பூதங்கள் நம்மை ஆட்டுவிக்கின்றன. அவைகளின் சேட்டையில் உலகெலாம் வசப்பட்டு வேதனைப் படுகின்றது. ஒரு பூதத்துக்கு வேண்டியது மற்றொரு பூதத்துக்கு வேண்டாததாய் உளது.

## 46. ஐராவணம் [36]

வெள்ளிமலைபோன்ற ஆனையாகிய ஐராவணத்தின் மேல் ஏறாது இடபத்தை வாகனமாகக் கொண்டு அதன்மேல் ஏறுவார் இறைவர்.

## 47. ஐராவதம் [37]

தேன் நிறைந்த கொன்றைப் பூவால் காலை, உச்சி, மாலை மூன்று வேளைகளிலும் தவறாது பூஜை செய்து தவநிலையிலிருந்த வெள்ளானைக்கு (ஐராவதத்துக்கு) அது விரும்பிய வரங்களைத் தந்தார் வெண்காட்டு ஈசர். அதன் அன்பைக் கண்டு முத்தியும் தந்தனன் பத்தர்களுக்கு இனிய அமுதம்போன்ற பாசூர்ப் பெருமான்.

## 48. ஒருபொருள் இரட்டைச்சொல்—இரட்டைச்சொல் போல்வன [38]

அடல்வலி, ஆலநஞ்சு, உயிராவி, தளைப்பந்தம், நெற்றி நுதல், மேகமுகில் முதலிய ஒருபொருள் தருவனவும், தருவன போல்வனவுமான 81 இரட்டைச் சொற்கள் 'ஒளி நெறியிற்' காட்டப்பட்டுள.

---

† அப்பர் தேவாரம் - VI - 38-3; VI - 46-7.

## 49. ஒலிக்குறிப்பு [40]

'கண்கண,' 'தெத்தே' போன்ற ஒலிக் குறிப்புக்கள் ஆறு ஒளிநெறியிற் காணலாம்.

## 50. ஒலி, ஓசை [39]

ஓதம், சிலம்பு, பறை, பாடல், மறை—இவைகளின் ஒலி ஓசைகள் கூறப்பட்டுள.

## 51. ஒற்றுமை அடிகள் [41]

ஒரு பாட்டின் சொல்லும் பொருளும் ஏறக்குறைய அப்படியே பிறிதொரு பாடலில் வரும் இடங்கள் ஐந்து உள்ளன. ஒரு பா அடியோ, அடியின் பாகமோ அப்படியே பிறிதோரிடத்து வரும் இடங்கள் பல உள்ளன.

## 52. "ஒன்று" என்னுஞ் சொல்லாட்சி [42]

'ஒன்று' என்னுஞ் சொல்லாட்சி சம்பந்தர் தேவாரத்திற்போல (சம்பந்தர் ஒளிநெறி-தலைப்பு 50) ஈண்டும் உளது. 'இரக்க மொன்றிலீர்,' 'பாசமொன்றிலராய்' என்பனபோன்ற பிரயோகங்களிற் சில ஒளிநெறி தலைப்பு 42-இற் காட்டப்பட்டுள.

## 53. கங்கை [43]

### கங்கையும் சிவனும் [43(2)]

1. கங்கை கன்னி எனப்படுவாள்; அவளைத் தமது சடைக்குள் ஒளித்துவைத்தார் இறைவர்; ஒருத்தியைப் பாகத்தில் வைத்தார்; அதனால் அவர் ஒருத்திக்கும் நல்லராக முடியவில்லை.

2. கங்கை காண அம்பலத்தில் நட்டம் ஆடி வெற்றி கண்டார் இறைவர்; விண்ணினின்றிழிந்து ஆயிர முகத்தினொடு பரந்து வந்த கங்கை வெள்ளத்தைத் அடக்கி

வானவர் வாழ்த்த—வெள்ளக் கணக்கான விஞ்சையர் விரும்பி வேண்ட—சடைக் கற்றையில் வைத்தார். இங்ஙனம் நில்லாது பாயும் நீரை நிற்பித்தார் இறைவர். கங்கையின் கொங்கைமீது பாம்பு அலைக்கும். அந்தப் பாம்பைக் கண்டு கங்கை அஞ்சுவாள். கங்கையை, ஒரு மயிலெனக் கருதி பாம்பு அஞ்சி ஒடுங்கும்; பாம்பைக்கண்டு பிறை ஒருபுறம் அஞ்சும்; இந்தக் கூத்தைக் கண்டு வெண்டலை சிரிக்கும்.

3. ஒருத்தியைச் சடையில் ஒளித்து வைத்ததை உமைநங்கை அறியில், பொல்லாத வேதனை வரும்; எம்பெருமானே! இதைத் தெரிந்து கொள்ளவும்.

தேவி காண மார்பில் உள்ள மணமாலையைக் கொடுக்க மாட்டார்; கங்கை காண முடிமாலையைக் கொடுக்க மாட்டார்; அப்படி இருக்க, இந்த நங்கைக்கு எங்கு வாங்கிக் கொடுத்தார் பிரானார் இக் கொன்றை மாலையை.

4. ஒலியுடன் வந்த கங்கையை இறைவன் சூடினதைக் கண்டு உமையாள் ஊடினள். ஊடலை ஒழிக்க இறைவர் சாம வேதத்தைப் பாடினர்; பாடின பாணிக்கு ஒக்க ஆடினர்.

5. ஐம்புலனையும் அடக்கி அனேக காலம் உறுதியுடன் தவஞ்செய்த பகீரதன்பொருட்டு ஆயிர முகத்துடன் விண்ணினின்றும் விசையுடன் வந்த கங்கை வெள்ளத்தைப் பனிபோல அடக்கிச் சூடினர் இறைவர். அவர் கங்கை மணாளர்.

## 54. கடல் [44]

சமுத்திரம், திரை, நீர், பரவை, பௌவம், முந்நீர், வேலை—என்னும் பெயர்களாற் கடல் குறிக்கப் பட்டுளது. கடல் ஆழமானது, கரியது, நீலநிறத்தது, ஒலி செய்வது, கழிகளை உடையது, கப்பல்கள் சேர்வது, துறைகளொடு கூடியது, ஒள்ளியது, தோண்டப்பட்டது, நெடியது, பெரியது, பொங்குவது, விரிந்தது. ஏழுகடல், பாற்கடல்,

கூறப்பட்டுள. கடலைச் சார்ந்தது நெய்தல். கடலிற் கிடைப்பவை:—சங்கு, கல், மணிகள், பவளம், முத்து.

## 55. கணங்கள் [45]

அமரர் கணம், இமையோர் கணம், உருத்திர பல்கணத்தார், சிவகணம், பதினெண் கணத்தார், பேய்க் கணம், முனி கணங்கள்—கூறப்பட்டுள.

## 56. காமம் [46]

காமத்தில அழுந்தாதே; அழுந்தினால் கண்டவர்கள் வெறுப்பார்கள், கடிந்து பேசுவார்கள். வேசையர் கூட்டுறவை நீக்க விரும்பி (இறைவனது திருக்கோயிலில்) விளக்கிடுதல், தூபமிடல் (முதலிய சரியை மார்க்கங்களை) விரும்புக.

## 57. காலமும், ஊழிக்காலமும் சிவனும் [47]

அந்தி சந்தி, அல் பகல் ஆனவர் சிவனார்; ஆதி அந்தம் வைத்தவர் அவர். பிரமன், திருமால் ஆகிய இவர்க்கும் ஊழியாய் நிற்பவர் அவர். கடல்மூடி உலகழியும்போதும் அவர் திருவடியே நமக்கு அடைக்கலம். ஊழித் தீயாய் நிற்பவர் அவரே. ஊழிதோறும் உலகினுக்கு ஒருவராய் நிற்பவர் அவரே. அவர் படைத்துள்ள ஊழி ஏழு. இந்த ஏழூழிக்கும் அப்புறமாய் நிற்கின்றார் அவர். ஏழுகமும் அவர். கற்பகாலமாய் விளங்குபவர் அவர். ஊழிக் காலங்களைக் கண்டு நிற்கின்றார் அவர். இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம்—ஆகிய மூன்று காலங்களும் அவரே. பல ஊழிக் காலங்களைப் படைப்பவர் அவரே. கடல்மூடி உலகழியும் போது இறைவன் திருவடியை இருபது புள்ளினங்கள் ஏந்தி நிற்கும். பிரளய காலத்தில், பிரமன், திருமால் இவர்களது எலும்பாபரணத்தைப் பூண்டு நின்று சிவனார் வீணையை நன்றாக வாசிப்பார்.

காலை, மாலை, அந்தி சந்தி, பகல் இரவு, சிறுகாலை, முப்போது, இளவேனில்—இவை பொழுதினைக் காட்டும் சொற்களுட் சில.

## 58. (1) காலன் [48]

காலன் இருண்ட மேனியன்; நீலமேனியன்; எரிவீசுட் கேசத்தை உடையவன்; வளைந்த வெண்ணிறத்த ஒளிவீசுட பற்களை உடையவன்; போருருவம், கட்டுருவங் கொண்டவன்; மெலியாத வலிமை உடையவன்; உலகில் உள்ள பல உயிர்களையும் கொல்லுபவன்; இரக்கம் சிறிதும் இல்லாதவன்; உயிர் வெளவும் பாசத்தை விடுபவன்; நாள் கணக்கை எண்ணித் துண்ணென வருபவன்; கடியவன், கொடியவன், சுருண்ட நாவுடன் தோன்றுபவன், செங்கண்ணன்; தென் திசைக்கும் நரகத்துக்கும் அதிபன். வென்றி மிக்கவன்; தருமராசன் ஏவ வருபவன். இவனை விலக்க வல்லவர் யாரும் இல்லை.

அந்தகன், கூற்றுவன், ஞமன், தென்திசைக்கோன், நமன், மறலி என்னும் பெயர்கள் காலனைக் குறிப்பன. அவன் படைகள் (உயிர் வவ்வும்) பாசமும், (எரி வீசும் கொடிய நெடிய மூவிலை வேலாம்) சூலமும்.

## (2) காலன் யாருக்கு அஞ்சுவான்; காலனை விலக்கும் வழி [48(6)]

சிவனடியார்களை அண்டுதற்குக் காலன் அஞ்சுவான்; சிவபிரான் நமது சிந்தையிலிருந்தால் கூற்றுவன் நம்பாற் சீற்றங் கொள்ளான்; அவனது ஏவலைப் புறக்கணிக்கலாம். சிவனைப் பாடுநரிடத்தும், பூசிப்பவரிடத்தும் காலனது சீற்றம் செல்லாது. புள்ளிருக்குவேளூர், கருவிலி என்னுந் தலங்களைப் போற்றுபவர்முன் நமனது சீற்றம் தேய்ந்தறும். 'விசயமங்கைச் செல்வ' என்று இறைவனை ஏத்தினுல் நமன் இன்சொல் கூறுவன். காலன் அழைக்கும்போதும் 'நடம் ஆடும் பெருமானே' என்ருல் மாற்பேற்று ஈசன் நமது

வாட்டத்தைத் தீர்த்தருளுவார். தில்லைக்குச் செல்லும் பெரியோர்பால் நமன் அணுகான். ஐயாறன் திருவடி நமன் தூதரை ஓடும்படி வெருட்டும்; நல்லத்துப் பெருமானின் திருவடியைப் போற்றினால் காலனால் வரும் துயர் இல்லை.

## (3) கால தூதுவர்கள் [48(7, 8)]

கால தூதுவர்கள் இரக்கம் இல்லாதவர்கள்; கால பாசத்தை ஏந்தியவர்கள், நாடிவந்து பார்த்துப் பாசம் வீசுபவர்கள்; பகைத்து வளைத்துப் பிடிக்க வருபவர்கள்; நரகக் குழிக்கு (உயிரைச்) செலுத்திக்கொண்டு செல்பவர்கள்; கூரிய வேலால் அடுபவர்கள்; பாலர், விருத்தர், பழையோர் எனப் பாராது பிடித்துச் செல்பவர்கள்.

## (4) கால தூதர்க்கு (அப்பர் செய்யும்) எச்சரிக்கை [10, 48(9)]

[தலைப்பு 22-2 பக்கம் 32-33 பார்க்க]

நமன் தூதுவீர்! சிவனடியார்களைக் கண்டால் அச்சங் கொள்ளுங்கள்; அவர்களை அணுகாதீர்கள், படை வீசாதீர்கள், அவர்களைப் போற்றுங்கள்; ஐந்தெழுத்து மந்திரத்தில் ஒன்று வல்லாரையும் சாராதீர்கள்; எப்போதும் ஈசனுக்கு நல்லவடம் (பறை), கொடுகொட்டி, தாளம் ஆகிய இசைப் பணி பூண்டவர்களை அணுகாதீர்கள்; இடுக்கண் இழையாதீர்கள்; திருநீறு நிறைய இடும் அடியார் எதிரிலும், திருக் கோயிலுக்குத் தூபம், தீபம், நறுஞ்சாந்தம் ஆகிய பணி புரிவோர் எதிரிலும் செல்லாதீர்கள். சிவனடியார் குழாத்துப் பக்கலிலும் அணுகாது அவரைப் போற்றிப் போமின்கள். சிவனடியார்களைப் பாசத்தாற் சுருக்கிடாது விலகுங்கள்; சுருக்கிடுவீர்களாயின் சிவனால் உதை உண்பீர்கள். சிவனது நாமங்களைக் கூறிச் செபிப்பார் யாராயினும் சரி அவர்களைச் சாராதீர்கள்.

## (5) யமதண்டனை [48 (4, 5)]

யமதண்டனை உண்டென்று அஞ்சிக் குறிக்கொள்ள வேண்டும்; தென்திசைக்குக் கொண்டு போவார்கள் தூது

வர்கள். நமன் தமர் வரும்போது நெஞ்சம் கலங்கும்; வீட்டில் உள்ளார் ஒன்றும் செய்ய இயலாது.

## 59. கொடை [497]

இரப்பவர்க்கு ஈதல் வேண்டும். ஈதல் அருட்குணம். ஈயாது கரத்தல் செய்பவர் கடுநரகிற் புகுவர். இரப்பவர்க்குக் கொடுக்க என் மனம் என்றும் எழுவதில்லை; கொள்வதற்குத்தான் என் மனம் எழுகின்றது; இரப்பனே ஒழிய நான் ஈயமாட்டேன்; ஏன் பிறந்தேனோ!. திருவீழிமிழலையில் உள்ளார் யாவரும் ஈதற் குணம் உடையவர்கள்.

## 60. சமணர்[1] [50]

(1) உடை: சமணர் உடையின்றி அமணே நிற்பர். தடுக்கு ஆசனம் அவர்களுக்கு.

(2) ஊண்: சமணர் உண்ணும் பொழுது ஊமர் போலப் பேசாது உண்பர். இரவில் உண்ணமாட்டார்கள். மாதர்களால் கையிலிடப்பட்ட கவளத்தை இரண்டு கையாலும் ஏற்று உண்பர். பெண்கள் எதிரில் நாணமின்றி அமணாய் நின்று உண்பர். கறிகாய், நெய் இவைகலந்த சோறதைக் கையில் ஏற்று நின்றுகொண்டே உண்பர். இங்ஙனம் செய்பவர் இல்வாழ்க்கையை விட்ட துறவிச் சமணர்கள்.

(3) ஆயிரக்கணக்காய், எண்ணிறந்த சமணர்கள் இருந்தார்கள். கையில் உறியும் குண்டிகையும் தூக்கித் திரிவார்கள். கடுக்காய்-துவர்-உண்பார்கள்; உடலிற் பூசிக் கொள்வர்; மூக்கால் ஓதுவர்.

(4) குணமும், ஒழுக்கமும்: ஐந்தெழுத்தைச் சமணர்கள் உணரார்கள்; கண்ணாற் கண்டதே காட்சி என்று கருதுவார்கள்; பிறப்பு, வாழ்க்கை இவைகளை வெறுப்பார்கள்; மாதர்களின் ஏளனச் சிரிப்பைக் கவனியாது, நாணாது

[[1] அப்பர் காலத்துச் சமண குருக்கள்மார்களைக் குறிப்பது.]

...வில் திரிவார்கள். கண்ணிற் கொசுக்கள் மொய்த்... ஓட்டாத விரதத்தினர். நிரம்பப் பேசுவார்கள்; ..., நீதியிலாதவர்கள்; வன்கண்ணர்; நல்ல தமிழைப் ... அதை நன்னெறியிற் செலுத்த வகையில்லாதவர்; ...ய சொற்களைப் பேசுபவர்; நீராடமாட்டார்கள்; ...மையை மறைப்பர்; பொய் சொல்லுவர்; உண்மையை ...லாதவர்கள் அவர்; தவம் என்று அவம் செய்வர்; ...தை அறியார்; மனை துறந்தவர்கள்; உயர்ந்த நீதிகளைப் ...சிப்பர்; பால் சோற்றில் விஷத்தைக் கலந்து உண்ணக் ...டுத்தவர்கள். (தறி) தூண்போல நிற்பர்; அறிவிலார்; ...றத்தை விட்டவர்கள்; பல் விளக்காத ஊத்தை ...யினர்; பாசி நிறைந்த பல்லினர்; தலை மயிரைப் பறித் ...றியும் வழக்கத்தினர்; கண் எரிச்சல் தரும்படி தலை ...மயிரைப் பிய்த்துப் பிடுங்குதல் சுகம் எனக் கருதுபவர். ...லை மொட்டையர். நீராடாத பெண்கள் இந்தக் குரு ...மார்களே தமது தெய்வமென்று அவர்களைத் தீண்டித் தலை ...மயிரைப் பறிப்பார்கள். அதனால் குருமார்கள் வழுக்கைத் ...லையர். பிண்டி (அசோகு) இவர்களது புண்ணிய விருக்ஷம். இவர்கள் கையில் மயிற் பீலிகளை இடுக்கிச் செல்வார்கள். இவர்கள் பேச்சை மெய்யென்று நம்பி ஏமாறக்கூடாது.

(5) குளியாத காரணத்தால் உடலில் மாசு உள்ளவர்கள் இவர்கள்.

(6) இக் குருமார்களைக் குண்டர், கடையர், குண...ர், கையர், கோழையர், தூர்ச்சனர், பாவகாரிகள், ...டர், பேய்கள், மிண்டர், மூடர்—என்றெல்லாம் குறிப்...ப்பர் பெருமான்.

## 61. புத்தர் [50 III, IV]

...விலை உயர்ந்த ஆடையால் உடலை மூடித் திரிவார்கள் இவர்; ஊமையர்போல இருப்பார்கள். பொய் பேசுவர்; இவர்கள் பேச்சை மெய் என்று கொள்ளாதீர்கள். இவர்கள் ... முடியாவகையில் விளங்குவர் சிவனார். இவர்களை ... லெகினவர்களைச் சிவனார் மகிழ்வர்.

## 62. சமணரும் சிவனும் [50-II]

சமணர்களால் அறிய முடியாதவராய் நின்றார் சிவனார். ஆயிரக்கணக்கில் அவர்களுக்குக் கேடு-அழிவு-விளைவித்தார்; அவர்கள் குலத்து வேரை அறுத்தார்.

சமணருடைய சொற்களைக் கேளாத குணத்தினரிடம் சிவனார் மகிழ்வார்.

## 63. சமயமும் சிவனும், [51]

அருக்கனை (சூரியனை) வணங்குவார்கள். அருக்கன் அரனுடைய உருவந்தானே; எரி வளர்த்து வணங்குவர்; எரியும் ஈசனது உருவமே. ஆறுவகையான சமயங்களை வைத்தவர் ஈசனே; அச்சமயங்களுக்குப் பொருளாவாரும் அவரே; அறுவகைச் சமயத்தார்களுக்கும் தேறுதல் தருவன ஈசன் திருவடிகளே.

## 64. சிவபிரான்—அட்டமூர்த்தி [52]

நிலம், தீ, நீர், காற்று, ஆகாசம், திங்கள், ஞாயிறு, இயமானன் (ஆன்மா - உயிர்) என்னும் எட்டுமாய் நிற்பவர் இறைவர்; ஆதலால் அவர் 'அட்டமூர்த்தி,' 'எட்டு மூர்த்தியர்' எனப்படுவார்.

## 65. சிவபிரான் - அட்ட வீரச்செயல் [53]

### (1) அந்தகாசுரனைச் சங்கரித்தது [53 (1)]

உயிர்களை வருத்திய அந்தகாசுரனது உடல் சுருண்டு (வேதனைப்பட), சிவபிரான் அவனைத் தமது கூரிய சூலத்தில் அழுத்திக் கோத்துக் கொன்றார்.

### (2) காமனை எரித்தது [53 (2)]

சிவபிரானுக்குக் காமம் ஊட்டக் கருதிக் காமன் தன் ஐந்து மலர்க் கணைகளை அவர்மீது கள்ளத்தனமாய்

எய்தான். அப்போது இளவேனிற்காலம். அவர் அழல் வீசும் தமது நெற்றிக் கண்ணால் அவனைக் கோபித்துப் பார்த்துப் புன்னகை புரிந்தார். அந்த நெற்றிக் கண்ணி னின்றும் தீ படர்ந்து சென்றது. காமன், அவனது அழ கெல்லாம் தொலைந்தொழிய, ஒரு நொடிப்பொழுதில் வெந்து பொடியாய் விழுந்தான். தேவகணங்கள் அந்தத் தீயைக் கண்டு பயந்து வணங்கி அகன்றன. உலக மாதாவாகிய தேவி மகிழ்ந்தனள். காமன் மனைவி ரதிதேவி அச்ச முற்றனள். அவளுக்கு இரங்கி இறைவன் அன்புகூர்ந்தார்.

இறைவா! இங்ஙனம் காமனைக் கண் அழலால் விழித்த நாளோ நீ திருவாரூர் கோயிலாக்கொண்ட நாள் என்கின்றார் அப்பர். இதனால் ஆரூர்த் திருக்கோயிலின் பழமை புலப்படுகின்றது.

காமன் மிக்க அழகுடையவன், சுறுமீன் கொடி கொண்டவன், தென்றலைத் தேராக உடையவன், கரும்பு வில் ஏந்தியவன், ஐந்து மலர்ப் பாணங்களை உடையவன், களவுத் தொழில் பூண்டவன், பொல்லாதவன், திருமாலின் மைந்தன், இளவேனிலையும் பிறையையும் விரும்புபவன், வில் வல்லவன். அனங்கன், காமவேள், மதன், மதனன், மதனவேள், வேனலான், வேனில்வேள், வேனிலான் என்பன காமனைக் குறிக்கின்றன.

## (3) காலனை உதைத்தது [53 (3)]

மார்க்கண்டருக்கு விதித்த நாள் முடிந்ததென்று தருமராசனால் ஏவப்பட்ட காலன் அவரைப் பிடிக்க வந்தான். அவன் வந்தபோது மார்க்கண்டர் தாம் காலையிற் கொண்டு வந்த மலர்மாலை கொண்டு இறைவனை வழிபாடு செய்துகொண்டிருந்தார். கொதித்து எழுந்த சிந்தைய னாய்ச், (சிவ சந்நிதி, சிவனடியான் என்று) நிதானித்து உணரும் அறிவு அற்றவனாய் வந்த காலன் பாலனும் அவர் ஓட ஓடப் பெரும் பயத்தை ஊட்டி, உயிர் வவ்வும பாசத்தை அவர்மீது வீசினான். இங்ஙனம் நெருங்கிய காலனைக் கண்டு

பயந்த அவர், "இறைவா! உன் பாதமே சரணம்" என இறைவனிடம் அபயம் புக்கனர். தம்மீது காதல் வைத்துத் தமது திருவடியே சரணமென்றிருந்த பாலனைக் காத்தருள வேண்டிச் சிவபிரான் காலன்மீது கோபித்து அவன் நடுங்கிப் பயந்து உருளவும், அவன் கண்களினின்று ரத்த ஆறு புரளவும் ஒரு காலால் அவனை உதைத்து அவன் உயிரைப் போக்கி, மார்க்கண்டரது அச்சத்தை நீக்கி அருளினர். மார்க்கண்டருக்கு (பதினாறாண்டில் முடிவு என்றிருந்த ஆயுள்) சாபத்தையும் நீக்கி அவருக்கு இறப்பிலா வரத்தையும் தந்தருளினார்.

[இங்ஙனம் இறைவனது திருவடியை உணரும் பாக்கியம் காலனுக்குக் கிடைத்தது என்கின்றார் அப்பர் பெருமான். காலனை இறைவன் உதைத்த நாளுக்கு முன்னோ பின்னோ திருவாரூரை இறைவன் கோயிலாகக் கொண்ட நாள் எனவும் வினவுகின்றனர் அப்பர். இதனால் திருவாரூர் கோயிலின் பழமையும் புலப்படுகின்றது.]

(மார்க்கண்டர் என்னும் தலைப்பு 172-ம் பார்க்க).

## (4) சலந்தரனைத் தடிந்தது [53 (4)]

சலந்தராசுரன் மலை போன்ற தோள்களையும் கடுஞ் சினத்தையுங் கொண்டவன்; கொடியவன்; மிக்க போரையே விரும்புபவன்; தேவர்கள் உய்யவேண்டித், தனது பலத்தையே மதித்துக் கோபித்துப் போருக்கு எழுந்த சலந்தராசுரன் நைந்து அழியும்படி அவனது உடலைச் சக்கரப் பெரும்படையால் பிளந்து அழித்த சதுரர் சிவபெருமான்.

சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூரைக் கோயிலாக இறைவன் கொண்டது என்கின்றார் அப்பர் பெருமான்: இதனால் திருவாரூரைக் கோயிலாக் கொண்டதும், சலந்தரனைப் பிளந்ததும் மிகப் பழைய காலத்தே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் என்பது புலப்படுகின்றது.

## (5) தக்கன் வேள்வியைத் தகர்த்தது [53 (5) ]

1. தக்கன் உயர் தவம் செய்தவன்; தருக்கும், முரட்டுத் தனமும் கொண்டவன்; தான் என்னும் அகங்காரம் உடைந்தவன்; அறிவிலி; தந்திரம் அறியாதவன்; சிவபிரானிடம் பகைமை பூண்டான்; அவரை மதியாது இகழ்ந்தான்; அரிய வேள்வி ஒன்று செய்தான்; அப்போது தக்கனும் அவனோடு கூடிய தேவர்களும் சிவபிரானையும், சிவனின் தேவியையும் மிகவும் புறக்கணித்தனர். அதனால், இறைவன் வெகுண்டு அந்த வேள்வியை அழித்துப் பாழ்படுத்தினர்.

அவியுண்ண வந்த தேவர்களும், தக்கனும், எச்சனும், அக்கினியும், சந்திரனும் அச்சம் உற்றனர். பிரமனும் திருமாலும், "ஆதிப்பிரானே! எங்கள் அறியாமையைப் பொறுத்தருளுக" எனக் கூறி வணங்கினர். இங்ஙனம் எந்தை சிவபிரான் சயங்கொண்டனர்.

2. தக்கன் வேள்வியில் தண்டனை அடைந்தவர்கள் :— அக்கினியின் கரம் வெட்டுண்டது. இந்திரனது புயம் நெரிந்து முறிபட்டது; எச்சன் தலையறுபட்டது; கருடனது உடல் பொடியாயிற்று; சந்திரன் உதையுண்டு திருவடியால் அனைத்து கலை தொலையத் தேய்க்கப்பட்டான்; ஒரு சூரியன் (பகனது) கண் பறிக்கப்பட்டது; ஒரு சூரியன் (பூடாவின்) பற்கள் உதிர்க்கப்பட்டன; தக்கன் தலை அறுபட்டது; அரி, அயன் தலைகள் வெட்டுண்டன; யமனுடைய தாள் அறுபட்டது; இங்ஙனம் தேவர்கள் பலரும் தண்டனை அடைந்தார்கள். பின்னர், தன்னை வணங்கி நின்ற இந்திரன், சந்திரன், கருடன் முதலானோர்க்கு இறைவன் திருவருள் பாலித்தனர்.

தக்கள் வேள்வியை இவ்வண்ணம் அழித்த காலத்துக்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாகக் கொண்டனள் என வினவுகின்றனர் அப்பர்; இதனால் திருவாரூர்க் கோயிலின் பழமை விளங்குகின்றது.

## (6) சிவபிரான் திரிபுரம் எரித்தது [53 (6)]

1. முப்புரங்கள்: இவை மூன்று பெரிய நகரங்கள். காவலோடு அமைந்தவை. மந்திர சக்தியால் ஆகாயத்திற் பறவை போலவும், தேர் போலவும் செல்ல வல்லவை. எங்கும் பயத்தையும் கேட்டையும் ஊட்டினவை. ஓரிடத்தில் நில்லாது எங்குந் திரிந்து வானத்தையும் நிலத்தையும் நாசம் செய்தவை.

2. மும்மதில்கள்: புரங்களின் மதில்கள் வட்ட வடிவின; அவை ஆகாயத்தை அடைத்தன; பெரியன; பருத்தன; செம்பினால் ஆயவை; மலை போன்றவை; வியக்கத்தக்கவை; படைகள் பொருந்தியவை; கொடிகள் விளங்கியவை; ஆயிரக்கணக்கான அசுரர்களுக்கு இடந் தந்தவை.

3. திரிபுராதிகள்: இவர்கள் இரங்கா வன்மனத்தவர்கள். யாவரையும் இகழ்ந்தார்கள்; நல்லுணர்வு இல்லாதவர்கள்; கடியர்கள், கொடியர்கள், கயவர்கள், இழிந்தோர்கள், தீயர்கள், எதற்கும் நடுங்காதவர்கள், இறைவனை நினையாதவர்கள், போற்றாதவர்கள்; பொல்லாத நெறிகளில் மகிழ்ச்சி பூண்டவர்கள்; வானோர்க்குப் பகைவர்கள், தமது வல்லமையைப் பேசிக் கொடுமை செய்தவர்கள்.

4. திரிபுரம் எரித்த வரலாறு: திரிபுராதிகளின் கொடுமைக்கு ஆற்றாத தேவர்கள் ஓலமிட்டு மலர்தூவிச் சிவபிரானைத் தொழுதனர்கள். சிவபிரான் திருமாலை ஏவித் திரிபுராதிகளை மயக்குவித்து அவர்கள் இறைவனை நினையா வழிக்கு நேராம்படி செய்வித்தனர்.

பின்னர், சிவபிரான் போர்க்கோலம் பூண்டனர். அவரது தேர் வைதிகத் தேர்; தெய்வத் தேர்; வானிற் செல்லவல்லது; நான்மறைகளே குதிரைகளாகப் பூட்டப் பட்டன; அவரது வில் செம்பொன் மலையாம் மேருமலை; (மந்தரமலை எனவும் கூறப்பட்டுளது). இறைவர் மேரு மலையை வட்டமாக வில்லாக வளைத்தார். அவரது அம்பின்

வாயில் நெருப்பு; வில்லில் அவர் கோத்தது ஒரே அம்பு. வில்லின் நாண் தீயைப் பரப்பும் மகாநாகமாகிய வாசுகி; விடைமேல் இருந்து திரிபுரங்களைக் கோபித்து நோக்கிச் சிரித்து அவைகளை எரித்தார். மூன்று புரங்களும் ஒருங்கே விண்ணிடையே எரிந்து பொடியாய்ப் பாழ் பட்டது. சிவபிரான் பகழிபோலப் பொழிந்த சிரிப்புத் தீ காலாக்கினி போன்றது. இங்ஙனம் அவர் பொருத வரலாறு தேசமெல்லாம் அறிந்ததே.

5. எரித்த வேகம்: தேவர்கள் சிவபிரானது திருக் கோயிலின் கடைவாயிலில் உள்ள முறையிட்டு மணியை அடித்த ஒலியின் ஒலி அடங்குவதற்கு முன்னே திரிபுரங் களும் எரிந்து பொடியாயின. ஒரு நொடிக்குள், ஒரு மாத்திரை நேரத்தில், சிவபிரான் தமது புருவத்தை நெரித்த அளவில் புரங்கள் எரிபட்டன.

6. எரித்த கருத்து: புரம் எரித்ததின் அடிப்படைக் காரணம் அன்பே, கருணையே; தேவர்களுக்கு அருளவேண்டி எரித்தார்.

7. திரிபுரத் தலைவர் மூவர்தம் சிறப்பு: இவர்கள் கடுந் தவத்தினர்கள்; உத்தமர்கள்; அழிவிலாதவர்கள்; தம்மை இவர்கள் நம்பியிருந்த காரணத்தால் இவர்களுக்குச் சிவபிரான் செம்மை செய்து அருள் புரிந்தனர்.

8. புரமெரித்தபின் நடம்: திரிபுரங்கள் வேவ, இறைவர் தம் ஆயிரந் தோள்களையும் அசைத்து ஆடினர். அங்ஙனம் ஆடின அசைவு தீர (திருவாரூரில் தியாகப் பெருமானாய்) ஆயிரம் அடிகள் வைத்து (மெல்ல அசைந்து) ஆடல் புரிந்தனர்.

9. புரமெரித்த காலம்: திரிபுரம் எரித்த காலத் துக்கு முன்னோ பின்னோ இறைவன் திருவாரூரைக் கோயிலாக் கொண்ட காலம் என வினவுகின்றனர் அப்பர்.

10. புரம் எரித்த விசித்திரம்: வில்லைத் தாங்கிய கரம் தேவியின் திருக்கரம்; நாண் வலித்த கரம் இறைவனது

திருக்கரம்; இங்ஙனம் இருக்கத் திரிபுரத்தை எரித்தது என்ன பராக்கிரமச் செயல் என வியக்கின்றார் அப்பர்.

## (7) பிரமன் சிரத்தை அறுத்தது [53 (7)]

பிரமன் அறநெறியில் நில்லாமல், சொல்லத்தகாத சொல்லைச் சொன்ன காரணத்தால் அவனுடைய ஐந்து தலைகளுள்-நான்கு தலைகளுக்கு மேலே இருந்த தலையை - உருத்திரமூர்த்தி தமது கைந் நகமாகிய வாளினால், ஒரு மாத்திரை நேரத்தில், கிள்ளி அறுத்துத் தமது மறக் கருணையை உலகெலாம் காட்டி நின்றார். அறுபட்ட தலையைத் தமது கையிலேந்தி அது நிறையத் திருமாலின் ரத்தத்தை நிரப்பினார். இந்த வீரச் செயல் உலகெலாம் அறிந்ததே.

## (8) யானையை அட்டது [53 (8)]

உரித்த யானை: அண்டத்தை அளாவும் பெரிய மலை போன்றது; கருநிறத்தது; இடி போன்ற முழக்கத்தைக் கொண்டது. அழகும், வலிமையும், மும்மதமும், கடுஞ் சினமும், பைங்கண்ணும் கொண்டது; கூரிய வெண்ணிறத்த மருப்பைக் கொண்டது; பனை போன்ற துதிக்கையைக் கொண்டது.

யானையை அட்டவிதம்: எதிர்த்து வந்த யானை அஞ்சிக் கதறிப் பிளிறிப் பதைக்க அதைப் பற்றிப் பிடித்து உதிரஆறு ஓடும் வண்ணம் அதன் தோலை உரித்தார். குருதியாற் சிவந்து ஈரத்துடனிருந்த அந்தத் தோலைத் தமது உடல் மேலும் கீழும் தோன்றாவண்ணம் மூடும்படியும், கண்டவர் அஞ்சும்படியும், போர்த்துக் கொண்டார். தேவர்கள் இறைஞ்சி ஏத்த இங்ஙனம் அந்த யானையை உரித்துத் தோலைப் போர்த்துக் கொண்டார்.

தேவி பாகத்திருக்க யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். உரித்ததைக் கண்டும் போர்த்ததைக் கண்டும் தேவி அஞ்சி நடுங்கினள். தேவியின்

நடுக்கத்தைக் கண்டு இறைவர் பற்கள் தெரியச் சிரித்தனர். சிறிதுபோதே தோலைத் தரித்திருந்தனர். அங்ஙனம் போர்த்த உடையுடன் கூத்தாடினர் பெருமான்.

இறைவன் யானையை அட்டபோது கொண்ட கோலம் "விடலை வேடம்", "கால பயிரவ வேடம்" எனக் கூறப்பட்டுளது. கால பயிரவ வேடங்கொண்ட இறைவர் திருக்கரத்தில் பல சூரியர்களின் ஒளியைக் கொண்ட சூலமும், பேரொலி செய்யும் தமருகமும் விளங்கின.

## 66. சிவபிரான் அணிவன, சூடுவன [54]

சிவபிரான் அணிந்துள்ளன: அக்குவடம் (ருத்ராக்க மாலை), ஆமை ஓடு, எலும்பு (தலைமாலை, வெண்டலை, ஓடு), கங்கணம், கங்கை, கடி சூத்திரம், கண்டிகை, கொக்கிறகு, சங்கக் கலன், சாந்தம், சாம்பல் (திருநீறு), சூளாமணி, திங்கள், தோல், பட்டம், பளிங்குவடம், பன்றியின் கொம்பு, பாம்பு, பிரமன் அங்கம், பூணூல், மயிர்க்கயிறு (பஞ்சவடி), மலர்கள், மால் அங்கம், மாலைகள், முத்துவடம், வயிரக்கோவை, வளை (நாகவளை), விடம்.

இவை தம்முள்:

(1) ஆபரணமும் அணிகளும்: அரவாபரணம், எலும்பாபரணம், பன்றியின் எயிற்றாபரணம்; கையில் - நாகவளை; தலையில் தலைமாலை; சடாமகுடத்தில் வெண்டலைமாலை, கொக்கிறகு, சூளாமணி; தோளில் - கங்காளம் (எலும்புக் கூடு), தோள்வளை; கழுத்தில்-பளிங்குவடம், முத்துவடம், வயிரக்கோவை; கண்டிகை (அக்குவடம், ஆரம்); பன்றியின் கொம்பு; ஆலகால விடம்; ஏகாசமாக (மேல் அங்கவஸ்திரமாக) பாம்பையே அணிவர்; தலைமாலை கோப்பதற்குக் கயிறு பாம்பே; மேனி எல்லாம் பசுஞ்சாந்தும் சாம்பலும்; கடிசூத்திரத்தின் மேல் கபால வடம் விளங்கும்.

(2) ஆமை ஓடு: அந்த ஆமை இளஆமை, பொறிகளை உடையது; பொன் ஒளியது; அவரது பூணூல் மேல் விளங்கும். இறைவர் ஆமைபூண்ட அழகர்.

(3) எலும்பு மாலை: எலும்பு - புலால் நாறும்; இறந்தவர்தம் வெள்ளெலும்பே அணிவர்; பிரமன், திருமால் இவர்தம் களேபரத்தை (எலும்புக் கூட்டை) அணிவர். வெண்டலை மாலை எம்பிரானுக்கு அழகைத் தருகின்றது.

(4) கங்கை: ஆயிர முகமாக விசையொடு முழங்கி வானிற் பாய்ந்து வஞ்சமாக வந்த கங்கையை ஒரு சடையில் ஒடுக்கி ஒளித்து வைத்துள்ளார் இறைவர்; கங்கை சூடியுள்ளது எம்மானுக்கு ஓர் அழகைத் தருகின்றது.

(5) திங்கள்: இறைவர் அணிந்துள்ள திங்கள், இளந்திங்கள், குழவித் திங்கள், பிள்ளைப்பிறை. அது கங்கை ஆற்றில் அலைப்புண்டு அசைவதுபோலிருக்கும். திங்களே அவருக்குக் கண்ணி (பூமாலை); திங்களே அவர் நெற்றியிற் பதித்துள்ள திலகம்; அவர் திருமுடியே திங்களுக்கு வானம்; கங்கைத் திரையில் தவழும் திங்கட் குழவியை, ஐயனே! எப்போதும் சூடிக்கொண்மின் என அப்பர் பெருமான் வேண்டுகின்றனர்; இறைவர் திங்கள் சூடியுள்ளதும் ஓர் அழகு.

(6) பட்டம்: அவர் அணிந்துள்ள இரண்டு பட்டங்கள் உருத்திர பட்டம் எனப்படும்.

(7) பன்றியின் கொம்பு: பன்றி முதுகேழல்; வல் ஏனம்; மருப்பு - முளை மருப்பு, இளமருப்பு, வெண்மருப்பு; இம்மருப்பு அவர் கழுத்தில் விளங்கும் அழகைக் கண்டபின் கண்கொண்டு காண்பதற்கு வேறு எதுதான் உண்டு?

(8) பாம்பு: இறைவர் அணிந்துள்ள பாம்பு தீவாயது, சுழல்வாயது; புள்ளிகொண்டது; செங்கண்ணது, வெள்ளெயிற்றது; மணிகொண்டது; படம் உடையது, வினை வென்றது, மூர்க்கம் உள்ளது; கோபம் உள்ளது. அப்பாம்புக்குத் தலை ஐந்து, கண் பத்து, பல் பத்து; அது இறையுண்டறியாதது; விலையிலாதது; பாம்பே அவருக்குக் கண்ணி(மாலை), ஏகாசம் (மேல் அங்கவஸ்திரம்); தோள்வளை

இறைவன் திருமுடியே அவர் பாம்புக்குப் புற்று. உடைதலை கோப்பதற்குப் பாம்பே கயிறு. பாம்பாபரணமே அவருக்கு ஓர் அழகைத் தருகின்றது. செம்பொன் ஆரம்போலப் பாம்புகளை அவர் ஆரமாக அணிவர். உலகைக் காப்பதற்கே அவர் பாம்பு மாலை அணிந்துள்ளார் *[93-6]

(9) பூணூல்: இது பொடிவிளங்கு முந்நூல், முப்புரிநூல், வெண்ணூல், இழை ஒன்பது, நிலாக்கதிர்போல இறைவன் மார்பில் இது ஒளிவீசும்.

(10) மயிர்க் கயிறு: தலைமயிர் வடம், இது பஞ்சவடி எனப்படும். இதை இறைவர் மார்பில் அணிந்துள்ளார்.

(11) மலரும் மாலையும்:

(i) இறைவன் அணிந்துள்ள மலர்கள்:

அடும்பு, ஆம்பல், ஆர் (ஆத்தி), எருக்கு, கணவலர் (அலரி), கரந்தை, கழுநீர், குரவம், கூவிளம், கொன்றை, கோங்கு, செண்பகம், தாமரை, தும்பை, துழாய், நந்தி வட்டம், மத்தம், மல்லிகை, மலர் எட்டு (அட்ட புட்பம்), மலர் எல்லாம், *[93-8], வன்னி, வெள்ளெருக்கு, வேங்கை.

(ii) இறைவன் அணியும் மாலை வகைகள்:

ஆரம்: அக்கு ஆரம், அரவு ஆரம், மணி ஆரம்.

இண்டை: செஞ்சடையிற் சூடுவது.

கண்ணி: அரவக் கண்ணி, எருக்கங்கண்ணி, கூவிளங் கண்ணி, கொன்றைக்கண்ணி, திங்கட் கண்ணி, முல்லைக் கண்ணி.

தார்: கொன்றைத்தார்.

தொங்கல்: கூவிளந் தொங்கல்.

படலை: கொன்றைப் படலை.

மாலை: இண்டை மாலை, உரைமாலை *[219-7] (தமிழ்க் கவி மாலை), கங்கைமாலை, கந்தமாலை, கூவிளமாலை,

* தேவாரப் பதிக எண்கள்.

கொன்றைமாலை, நிலாமாலை [*310-3], பன்னகமாலை (பாம்பு மாலை), வெள்ளைமாலை.

(12) சடையலங்காரக் கூத்து: பிறையையும் அரவையும் பகைதீர்த்து ஒருங்கே வைத்துள்ளார் இறைவர். பாம்பைக் கண்டு அருகில் உள்ள கங்கை நங்கை அஞ்ச, அவளை ஒரு மயிலென்ன நினைத்து அவளைக் கண்டு பாம்பு அஞ்ச, பாம்பைக் கண்டு பிறை ஒருபால் ஏங்க, இந்தக் கூத்தைக் கண்டு வெண்டலை சிரிக்கும்.

## 67. சிவபிரான் அரையில் அணிவன [55]

### (i) சிவபிரான் அரையில் அணிவன

அக்கு (எலும்பு), கடி சூத்திரம் (அரைநாண்), கபால வடம், பாம்பு. அரையில் அணிந்துள்ள பாம்பு—ஐந்தலைய நாகம், செங்கண் நாகம், தீவாய் அரவு, மூர்க்கப் பாம்பு, நீளரவு, பட அரவு, பொறி அரவு, மணியுடை மாநாகம், வளை யெயிற்று இளைய நாகம் - எனக் கூறப்பட்டுளது

### (ii) கோவணமும் கீளுடையும் [55 (6) ]

சிவபிரானது அரையில் விரிகோவண ஆடையும், கீளும்; உமையுடன் உடுத்த கீள் அதா; கீள் தவிர வேறு உடை அவருக்கு இல்லை; அவர் கோவணம் தூய்மையும் வெண்மையும் கொண்டது; நிகரிலாதது; பார்வதியை மணந்த தினத்திற்கூட அவர் அரையிற் கோவணம்தான் ஆடையோ? அவர் கோவணம் உடுத்த கோலத்தை யார் தான் எழுத வல்லவர்?

## 68. சிவபிரான் காதில் அணிவன (56)

சிவபிரான் காதில் அணிந்துள்ளன: அரவம், குண்டலம், குழை, தோடு, அவர் அணிந்துள்ள பாம்பு "பொறி அரவம்"; குழை - சங்கக்குழை, வெண்குழை, பளிங்குக் குழை, சதுரக்குழை, சோதிக்குழை, தூயகுழை, விலைபெறு

---

* தேவார எண்.

...மை. தோடு - சங்கின் தோடு, வெண்தோடு, குழையும் ...ம் அவர் காதில் கலந்து தோன்றும்.

## 69. சிவபிரான் காலில் அணிவன [57]

அரவக் கழல், அரவக் கிண்கிணி, அறைகழல், சூரற் ...கிண்கிணி, சிலம்பு.

## 70. சிவபிரான் கையில் (தோளில்) ஏந்துவன [58]

சிவபிரானது கையிலும் (தோள்மேலும்) உள்ளவை: எரி, ஓடு, கங்கணம், கங்காளம், கட்டங்கம் (மழுவகை), கல்லலகு (இசைக் கருவி), குண்டிகை, கையலகு (ஆயுத வகை), கொடி, கொடுகொட்டி (பறைவகை), சுத்தி (திரு நீற்றுக்கலம்), சூலம், தகுணிச்சம் (பறை), தண்டு, தம ருகம் (உடுக்கை), தலை (படுதலை), (பிரமன் தலை), சவம், தாமரை, துடி, பரசு, பருப்பதம், பாம்பு, புத்தகம், புலித் தோல், பொக்கணம் (விபூதிப் பை), மழு, மால் (நாரணன்) அங்கம், மான், யாழ், வாள், வில், வீணை, வேல்.

இவை தம்முள்:

(1) எரி: சிவபிரானது வலக்கையில் உள்ளது. அவர் எரியை ஏந்துதல் அழகாயிருக்கும்

(2) சூலம்: இரும்பால் ஆயது; கொல்லும் தகையது, கூரியது, மூ இலையது, வலது கையில் உள்ளது, பல சூரியர் களின் ஒளியைக் கொண்டது, அவர் சூலத்தை ஏந்துதல் அழகாயிருக்கும்.

(3) தலை ஓடு—எலும்பு: சுடுகாட்டில் நரிகடிக்க வெடித்த வெண்டலை ஓட்டை ஏந்துவர்; புலால் நீங்காத பச்சை வெண்டலை ஓட்டையும் ஏந்துவர்; இறந்தவர் தம் தலைமாலை, பல்லொடு கூடிய வெண்டலை, பல்லிலாத வெண்டலை, பிரமனது பொய்த்தலை, நாரணனது எலும்பு, பருந்து சேரும் வெண்டலை, இவையெலாம் ஏந்துவர்.

(4) பாம்பு: விரியும் படம் உடையது; ஐந்து தலைகளை உடையது; கரிய புள்ளிகளை உடையது; சினங் கொண்டது. ஐந்தலைய நாகத்தை மேல் அங்கவஸ்திரம் போலத் தோள்மேல் இட்டுள்ளார்.

(5) மழு: வலது தோள்மேல் மழுவை வைத்துள்ளார்; அந்த மழு கூரியது, கொடியது, திண்ணியது, வெண்ணிறத்தது, சுடர்வீசுவது, அவர் மழு ஏந்துவது ஓர் அழகாயிருக்கும்.

(6) மான்: கலைமான் கன்று அவர் கையில் உள்ளது. அது அவரது இடது கையில் உள்ளது. திசைகளில் உள்ளார் தொழுதேத்த மானைக் கையிற் கொண்டுள்ளார். அவரது இடது பக்கத்தில் புள்ளிமான் ஒன்று, மலைமான் (பார்வதி) ஒன்று. அவர் ஏந்தும் மான் துள்ளுமான், வெறித்த மான்.

## 71. சிவபிரானுக்கு உரிய அபிடேகப் பொருள்கள் [59]

ஆன் ஐந்து (பால் - தயிர்-நெய் - கோசலம்-கோமயம்), இளநீர், சுண்ணம், தயிர், *தீ, தேன், நீர், நீறு, நெய், பால் ஆன் ஐந்தே இறைவற்கு மிக உகந்தன. ஆன் ஐந்துட ஆட்டுவாருக்கு இறைவன் அருள்புரிவன். அகப்பூசை செய்வாருக்கு "நேயமே (அன்பே)" நெய்யும் பாலுட ஆம். நிறை (மன அடக்கம்) அபிடேக நீராகும்.

## 72. சிவபிரான்—அர்த்தநாரீசுர மூர்த்தி [60]

இறைவனின் அம்மையப்பர் உருவம் பெண் - ஆண் இரண்டு உருவமுங் கலந்தது; ஒன்றோடொன்று ஒவ்வாதது; இக் கோலத்தின் சீலம் அறிதற்கரிது ஒரு காதில் ஓலை - ஒரு காதில் சங்கம்; ஒரு காதில் குழை-ஒரு காதில்

* இறைவன் ஆடும் மஞ்சனம் (ஊழித்) தீ (வடவாமுகாக்கினி) :—தக்கயாகப் பரணி உரை, 332, 656-ஆம் தாழிசைகள்.

தோடு; ஒரு காலில் சிலம்பு - ஒரு காலில் கழல்; சடை ஒருபால் - குழல் ஒருபால்; திருநீறு ஒருபால் - சாந்து ஒருபால்; அவர் திருவுருவில் வளை, மேகலை, முத்துவடம், பாதகம், கிண்கிணி இவைகளைக் காணலாம். தேவி (இடப்பாகம் வேண்டித்) தவஞ்செய்து வாட, இறைவர் மகிழ்ச்சியுடன் தமது இடப் பாகத்தைத் தந்தருளினர். "இறைவனே! வில் ஏந்திய இடது கரம் தேவியின் திருக்கரம்; வில்லின் நாண் வலித்த கரம் உனது கரம்; இங்ஙனம் இருக்க நீ திரிபுரம் எரித்த பராக்கிரமம் எவ்வாறு? இயம்பி அருளுக" என வினவுகின்றார் அப்பர் பெருமான்

## 73. சிவபிரான் அழகர் [61]

சிவபிரான் அழகர். அவர் கோவணம் உடுத்தவாறும், அரவு அசைத்தவாறும், சாம்பல் பூசின திருவுரு இருந்தவாறும் யாரால்தான் எழுத முடியும்? அவரது அருட் சேவடியின் அழகை எழுத முடியாது. அக்கு (ருத்ராக்க மாலை), அரவு, ஆமை, ஆறு, எலும்பு, கொன்றை, திங்கள், திருநீறு, வெண்டலைமாலை பூண்ட அழகர் அவர். அவர் சூடியுள்ள மதியும், அவருடைய மூன்று கண்களும், சிலம் பொலியும், செவ்வாயும் அழகாய்த் தோன்றும். அவருடைய வடிவும், வண்ணமும், கருமணிபோற் கண்டமும், சடையும், சூலமும், மழுவும், செய்கையும், அணங்கொரு பாகமும், ஆலநீழலிருக்கையும் அழகு பொலிவன. அவர் காலனை அட்ட அழகர்; நஞ்சை உண்ட அழகர்; நடமாடும் அழகர்; பலிக்குத் திரியும் அழகர்; இராவணனை அடர்த்த அழகர், விடையேறும் அழகர், வில்லாடி நின்ற வேட்டுரு அழகர்; இந்திரனாதி தேவர்களும், முனிவர்களும் ஏத்துகின்ற அழகர். வேறொருவர் தமக்கு ஒப்பிலாத அழகர்.

## 74. சிவபிரான் அறம் உரைத்தது [62]

பருத்தெழுந்த மடல் பெரிய கல்லால மரத்தின் கீழ்ச் சிவபிரான் வீற்றிருந்து, பொய்யுரையாதவரும், அருந்தவம்

புரிந்தவருமான அழகிய அந்தணர் நால்வர்க்கு அறங்காட்டி வெவ்வேறு வேதங்களையும், மறைப்பொருளையும், அங்கங்களையும், நெறிகளையும், அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றையும் அழகாக விரித்துரைத்தார். அங்ஙனம் அவர் அறங்கள் பலவற்றையும் விரித்து உரைத்ததற்கு முன்னே பின்னே இறைவன் திருவாரூரைக் கோயிலாகக் கொண்ட நாள்—என வினவுகின்றனர் அப்பர் பெருமான்.

[இதனால் திருவாரூர்க்கோயிலின் பழமை புலப்படுகின்றது.]

## 75. சிவபிரான் ஆடை, உடை, போர்வை [63]

(i) உடை, ஆடை: கல்லாடை(காவித்துணி), கரியுரி ஆடை, தோலுடை, செம்பட்டாடை, பட்டு உத்தரியம், புலித்தோலாடை, புலித்தோல் ஏகாசம் (மேல் அங்க வஸ்திரம்): புள்ளிமான் தோல் ஆடை:

புலித்தோலை உடுத்து இறைவன் தேவியை நடுங்க வைத்தார்.

மடக்கிக் கட்டிய புலித்தோலின் மேல் கச்சாக முடக்கிக் கட்டிய நாகம் விளங்கும்.

(ii) கச்சு: 'வாசுகி' என்னும் மாநாகம் அரைக் கச்சாகும்.

(iii) ஏகாசம்: (மேல் போர்வை): புலித்தோலும், ஐந்தலை அரவும் ஏகாசமாம்.

## 76. சிவபிரான் இருவர்க்கு அரியராய் நீண்டதும், அழலுருவாய் நின்றதும் [64 (1)]

பிரமனும் மாலும் 'யானே தேவன்', 'யானே தேவன்' எனக் கூறித் தம்முளே மாறுபட்டு மலைந்தனர். அவர்கள் நடுக்கம் உறும்படி அவர்களின் முன்பு தீப்பிழம்பாய் - சோதிச் சுடராய் - நீண்ட நெருப்புருவத்துடன் நின்றனர்

சிவனார்; அந்த நெருப்புருவின் அடியைக் காணமுடியாது திருமால் திகைத்தனர்; அதன் முடியைக் காணமுடியாமல் பிரமன் திகைத்தனன். எங்குத் தேடியும் அவர்களால் சிவனைக் காணமுடியவில்லை. "நாமே தேவர்" எனக் கூற முடியாதபடி நடுக்குற்றனர் இருவரும். ஞானக் கண்ணாற் பாராததால் அவர்கள் இருவரும் நன்மையை அடைய முடியவில்லை.

## 77. சிவபிரான்: சிவனும் இருவரும் [64 (2)]

சிவனே - அயனாகவும், அரியாகவும் அவர்களுக்கு மேற்பட்ட, அப்பாலான, ஒரு பொருளாகவும் விளங்கு கின்றார். 'அத்தனே' என்று அரியும் அயனும் சிவனைப் போற்றுகின்றார்கள். சிவனே அவர்கள் இருவர்க்கும் முழு முதற் பெருமான். 'அரனே அருளாய்' என அவர்கள் வணங்கின பின்னரே இறைவனை அவர்கள் கண்டனர். 'நாதனே அருளாய்' என இருவரும் நாள்தோறும் காதலுடன் சிவனைத் தியானம் செய்கின்றார்கள். சிவபிரான் யாது கட்டளை இடுவாரோ என அறிய இருவரும் காத்து நிற்கின்றார்கள். வேதம் பாடியும், நட்டம் ஆடியும் இரு வரும் அரனைப் பணிகின்றார்கள். வேதியர்களுக்குப் புகலிட மாகிய இருவரும் பரவி ஏத்த நிற்கின்றார் பிரானார். இருவரும் இறைவன் முன்னிலையிற் பல்லாண்டு பாடி ஏத்து கின்றார்கள்; அவர்களுடைய துன்பங்களை விலக்கி அவர்கள் வேண்டியவற்றைக் கொடுக்க வரதனாய் நிற்கின்றார் சிவனார். அயன், மால், இவர்தம் உடல் வெந்த சுடர்நீற்றை அணியும் தனி யொருவன் சிவன்.

## 78. சிவபிரான் உறைவிடம் [65]

### (i) அடியார் முதலானோர் நெஞ்சம்

அந்தணர்தம் சிந்தையில் இருப்பார்; அறிவு விளங்கும் மனத்தில் இருப்பார்; அன்புடைய சிந்தையில் இருப்பார்;

இமையவர்தம் சிரத்தின்மேல் இருப்பார்; உள்ளங் குழைந்து உருகி நினைந்து அழுபவர்தம் வாயில் இருப்பார்; உள்ளமாய் உள்ளத்துள் நிற்பார்; ஏத்திப் புகழ்பவரிடம் இருப்பார்; கள்ளமில்லாத அடியவர்தம் நெஞ்சில் இருப்பார்; கற்றவர்தம் நாவில் இருப்பார்; காலையும் மாலையும் கைதொழுபவர்தம் மனமே இறைவனுக்கு ஆலயமாகும்; சிந்திக்கும் அடியவர்தம் சிந்தையே, மனமே, வாக்கே பிரானுக்கு யானை வாகனமாம்; திருமாலின் அகத்திலும், தொண்டர்தம் இதய தாமரையிலும் விளங்குவார்; தம்மை வருத்துகின்ற ஐம்புலக் களிற்றை வருத்த வல்லவர்களுடைய கருத்தில் திகழ்வார்; தூய விரதங்களை முடித்தவர் மனத்தில் விளங்குவார்; நீறணிந்து நினைப்பவர் சிந்தையில் திகழ்வர்; பாடி ஆடி நினைப்பவர் உள்ளத்தே விளங்குவார்; பெம்மான் என்று எப்போதும் பேசும் தொண்டர் நெஞ்சிடையிருப்பார், மறை ஓதி நினைப்பவர் உள்ளத்து உறைவார்; மாதவத்தினர் மனத்தில் உள்ளார்; மலர் தூவிக் கண்ணீர் மல்கப் பணிபவர்தம் அகமே இறைவனுக்குக் கோயிலாம்.

## (ii) கல்லால மரம்

விருப்புடன் கல்லால மரத்தின் நீழலில் இருப்பார்.

## (iii) காடு

சுடுபிணக் காட்டில் உள்ளார்; பேய்வனக் காட்டை விட்டுப் பிரியார்; சுடலையே அவர் ஊர்.

## (iv) தலங்கள்

அதிகை வீரட்டம், அண்ணாமலை, ஆமாத்தூர், ஆரூர், ஆனைக்கா, இடைமருது, எறும்பியூர், ஐயாறு, ஒற்றியூர், ஓத்தூர், கச்சி ஏகம்பம், கச்சிமேற்றளி, கடம்பூர்க் கரக்கோயில், கயிலை, கழுமலம், காவிரிப்பூம்பட்டினம், குடமூக்கிற் கீழ்க்கோட்டம், குரக்குக்கா, கோடி, கோடிகா, சாய்க்காடு, சிராமலை, தில்லைச்சிற்றம்பலம், துருத்தி, நல்லம், நல்லூர், நள்ளாறு, நாகைக்காரோணம், நெய்த்தானம், பராய்த்துறை,

பழனம், பழனே (ஆலங்காடு), பாண்டிக்கொடுமுடி, புகலூர், புறம்பயம், மயிலாடுதுறை, மறைக்காடு, மாற்பேறு, மீயச்சூர், வலஞ்சுழி, வாஞ்சியம், வெண்காடு.

### (v) மலர்

தாமரைப் பூவிலும், கொன்றை மலரிலும், நறுமண மலர்களிலும் என்றும் உறைவர்.

### (vi) மலை, வான்

மலையிலும், வான்மீதும் விளங்குவர்.

### (vii) பிற இடங்கள்

அண்டத்து அப்புறத்தும், ஆயத்திடையும், எரி ஓம்பும் இடத்தும், பஞ்ச பூதங்களிடத்தும், தொண்டர்கள் பரவி நிற்கும் இடத்தும், பண்ணிடையும், வேதத்தகத்தும், இறைவன் உளன்.

### (viii) அறியா இடத்தவர்

யாரும் அறியாத இடத்தில் உள்ளவர்; ஓர் ஊர்தான் அவர் ஊர் என்று சொல்ல இயலாது, அவர் எங்குற்ருரோ அறிகிலோம்.

## 79. சிவபிரான் கொடி [66]

சிவபிரானுக்குக் கொடி "விடைக் கொடியும்", "கட்டங்கக் கொடியும்" (*கட்டங்கம் - மழு ஆயுதம்). அவரது விடைக்கொடி - 'ஏறணிந்த கொடி', 'நகர வெல்கொடி', 'வெளுத்த நீள்கொடி' எனப்பட்டுளது. ஆடையிற் கொடி என்பது 'கொல்லேற்றின் கொடியாடை' என வருவதால் அறிகின்றோம். நகர எழுத்து - படுத்துக் கொண்டிருக்கும் ஏற்றின் உருவம் கொண்டுள்ளதாதலின் 'நகரக் கொடி' என்ருர் என்ப. கட்டங்கக் கொடி சிவபிரானது தோள்மேல் ஆடி அசைந்து விளங்கும்.

---

* "கடங்கம் என்பது மழு. இது கட்டங்கம் என நின்றது"- திருக்கோவையார் 242-உரை.

## 80. *சிவபிரான்—சடை [67]

(i) சடை: அழகுடையது, இளமை வாய்ந்தது, ஒப்பற்றது, கட்டிவிடப்பட்டது, குளிர்ந்துள்ளது, குற்றமற்றது, சுருண்டுள்ளது, தழைந்துள்ளது, தாழ்ந்து விளங்குவது, திரண்டுள்ளது, நறுமணம் வீசுவது, நிமிர்ந்து விளங்குவது, நிறைந்துள்ளது, நீண்டது, நுண்ணியது, நெருங்கியுள்ளது, படர்ந்துள்ளது, பரந்துள்ளது, பலவகையாகப் பிரிந்துள்ளது, பவளக்கொடி போன்றது, பின்னியுள்ளது, புரள வீசப்படுவது, புறந்தாழ்வது, பெருகியது, மூதிர்ந்தது, வட்டமானது, வளர்ந்துள்ளது, விரிந்துள்ளது.

(ii) சடையின் நிறம்: சடை செந்நிறத்தது, *(புன்சடை), செவ்வானம் போன்றது, நெருப்புக்குவியல் போன்றது, பவளநிறத்தது, பவளக்குழை தழைத்தது போன்றது, பொன்னிறத்தது, மின்னல் போன்றது.

(iii) சடையின் கணக்கு: சடை எட்டு, சடை ஒன்பது, சடை பத்து நூறு (ஆயிரம்), சடை பல என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

(iv) சடைமீது விளங்குவன: அடும்பு, அரவு, இண்டைமாலை, கங்கை, கொன்றை, திங்கள், துழாய், மத்தம், மலர்கள், வன்னி.; கங்கையும், பாம்பும், திங்களும் மூப்பின்றி சிவனார் சடையில் ஒன்றுகூடி என்றும் இன்புற்று விளங்குகின்றன

## 81. சிவபிரான் தன்மை முதலிய [68]

### (1) அரியர் [68 (12)]

சிவபிரான் உணர்தற்கு அரியவர், காட்சிக்கு அரியவர்; தொடர்தற்கு அரியவர், நண்ணுதற்கு அரியவர்; நாடற்கு அரியவர், நமது உள்ளத்தில் அவர் இருந்தபோதிலும், நமது

* 'புன்தலை - சிவந்த தலை.' பட்டினப்பாலை (90), மலைபடுகடாம் (253) உரைப்பகுதியைக் காண்க.

புறச்சாக அவர் விளங்கின போதிலும் நமக்குள்ளே அவர் உள்ளத்தனமாய் நிற்கின்றார்; எவரும் அவரைக் கண்டதில்லை; சோதனைக்கு அகப்படாதவர் அவர்; சொற்பொருள் கடந்து நிற்பவர்; சொல்லுதற்கு அரிய நிலையில் உள்ளவர்; காலம் கடந்தவர்.

## (2) அரும்பொருள் [68 (13-15)]

மூவுலகுக்கும் பொருளாவர்; முத்து, மணி, பொன், பவளம், வயிரம் போன்ற அரும்பொருள் அவர்.

## (3) அருள்பாலிப்பவர் [68 (16)]

'கருணை' என்னும் தலைப்பு - 36 பார்க்க.

நமது இறுதிக் காலத்தில் அஞ்சல் என்பவர். மழையைத் தருபவர்; அருள் ஒன்றையே தமது கண்ணாகக் கொண்டவர்; பாசங்கள் அற்றவர்க்கும், அலந்தவர்க்கும் அருள்புரிபவர் அவர்; எவ்வண்ணம், எவ்வுருவில் தியானிக்கப்படுகின்றாரோ அவ்வண்ணம், அவ்வுருவில் தோன்றி அருள்பாலிப்பார்; நம்மைத் தம்முள் ஏற்றுக் கொள்வார். நமது தனிமையைக் கண்டபின் கலந்து அருள் செய்வார்; அவரை நாம் நினைந்திருந்தால் நமக்கு உறவினராய் நின்று நெருங்கி நம்மை உய்யக் கொள்வார். தேடிச் சென்று அவர் திருவடியை ஏத்தினால் அவரே நம்மை நாடிவந்து ஆட்கொள்வார்; நமக்கு நல்லதைத் தருவார்; தீயதை விலக்குவார்; எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ளும் தன்மையர்; பற்று அற்றவர்களுக்கு நன்மைதரும் அரும்பொருள் அவர்; சிவனே பாத்திரம் என்று நாம் அவரைப் பணிந்தால் ஒரு மாத்திரைப் பொழுதில் அவர் நமக்கு அருள்புரிவார்; நம் பிழைகளை நீக்கி அருள்தருவார்; அவர் பேரருளாளர், பொய்யா அருளினர்; நமது மருளை அறுப்பவர்; வேண்டுவார் வேண்டுவதே ஈபவர்.

## (4) அறியப்படாதவர் [68 (24)]

அண்டங்களின் இருளைக் கடந்து அதற்குமேல் ஒள்ளொளியான ஒரு சுடர் உண்டு. அச் சுடரை அறிந்தவர்

யாரும் இல்லை. தேவர்களும் அறியமுடியாதவர் பெருமான்; அயன் மால் ஆகி, அவர்கட்கு அப்பாலாகிய ஒன்றாகி, அறிய முடியாத கனகக் குன்று அவர்; உரை கொண்டு அவரை உணர முடியாது; எண்வசுக்கள், ஏகாதச ருத்திரர்கள், கதிரோர்கள் அவரை அறியார்; அறிவோம் என்ற தேவர்களும் அவரை அறிய முடியவில்லை. அவன், இவன் என்று ஒருவருமே அறிய ஒண்ணாத செம்பொன் அவர்.

## (5) ஆதி, நடு, அந்தம் [68 (30)]

இறைவர் அந்தமும் ஆதியும் ஆகி நிற்கின்றார். அவர் அந்தம் இலாதவர். அளக்கலாகாத ஆதி அவர். ஆதி, அந்தம் வைத்தவர் அவர்; ஈறிலாதவர் அவர் ஒருவரே. அவர் ஈறும், நடுவும், முதலும் ஆவார். பின்னும் முன்னும் அவரே.

## (6) ஆற்றல் [68 (31)]

இறைவர் மாயப்போர் வல்லவர். அவர் முடிய வைத்தால் முற்றாதது ஒன்றும் இல்லை. எப்பொருளையும் அவர் பிணக்குவார், பிரிவிப்பார், முடிப்பார்; யாரும் அவர் அடக்குவித்தால் அடங்க வேண்டியதுதான், ஆட்டுவித்தால் ஆடவேண்டியதுதான், உருகுவித்தால் உருகவேண்டியதுதான், ஓட்டுவித்தால் ஓடவேண்டியதுதான், அவர் பாட்டுவித்தால்தான் பாடுவோம், பணிவித்தால்தான் பணிவோம், காண்பித்தால்தான் காண்போம்; அவர் காட்டாவிட்டால் காணவே முடியாது. அவர் நரியைக் குதிரையாகச் செய்வார். நரகரைத் தேவராக ஆக்குவர். வித்தில்லாமலே முளைக்க வைப்பார்.

## (7) ஆறு [68 (32), 68 (166)]

(தீர்த்தம் - தலைப்பு - 81 (64) பார்க்க)

இறைவரே ஆறாகி அமர்கின்றார். கங்கை, காவிரி, காலாறு (வாய்க்கால்), கழி, கோதாவிரி, குமரி, அலைவீசும் ஆறுகள்—எல்லாம் அவரே.

## (8) இகல், இகழ்ச்சி [68 (33, 34)]

இறைவரே வலியவர்; யாராலும் இகழப்படாதவர் அவர்.

## (9) இடர், ஏதம், தீர்ப்பவர் [68 (35)]

அடியார்களின் இடர், இடுக்கண், ஏதம், கஷ்டம், வாட்டம், தடுமாற்றம், கேடு, வாதை, இவைகளை ஒழிப்பார் இறைவர். கற்றவர்களின் ஏதத்தையும், புதுமலர் தூவி வலஞ் செய்பவர்களின் வாட்டத்தையும், தம்மைச் சிந்திப் பவர்தம் இடர்களையும் நீக்கி அருள்புரிவார் அவர்; பரமன் என்று ஏத்தி உள்குழைந்து போற்ற வல்லோர்தம் வாதையைத் தீர்ப்பார் அவர்.

## (10) இம்மை, மறுமை [68 (36)]

(ஆக்கத்தைத் தந்து) இம்மை இன்பத்தைத் தருபவர் பிரானார்; அம்மை இன்பத்தைத் தரும் அமிர்தம் அவர்; அவரே இம்மை, மறுமை ஆவார்.

## (11) இரக்கம் [68 (38)]

பற்றாக நின்று பல உயிர்களுக்கும் அன்பு, இரக்கம் காட்டுவார் இறைவர்; "பின் இரக்கம்" கொள்வார் அவர்; உள்ளம் உள் கலந்து ஏத்தாது, கள்ளமுள்ளவர்களாயின் இறைவன் அவர்பொருட்டு இரக்கம் (கசிவு) கொள்ளான்.

## (12) இனியர் [68 (44)]

'அரனே' என்றழைத்தால் இனிய மாம்பழம்போலத் தித்திப்புச் சுவையைப் பெறலாகும். உள்ளத்தில் உவகை தருவார் இறைவர். பத்தியாளர்க்கு இனியர் அவர். எப்போதும் இனியர் அவர். பழம், கரும்புக் கட்டி, பாவைநல்லார், தனி அரசுப்பட்டம் இவை யாவற்றினும் மேம்பட்ட இனியர் தம்மை அடைந்தவர்க்கு அவர்; காண்பதற்கு இனியர்; சார்ந்தோர்க்கு இனியர். அடியார்க்கு இனியர். தம்மை நச்சுவார்க்கு இனியர். குருமணியாகிய அவர் தித்திக்கும்

தேன், பால், கரும்பு இவைகளின் சுவைகளை வடித்தெடுத்த தேறல் இரவும் பகலும் நினைந்தபோதெல்லாம் இனியர் அவர்; பேசப் பெரிதும் இனியர்; அடியார்க்குக் கடலமுதம் போன்றவர்.

## (13) ஈபவர் [68 (45)]

அடியார்கள் வேண்டினதை ஈபவர் இறைவர்.

## (14) உடையவர் [68 (47)]

நமையெலாம் உடையவர் அவரே.

## (15) உணர்வு, உணர்த்துபவர் [68 (49)]

உள்ளே புகுந்து நின்று உணர்வினுக்கு உணரக் கூறும் உணர்வு இறைவர். ஊன், உயிர் இவற்றுள் நின்ற உணர்வு அவர். அவரால் உணரப்படாதது ஒன்றும் இல்லை

## (16) உலகமும் ஊரும் [68 (55)]

அனைத்துலகும் ஆனவர் இறைவர்; உலகமே அவருக்கு உடை; அவர் உலகங்களைப் படைத்தார், அடங்கக் கொண்டார்; உலகை ஆள்கின்றார். வானோர் உலகை ஆள்பவரும் அவரே. உலகெலாம் நிறைந்து நின்ற சிறப்பினர் அவர். உலகத்துக்கு உயிர் ஆனவர் அவர்; எல்லா உலகங்களையும் வைப்பவர், களைபவர், வருவிப்பவர் அவர்; உலகங்களுக்கு வித்து அவர்; ஏழுலகும் அவரே, மூவுலகும் அவரே; எல்லா உலகங்களையும் காத்து ஊட்டி நிற்பவர் அவர். ஊரிலாதவர் அவர், ஆயினும் ஊர்களோடு ஒன்றி நிற்கின்றார் அவர். உயிர்களின் ஊனில் இயங்கி, உலகெலாம் உலவுபவர் அவர்; உலகுக்கு எல்லாம் வினை, பிறப்பு, வீடு ஆகி நிற்பவர் அவர்; உலகங்களுக்குக் கண்ணாகி நின்று அவைகளைக் காக்கின்றார் அவர். உலகங்களின் கரு அவர், தாய் அவர்; அவரின்றி உலகம் இல்லை; தேசம், நாடு எல்லாம் உடையவர் அவரே. பார், விசும்பு, பாதாளம் எல்லாம் அவர். பூலோகம், புவலோகம், சுவலோகம் ஆகிய எல்லாம்

அவர்; ஒருமாத்திரைப் பொழுதில் உலகமெல்லாம் புகுவார் அவர்; மூவுலகங்களையும் படைத்து உகந்தவர் அவர்; உலகங்களை உண்டு உமிழ்ந்த திருமாலை உடையவர் அவர்.

## (17) ஊழி [68 (60)]

அளவிலாத பல ஊழி கண்டவர் பெருமான். ஊழி ஏழான ஒருவர் அவர். ஊழித்தீ போன்றவர் - ஊழி முதல்வர் அவர். பெருங்கடல் பொங்கி எழுந்து பிரளயமாய் உலகை மூடிப், பிரமனும் இறக்க அவன் எலும்பையும், திருமாலின் எலும்பையும் பூண்டு எலும்பாபரணராய்ப், பொங்கிய கடல் மீண்டடங்க, எம்பெருமான் தமது நல்ல வீணையை வாசிப்பார்.

## (18) ஊன், உடல், உயிர் [68 (63)]

உடலினில் உள்ள உயிர் அவர்; ஊன் அவர், உயிர் அவர்; உயிர்களுக்கெல்லாம் கண் அவர்; கரு அவர்; உலகத்துக்கே உயிர் அவர். உயிர்க்கெல்லாம் உற்றாரும் பெற்றாரும் ஆய பிரானார் அவர். எல்லா உயிர்க்கும் இறைவர் அவர். பல உயிர்களாகி எங்கும் பரந்தவர் அவர். பல உயிர்களையும் விதிப்படி படைத்தவர் அவர்.

## (19) எங்கும் பரந்து உள்ளவர் [68 (65)]

எவ்விடத்தும், எத்திசையிலும், மூவுலகத்திலும், உள்ளவர் அவர். உலகெலாம் தாம உலாவிய தன்மையர் அவர்; ஒழிவற நிற்பவர் அவர்; திருமால், பிரமா, தீ, காற்று, கடல், மலை இவைதமுட் கலந்து நிற்கும் பெரியார் அவர். எங்கும் பரந்துள்ளவர் அவர்; பல உயிர்களாய்ப் பரந்துள்ளவர் அவர்; மண், விண், கடல், விசும்பாகப் பரந்துள்ளவர் அவர்.

## (20) எண்ணும், எழுத்தும் [68 (67)]

எண்ணானவர், எழுத்தானவர், சொல்லானவர், பேர் எழுத்து ஒன்று (ஓம்) உடையவர்.

## (21) எதிர்பொருளாவார் அவர் [68 (68)]

இறைவர் எதிர்மறைப் பொருள்கள் ஆவார் என விளக்கப்பட்டுள்ளார். உதாரணமாக, அவர் அந்தமும் ஆவர், ஆதியும் ஆவர். உகப்பார் - முனிவார்; உறவாவர் - பகையாவர்; பரியர் - நுண்ணியர்; பின்னன் முன்னன்; பெரியார் - சிறியார்; விரிந்தான் - குவிந்தான்; வெய்யான் - தணியான்.

## (22) எதுவும் அல்லர் [68 (69)]

பிரானர் மண், விண், மலை, கடல், வாயு, எண், எழுத்து, எரி, இரவு, பகல், பெண், ஆண், பேடு—இவை எவையும் அல்லர். ஆயினும் பெரியார் அவர்.

## (23) எல்லாம் அவரிடம் உண்டு [68 (70)]

எல்லா வாய்ப்பும் அவரிடம் உண்டு. அவரிடம் இல்லாதது ஒன்றும் இல்லை.

## (24) எல்லாம் ஆவர் [68 (71)]

இறைவர் அனைத்தும் ஆனர்; அனைத்தும் தாமாய் நிற்கின்றார். எல்லாம் சிவன் என்ன நிற்கின்றார். எவ்வுயிரினும் நீங்காது இருக்கின்றார். தாமன்றி வேறொன்றும் இல்லாது விளங்குகின்றார். நிற்பனவும் நடப்பனவும் அவரே; மூவுலகும் தாமாய முதல்வர் அவர்.

## (25) ஏணி [68 (79)]

அடியார்க்கு முத்தியை அடைதற்கு உதவும் ஏணி இறைவன்.

## (26) ஒப்பிலி [68 (83)]

இறைவருக்கு இணையாவர் அவரே. தமக்கு ஒப்பாவார் இருக்கமுடியாத வன்மை வாய்ந்தவர் அவர்: அவருக்கு ஒப்பாவார் யாரும் இலர்.

## (27) ஒப்புப் பொருள்கள் [68 (84)]

அலை, ஆறு, கரும்பு, களிறு, நிதி, நெய், புனல், பொன், மலை, மின், மெய், விதி இவைகள் இறைவனுக்கு ஒப்புப் பொருளாகக் கூறப்பட்டுள.

## (28) ஒருவன் [68 (85)]

இறைவனே உலகுக்கு ஒருவன். சிவபிரான் ஒருவரே இருவரும் ஆயவர், மூவரும் ஆயவர். உலகெலாம் அவரை ஒருவன் என்று போற்றும். தெளிந்தவர்களுக்கெல்லாம் அவர் ஒருவனாகத் திகழ்கின்றார்.

## (29) ஓங்காரம் [68 (88)]

ஓங்காரத்தொருவர் அவர். ஓங்கார உட்பொருள் அவர். ஓங்கார மெய்ப்பொருள் அவர்.

## (30) ஓசை—ஒலி [68 (89)]

மணி ஓசை, நரம்பின் ஓசை, விண் ஒலி, விழவொலி ஆகிய ஓசை ஒலி எலாம் இறைவனே: ஓசையாக வருபவர் அவரே.

## (31) கடமை [68 (92)]

இறைவனே! நீ பேரருளாளன் ஆதலால், உன்னிடத்தில் அண்டினவர்களின் பிழையைப் பொறுத்தல் உனது கடன். அடியேனைத் தாங்குதல் உனது கடமையாம்.

## (32) கண்—கண்மணி [68 (93)]

இறைவர் உயிர்கட்கெல்லாம் கண்; எட்டுத் திசைக்கும் கண்; எட்டுத்திசை, கீழ், மேல், விசும்பு, நிலம்-இவையாகித் தோன்றும கண் அவர்; எல்லாம் காணும் கண் அவர்; ஏழுலகும் தொழுது எத்திக் காண நின்ற கண்ணானார் அவர். கண்ணாக நின்று உலகெல்லாம் காக்கின்றார் அவர்: கண் ஆகிக், கண்மணியாகிக், காட்சியாகி, விளங்குகின்றார். கண், கண்மணி, மணியிலாடும் பாவை, கண்

பார்வை எல்லாமாகத் திகழ்கின்றார். பண்திகழப் பாடி அடிமை பூண்ட பக்தர்களைக் கடாக்ஷித்து அவர்கள் கண்ணில் நின்ற மணிபோல விளங்குவார்.

## (33) கண்மாயம் [68 (94)]

அண்ணலார் திருவலஞ்சுழியிலிருந்து வந்தார்; தமது இடபவாகனத்தில் ஏறிப் புறம்பயம், புகலூர் போனார்; பின்னர், ஆராய்ந்து திருவாரூரே தமது இருப்பாகக் கொள்ளப்புகுந்தார்; என்ன கண்மாயம் செய்கின்றார் இவர்.

## (34) கதி—புகல் [68 (95)]

உயிர் செல்லும் கதிகளை வைத்தவர் இறைவர். உயிரை இழந்தபின் நமக்குக் கதி இறைவர் அன்றி வேறு யார் உளர்? அடையவேண்டிய நற்கதிக்கு வழி காட்டுபவர் இறைவரே; நினைத்து வழிபடுபவர்க்குக் கதி அவரே. பர கதியை அடைய விரும்பின் "ஆரூரா" எனப் போற்று வாயாக.

## (35) கரு [68 (96)]

உலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் கரு இறைவர்; நமது உள்ளத்தின் உள்ளே நிற்கின்றது அக் கரு. அது உலகுக்கு முன்னே தோன்றினது. கருவாய் நின்று வன்மை பூண்டவர் இறைவர்.

## (36) கருணை [68 (97)] (தலைப்பு 3 பார்க்க.)

இறைவர் கருணைக் கடல். நம்மைத் தம்முள்ளே ஏன்று கொள்வார். தமது திருவடியால் இராவணனை ஊன்றினபோது அவன் "மிழலையான் அடி வாழ்க" எனப் போற்றின உடனே அவனை அழுத்தாது விட்டுவிட்டனர்.

## (37) கருத்து—எண்ணம் [68 (98)]

நமது எண்ணத்தில் விளங்குகின்றார் இறைவர். நம் எண்ணங்களை அவர் அறிகின்றார்; அவைகளை முன்னறிந்து

முடித்து வைக்கின்றார்; கலைகளிற் பயிலப்பட்ட கருத்து அவரே.

## (38) கரும்பு, கட்டி [68 (99)]

இறைவர் கரும்பின் சாறு, கரும்பின் தெளிவு, கரும்பின் தேறல்; கரும்பின் கட்டிபோல இனிப்பைத் தருவார். தம்மை அடைந்தவர்க்குக் கட்டி பட்ட கரும்பினும் இனியர் இறைவர். மூன்று கண் படைத்த ஒரு கரும்பு அவர். அவரை இட்டத்துடன் சிந்தை செயச்செயக் கரும்புச் சாற்றிலும் அதிகமாகத் தித்திப்பர்.

## (39) கலையும், கல்வியும் [68 (100), (107)]

இறைவனால் உணரப்படாத ஒரு பொருள் இல்லை. அவன் "ஓதா நாவன்,"; கலை ஞானங்களைத் தான் கல்லாமலே பிறருக்குக் கற்பிப்பவன். அறுபத்துநான்கு கலைகளும் அவனே. கலைப்பொருளும் அவனே. கலைஞானம் அவனே: ஞானக்கலைப்பொருள் அவன்; கற்பன யாவும் அவனே; மறைகள் அறிய ஒண்ணாத கலைஞன் இறைவன். எல்லாக் கலைஞானங்களையும் கற்றவன் இறைவன். கலைஞானிகளால் விரும்பப்படுபவன் அவன். ஞானம், கல்வி எல்லாம் 'நமச்சிவாய' என்பதே.

## (40) கள்ளம் [68 (101, 102)]

நமது உள்ளத்திலேயே, நமது மூச்சிலேயே இறைவர் கள்ளத்தனமாய் நிற்கின்றார். அவரை நாம் எங்ஙனம் காண முடியும்? நமது கள்ளத்தை எல்லாம் அவர் அறிகின்றார். கள்ளத்தனம் உள்ளவர் கருத்தாகவும் இருக்கின்றார்.

## (41) காட்சி [68 (111)]

கண்ணொளிசேர் காட்சியர் இறைவர். கல்லாதவர் காட்சிக்கு அவர் அரியர். கதிர் வீசும் மணி அனைய காட்சியர் அவர்; பொன்மலைபோன்ற காட்சியர் அவர். பாராதேதையும் பார்ப்பவர் அவர்.

## (42) காத்தல் [68 (112)]

உலகங்கள் யாவற்றையும் தாங்கிக் காப்பவர் இறைவர். உலகத்தார்க்கு நடுக்கம் வாராமற் காப்பவர் அவர். காப்பவராய் நின்று எல்லாவற்றையும் தாம் காண்கின்றார். உலகேழையும் கலங்காவண்ணம் காக்கின்றார். தம் குறைகளைக் கூறிச் சரண்புக்கவர் துக்கம், கவலை இவைகளில் ஆழாதவண்ணம் அவரைத் திருவடி காக்கின்றது. நாம் நரகில் வீழாவண்ணம் காப்பவர் அவர். தமது திருவடியைச் சிந்திப்பவர்கள் வருந்தாவண்ணம் காப்பவர் அவர்; உலகங்களைக் காப்பது காரணமாக அரவங்களைப் பூண்டுள்ளார் இறைவர்.

## (43) காலம் [68 (116), (118)] (தலைப்பு 81 (17) பார்க்க)

அந்தியும் சந்தியும், அல்லும் பகலும், இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், நேற்று, இன்று, நாளை—எனப் படும் காலங்கள் எல்லாமாய் விளங்குகின்றார் இறைவர். மூன்று காலங்களையும் கண்டவர் இறைவர். ஏழு கிழமைகளும் அவரே.

## (44) குணம் [68 (119)]

*எண்குணத்தவன் ஈசன்; எண்ணிறந்த குணத்தினன் ஈசன்; குணப்பெருங்குன்று அவன்; குணமே அவன்; குற்றமில் குணத்தினன் அவன். பெரியோர்கள் ஏத்தும் குணத்தினன் அவன். வஞ்சவலைப்பாடு இலாத குணத்தினன் அவன்.

## (45) கொள்கை [68 (127)]

பிரானார் கொலை யானையை உரித்த கொள்கையர்; கொலை உருவக் கூற்றை உதைத்த கொள்கையர்; ஈறும்,

---

*தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்ப முடைமை. [திருக்குறள் 9. உரை]

...வும், முதலும் ஆன கொள்கையர்; *கோடால வேடத்த ...ம் கொள்கையர்.

## (46) கோள் ஆதல், கோள் நீக்குதல் [68 (128)]

பிரானர் கோள் ஆவர்; கோளின் விளைவு ஆவர். கோள் நீக்க வல்லவரும் அவரே.

## (47) சங்கையிலாதவர், சங்கைதீர்ப்பவர் [68 (129)]

பெருமானர் சங்கை (ஐயம் - அச்சம்) இலாதவர்; தேவர்களின் அச்சத்தை நீக்கினவர்; கவலையில் ஆழ்பவர்களுடைய அச்சத்தை அவர் தீர்த்தருள்வார்.

## (48) சிந்தை—உள்ளம் [68 (135)]

சிவனர் அறிதற்கரிய சிந்தையினர்; உள்ளமாய் உள்ளத்தே நின்றார்; சிந்தையே நின்ற சிவனர் அவர்; தமது சடைகொண்டு (சடையை வீசித்) திசை முழுதும் அளக்கும் சிந்தையர்.

## (49) சிவன்—சிவம் [68 (136)]

பிரானர் அங்கங்கே சிவமாகி நின்றார். சிதருத சித்தம் உள்ளவரிடம் சிவன் விளங்குவார். 'சிவன்' என்னும் திருப்பெயர் அவர் ஒருவருக்கே உடைமையாம். சிவமே 'பாத்திரம்'.

## (50) சுற்றம்—குலம் [68 (140)]

தம்மை அடைந்தார்க்கு உற்றவர் பிரானர். அவரே அப்பா, அம்மா, ஒப்புடைய மாதர், அன்புடைய மாமன், மாமி, மக்கள் ஆவார்; எல்லா உறவினரும் ஆவார்; ஒருவருடைய குலம், சுற்றம், ஊர், எல்லாம் அவரே; உயிர்க்கெல்லாம் பெற்றார் அவரே. ஆயினும் அவருக்கு உற்றார் என்று ஒருவரும் கிடையாது.

---

* கோடாலம் பிறைபோல வளைந்த மாலை வகை: "கூழை உடையும் குளிர் முத்தின் கோடாலமும்." —பெரியாழ்வார் 3-3-1.

## (51) செய்கை—தொழில் [68 (143) (180).]

அண்ணலார் செய்கை மிக அழகியது. அவர் செய் தொழில் *இரண்டு; †அட்ட மூர்த்தியாய் நின்று தொழில் செய்கின்றார்; அவர் செய்கைகள் விளங்கா வகையன—ஒத்து ஒவ்வாதன ஆதலின்; தூநெறிக்கு வழிகாட்டும் தொழிலினர் அவர். தம்மை நண்ணினவர்களின் துயர் தீர்த்தல் அண்ணலார் செய்கைகளுள் ஒன்று; பொருந்தாத செய்கைகள் அவரிடம் விளங்கும். மூன்று மூர்த்தியாய (பிரமன், திருமால், உருத்திரன் என) நின்று (ஆக்கல், அளித்தல், அழித்தல்) தொழில் நடாத்துகின்றார். உயிர்களின் தொழிலை ஆய்ந்து ஆள்வர் அவர்; தீத்தொழில் (அக்கினி காரியம்) ‡மூன்று உடையவர்; பஞ்ச கிருத்தியம (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) அவர் தொழில்.

## (52) செல்வம் [68 (144)]

ஏரி நிறைந்தனைய செல்வர் பிரானார். செல்லாத செல்வம் உடையவர்; சென்றடையாத செல்வர் ஆவர்; நிறைந்தோங்கு செல்வர் அவர்; அவரே நமது திரு, நமது செல்வம்.

## (53) சொல்லும் பொருளும் [68 (145)]

பிரானார் அருளாயின சொல்லர்; நமது உள்நின்ற நாவிற்கு உரையாடி அவர்; உரை மாலைகளை அணிபவர் அவர்; உரையால் உணரப்படாதவர்; சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமானவர்; சொல்லுக்கு அடங்காதவர்; சொல்லுவார் சொல் எல்லாவற்றையும் சோதிப்பவர்; சொற்பதங்கடந்தவர்; சொற்பொருள் கடந்த சுடர்ச்சோதியர்; பல்வேதமும் ஆறங்கமும் நணுக மாட்டாத சொல்லினர்;

* பரமுத்தி, அபரமுத்தி அளித்தல்: ஆக்கல்—அழித்தல்.

† "இருநிலனாய்த் தீயாகி...அட்டமூர்த்தி ஆகி"
—அப்பர், 307-1.

‡ (வேத) அக்கினி 3—காருக பத்தியம், தக்கிணம், ஆகவனீயம்.

..வின் நல்லுரையவர்; பலசொல்லும் அவரே; பொருள் ..ர்ந்தவர்களின் பொன்னுரை அவர்.

தேவர்கள் போற்றும் பொருளுக்கெல்லாம் தக்க பெருமான் அவர்.

## (54) தத்துவன் [68 (149), (153)]

தத்துவங்கள் *இருபத்தைந்துக்கும் அப்புறத்தவர் பெருமானார்; தத்துவங்கள் ஆனவர் அவர். தத்துவங்களின் தலைநின்றவர்க்கல்லது பிறருக்கு உண்மைப் பொருளாய் விளங்கமாட்டார் அவர். "தயாமூல தன்மம்" எனக் கூறப்படும் தத்துவத்தின் வழியில் தாழ்மையுடன் நடப்பவர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி நம் பெருமான்; கரும நெறித் தத்துவன் அவன். தன்னொப்பில்லாத தத்துவன் அவன். எல்லாம் தானாக வேறொன்றிலாத—தத்துவன் அவன்; யார்க்கும் தெரியாத தத்துவன் அவன். தயாமூல தன்ம வழியை அப்பர் பெருமானுக்கு அருளிய பிரானார் அவர்.

## (55) தந்தை—தாய் ஆவார் [68 (151, 158)]

மூவுலகுக்கும் அன்னையும் அத்தனும் ஆவார் பெருமானார்; சராசரங்களுக்குத் தாய் அவர். தந்தை—தாய் இல்லாதவர் அவர். பல உயிர்களுக்கும் தாயாகவும் தந்தையாகவும் திகழ்கின்றார் அவர். தோன்றிய எவ்வுயிர்க்கும் துணையாய் நிற்கின்ற தாய் அவர்; பெற்று வளர்க்கும் தாயினும் நல்லவர் அவர். அவர் மூதாயர்; மூதாதை இல்லாதவர். மனோன்மணியைப் பெற்றவர்.

## (56) தவம்—தவநெறி [68 (154)]

இமையோர் ஏத்தும் அருந்தவன் இறைவன். தவநெறிகளைச் சாதிக்கவல்லவன் பெருந்தவத்தன் அவன்; மாதவத்தின் விளைவு ஆனவன்; நற்றவன்; மெய்த்தவன்.

---

* பூதகாரியம் 25 :—பிருதிவி 5, அப்பு 5, தேயு 5, வாயு 5, ஆகாயம் 5.

## (57) தன்மை—மான்மை முதலிய [68 (155)]

இறைவனுடைய அருளே கண்ணாகக் காணினல்லாது இறைவன் இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இப்படியன் என்று எழுதிக்காட்ட முடியாது. இறைவன் அப்பாலைக் கப்பாலைக் கப்பாலான்; அவனுடைய தன்மையை யாரும் அறியமுடியாது; தன்னைச் சொல்லுவார் சொல் வழியே செய்து உதவும் உத்தமன் அவன்; உறவு (அன்பு) என்னும் மத்துக்கோலை நட்டு, உணர்வு (ஞானம்) என்னும் கயிறு கொண்டு நன்றாய்க் கடைந்தால் ஈசன் (என்னும் வெண்ணெய்) நம்முன் எழும். உயிர்களின் ஊனில் நிலவி உலக முழுமையும் உலவுகின்றார் இறைவர்: *எட்டு, ஒன்று, இரண்டு, மூன்றாயினர் இறைவர்; எவ்விடத்தும் இறைவர் தவிர வேறொருவர் இலர் என்னும அறிவுடன் தலை யாரக் கும்பிடுவாரின் தன்மையாகத் திகழ்வார் இறைவர். எண்ணெழுத்திலாதாரையும், எண் எழுத்துக் கற்று வல்லாரையும், வணக்கம் இலாதாரையும், நன்னெறியில் நிற்பவரையும் நீங்கிப் பிரியாது, எப்பொருளையும் ஒன்று படுத்துகின்றார் இறைவர். அன்பு பெருகி உள்ளம் உருகித் தொழுவாரிடத்தும், தம்மைப் புறக்கணித்து வைபவரிடத்தும் ஒரே தன்மையராய் அருள்பாலிப்பர் இறைவர்.

கொலையாகிக் †கொலைசெய்யப்பட்டதையும் உண்டவ ராஞர்; எல்லாச் சுவைகளும் ஆவர்; சூழ்ச்சி இலாதவர் அவர்; சொற்பதங் கடந்தவர்; மதி, பாம்பு, நீர், இவை தமைச் சடைமுடிமேல் வைத்துகந்த தன்மையர்; தாம் யாருக்கும் கீழ்ப்பட்டவரல்லாத தன்மையர்; தாமும் நாமும் ஒன்றாம் தன்மையர்; தோத்திரமும் சாத்திரமும் தாமே ஆவர்; நல்லாருடைய நன்மையை அறிபவர் அவர்; நற்பதத்தாரின் நற்பதம் அவர்; நாவின் நடு

* எட்டு - அட்டமூர்த்தம்; ஒன்று - பரம்பொருளாம்பதி; இரண்டு - சத்தி, சிவம்; மூன்று - படைத்தல், காத்தல், அழித்தல் —இவைகளுக்கு உரிய மும்மூர்த்திகள்.

† கண்ணப்பர் ஊட்டிய ஊன்.

...மாய் நிற்பவர் அவர்; எல்லாமாய்த் தாமாய் நாமாய் ... தன்மையர்; தம்மை எப்போதும் நினைக்கவிட ...டார்; நினைக்க முயற்சி செய்தால் அப்போதே மறப் ...து வேறு எதையேனும் நினைக்கச்செய்வார்; புனிதர்; ...யில் வந்து விளையாடல் செய்பவர்; பாலினுள் மறைந் ... நெய்போல மறைந்து நிற்பவர்; பாவகாரிகள் தாம் ...னது பெருந்தன்மையைப் பார்ப்பதற்கு அரிது என் ...கள். பிரானது பெருந்தன்மையைக் கயவர் அறியப் ...றுகின்றலர்; பேய்க்கணங்கள் பரவி ஏத்தும் பான்மையர்; ...டிப் பிரியாதவர்; மலை, கடல், காடு எங்கும் உள்ளவர்; ...வியக்கும் தன்மையர்; விறகிடைத் தீப்போன்றவர்.

## (58) தனிமை [68 (157)]

உலகம் முழுமையும் ஆண்டபோதிலும் தனியர் ...றைவர்.

## (59) திசை [68 (160)]

உத்தமராய் எத்திசையிலும் அமர்ந்துள்ளார் இறைவர்; ...த்துத் திசைகளுக்கும் எட்டுத் திசைகளுக்கும் இறைவர் அவர்; எட்டுத் திசைகளும் அனைத்தும் அவரே; அத் திசைகளின் வித்து, திசைகளின் எல்லை அவரே; திசைக ளெல்லாம் தம்மைத் தொழச்செய்வார்; திசைகளாகியும் திசைகளின் தெய்வமாகியும் விளங்குகின்றார் அவர்; மூவுல கங்களுக்கும் பொருளாய் நின்ற திசையர் அவர்.

## (60) திரிவார் [68 (162)]

ஏறேறி ஏழுலகும் திரிவார்; ஒத்து ஒவ்வாதன செய்து திரிவார்; கங்காள வேடராய்த் திரிவார்; புலித் தோலும் திருநீறும் பொலியத் திரியும் காரணத்தை நாம் அறியோம்; சித்தராய்த் திரிவார்; தெருவெலாம் திரிவார்.

## (61) திரு [68 (163)]

சென்றடைய முடியாத திருவினை உடையவர் பிரானார். திருவாகி நிற்கும் திறத்தினர்.

## (62) திறம் [68 (164)]

பெருமான் சீலத்தார் ஏத்தும் திறத்தினர்; அமரர் ஏத்தும் திறத்தினர்.

## (63) தீ [68 (165)]

தீ மூர்த்தி இறைவர்; தீ ஒப்பவர்; ஊழித் தீ அன்ன ஒளியை உடையவர்; ஓங்கி அழலாய் நிமிர்ந்தவர்; கனலைக் கலந்து நின்ற பெரியார்.

## (64) தீர்த்தம் [68 (166)]

கங்கை, காவிரி, குமரி, கோதாவிரி, சரசுவதி, பொற்றாமரை, புட்கரணி, யமுனை ஆகிய தீர்த்தமாய் விளங்குகின்றார் இறைவர்.

## (65) துணை—சார்வு [68 (167, 168)]

பற்றிலார்க்கு நற்றுணை இறைவர். ஆதரித்து, உற்று, உணர்ந்து, உருகி, ஊறி உள்ளம் கசிவு உடையவர்க்கு நற்றுணையாகின்றார் அவர். ஊனகத்தில் உறுதுணை அவர். துஞ்சும்போதும் அவரே நமக்குத் துணை. துணையாக நமது நெஞ்சில் நின்று பற்றுக்களை விட உதவுவார். தோன்றிய எல்லா உயிர்க்கும் துணையாய் நிற்கும் தாய் அவர். பசு பாசப் பிறப்பை நீக்கும் துணை அவர். அவரன்றி வேறு துணை நமக்கு இல்லை.

தெய்வம் எனப் பொதுவாக நினைப்பதைவிட்டுச் சிறப்பாகச் சிவன் என நினையவல்லார்க்கு என்றும் பெருந்துணையாவர் பெருமானார். மெய்த்தவத்தோர் துணை அவர்; பெண்ணாசையை அகற்றும் பெருமானைச் சுற்றங்களை விட்டுப், புலன்களை அடக்கி நினையவல்லார்க்கு அவர் பெருந்துணை ஆவர்; வழித்துணை ஆவர்; ஆனால் அவரோ தமக்கு யாரும் துணையில்லாதவர். அவர் தோள்தான் அவருக்குத் துணை.

### (66) துன்பம் இலாதவர் [68 (173)]

துன்பங்கள் இல்லாதவர், வருந்தாதவர் இறைவர்.

### (67) தூண் [68 (174)]

இறைவர் கற்றூண், நெடுந்தூண், பொற்றூண், முத்தின் தூண்—எனப் போற்றப்பட்டுள்ளார். உலகேழும் தாங்கும் கற்றூண், மாசிலாத பொற்றூண், முடிவொன்றிலாத கற்றூண், வான முகட்டைத் தாங்கி நிற்கும் நெடுந்தூண் என ஓதப்பட்டுள்ளார்.

### (68) தூய்மை, தெளிவு [68 (175, 176)]

இறைவர் தூயர், தெளிவுச்சிவம்.

### (69) தேசன் [68 (178)]

இறைவன் மணித்தேசு; தேசங்கள் தொழ நின்ற திருமாலால் பூசிக்கப்பட்டவன்.

### (70) தேன் [68 (179)]

ஐந்தெழுத்தை ஓத, வந்து தித்திக்கும் தேன் இறைவர்; மலைத்தேன் அவர்; உணர்ந்தார்க்குத் தேன் அவர்; உருகும் மனம் உடையவர்தம் உள்ளத்து ஊறும் தேன் அவர். தம்மை நினைத்து ஓதிய தேவர்களின் சிந்தையிற் கரும்பு போலவும், தேன் போலவும் தித்திப்பர். கருதுகின்ற அடியவர்தம் இதய கமலத்தில் ஊறும் தேன்; மனத்தில் ஊறும் தேன். கருப்பஞ்சாறு அவர்; ஞானிகள், பக்தர்கள் நெஞ்சில் தேன்போலவும் இனிய அமுது போலவும் இனிப்பர் இறைவர்.

### (70 A) தொழில் (51 'செய்கை' பார்க்க.)

### (71) தோணி [68 (182)]

இடர்க்கடலிற் பட்டு இளைக்கும் நம்மை அக்கரையில் இடர் இலாத கரையில்) கொண்டுசேர்க்கும் தோணி அவர்.

## (72) தோற்றம் [68 (184)]

இங்குற்றேன் என்று இலிங்கத்தில் தோன்றினவர் இறைவர். அவருக்குத் தோற்றமும் இல்லை; அழிவும் (கேடும்) இல்லை. அவர் தாமே முளைத்துத் தோன்றினவர்.

## (73) நடை [68 (185)]

காற்றினும் கடிதாக நடப்பார் இறைவர், கிறிபட நடப்பார்; வெள்ளை ஏற்றின் நடையை உடையவர்; நடை பல நன்றாகக் கொண்டவர்.

## (74) நல்லர் [68 (186—187)]

நல்ல உள்ளத்தினர் இறைவர்; சலம் (கோபம், பொய்) இலாதவர்; தாயினும் நல்லவர்; நல்லார்க்குத் தீயர் அல்லர்; நலமே நாள்தோறும் நல்குவார்; நல்வினை பெறுவிப்பார்; நல்வினையாய் நிற்பவர்.

## (75) நன்மை, தீமை [68 (188)]

நல்லாரின் நன்மைச் செயல்களை அறிவார் இறைவர்; நன்மை தீமை ஆனவர் அவர்; அவரிடம் எல்லாம் நன்மையே; தீமை கிடையாது.

## (76) நிமிர்ந்தவர் [68 (192)]

அடிகள் நெடுஞ்சுடராய் நிமிர்ந்தவர். எங்கும் நிமிர்ந்தவர்; விண்மேலும் அதற்கு மேலும் நிமிர்ந்தவர்.

## (77) நீதி [68 (200)]

தேவர்களுக்கு அருள்புரியும் நீதியார் அவர்; அவர்கள் தொழும் நீதி அவர்; இருசுடர்களாம் சூரியனும், சந்திரனும் வானில் திகழ வைக்கும் நீதிப்பொருள் அவர். தமது சடைமேல், நீங்காதவண்ணம், நிலவை வைத்து மகிழ்ந்த நீதியவர். நமது நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதிபவர்; யாராலும் நினைய முடியாத நீதியர் அவர்.

## (78) நூல் [68 (204)]

மாய மனத்தவர்கள் இயற்றிய—சொன்ன—நூல்களின் தன்மையை இறைவர் அறிந்துள்ளார். ஏழுலகமும் விளக்கம் பெறச் சிறந்த நூல்களை ஆய்ந்தவர் இறைவர்.

## (79) நெறி [68 (207)]

அடிகள் அறநெறியினர் சிவநெறி அனைத்தும் ஆனவர்; சிவலோக நெறிதந்த சிவன் அவர்; சிவலோக நெறியை அறியும்படியான சிந்தையைத் தந்த அருளாளர் அவர். செல்வதற்கு நல்ல சிவலோக நெறி வகுத்துக் காட்டுபவர் அவர். செந்நெறியில் நம்மைச் செல்விப்பார் அவர். செற்றம் நிறைந்த காமம், லோபம் இவை தலைகாட்டாத நன்னெறியை வைத்தவர் அவர். சேம நெறி ஆயினவர்; திருமாலும், பிரமனும் அறியாத நெறியினர்; தவநெறியை மேற்கொண்டவர்; துறந்தோர் போற்றும் தூநெறி அவர்; தூநெறிக்கும் மேலான தூநெறியாய் நிற்கின்றார் அவர்; தூநெறிக்கு வழிகாட்டும் தொழிலை உடையவர் அவர். தொடர்ந்து தம் பொன்னடியைப் போற்றுவாரைச் செல்லுதற்கரிய தூநெறியிற் செலுத்த வல்லவர்; பரலோக நெறிகாட்டும் பரமன் அவர்; பொய்த்தவத்தினர் அறியாத நெறியில் நிற்பவர் அவர்; மெய்ந்நெறி அவர். வானவரும் அறியாத நெறியை அப்பர்பெருமானுக்கு அருளினவர்.

## (80) நேசன் [68 (208)]

அடிகள் பார்வதி நேசன்; தக்கோர் சிந்தையை விரும்புபவன்; அவர்தம் சிந்தையில் விரும்பப்படுபவன்; நேசர்க்கு நேசன்.

## (81) நோய், பிணி [68 (209, 210)]

பிணி இல்லாதவர் இறைவர்; அவர் தம்மை அடைந்தவர்தம் நோய்களைக் களைவார்; அச்சம், பிணி, தீர்ப்பார்; நமக்கு உள் இருந்து நமது உளநோயைக் களைவார். பிணி, பகை இவைகளைத் தமது ஒற்றைக் கண்ணினாலே

நன்மை தரும்படி செய்வார். கஷ்டங்களை நீக்குவார். பிறவி நோயை அகற்றுவார்; நோய்வினை வாராவண்ணம் காப்பார்; அடியார்தம் பிணிகளைக் களைவார். மந்திரமாகவும் தந்திரமாகவும் மருந்துமாகவும் உதவித் தீரா நோயைத் தீர்ப்பார்; மூலநோய் தீர்க்கும் முதல்வர் அவர்; வாடை தீர்க்கும் மணி அவர். உலகிற் பிணிகளை எழுபிறப்புக்கும் வைத்தவர் அவர்.

## (82) படைத்தல்—காத்தல்—அழித்தல் [68 (213)]

ஆக்காமலே எல்லாவற்றையும் ஆக்கினவர் இறைவர். உலகங்களைக் காப்பார், அழிப்பார், படைப்பார்; ஏழுலகங்களையும் ஆக்கினார்; பூமி, கடல் இவைகளைப் படைத்தார்; கண்ணாய் நின்று உலகங்களைக் காக்கின்றார்; படைத்தற் கடவுளாய் நின்று பல உயிர்களிடத்தும் அன்பு காட்டுகின்றார்.

## (83) பந்தமும், வீடும் [68 (218)]

அண்டங்களின் எண்டிசையிலும் பந்தத்தையும் வீட்டையும் இறைவர் பரப்பியுள்ளார். பந்தமும் வீடுமாகி விளங்குகின்றார்; பந்தத்தைத் தீர்க்கும் பெருமான் அவர்; பந்தமே தமக்கு இல்லாதவர் அவர். முத்தன் அவர்.

## (84) பலவும் ஆனவர் [68 (224)]

அடிகள் உருவங்களாகவும் உயிர்களாகவும் ஆகி வினைப்பிறப்பின் விடுதலையாய் நிற்பவர். சிந்தையுட் சிந்திக்கின்ற பல எண்ணமும் ஆவர் அவர். ஞாயிறு, நமன், வருணன், சந்திரன், அக்கினி, நிருதி, வாயு—ஆக விளங்கும் திவ்விய சாந்தமூர்த்தி அவர்; பூமியாய், பூமியில் உள்ளவர்க்குத் தந்தைபோல நிற்கின்றார் அவர்.

## (85) பவளம் [68 (225)]

கண்ணிறைந்த கனத்த பவளத்திரள் பகவான். செழும் பவளத்திரள், நீறுபூத்த செழும்பவளக் குன்று அனையவர் அவர். செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் அவர்.

## (86) பழம் [68 (227)]

அரனே என்றழைத்தால் தித்திக்கும் மாம்பழம்போல இனிப்பார். தம்மீது ஆசைப்பட்டோர்க்குக் கனிபோலத் தித்திப்பார். கற்றோர் உண்ணும் கனி அவர்; தம்மை அடைந்தோர்க்குக் கனியினும் இனியர்; பழத்தில் நின்ற ரசமும் அவர்; அந்த ரசத்தை நுகர்பவரும் அவர்; ரசத்தின் இன்சுவையும் அவர். தம்மை மறவாத மனத்தினர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியை ஒத்து விளங்குவார் அவர்.

## (87) பற்றாவர் [68 (230)]

தம்மை அடைந்தோர்க்குப் பற்றாவர் அவர். அவர் மீதுள்ள பற்றே பற்றாகக் கொண்டால்தான் அவரைக் காணலாம். தம் குறைகளை விண்ணப்பித்துத் தம் திறத்தைப் போற்றிப் பற்றினவர்க்குப் பற்றாக (துணையாக) விளங்குவார் இறைவர். பணிபவர்க்கு அங்கங்கே பற்றாக நிற்கின்றார் அடிகள். அவரைத் தவிர வேறு பற்றில்லை நமக்கு. வானோர்க்கும் ஏனோர்க்கும் பற்றாவார் அவர்; பற்று அற்றவர்களுக்குப் பற்றாக நிற்கின்றார் இறைவர். பல உயிர்களுக்கும் பற்றாகி நின்று இறைவர் இரக்கம் கொள்கின்றார்.

## (88) பாசத்தை அறுப்பார் [68 (233)]

எம்பெருமான் என்றென்றே ஏத்தினால் நாம் நம் பாசங்களைப் பற்றறுக்கலாகும்.

## (89) பால்—பாலமுது [(68 (236)]

தித்திக்கும் பசுவின் பால்போல இனிப்பார் இறைவர்; நமது உள்ளத்துள்ளே ஊறும் பசும்பால் அவர். சுவை கலந்த பால் அவர். பால் அமுது அவர்.

## (90) பாலர் [68 (237)]

பிரானார் என்றும் பாலர், வளர்தல் இலாத பாலராம் பான்மையர்; ஆயினும் பாலரும் அவரே, விருத்தரும் அவரே.

## (91) பாவம் தீர்ப்பார் [68 (238)]

தம்மை அடைந்தவர் தம் பாவங்கள் அவர்களைப் பீடியா வண்ணம் வெருட்டி ஓட்டி விடுவார் இறைவர். ஐம்புலன்கள் செய்யும் பாவங்களை ஒழித்து ஆள்வார் அவர். உண்மையுடன் தம்மை நினைக்க வல்லவர் தம் பாவங்களை விலக்கி அருள்புரிவார். பக்தர்களின் பாவங்களை ஒழித்தாளுவார். பலவகைய பாக்களை வாயாரப் பாடி ஆடிப் பணிந்து எழுந்து தம் குறைகளை விண்ணப்பம் செய்யும் பக்தர்களின் பாவங்களைப் போக்கவல்லவர் இறைவர். நம்மைப் பற்றி நின்ற பாவங்களைப் போக்க விரும்பினால் "ஆரூரா" என்றே போற்றி நிற்போமாக. பிரானார் பாவநாசர். தம்மைப் பாவித்து வணங்குவோர் தம் பாவங்களை அறுக்கும் பராபரர் இறைவர்.

## (92) பித்தர் [68 (241)]

பெருமான் பித்தர்க்கும் பித்தன். பேய் பாட நடமாடும் பித்தன். முழுப் பித்தன்.

## (93) பிழை பொறுப்பவர் [68 (242)]

தம்பால் அன்புள்ளவர்களுடைய பிழைகளைப் பொறுத்தல் பெரியோனும் பிரானது கடமையாகும், அவர் பேரருளாளர் ஆதலால். பிழை எலாம் நீக்கி ஆள்வார் அவர். பிழைகள் எல்லாவற்றையும் பொறுத்து அருள் பாலிக்கும் பெரியோர் அவர்.

## (94) பிறப்பறுப்பர் [68 (243)]

அடியார்க்கு அடியார்களுடைய பிறவியையும் ஒழித்தருளுவர் பிரானார். இழிவான பசுபாசப் பிறப்பை நீக்கும் துணை அவர்; என்றும் நீங்காத பிறவியையும் நிலைகெடுத்து ஒழிப்பார்; ஏழுவகைப் பிறப்பையும் அறுத்தாளுவர். கரு என்கின்ற வல்வினை நோயை அகற்றி ஆளுவர். கவலைக்கு இடமாய பிறப்பு என்கின்ற துன்பத்தினின்றும் காத்தாளுவர். கேடிலியாகிய பிரானை நாம் நாடினால் கேடு

வாாது பிழைப்போம். கோள்களுக்கு (கிரகங்களுக்கு)ப் பிறவி உட்பட்டது; அத்தகைய பிறவியை அண்ணல் ஒழிப்பார். சுழன்று சுழன்று வரும் பிறவியினால் ஏற்படும் துக்கங்களை நீக்குவார் பெருமானார். பக்தர்களாய்த் தம்மை நாளும் மறவாத அன்பர்களின் பிறவியை அறுத்தாளுவர் அவர்; தம்மை அணுகி அணைந்து பணிபுரியும் (தொண்டாற்றும்) அடியார்களுக்கு உள்ள பல பிறவிகளையும் ஒழிப்பார் அவர். புதிய நல்ல மலர் (நாண்மலர்) கொண்டு போற்றிசெய்து மாலை சூட்டும் அடியார்களின் பிறப்பை அறுக்கும் புனிதர் அவர். தமது மறைமொழியால் இந்த யாக்கை மாயும் வழியை உபதேசித்துள்ளார் அவர். உலகத்தை வெறுத்தவர்தம் பிறப்பை அறுப்பார் அவர்.

### (95) பிறப்பு, இறப்பு (கேடு) இலாதவர், பிறப்பிறப்பு வைத்தவர் [68 (244)]

அமுதம் உண்ட பிற தேவர்கள் இறந்தழிந்தாலும் தாம் இறவாதவர் பிரானார். விநாசம் இல்லாதவர் அவர். பிறப்பு இறப்பு இலாதவர் அவர். பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் வைத்தவர் அவர். பிறப்பு, இறப்பு, மூப்பு, துன்பம் இலாதவர் அவர். என்றும் உள்ளவர் அவர்.

### (96) புகழ் [68 (246, 251)]

(பெருமை தலைப்பு 99-ம் பார்க்க.)

புகழ்மாலைகளை உடையது பெருமான் திருவடி. சிவபிரானை ஒப்பாரே சிவனைக் காணமுடியாது; அத்தகையது அவர் பெருமை என்றால் நம்போலியர் அவரை எங்ஙனம் காணமுடியும்? குற்றமில்லாத புகழை உடையவர் பெருமான். தீவினைகளைத் தீர்க்கவல்லவர் பிரானார் என்னும் அவர் புகழை நாடெலாம் அறியும்; உலகெலாம் அவரைப் புகழும்; புகழ்களைப் படைத்தவரே சிவனார். பூமிமேல் புகழத்தக்க பொருள் இறைவனே. விண்ணோரும் அவரைப் போற்றிப் புகழ்வார். தேவியுடன் புகழ்பூண்டவர் அவர்.

## (97) புலன் வென்றவர் [68 (249)]

ஐம்புலனையும் வென்றவர் பிரானார். தேவியுடன் கலந்திருந்தே ஐம்புலன்களையும் வென்றுள்ளார் அவர். பொல்லாப் புலன்களைப் போக்கினார் அவர். யாராலும் தாங்குதற்கரிதான விஷத்தை உண்டு ஐம்புலன்களையும் அடக்கி ஆள்கின்றார் பெருமானார்.

## (98) பெரியார் [68 (250)]

இறந்தார்க்கும், என்றும் இறவாதவர்க்கும், இமையவர்க்கும், பிறந்தார்க்கும், என்றும் பிறவாதார்க்கும், பெரியார் இறைவர்; திருமால், பிரமன், தீ, காற்று, கடல், மலை இவை தமைக் கலந்து நின்ற பெரியார் அவர். அவரை விடப் பெரியார் யாரும் இல்லை. பெரியார்களுக்கெல்லாம் பெரியார் அவர். பேசுவார்க்கெல்லாம் பெரியார் அவர்.

## (99) பெருமை [68 (251)]

அளவிலாப் பெருமையை உடையவர் அண்ணல். உணர்வாய் விளங்கும் பெருமையர் அவர். பலிதேர்ந்துழலும் கஷ்ட வாழ்க்கையராக இறைவர் இருந்த போதிலும், தேவர்கள் அவரை 'அட்ட மூர்த்தியே அருள்' எனப் போற்றி அடைவார்கள். யாரும் தமது பெருமையை அறிய ஒண்ணாத வகையில் விளங்குவர் பெருமானார். உலகெலாமாக விளங்கும் பெருமையார் அவர்; பிறவாத பெருமையார் அவர். பிரமன், மால் அறியாத பெருமையார் அவர். ஏற்றில் உகந்து ஏறுவதே பெருமையாகக் கொண்டவர்.

## (100) பேர் [68 (254)]

பேர் ஒன்றும் இல்லாதவர் பிரானார். பெருமை பெற்ற பேரை உடையவர் அவர்.

## (101) பொய்யிலார் [68 (256)]

பொய்யர் மனத்திற் கலத்தல் செய்யார் இறைவர். அவரிடம் பொய் என்பதே கிடையாது. பொய்யிலாதவ

யிடத்தில் அவரும் பொய்யிலாதவராய் விளங்குவார். பொய் யிலாத மெய்யர் அவர். விருப்பம் இல்லாத இரும்பு மனம் கொண்ட வினையர்க்கு இறைவன் என்றும் பொய்த்தவன்.

## (102) பொருள் [68 (257, 283, 15)]

இறைவர் அரிய பெரும் பொருளாகி நிற்பவர். பிரமன், மால் ஆய்ந்தும் காணாத பொருள் அவர். அறிதற்கு அரிதான நுண்பொருள்கள் ஆயினவர்; ஆறங்கம், நால்வேதம் இவை தமக்கு அப்பால் நின்ற பொருள்; புகழ்சேர் பொருளுக்கு என்றும் உறைவிடம்; ஓங்காரத்து உட்பொருள், ஓங்காரத்து மெய்ப்பொருள் (தலைப்பு 29); கலைப்பொருள், செம்மைப் பொருள்; சொல்லார்ந்த பொருள், தாயாக நின்று உலகுக் கெல்லாம் உதவும் பொருள், சுடர்களிலும் வானிலும் விளங்கும் பொருள். தோற்றம், நிலை, இறுதி இல்லாத பொருள்; நம்பினோர்க்கும் பற்றிலார்க்கும் அரும் பொருள்; நல்ல சுற்றமாய் விளங்கும் அரும்பொருள்; நாம் நாடுகின்ற நற்பொருள்களானவர்; நூல் வல்லோர்க் கெல்லாம் நுண்பொருளாய்த் திகழ்பவர். சொல்லப்படும் இன்சொற்பா நிறைந்த பொருளாளர்; பிண்டத்திற் பிறந்த பொருள்; எவற்றொடும் புணர்ந்து நிற்கும் பொருள்; தேவர்கள் போற்றும் பொருள்; மூவுலகத்துக்கும் பொரு ளாகத் திகழும் புனிதப்பொருள். பூமிமேற் புகழ்தக்க பொருள். வேதம் துணிந்து கூறும் பொருள். விரும்பிப் போற்றும் அந்தணர்களின் மறைப்பொருள். இறைவர் பொருள் உடையரும் அல்லர், பொருள் இல்லாதவரும் அல்லர். மெய்ஞ்ஞானத்து மெய்ப்பொருள் அவர், மெய்ப் பொருட் பயன் அவர், விரிக்கின்ற பொருள்களுக்கெல்லாம் வித்து அவர். பெரும்பொருள் அடங்கிய சொல்லார் இறைவர்.

## (103) பொறை [68 (258)]

ஏழுலக பாரத்தையும் தாங்கி நிற்கும் பொறுமையாளர் இறைவர்; நஞ்சை உண்ட பொறுமையாளர் அவர்; பூமி களின் பாரத்தைத் தீர்ப்பவர் அவர்.

## (104) பொன் [68 (259)]

இறைவர் அம்பொன், அரும்பொன், ஆணிப்பொன், செம்பொன், நன்பொன், பசும்பொன், வடிவார் பொன். அவர் கனகக் குன்று; செம்பொன்மலை; பசும்பொன் முத்து, பெருந்தவ முனிவர்கள் போற்றும் அரும்பொன், மாசிலாத பொன் தூண்; மாற்றிலாச் செம்பொன்.

## (105) போகம் [68 (260)]

எண்ணுதற்கரிய சீரான போகமெல்லாம் தங்கி நிற்கும் பெருமான் இறைவர். அவரே போகம் பலவுமாய் விளங்குகின்றார். போகம் வைப்பவரும் அவரே.

## (106) மணி [68 (263)]

இறைவர், அருமணி, கதிர்மாமணி, கருமணி, குருமணி, சூளாமணி, செழுமணி, திருமணி, பருமணி, மாமணி, முழுமணி - உலகுக்கெல்லாம் முழுமணி அவர், அமரர் சூளாமணி அவர்; தூமணிக் குன்றர் அவர்.

## (107) மந்திரம், தந்திரம், மறைப்பொருள் [68 (266)]

இறைவர் மந்திரமும் தந்திரமும் மறைப்பொருளும் ஆனவர். மந்திரம், தந்திரம், மருந்து இம் மூன்றும் ஆகித் தீராத நோய்களைத் தீர்த்தருள வல்லவர். மந்திரிப்பார் மனத்துள் இருப்பவர்; மறையோரின் மந்திரம் அவர்.

## (108) மருந்து [68 (269)]

ஐந்தெழுத்தை நினைப்பவர்களின் பிணி தீர்க்கும் மருந்து இறைவர். அவர் அடியார்களின் அல்லல் தீர்க்கும் மருந்து. நம்மை ஆளும் வல்வினைகளைத் தீர்க்கும் அரு மருந்து. மன்மதனைப் பொடியாய் வீழச் சிரித்தெரித்த மருந்து; கருவை நீக்கும் மருந்து; மயக்கறுக்கும் மருந்து; பத்தராய் வணங்குந் தொண்டர் வல்வினை வேரை அறுக்கும் மருந்து; வானத்தார் போற்றும் மருந்து; மூவாமருந்தை (அமிர்தத்தை) அமரர்களுக்கு அருள்புரிந்தவர் அவர்.

## (109) மலரும் மணமும் [68 (270)]

அல்லி மலரின் மணத்துள் உள்ளார் அண்ணல். மணமாய் மலரில் விளங்கும் அறநெறி அவர்; புதிய பூவும் அப் பூவினுள் வாசமும் அவர். மணம் வீசும் மலரெலாம் அவரே.

## (110) மலை [68 (271)]

இறைவர் அஞ்சன மாமலை, கனகக் குன்று, குணப் பெருங்குன்று; செம்பொன் மாமலை, தூமணிக் குன்று, நித்திலக் குன்று, நீறேற்று செழும்பவளக் குன்று, மாணிக்கக் குன்று; அவர் ஏழ்மலையும் ஆனவர்; மணிசேர் மலைகளை வைத்தவர்; குலவரைகளைக் கலந்து நின்றவர். குன்றங்கள், வானுற்றமலைகள் அனைத்தும் அவரே. வானமுகட்டைத் தாங்கி நிற்கும் மலை அவர். உலக முழுவதும் போக உமிழ் பவர் அவர்; மாமணிக் குன்றத்தை நிகர்ப்பவர் அவர்.

## (111) மறைந்திருத்தல் [68 (274)]

பாலில் நெய்போல மறைந்து நிற்பார் இறைவர். அன்பு என்னும் கோலை நட்டு உணர்வு என்னும் கயிற்றைக் கொண்டு நன்கு இழுத்துக் கடைந்தால் இறைவர் எதிர் தோன்றுவர். அவர் விறகிடைத் தீப்போல மறைந்து நிற்கின்றார்.

## (112) மாணிக்கம் [68 (276)]

பிரான் பெறற்கரிய மாணிக்கம், மாணிக்க மலை, மாணிக்கச் சோதி.

## (113) மின்—இடி [68 (278)]

அளவிலாத சோதி மின் அவர்; இடி அவர்; உருமும் மின்னும் அவர்; மின்னல் ஒப்பவர்; மின்னி முழங்கி இடிப்பவர்.

## (114) முத்து [68 (279)]

தோளா (தொளைசெய்யப்படாத) முத்துப் போன்றவர் இறைவர். கடல் முத்து, பசும்பொன் முத்து, முத்தின் தூண் - அவர்.

## (115) முதல்வர்—தலைவர்—முன்னோன் [68 (280)]

இறைவர் அண்டத்து ஒரு முதல்; உலகத்து உயிர்கட்கெல்லாம் தலைப்பட்டு நிற்பவர்; ஊழி முதல்வர்; எண் டிசைக்கும் மூர்த்தி, எல்லா உயிர்க்கும் இறை. எவை தோன்றுவதற்கும் முன்னரே தோன்றினவர்; எவ்வுயிர்க்கும் தலைவர். கருவாக உலகுக்கு முன்னே தோன்றினவர்; அமரர்களின் தலைவர்க்கும் தலைவர்; உலகெலாம் நம்பிரான் எனப் போற்ற நிற்கும் நாதர்; பரம்பரர்; முதல்வர்; மூர்த்தி முளைத்தவர்; முந்தை; மூவுலகுக்கும் முழுமுதல்; முன்னவர்; மூத்தவனாய் உலகுக்கு முந்தினவர்; மூலர்; மூவனாய் முதலானவர். மூவா முதலாய மூர்த்தி; மூவுலகும் ஏத்தும் முதல்வர்; வானோர்க்கும் ஏனோர்க்கும் தலைவராம் பெருமான்.

## (116) மூப்பின்மை—இளமை [68 (282)]

பிரான் மூவாத கற்பகக் கொழுந்து; மூவாச் சிங்கம்; மூவாத முதலாய மூர்த்தி; மூவாதவர் - இளகாதவர் (நெகிழாதவர்).

## (117) மெய்யர் [68 (284)]

பிரான் நினைப்பவர்க்கு உண்மைப் பொருள்; தம்மை விரும்புவோர்க்கு மெய்யர். பொய்யிலாத மெய்யர்.

## (118) மேகம் [68 (285)]

இறைவர் கருவாகி ஓடும் முகில்; கூதலாய் (குளிர்ச்சியாய்ப்) பொழிகின்ற மாரி (மழை); பயிர்களை வளர்க்கும் துளி அவர்; பயிர்களின் வாட்டம் தீர்ப்பவர்; மழையாய்

...கும் பெய்பவர்; மழை சொரிவிப்பவர்; முழங்கும் இடி ..., மழையாய்த் தோன்றி, மின்னி இடிப்பவர்; வானகத் ...ல் வளரும் முகில்; விண் பொழியும் மழை; வெண் முகிலாய்ப் பரவி மழை பொழிபவர்.

### (119) மேலோன் [68 (286)]

இறைவர் எல்லார்க்கும் மேலானவர்; தற்பரமாய் நிற்கின்றவர்; மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலோர் அவர்.

### (120) யார்க்கு அரியர், சேயர், யாரால் அறியப்படாதவர் [68 (287)]

இறைவர் அண்டத்தார்க்குச் சேயவர்; தேவர், இயக்கர், விச்சாதரர் இவர்கள் கருத நின்றவர்; அவர்களுக்குக் காண்பரிதானவர்; அரி, பிரமன், இந்திரன் இவர்களுக்கும் அரியர்; யார்க்கும காண்பரியவர்; ஆய்வதற்கு அரியவர்; உணர்வரியவர்; உம்பர்க்கெல்லாம் அடைதற்கரியவர்; கரவு நெஞ்சத்தினர்க்குக் கரப்பார் (ஒளித்துக்கொள்வார்); தம்மைக் காணுதாரின் கருத்துக்கும் சேயார்; கல்லாதவர் தம் காட்சிக்கு அரியவர்; கள்ளமுள்ள மனத்தவர் அவரைக் காண இயலாது; காட்சிக்கு அரியர்; வஞ்சகர்க்குக் கிட்டார். தலையாய தேவாதி தேவர்க்கும் சேயவர், அரியவர், தன்னிலே தன்னை அறிய இயலாதவன் தன்னிலே தன்னைச் சார்தற்கும் இயலாதவன். அவர் தன்மை இத்தகையது என்று அறிய முடியா வகையில் நிற்கின்ருர். பொய்யர் மனத்துக்குப் புறம்பாவார் அவர்; யாவர்க்கும் அரியர்; வஞ்சனை எண்ணத்துடன் ஐந்தெழுத்தைச் செபிப் பவர்க்குக் கிட்டாதவர்; வானவர்க்கும், தானவர்க்கும், மண்ணுளோர்க்கும் கிட்டாதவர்.

### (121) யார்க்கு எளியர், யார்க்கு மெய்யர், யார்க்கு உதவுவார் [68 (288)]

ஐம்புலன்களை அடக்கும் அடியவர்களுக்குப் பிராணர் அணியர் - கிட்டுவர் - அடியார்க்கு எளியவர் அவர். அவர்

மீது காதல் கொண்டு மறவா மனத்தார்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல அவர் விளங்குவர். அருந்தவத்தின் பெருவலியால்தான் அவரை அறிதல் கூடும்; அவர் அன்புடையார்க்கு எளியர்; அடியார்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு அணியர்; உள்ளத்தில் உண்மை அன்பு கலந்து ஏத்த வல்லார்க்கு அல்லால், கள்ளம் உள்ள மனத்தினருக்கு இரங்கமாட்டார். உள்ளத்தே உருகி நின்று மகிழ்பவர்களுக்கு அன்பர்; தம்மைக் கண்டபோதே களிப்பு அடைபவர்களுக்கு எளியர்; உள்ளத்தில் கரவு - வஞ்சனை யிலாதவரிடம் கலந்து விளையாடுவார். தம்மைக் கருதும் அடியார்களிடம் மிகவும் எளியராய் விளங்குவார்; காட்சிக்கு எளியர்; குற்றமிலாத வழியில் தொண்டுபட்ட அடியார்க்கு எளியர்; பொய் பொருந்தா அன்பர்க்கு அணியர்; பண் கலந்த பாடல்கள் சொல்லிப் பத்தி செய்யும் வித்தகர்க்கு அணியராம் அமுது; மணியே, பொன்னே, மைந்தா, மணாளா என்பவர்களுக்கு அணியர்; மந்திரிப்பவர் தம் மனத்துளிருப்பவர்; தம்மை எப்படி நினைத்தாலும் எளியராய்த் திகழ்பவர்; யார்க்கும் எட்டாத பெருநிலையர். தம்மை வேண்டிப் பணிபவர்க்கு அணியராவார்.

### (122) யாரிடம் இரார், அருள்புரியார் [68 (289)]

பிரானார் கள்ளம் உள்ளவழிக் கசியமாட்டார். தம்மைச் சார்ந்தவர்க்கலால் பிறருக்கு நலமிலாதவர். பொருளொடு கூடிய சொற்களால் போற்றித் தூய மனத்தினராய் இல்லாதவர்தம் மன இருளை நீக்கமாட்டார். திருந்தாத மனம் உடையாரிடம் பொருந்தார். பெரியாராய அவரின் பெருமைகளைப் பேசுதற்கு மறந்தார் மனத்தில் அவர் பொருந்தமாட்டார்; அவர் மெய்யர் அல்லாதவர்க்குப் பொய்யர்; வஞ்சனை உடையார்பால் சாராதவர்; மனமுருகி நினையாதார்க்கு அவர் வஞ்சகர்; அவர்களுக்காக வருந்தார்.

### (123) யாரைத் தண்டிப்பார் [68 (290)]

பெருமான் துக்கராம் மூடரைத் துயரில் வீழ்த்துவர். தமது பணி பிழைக்கில் புளியம் வளாரால் மோதுவிப்பார்.

## (124) யோகம்—சிவனும் யோகமும் [68 (291)]

இறைவனை 'அமுத யோக நீற்றன்' என்றும், 'பரம யோகி' என்றும் அப்பர் பெருமான் கூறுகின்றார்.

## (125) வணங்கப்படுவார் [68 (294)]

அண்ணலை வானோர் வணங்குவர்; பிரமனும் மாலும் அவர்க்குப் பணிசெய்வர். பேய்க்கணங்கள் பரவி ஏத்தும் தன்மையர் அவர்.

## (126) வறுமை [68 (298)]

பிரானார் பலிக்குச் சென்று திரியும் வறுமையர்; ஊணிலாத வறுமையர்; தம்மை அடைந்தவர்களின் வறுமையை ஒழிப்பார்; வறுமையும், தீய பிணிநோய்களும் வாராத வண்ணம் காப்பார்.

## (127) வித்து, முளை [68 (302)]

இறைவர் அண்டத்துக்கு அப்புறத்தார்க்கும் வித்து; அமரர் சூடும் வித்து; உலகுக்கெல்லாம் வித்து; திசைக்கெலாம் வித்து; மெய்யடியார் உள்ளத்து வித்து; விரிக்கின்ற பொருட்கெல்லாம் வித்து. அவர் உலகத்தில் உள்ள உயிர்க்கெல்லாம் கருவாகி முளைத்தவர்; எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்தவர்; முளைத்தெழுகின்ற கற்பக வித்தை நிகர்ப்பவர்.

## (128) விளக்கு—திரி [68 (307)]

உடல் என்கின்ற இடிஞ்சிலில் (அகலில்) நெய் கலந்த திரியாகி, நெஞ்சுள் விளக்காக விளங்குவார் அண்ணல். அவர் உலகுக்கெல்லாம் ஒரு விளக்கு; எண்டிசைக்கும் விளக்கு; ஞானச்சுடர் விளக்கு; துளக்கமிலாத விளக்கு; நாற்றிசைக்கும் விளக்கு; புந்திக்கு விளக்கு; விருப்பத்துடன் நினைப்பவர் தம் மனத்தே பொருந்தி இருக்கும் மணி விளக்கு; மெய்ஞ்ஞான விளக்கு; விண்ணுளார் தொழுதேத்தும் விளக்கு; ஜோதி விளக்கு.

## (129) வினை அற்றவர் [68 (309)]

பிரானார் வினை அற்றவர்; வினை அவரிடம் நிலை கொள்ளாது.

## (130) வினை ஆவர் [68 (310)]

பிரானார் செய்வினைகள், நல்வினைகள் ஆனவர். அவர் நல்வினைகளைப் பெறுவிப்பார்; பெருவினைப் பிறப்பு வீடாய் நிற்பார்.

## (131) வினை தீர்ப்பார் [68 (311)]

பிரானார் அடைந்தார் வினையைத் தீர்ப்பர்; அடியவர் தம் பழவினையை அறுத்தொழிப்பார்; அண்ணாமலையைச் சிந்தித்து எழுபவர்களின் வினையைத தீர்த்திடுவார்; கட்டக் கடுவினை, கலக்கும் வினை, கழலாவினை, குட்ட வல்வினை, சூழ்வினை, செடியுடைய வல்வினை, தீர்ப்பரிய வல்வினை, தீவினை, துன்ப வல்வினை, தொடர்ந்த வல்வினை, பண்டை வினை, பந்தித்த வல்வினை, பழவினை, பாசவினை, பொல்லாவினை, மயருறு வல்வினை, முந்திய வல்வினை, மேலை வினை, வல்வினை - எனப்பட்ட வினைகளை அறுத்தருளுவார். தம்மைக் கூறுவார் வினையைச், சிந்திப்பார் வினையைத், தீர்ப்பார்; தீராத வல்வினை நோயைத் தீர்ப்பார்; தீவினை நாசன் அவர்; நமது மேல்வினை வெந்தறச் சாதிப்பார். பரவி நாளும் பணிந்தவர் வினையைத் துடைத்தருளுவார். வேறு சிந்தனையிலாதவர் தீவினையை ஒழித்து அருளுவார்.

கரக்கோயிலை உரைக்கும் உள்ளத்தார் வினை ஒய்ந்தொழியும்; தொழுவார் வினை சாயும் திருப்புகலூர்க் கோணற் பிரானைக் குறுகக் கொடுவினைகள் குறுகா. நம்மைச் சுற்றிநின்ற சூழ்வினைகளை வீழ்க்க விரும்பினால் 'ஆரூரா' என்று போற்றி நிற்கவேண்டும்.

## (132) வீடு, வீடாவர், வீடு அருளுவார் [68 (312)]

பெருமானார் பின்னை நம்மைத் தம்முளே என்று கொள்வார்; திருவடி வணங்குவார்களுக்கு முத்தி அளிப்பர்;

... உலகை அருளுவார். வீடு காட்டுவார்; பந்தமாய் வீடு ...; பிறப்பு - வீடாய் நிற்பார்.

(133). பிற [68 (1)—(17)]

சிவபிரான் அகர முதல் எழுத்துப் போன்றவர். அச்சம் ...வர். அடல் (வன்மை) உடையவர். அண்டங்களில் ...வர்; அண்டங்களுக்கு அப்பாலவர்; பிரளயத்துக்கு ...ற் பட்ட அண்டத்தினர்; பரம அணுவானவர்; ...த்தைந்து வாதனைகளுக்கும் அப்புறத்தினர்; அந்தியும் ...தியும் ஆனவர்; அடியார்களுக்கும், கற்றவர்க்கும் அமுது ...யவர்; தம்மைச் சார்ந்தவர்களுக்கும், ஞானம் நிறைந்த ...ர்களுக்கும் தேனும் அமுதமும் போல இனிப்பவர்; ...ணுடன் பாடல்களைச் சொல்லிப் பத்திசெய்யும் ...ரியோர்களுக்கு அமுதுபோன்றவர்; புலன்களை அடக்கி ...றியில் நிற்பவர்களின் சிந்தையில் அமுதச் சுவையினர்.

[68 (17—23)] திருமால், பிரமா முதலியோர்களின் அல்லலைத் தீர்க்கும் அருமருந்து அவர்; புவிக்கெலாம் அழகாம் சிவக்கொழுந்து அவர்; அழகை வைத்தவர் அவர்; அளவிலாதவர்; அளத்தற் கரியவர்; கணக்கு வழக்கைக் கடந்தவர்; தேவர்களுக்கும் எண்ணுதற்கரிய அளவினர்; ...ற்ருக விளங்குபவர்; சமயம் அறிந்து உதவுபவர்; பாசம் அற்றவர்க்குத் தனி உதவியாய் நிற்பவர்; அறத்தினர்.

[68 (25)] புந்தியிற் புகுந்த அறிவு அவர்; உள்ளத்தில் ஒளியாய் விளங்கும் மதி அவர்; பாம்பையும் திங்களையும் பயிலவைத்த மதி அவர்.

[68 (26)] அன்பர் அவர்; (27) அனைத்துலகும் ஆள்பவர் அவர்; முற்றும் ஆண்டு பேர் எழுந்து ஒன்று (ஓம்) உடையவர் அவர். (28) ஆண் அவர், பெண் அவர், பேடு, அலி அவர். ஆணல்லர், பெண்ணல்லர், அலியும் அல்லர்.

[68 - (29)] செம்பொன் ஆணி அவர்; (37) எல்லார்க்கும் இயல்பானவர். (39) உள்ளவர், இல்லாதவர்; (42, 43)

இறைவன் இன்பன்; இன்பமும் துன்பமும் வைத்தவன். 'அன்பனே, அரனே' என ஓதி அரற்றினால் ஈசன் இன்பனாய் விளங்குவான்; அவன் இன்புறாய் நின்று நமது துன்பத்தைக் களைகின்றான். (48), (58) உண்ணார், உறங்கார் இறைவர். (50), (51) அவர் உத்தமர், உதயத்தின் உச்சி. (53) உயிர்ப்பாய் நிற்பவர். உயிர்ப்புள் வருபவர். (54) அருவமும் உருவமும் ஆனவர். (56) உள்ளவர் அவர்; உள்ளம் அவர். (61) ஊற்றாகி உள்ளே ஒளிப்பார் அவர். (62) தெளிவாய்ந்த ஊறல் அவர். (64) ஊனம் தீர்ப்பவர். (72) அவரால் உணரப்படாததொன்றில்லை; (73 - 74 - 75) காக்கும் கடவுளாய் அவர் எல்லாவற்றையும் காண்கின்றார்; அநுபவிக்கும் பொருள் யாவற்றையும் தருபவர் அவரே; எல்லை நிறைந்தவர், எல்லை இலாதவர். (77) அருமையில் எளிமை அவரது தன்மை. (78) அவர் முடிவு இலாதவர். என்றும் உள்ளவர். (80) ஐம்பூதங்களின் பிண்டம் அவர் (87) பதினெண் புராணத்துக்கு உரியவர்; சிவஞானத தையே களிறாக உடையவர்; (91) கடலும் கழியும் அவரே; (103) கானகத்துக் களிறு அணையவர் அவர்; கூற்றுதைத்த களிறு அவர். (104) நமக்கு அவர் களைகண் (105) கற்பகம், கற்பகக் கொழுந்து; (108) கனம் அவர்—இலேசு அவர்; (115) காரணன் அவர்; (120) குருமூர்த்தி அவர்; (124) குற்றமிலாதவர்; (125) எவ்விதக் குறைவும் இலாதவர்; (131) சரிதை (வரலாறு) பல உடையவர். வேடம் பலவாம் சரிதையினர். (138), (139) சீலர்; சிவலோக நெறியே ஆகுஞ் சீர்மையர்; (141) சூரியன்—நிலவு ஆனவர், ஒப்பவர்; (142) செம்மை தருபவர், திரிபுராதிகள் மூவர்க்கும் செம்மை செய்த சிறப்பினர்; (146) தவத்தினர் தம் சொற்களைச் சோதிப்பவர்; (159) தாரகைகள் ஆயினார்; (161) அணு அணுவாகத் தோன்றித் திரண்டு நிற்கின்றார்; (189) சொல்லப்படுகின்ற நாள் (நட்சத்திரங்களும்), (கோள்) கிரகங் களும் ஆனவர் அவர்; (191) சேமித்து வைத்த நிதி அவர், நிதியின் உரிமையாளர் அவர்; (194) இருநிலம் அவரே; நிலத்தின் இயல்புத் தன்மையும் அவரே. (195) நிலையானவர் அவர். (196) நிழல் அவர் (197) பூவின் நிறத்தவர். (198)

...வானவர். (199) நினைவு அவர். (201) நீர் அவர்; நீர் ...றவர் அவர். (202) நீளம்—அகலம் உடையவர் அவர். ...மும் அகலமும் அவரே ஆவர். (203) நுண்ணியர்—...யர்; நுணுகர்மேலே எல்லாவற்றினும் நுணுகியுள்ளவர். (...) பாலில் உள்ள நெய் அவர்; (212) ஆ(பசு) அவர்; ஆவினில் ஐந்தும் (பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) ...வர் அவர்; (214) பாட்டிற் பண்ணும், பண்ணில் ...சையும் அவர். (215) பாலமுது அனைய பண்பினர்; மதி, பாம்பு, நீர் இவை தமைத் தமது படர் சடையில் வைத்... ...ந்த பண்பினர். (216) குறை உடையவர்களின் ஏவல் ...க் கொள்பவர்; பிணிவார்கட்கு அங்கங்கே பற்றாக ...ற்பவர்; (219) நாம்போசைப் பயன் அவர், மெய்ப்பொருட் பயன் அவர்; (220) பயிர் அவர், பயிரின் வாட்டம் தீர்க்கும் ...மழைத் துளி அவர். (221) எங்கும் பரந்தவர். (222) பரம் ...ன். (223) பருமை உடையவர். (226) பவித்திரன் (தூயவர்). (229) பளிங்கினிற் சோதி (231) பண் நிறைந்த பாடல் பலவும் ஆனவர். (232) ஆலையிற் பாகுபோல இனிப் ...வர். (234) பாத்திர மானவர். (239) பிண்டமும் அவர்; பிண்டத்தைக் காக்கும் பிராணும் ஆவர். (247) புதியர்; (248) ...கப் பழையர். (253) பலவகையினும் பேதம் உடையவ ...கத் தோன்றுபவர். (255) எப்பொருட்கும் பொது வானவர். (261) பார் முழுதும் ஆனவர். (264) நல்ல மதி அவர். (267) மண்ணுளாரை மயக்குபவர். (268) மரகதம் அவர். (275) மாசிலாதவர். (276-ஏ) பாவை நல்லாரினும் இனியர். (277) மனத்துள் மாயன். (292) வகை எலாம் உடையவர். (293) நறுமண மலர் வண்டு அவர். (295) வயிரம், வயிரமாலைக்கொழுந்து அவர். (296) செல்கதிக்கு வழிகாட்டும் சிவன் அவர். (297) வளம் மிக்கவர். (299) என்றும் வல்லவர். (300) பூதலத்துக்குப் பொருந்திய வாழ்க்கையர், பெண்பால் ஒரு பாகத்துடன் வாழ்பவர். (301) வானாகி நின்றவர். (303) விதியானவர், விதியை ஒத்தவர். (304) விரதத்தர். (305) விருந்து. (306) வேண் டாமை, வேண்டுவது இரண்டும் இல்லாதவர். (308) விளைவு அவர். (313) நல்வீணை வாசிப்பார், முனிகணங்கள் சூழ

முற்றந்தோறும் வீணை வாசித்துச் செல்வர். (314) வ... அவர். (315) கோடால வேடத்தராம் அவர் எல்லா வேடமும் கொள்வார். (316) தொன்னூல் பூண்ட வேதியர்; (317) வேர் அவர்; (318) வேறு (புதுமை) அவர்; (319) வைப்பு அவர்.

## 82. தட்சிணாமூர்த்தி [69]

"தக்கணா போற்றி தருமா போற்றி" என்று தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தியாய் (நால்வர்க்கு) அறம் (தரும தத்துவத்தை) உபதேசித்த நிலையைப் போற்றுகின்றார்.

## 83. சிவபிரான்—திருவுருவம் [70, 77, 83]

(1) அடி, அடிச்சிறப்பு [70-1] சிவபிரானார் ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடியார். அவர் திருவடி அடியார்க்கு அமுதம் போன்றது; அபயம் அளிப்பது; அருமருந்து ஒப்பது; அருள்பாலிப்பது, அரைக்ஷணத்தில் யாவற்றையும் அடக்கவல்லது, அழகியது, அழுகெழுதலாகாதது; அளக்க முடியா அகலத்தது, ஆசையை அறுப்பது; ஆதியும் அந்தமும் ஆவது, ஆறங்கமும் ஆவது, ஆறு சமயத்தையும் தெளிய வைப்பது. இம்மையில் வானவர் செல்வத்தைத் தந்து அம்மையில் பிறவித் துயரை நீக்குவது; இழிவுள்ள ஏழு பிறப்பையும் அறுப்பது; உவமை, வேறுபாடு இல்லாதது, ஊழி ஊழி மேற்பட்டு நிற்பது; ஒப்பு இலாதது; ஒளி வாய்ந்தது; ஒன்றாய் விளங்குவது; கண்ணொன அருமை வாய்ந்தது; கணக்கு வழக்கைக் கடந்தது; கயிலையில் விளங்குவது; கருத்தில் திருத்தமாக நிலையாக நிறுத்தினால் விண்ணுலகை நமக்கு எழுதித் தருவது; கழலும் சிலம்பும் ஒலிப்பது; காலங் கடந்தது, குற்றமின்றி நிற்பது; சித்தத்தில் தோன்றும் செழுந்தாமரை ஆயது; சிந்திக்க அரியது, தேன்போல் இனியது; சுடலை நீறாடுவது, செந்தாமரை போன்றது, ஞானமும் ஞானப் பொருளும் ஆவது, தனித்து நின்று பொலிவது, திக்குகளும் பூமியும் ஆயது, தீண்டற்கு அரியது, தீத்திரளாய் உள்ளத்தில்

விளங்குவது, துணையாய் நிற்பது, தூயது, தூய தாமரை யன்ன வடிவினது, தேன்போன்ற இனிமை தருவது, தொலையாதது, தோற்றம் முடிவு இல்லாதது, நடமாடுவது, நம்மை ஆள்வது, நரகினின்று மீட்பது, நல்வீணை—மாலை மதியம்—வீசும் தென்றல்—இளவேனில்—மலர்ப் பொய்கை போன்ற இனிமை வாய்ந்தது, நலந்தருவது, நிகரிலாதது, பயம்—புன்மை-பாவம் இவைதமை ஒழிப்பது; பலபலஊழி ஆயது; பழவினையைத் தீர்ப்பது; பாதாளம் ஏழுங் கடந்தது; பிணியைப் போக்க வல்லது; பிறவியை அறுப்பது; புகழ்ச் சிக்கு உரியது, புதுமலர்த் தாமரை போல்வது; புலைத் தன்மையைப் போக்குவது, பெருமை வாய்ந்தது, பொய் யாதது, போற்றத் தக்கது, மண்ணும் விண்ணும் மாயும் பொழுதும் ஈறின்றி நிற்பது, மந்திரமும் தந்திரமும் ஆயது, மருந்தாய் விளங்குவது, மறவாதிருந்தால் பிறப்பு, மூப்பு, பிணி, சாக்காடு இவைகளை நீக்கி இன்பம் தருவது, முத்தி கொடுப்பது, முளைக்கும் செஞ்ஞாயிறு போன்றது, முன்னை முளைத்தது, வஞ்சம் இலாதது, வான் கடந்து அண்டத் துக்கு அப்பால் நிற்பது, விசும்பு கடந்தது, விடை வாகனத் தில் ஏறுவது; விண்—மண்—அங்கி—ஞாயிறு—திங்கள் ஒப்பது; வினையை நீக்குவது, வேதத்தின் தூய பொரு ளாவது, வேதப் பொருள் விளங்க நின்றாடுவது, வேறுபாடு இலாதது, வைதிகத் தேர்மிசை விளங்கியது (முப்புரத்தை எரித்தபோது.)

அணியதும் அன்று, சேயதும் அன்று; இரண்டு உருவம் கலந்தமையால் ஒன்றுக்கொன்று மாறுபடுவது; ஒலிசெயும் கிண்கிணி, சிலம்பு, பாடகம், பொற்கழல் அணிந்தது, ஓருருவும் இல்லாதது, இடுதற்கரிய—நிலைபெற்ற—தான்தோன்றி என நான்கு வேதங்களுங் கூறுவது, சார்ந்தார்க்கு அடைக்கலம் தருவது, தாமரையும் உருக்கிய செம்பொன்னும் தனக்கு ஒப்பாகாது விளங்கு வது; தில்லைச் சிற்றம்பலத்தில் நட்டம் ஆடுவது, பாமாலை ஏற்றது, பேச்சால் உணரமுடியாதது, பொன் நிறத்தது, மணி நிறத்தது, மாணிக்கம் ஆவது.

அப்பூதி அடிகளின் சிரத்தின்மேற் பொலிவது. அரியும் அயனும் சிரமப்பட்டுக் காண விழைந்தது; அரியும் அயனும் தேட அவர்முன் அனலாய் நின்றது. அருந்தவர்கள் தொழுவது; அற்றார்க்கு அரும்பொருள் ஆவது, அறியாத அன்பர்கள் இட்ட இலையையும் பூவையும் அழகிய நறுமலரென ஏற்றுக்கொள்வது. அன்பு செய்வார்க்கு வானகம் அளிப்பது; விளக்கம் தருவது; அன்புடன் அழுவார்க்கு அமுதாவது; அன்புடன் தொழுவோர் விண்ணுலகாள்வதற்கு ஏணிப் படி வழியை இட்டுக் கொடுப்பது; அன்பு பூண்ட தொண்டர்களுக்கு இன்பம் தந்து துன்பங் களைவது, ஆறு சமயத்தார்க்கும் அவரவர் கொண்ட பொருளாய் வேறொன்றும் இலாது விளங்குவது இமையோர் முனிவோர் வணங்குவது, இலக்குமி வாசஞ் செய்வது, உணர்ந்தோம் என்பார்க்கும் உணரலாகாதது, உத்தமர்கள் உள்ளத்தில் ஞானச் சுடராய் விளங்குவது, உலகெலாம் தொழுவது, உற்றார் இலாதார்க்கு உறுதுணையாய் நிற்பது; ஏழுலகுந் தொழுவது; ஒளிபெருக்குவது, கணங்கள் தொழுவது, கருதித் துதிப்போரை உலகாள வைப்பது, கலைகள் வணங்குவது, கற்றோர் பரவுவது, காண்பதற்கரியது, காவிரியிற் குளித்துத் தொழும் பத்தர்களுக்குச் சுவை அமுது ஊட்டித் தேவர்கள் சூழ்ந் திருக்கும்படியான பெருஞ் செல்வத்தை விளைவிப்பது; குறைமுறையிட்டு நின்றோர்களைக் கவலையில் ஆழாவண்ணம் காப்பது; கொடுவினையார் கூடமுடியாதது; கோடிக் கணக்கான தேவர்கள் வணங்கியது; சார்ந்தார்க்கு அடைக்கலம் ஆவது; சிவன் எனச்சொல்பவருடைய தீவினையைத் தீர்ப்பது; ஞாயிறுந் திங்களுமாய் நின்றது; ஞாலமெல்லாம் வணங்குவது; தவர்கள் சிந்திப்பது; திருமால் தியானிப்பது; திருமால் — பிரமன் — இந்திரன் — சந்திரன் — சூரியர் — அமரர் இவரெலாம் சயசய என்று கூறி முப்போதும் பணிவது; திருமாலுக்கு அரியது; துயர் என்னும் வெயில் சுடும்போது தொண்டர்க்கு நிழலாய் உதவுவது; துன்பக் கடலிடையே நின்று தோணிபோலத் தொண்டு செய்வோர்க்கு இன்பக் கரையைக் காட்டித் தெளிவு தருவது;

தேசமெல்லாம் இறைஞ்சுவது; தேவர்க்கு எட்டாதது—கிட்டாதது; தேவர்கள் சென்னியில் உள்ள மலர்கள் (அவர்கள் வணங்குதலால்) தன்மீது கிடக்க விளங்குவது; தேவர் முடிமீது மாணிக்கம் ஒத்தும், மரகதம் போன்றும், வயிரமெனப் பொருந்தியும், ஆணிப்பொன் என்ன விளங்குவது; தேவி சிந்திப்பது, சூடுவது, பிரியாதது, தன் தாமரைக் கையால் வருடுவது, அங்ஙனம் வருடச் சிவந்தது; தேவியின் சிலம்பும் பாடகமும் கிண்கிணியும் தன்மீது அசைந்து பொலிவது, தேவி வணங்கும்போதும் வருடும் போதும் தாமரைபோல மலர்ந்து நிற்பது, தொடர்ந்து விடாத தொண்டர்க்கு ஆதாரமாவது, எளிமையிற் கிட்டுவது, தொண்டர்கள் தொழுது துதிப்பது, தொண்டரைச் செந்நெறியில் வைப்பது, நமக்கு அடைக்கலமாவது, நிலவின் களங்கத்தைக் கழுவுவது, பணிபவரின் பாங்காவது, பதினெண் கணங்களும் பாடுவது, பரவுவார் பாவத்தைப் போக்குவது, பல ஊர்களுக்குப் பலி இரக்க நடந்தது, பற்றற்றார் பற்றுவது, பிரமன் சென்னிக்கு அணிகலமாவது, பிழைத்தவர் பிழையை அறியவல்லது, பெரியோர்க்குத் தேன்போலும் இன்பம் விளைவிப்பது, பெரும் பித்தர்கள் பிதற்றிப் போற்றுவது, பேய்க் கணங்களுடன் இணங்கி நின்று ஆடுவது, பொய்யிலா அன்பர்க்கு எளிதிற் கிட்டுவது, பொருள் உணர்ந்தோர்க்குப் பொன்னுரை போலத் திகழ்வது, பொல்லா வினையார் கிட்டுதற்கரியது, பொன்னுலகம் அளிப்பது, போற்றுவோர் துயர் உறும் போது துணையாய் நிற்பது, மண்ணுலகம்—விண்ணுலகம்—நாகர் உலகம் மூன்றுக்கும் இகபரமாய் விளங்குவது, முருகவேள் தொழுது சார்வது, முழவம் பாணி பயிற்றுவது.

வண்டுகள் ஒலிப்பது, வானோர் மகுடத்தின்மீது நிலையாயிருப்பது, வேதங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இன்னதென்றறியாதது, வேதியர் வெள்ளியாய் விளங்குவது, வைது நிற்போரது காமத்தையும் பொய்யையும் நீக்காதது, செபிப்போரது ஊனைப்போக்கி உய்யக் கொள்வது.

இராவணனுடைய பத்துத் தலைகளையும் நெரித்தது; காட்டகத்தே வேட உரு எடுத்தது, பன்றியின்பின் சென்றது; காளியின் கோபத்தைப் பங்கம்படச் செய்து ஆடியது; தக்கன் வேள்வியைத் தகர்த்தது; அவ் வேள்வியிற் சந்திரனைச் சாடியது; தேவி அஞ்ச யானை யின் தோலை உரித்தது; பன்றி தேடியது; பிணக் காட்டில் ஆடுவது; பொல்லா முயலகனது கோபத்தை அடக்கியது; மார்க்கண்டன் உய்யும்பொருட்டுக் காலனை உதைத்தது; யம தூதரை ஓட்டுவது.

(2) உருவம்: [70 (6)] அந்த அந்த உருவில் அந்த அந்த உருவம் ஆயினவன். அம்மண உருவினன்; அரி, அயன் இவர்தம் உருவினனாய் உயிர்க்கெலாம் கருவாய் நின்றவன்; அனல் உருவினன்; இருவருடன் மூவருமான உருவினன்; இருவரும் ஒருவனாய் நின்ற உருவத்தினன்; இன்ன உரு என்று அறியவொண்ணா உருவத்தினன்; உமை தவிர வேறு உருவம் தமக்கென்றிலாதவன்; உரு இரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வாதவன்; உரு எண்ணில்லாதன உடையவன்; உரு மூன்றாய் நின்று உணர்வில் ஒன்றாய் விளங்குபவன்; ஊழிக்கு முன்பு ஒருவனாய் நின்று மூவர் உருவில் திகழ்பவன்; எரி ஓம்புவோர் அந்த எரி ஈசனது உரு வர்க்கம் என்று உணர்கின்றார் இல்லை. எரியல்லது வேறு உருவம் இலாதவன்; எல்லா உருவும் தன் உருவம் ஆயினவன்; எலும்பு மாலை அணிந்த திருவுருவினன்; ஒரு உருவே மூவுருவமானவன். ஒருவரும் அறிய முடியாத திருவுரு உடைய சோதி; சமயங்கள் ஆறின் உருவாகி நின்றவன்; சாந்தமும் சந்தனமும் சேறாக நிறைந்தொழுகும் திருஉருவத்தவன்; சிந்தையுட் சிவனாய் நின்ற உருவினன்; சிவ உருவாய் நின்று திரண்ட உருவினன்; சுடர் உருவினன்; செம்பொன்போலத் திகழ் உருவினன்; செம்பொன்மலை போன்றவன்; செவ்வான் ஒளி, பவள ஒளி, மின்னொளி, சுடர்த்தீ ஒளி, ஞாயிறொளிபோலச் சிவந்தவன்; செழுஞ்சுடர் உருவினன்; சொற்பொருள் உருவினன்; ஞாயிறும் திங்களும் போல்பவன்; ஞாயிறொளிபோலச்

...வாங்கவன்; திருநீற்று உருவினன்; திருமாலின் மூன் ...ருப்புருவமாய் நின்றவன்; தீண்டற்கரிய திருவுருவினன்; ...வண்ண உருவில் கரியுருவமும் கொண்டவன். தீவண்ணத் ...ல் சாம்பர் பூசிய திருவுருவினன்; நால்வேத உருவினன்; நெய்யிற் சுடர்போன்ற உருவினன், பரிசுத்த உருவினன்; பவளத்தின் புறத்தே வெண்பொடி பூசிய உருவினன்; பவளமலை போன்ற உருவினன்; பாதிப் பெண் உருவினன்; பெண் ஆண் உருவினன்; பொன்மலை போன்றவன்; மணி மலை போன்றவன், மரகத உருவினன்; மலையாள் மகளுடன் ஒருருவாய் நின்றவன்; மாசிலாப் பொன் உருவத்தவன்; மாதரை மயக்கவல்ல அம்மண உருவினன்; மின் உருவத் தவன்; முத்தின் சோதி உருவினன்; மூவர் உருவில் திகழ்பவன்; மூவாத உருவினன்; யார் எவ்வுருவில் தன்னை நினைக்கின்றார்களோ அவர்களுக்கு அவ்வுருவில் நின்று அருள் செய்பவன்; யாவரும் அறிய ஒண்ணா உருவினன்; யானையின் தோலைப் போர்த்த வடிவினன்; ரூபமுள்ளவனாய், ரூபம் இல்லாதவனாய் நின்றவன்.

வறிஞர்களின் சோர்வைப் போக்கும் திருஉருவினன்; விண்ணில் ஒன்றாய்—காற்றில் இரண்டாய்—தீயில் மூன் றாய்—நீரில் நான்காய்—நிலத்தில் ஐந்தாய்த் திகழும் உரு வங் கொண்டவன்; விளக்கொளி— மின்னொளி—முத்தின் ஒளி போன்ற உருவினன்; வெளிவளர் உருவத்தினன்; வேண்டும் உருவம் கொள்பவன்.

(3) கண்: [70 (7)] அருள் என்பது தவிர வேறு எந்தக் கண்ணும் இல்லாதவர்; இமையாத முக்கண்களை உடையவர்; இமையாதவரும் அல்லர்; இமைப்பவரும் அல்லர்; ஒற்றைக்கண்ணர்; கண்மேற் கண் உடையார்; காமனது அழகு அழிய எரி உமிழ்ந்த இமையா நெற்றிக் கண்ணர்; தாமரையன்ன கண்ணர்; நெற்றிக்கண் யானைக் கொம்பின் முத்து ஒக்கும்; நெற்றியில் ஒற்றைக்கண்; நெற்றி யில் தீத்திரட் கண்; புரமூன்றும் வேவத் தீவிழித்த கண்; முச்சுடரும் மூன்று கண்கள். முளைஞாயிறன்ன மலர்க் கண்கள்.

(4) [70 (8)] கண்டம்: நெய் நின்றெரியும் விளக்குப் போன்ற நீலமணி மிடறு. அது அஞ்சனம் (மை) போன்றது, நீலநிறத்தது, கரிய மேகம் போன்றது, குவளை மலர், நீல மலர் போன்றது, விடம் உண்டு இருண்டது.

(5) கரம் (கை): [70 (9)] யானையை உரித்தது; திரிபுரம் எரித்தபோது வில்லின் நாணை வலித்தது; பிரமன் தலையைக் கிள்ளி அறுத்தது; அரவு, வெண்டலை, எரி, துடி, மான், சூலம்—இவைகளை ஏந்தியது. நான்கு கரம் உடையார் இறைவர்.

(6) காது: [70-9A] காதில் சங்க வெண்குழை, சதுர வெண் பளிங்குக்குழை, தோடு.

(7) சென்னி: [70 (11)] அரவம், ஆறு, திங்கள், கூவம், கொன்றை, கோங்கம், நந்திவட்டம், பட்டம், தலை மாலை—இவை சென்னியில் விளங்குவன.

(8) தோள்: [70 (13, 17)] ஆயிரம் பொன்மலைபோல ஆயிரம் தோள்கள் விளங்கும். ஐந்தலை நாகத்தைத் தோள் மேல் அங்கவஸ்திரம் போல (ஏகாசமாக) இறைவர் அணிந்துள்ளார்; அவர் தோள் எலும்பாபரணம் பூண்டது; பவள மலை போன்றது, செக்கர்வான் நிறத்தது; சாந்தும், குங்குமமும், சந்தனமும் சேர்ந்தது; அவர், எண்டோளர், செம் பொன் தோளர், மல்லாடு தோளர், மணிமலைத் தோளர்.

(9) நா: [70 (14)] ஓதா நாவர், நாவகை நாவர், மறைவிரி நாவர்.

(10) நிறம்—வடிவம் [77]: சிவபிரான் இன்ன நிறத்தன் என்று எழுதிக் காட்ட முடியாது; அவர் என்ன நிறத்தர் என்று அமரரும் இன்னம் அறியார்; பெரியோர்களும் இன்னம் அறியார்; நீலம், வயிரம், பச்சை, செம் பொன், பளிங்கு என்று அறிதற்கரிய நிறத்தர் அவர், பச்சை நிறத்தர், பச்சை என்றறிவரிய நிறத்தர்; பால் நிறத்தர், பூ நிறத்தர், பெண்—ஆண் ஆய நிறத்தர்; மணி நிறத்தர்—மரகத நிறத்தர்—வெள்ளியர், கரியர், செய்யர்,

வடிவு வேறுயவர்; அவர் நிறத்துக்கு உவமையாகப் பின் வருவன கூறப்பட்டுள:—

அந்திச் செவ்வானம், செக்கர்வான், செம்பொன்மலை, நிறம்மிக்க குங்குமம், பவளக்குன்று, பவளத்தொத்து, பளிங்கின் சோதி, பெருநெருப்பு, பொன்தூண், முத்தின் திரள், முளைக்குஞ் செஞ்ஞாயிறு.

இறைவரின் வடிவம் அழகு உடையது.

(11) நுதல் (நெற்றி): [70 (15)] திலகம் இட்ட நெற்றி; திங்களைத் திலகம் போலப் பதித்த நுதலர்; பட்டம் சேர்ந்த நுதலர்; நெருப்புக்கண் இலகும் நுதலர்.

(12) பல்: [70 (16)] முத்தனைய பல்.

(13) புருவம்: [70 (18)] குனித்த புருவம்.

(14) மார்பு: [70 (19)] எரி அரவு அணிந்த மார்பர்; ஏன மருப்பும்—ஆமையும் தாங்கு மார்பர், கோலமார்பர், சாம்பர் பூசிய மார்பர், தேவியின் கொங்கைத் தழும்பு உள்ள மார்பர், நாகம் மிளிர்கின்ற மார்பர், நீறு துதைந்த மார்பர், பஞ்சவடி அணிந்த மார்பர், பொன்மாலை மார்பர், மலைமகள் அணைந்த மார்பர், மலையன்ன மார்பர், வெண்ணூல் மார்பர்.

(15) முகம்: [70 (20)] முகம் நான்கு, சிரித்த முகம்.

(16) முடி: [70 (21)] ஆயிரம் ஞாயிறுபோல ஆயிரம் நீண் முடிகள், புன்சடைமுடி; இண்டை, முல்லைக்கண்ணி, மலர், பிள்ளைப்பிறை — அரவு — கங்கை, சூளாமணி, கொன்றை, சுடலைப்பொடி இவை பொலியும் முடி.

(17) மேனி: [70 (22)] அழகிய மேனி, அழலாடு மேனி, ஒளிகொள் மேனி, சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி, தூய திருமேனி, நாகம் அணிமேனி, நீறணிந்த மேனி, நூலும் தோலும் துதைந்த மேனி, நெய்யாடு மேனி, நோக்கரிய திருமேனி, பாம்புக் கயிற்றில் உடைதலை கோத்து அணிந்த மேனி, பெண் அமர்மேனி, மாறிலாத மேனி,

மூர்த்திதருமேனி, மூவாத்மேனி. இறைவன் திருமேனிக்கு ஒப்பாகக் கூறப்பட்டன:—அரக்கு, இளஞாயிறு, எரி, காலைக்கதிர், குங்குமம், குன்றி, சங்கு, செம்பொன், செவ்வான், தளிர், பவளம், பனிமுகில், பால், பூந்தாமரை.

(18) வண்ணம் [83]: இறைவர் யார் யார் எப்படி எப்படி அழைக்கின்றார்களோ அவ் வண்ணத்தர்; அவரது அருளே கண்ணாகப் பார்த்தால் ஒழிய இவ் வண்ணத்தர் அவர் என்று எழுதிக் காட்ட முடியாது.

அவர் அஞ்ச வண்ணத்தர், அடுத்த வண்ணத்தர், அண்ட வண்ணத்தர், அந்திப்போதழகாகிய வண்ணத்தர், அரும்பின் வண்ணத்தர், அருள் வண்ணத்தர், அழல் வண்ணத்தர், அழைக்கும் வண்ணத்தர், ஆகாய வண்ணத்தர், ஆல வண்ணத்தர், ஆழி வண்ணத்தர், இராவண்ணத்தர், இருள் வண்ணத்தர், உமை வண்ணத்தர், ஊழி வண்ணத்தர், ஏழிசை வண்ணத்தர், ஐதுவண்ணத்தர், ஒளி வண்ணத்தர், கண்ட வண்ணத்தர், காட்சியரிய வண்ணத்தர், காலனைப் பாய்ந்த வண்ணத்தர், கைந்நரம்பால் இசை வண்ணத்தர், கொழுஞ்சுடர் நீல வண்ணத்தர், கோல வண்ணத்தர், சந்தி வண்ணத்தர், சிந்தை வண்ணத்தர், சுடர் வண்ணத்தர், செங்குன்ற வண்ணத்தர், செஞ்ஞாயிறடி வண்ணத்தர், செந்தீ வண்ணத்தர், செம்பவள வண்ணத்தர், செவ்வான் வண்ணத்தர், சோதியின் வண்ணத்தர், தஞ்ச வண்ணத்தர், திருநீறணி வண்ணத்தர், துஞ்ச வண்ணத்தர், தொண்டர் வண்ணத்தர், நான்முகன் வண்ணத்தர், நீல வண்ணத்தர், நோக்கரியதாய வண்ணத்தர், பவள வண்ணத்தர், பளிங்கு வண்ணத்தர், பால் வண்ணத்தர், பாற்கடல் வண்ணத்தர், பூ வண்ணத்தர், மதிலெய்த வண்ணத்தர், மணி வண்ணத்தர், மழை முகில் வண்ணத்தர், மால் வண்ணத்தர், முந்தி வண்ணத்தர், மூல வண்ணத்தர், வஞ்ச வண்ணத்தர் (தேவியுடன்), வானமின் வண்ணத்தர், விரும்பும் வண்ணத்தர், விரும்புவார் வினைதீர்த்திடும் வண்ணத்தர், வேதத்தின் வண்ணத்தர், வேழத்தின் ஈருரி போர்த்த வண்ணத்தர், வண்ணமில்லி.

மட்ட வார்சடையார் வண்ணம் வாழ்த்துமே.

(19) வாய்: [70 (23)] அருட்சோதி வீசும் அழகிய புன்சிரிப்புடன் கூடிய செவ்வாய், கொவ்வைப் பழம் போலவும், பவளம் போலவும் சிவந்த வாய், ஒளிவீசும் அழகு நிரம்பிய வாய்.

(20) விரல்: [70 (24)] (i) கால்விரல்:

இராவணனது ஆணவத்தை அடக்கிய விரல்; கழல் ஒலிக்கும் விரல்; பஞ்சுபோன்றது.

(ii) கை விரல்: வீணை பயில்வது.

## 84. சிவபிரானது திருஓலக்கக் காட்சி [71]

பெருமானது திருஓலக்கக் காட்சியைக் காணக் காவலாளர் நிற்கும் வாயிலின் அருகே நெருங்கி முந்தி நிற்கின்றன தேவர் கூட்டங்கள்; பிரமனும் திருமாலும் பெருமானது கட்டளை எதுவோ என எதிர்பார்த்து நிற்கின்றார்கள். இப்படி இருக்க, இவ்வுலகிற் கிடக்கும் நாம் எங்ஙனம் எம்பெருமானை அணுகி இறைஞ்சுவது!

திருமாலும், பிரமனும், வானவரும் சூழ விளங்கும் பெருமானை, நெற்றிக் கண்ணையும், திருக்கரத்தில் ஒற்றை நாகத்தையும் கொண்டுள்ள பெருமானைக், காண்பீராக. இறைவர் இரண்டு கோலம் கொண்டவர்; அவர் தேவியை ஒரு பக்கத்திற் கொண்ட கோலம் ஓர் அழகு. பல கோலங்கள் அவர் மகிழ்ச்சியுடன் எடுப்பார். எலும்பு மாலை நீங்காத கோலத்தினர் அவர். சுந்தரன் கவரி வீசுவான். தண்டி, குண்டோதரன், பிருங்கி இருடி, நந்தி, சங்கு கன்னன், பிரமன், மால் இவர்கள் பல்லாண்டு இசைக்கப், பூதங்கள் பாட, விடையில் ஏறுவார் இறைவர். வெள்ளை நீறணி கோலத்தினர்; புதுமையான பல கோலம் கொள்பவர் அவர்.

## 85. சிவபிரான் திருநாமமும், நாம விசேடமும் [72, 73]

### 1. திருநாமங்கள் [72]

அப்பர்பெருமானுடைய திருப்பதிகங்களிற் சிவபிரானுடைய திருநாமங்களின் இலக்கம் பின்வருமாறு:

(i) பொதுவாகக் கடவுளைக் குறிக்கும் திருநாமங்கள் **852.**

[உதாரணம்: அங்கணன், அட்டமூர்த்தி, ஆண்டான், ஆதிபுராணன், இமையோர்பெருமான், இறை, உடையான், உம்பர்கோன், உலப்பிலி, ஊழிமுதல்வன், எங்கோன், எட்டுமூர்த்தி, ஏரொளி, ஐயன், ஒருத்தன், கடவுள், காவலன், சதுரன், தத்துவன், நம்பன், பிரான், மூர்த்தி, விமலன்.]

(ii) சிறப்பாகச் சிவபிரானையே குறிக்கும் திருநாமங்கள் **441.**

| | | |
|---|---|---|
| 1. | அணிவன காரணமாகப் போந்த திருநாமங்கள்; | 71 |
| 2. | ஆடல், உருவம், உறைவிடம், படை, வாகனம் முதலிய பற்றி வரும் திருநாமங்கள் | 238 |
| 3. | வீரச்செயல், தன்மை முதலியன | 46 |
| 4. | ஏனைய | 86 |
| | ஆக | 441 |

இவற்றுள்—மிக்குவந்தன: அங்கம் குறிப்பன—58, சடையைக் குறிப்பன—35; தேவியைக் குறிப்பன—24; மறைவேத சம்பந்தமுள்ளன—33; விடைவாகனத்தைக் குறிப்பன—26.

[உதாரணம்: முக்கணன், நீலகண்டர், எண்டோளன், கூறுடைமெய்யர்; கங்கைச் சடையான், புரிசடையார், பேதைபங்கன், மடந்தைபாகன், நால்வேதன், மறைவல்லான், ஆனேற்றான், விடையன்.]

ஆகத் திருநாமங்கள் பொதுவும்
சிறப்பும் 852+441=1293.

| | | |
|---|---|---|
| (iii) | இறைவனை விளிக்கும் சொல்லும் சொற்றொடர்களும் | 537 |
| | சிவநாமத்தொடர்கள் (விளி) | 76 |
| | ஆக | 613 |

## 2. நாமமும் நாமவிசேடமும் [73]

இறைவர் ஆயிரம்பேர் உடையார்; எண்ணாயிர நூறு பெயர் உடையார்; எண்ணாயிரம் கோடி பேர் உடையார்; எண்ணிலாப் பேர் உடையார்; எண்ணரிய திருநாமம் உடையார்; அவர் ஒருவர்—அவர் பெயரோ பல ஒரு பெயரால் அவரை உரைப்பதற்கில்லை; ஆயிரம் பேரால் வானோர் அவரை ஏத்துவர். அவர் 'பராபரன்' என்னும் பெயரைக் கொண்டுள்ளார்; பிச்சன், பிறப்பிலியாம் அவரை அடியவர்கள் 'நந்தி' என்னும் பெயரால் போற்றுவர். வேந்தர்கள் சிவன் பேரை நினைந்து கூறி ஓங்குவர்.

இறைவருடைய ஐந்தெழுத்துத் திருநாமம் (நமசிவாய) கரும்புபோல இனிக்கும்; அவருக்கு அடிமை பூண்டு அவர் பெயரைப் பிதற்றவேண்டும்; உள்ளம் உருகி உரைக்கவேண்டும்; நமச்சிவாய என்றெழுவார் விண்ணுலகம் பெறுவர்.

நெஞ்சே! அஞ்சாதே; அரன் நாமங்களை நித்தமும் நினை; வினைகள் அறும்; அந்த நாமங்கள் நமது துன்பங்களை நீக்க நல்ல துணையாகும்; 'விடம் உண்ட கண்டா' என்றால் சேமித்து வைத்த நிதிபோல அவர் உதவுவார்; அவர் நாமங்களை ஓதாதார் காக்கைக்கு இரையாகிக் கழிவர். அவர் நாமங்களை ஓதினால் புண்ணியம் வரும், பொய் விடும், கூரிய அறிவு கூடும்; திருநாமங்கள் நூறு லக்ஷம் கூறினால் பாவங்கள் ஒழியும், இந்திரன் பதவியினும் மேம்பட்ட செல்வர்களாக ஆகலாம்; ஐந்தெழுத்தை ஓதி

மனக் கசிவினெடு தமது கழலைத் தொழும் அடியார் நெஞ்சினுள் இறைவர் விளங்குவார். 'சிவன்' என்று சுத்த மனத்துடன் கூறினால் அவர் நமது தீவினையை ஒழிப்பார்; ஆதலின் அரனது ஆயிர நாமங்களை எண்ணுங்கள்.

இறப்பதற்குமுன் ஈசன்பேர்களைக் கற்று அவரை வாழ்த்தவேண்டும்; அப்போதுதான் தீவினையை நாம் மாய்க்கலாம். அத்திருநாமங்களை மகிழ்ந்து ஓதி, அழ வல்லார்க்கு இறைவன் அன்பு காட்டி, இன்பு ஊட்டி, தவறாது அருள்புரிவான்.

சங்கரா! உனது பெயரைப் பரவி 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்தைச் சாவும் தினத்தில் உரைக்கும்படியான பேற்றைத் தந்தருளுக.

'சிவனுடைய நாமங்களைச் சொல்லிப் பயில்பவர் யாராயினுஞ்சரி, அவர்களை அணுகாதீர்கள், யமதூதர்களே!' என்று நமனுடைய தூதர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்கின்றார் அப்பர் பெருமானார்

மீண்டும் பிறந்தால் பிறைசூடும் பிஞ்ஞகன் பேரை மறந்து விடுவேனே என்றும் அஞ்சுகின்றார் அப்பர்.

## 86. சிவபிரான் தேர் [74]

இறைவனுடைய தேர்—சிங்கம், குதிரை பூட்டப்பட்டது; சக்கரங்களைக்கொண்டது; திருவாரூர்த் தேர் விழாவை அப்பர்பெருமான் தரிசித்தனர்.

## 87. சிவபிரான் நஞ்சு உண்டது [75]

திருமாலும், பிரமனும், தேவர்களும், அசுரர்களும் நெருங்கிக்கூடிப் பெரிய மலையை மத்தாக்கி அந்த மத்தை வலிய பாம்பாகிய கயிற்றினுற் சுற்றிக் கடல் அலற, முன்கை நோவக், கோலாகலத்துடன் கடைந்தனர். அப்போது தேவர்கள் 'அஞ்சி ஓடத், திருமாலின் நிறம் மாறுபட,

விண்ணளாவிப் பொங்கி எழுந்தது கொடிய நஞ்சு. ஓடின தேவர்கள் "உன் திருவடி அல்லாற் பற்று வேறு எங்களுக்கு இல்லை, அருளாய் பிரானே" என்று அரன்பாற் சரண்புகுந்து முறையிட்டார்கள். சிவபிரானும் அந்த நெருப்பு நஞ்சை, அமுதம் உண்பதுபோல, ஓரிமைப் பொழுதில், ஒரு யோசனையும் செய்யாது, குளிர உண்டு அதைத் தமது கண்டத்தில் அடக்கிப் பொறுமையுடன் ஊனம் ஒன்றின்றி இருந்தார். அப்போது இராக்காலம். அந்த விஷத்தீயின் குறி அவரது கண்டத்தில் அழகாய் விளங்கிற்று. இவ்வாறு தேவர்கள் உய்ய, உலகேழும் கலங்காதவாறு, அந்தக் கொடிய விடத்தைத் தமது பங்காகக் கொண்டு உண்டு, தேவர்களுக்கு அமுதத்தைப் பங்கிட்டு ஈந்தனர்! அவ்வளவு கருணையும் பராக்கிரமமும் உள்ள தெய்வம் ஒன்று உண்டோ சொல்லுங்கள்; அவர் நமக்குச் சேமநிதி—பொக்கிஷம் போன்றவர். அவர் உண்ட விஷம்—'யாவர்க்கும் தாங்கொணா நஞ்சம், வஞ்ச நஞ்சு, நச்சமாவிடம், தீவிடம்' என்றெல்லாம் அப்பமூர்த்திகளால் விளக்கப்பட்டுளது. தாம் சிவகதி கூடும் சமயத்திற் பாடிய திருப்பதிகத்தில், "சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்"—எனப்போற்றி அப்பர்பெருமான் சிவன் சேவடி கூடினர்.

## 88. சிவபிரான் நடம் [76]

சிவபிரான் ஆடல் உகந்தவர்; அவர் கூத்தாட வல்ல குழகர்; அவர் கூத்து ஞானக்கூத்து; நூலறிவாளரால் அறியப்படாத கூத்து; நாடற்கு அரிய கூத்து; அவர் வேதப்பொருள் விளங்க ஆடுவர்; பல கோலங்களை அணிந்து ஆடுவர்; பலவகைய கூத்துக்களை ஆடுவர்; அவர் நடனம் ஆடுவதால் உலகம் உய்கின்றது.

அந்தியிலும், சந்தியிலும், இரவிலும், பகலிலும், இருளிலும் ஆடுவர்; சுடுகாட்டில் மகிழ்ச்சியுடன் ஆடுவர்; கொள்ளி விளக்கத்தில் ஆடுவர்; சுடலையே அவருக்கு ஆடல் அரங்கு.

கொக்கிறகு, யானை உரி, மான்தோல், புலித்தோல் அணிந்து ஆடுவர்; கால்வீசி, கைவீசி, எண்டோள் வீசி, ஆயிரந் தோள்கள் வீசி, எரிவீசி, மழுவீசி, ஆடுவர்; அக்கும் அரவும் ஆர்த்து ஆடுவர்; நீறுபூசிக் கபாலம் ஏந்திப் பிறை சூடி ஆடுவர்; கழலும் சிலம்பும் ஆர்க்க ஆடுவர்.

பண்கொண்ட பாடலுடன் ஆடுவர், பஞ்சமப் பண்பாடி ஆடுவர், பலகீதம் பாடி யாடுவர், மறையொலியுடன் ஆடுவர், பாண்டரங்கக் கூத்து ஆடுவர். பிச்சாடல் ஆடுவார்.

தேவி காண, தேவி மகிழ, தேவி பாட, தேவியின் ஊடல் தீர்க்க ஆடுவர்; கங்கையைச் சூடி, கங்கை காண ஆடுவர். கணங்கள் பாட ஆடுவர்.

காதில் வெண்குழை தாழ, சடைதாழ, சடை விரித்து ஆடுவர்.

காளியின் கோபத்தை அடக்க ஆடுவர்; முயலகன் மீது தாள்வைத்து அவன் கோபப்புன்மை அடங்க ஆடுவர்.

பூதங்களும் பேய்களும் சூழவும், பாடவும், பாணி செய்யவும் ஆடுவர்; குறட்பூதம் முன்பாடத் தாம் ஆடுவர். பூதங்கள் வேதம் பாட ஆடுவர்; நரிகள் குழல் செய்ய ஆடுவர்.

மண் துளங்க, வையம் நெளிய, முகடுதோய ஆடுவர். மண்ணவர், விண்ணவர், தவத்தவர், எண்டிசையோர் தொழ ஆடுவர்.

குடமுழவம், வீணை, தாளம், கின்னரம், கொடு கொட்டி, கொக்கரை, பறண்டை, மொந்தை, குழல், துடி, முழவு, பறை இவை போன்ற பல்லாயிரம் கருவிகள் முழங்க ஆடுவர்.

தாரகனை அட்ட பின்பும், திரிபுரத்தை எரித்த பின்னரும் இறைவர் கூத்து ஆடினர்.

## தலங்களில் ஆடல். [76 (43)]

1. ஆரூர் : திரிபுரம் எரித்த பின் ஆடிய அசைவு நடனம், ஆயிரம் அடிவைத்து, பவனி வீதிவிடங்கராய் ஆடு கின்றார் ஆரூரில்.

2. ஆலங்காட்டில்—காளி காண ஆடினர்.

3. கச்சி ஏகம்பத்தில்—இறைவரின் நடனத்தைக் கண்டு உலகம் உய்கின்றது.

4. கழுமலம், குடந்தைக் கீழ்க்கோட்டம், குற்றாலம் ஆகிய தலங்களில் இறைவர் கூத்தாடியுள்ளார்.

5. குறுக்கை வீரட்டனர் அஷ்டமி முன் ஏழு நாள் கூத்தராய் வீதிபோந்தார்.

6. தில்லை அம்பலமே—இறைவருக்கு ஆடரங்கு; அங்கு அவர் கங்கை காண ஆடுகின்றார்; கழல் ஒலிக்க ஆடுகின்றார்; அந்த ஆடலைக் கண்ட கண்கொண்டு காண்பதற்கு வேறு எது தான் தகுதியுள்ளதாய் இருக்கின்றது. கூத்தப் பெருமானுடைய குனிவுள்ள புருவத்தையும், செவ்வாயிற் புன்சிரிப்பையும், குளிர்சடையையும், செம்மேனியில் வெண்ணீற்றையும், எடுத்த பொற்பாதத்தையும் காணும் பேறு கிடைக்குமாயின் இந்தப் பூமியில் மனிதப் பிறவியும் வேண்டத்தக்கது தான். தில்லைச் சிற்றம்பலத்தில் பெருமான் ஆடுகின்ற நடனம்—'என்று வந்தாய் நீ' என்று நம்மை விசாரிப்பது போன்ற ஒரு திருக்குறிப்பைக் காட்டுகின்றது. பூதங்கள் வேதங்கள் பாடப் பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலத்தே கூத்து நிகழ்கின்றது. தில்லைக் கூத்தருடைய திருவடியையும், அவர் உடுத்துள்ள துகிலையும், அவர் கட்டியுள்ள கச்சையையும், அவர் கண்டத்து விளங்கும் பன்றிக் கொம்பையும், அவருடைய சிரித்த முகத்தையும், அவரது நெற்றிக் கண்ணையும், அவர் அணிந்துள்ள ஊமத்த மலரையும், அவர் நெருக்கி மிதித்து நடனம்புரியும் விரலையும் கண்ட கண்கொண்டு வேறு எப்பொருளைத்தான் காண இம் மனம் நாடும்—(எதனையும் நாடாது என்றபடி).

7. நல்லூர்: இங்குத் தேவர்களும் தொழப், பண்ணிட்ட பாடலுடன் எப்போதும் ஆடல்புரிகின்றார் அண்ணல்.

8. நள்ளாறு: இங்கு நாகம் பூண்டு கூத்தாடுகின்றார் அண்ணலார்.

9. நெய்த்தானம்: இறைவனுடைய கூத்து நிலயம் நெய்த்தானம்.

10. திருவீழிமிழலை: இங்கும் இறைவன் கூத்து நிகழ்த்துகின்றார்.

## 89. சிவபிரான் படை [78]

சிவபிரானுடைய படைகளுள்:—

அம்பு, கட்டங்கம், கையலகு (?), சூலம், பாசுபதம், மழு, வில், வேல் கூறப்பட்டுள. அவருடைய

1. சூலம்—கூர்மை கொண்டது, அலங்காரமும் அழகும் கொண்டது, இரும்பாலாயது, எரியும் தன்மை கொண்டது, கறை படிந்தது, கூர்மை கொண்டது, கொலைசெய்ய வல்லது, கோபம் உடையது, சில மணிகள் கட்டப்பட்டது, சூரியன்—சந்திரன்—அக்கினி என்னும் மூன்று சுடர்களின் சூடு வாய்ந்தது, பரிசுத்தமானது, மாமிசத்திற் படிவது, மின்னொளி கொண்டது, மூவிலையது.

2. மழு—எரியும் தன்மையது, ஒளி உடையது, கொடியது, கொலைத் தொழில் வல்லது, சிறந்த வெண்ணிறத்தது, பரிசுத்தமானது.

3. வில்—நீண்டது, கொலைக்கு உரியது.

4. வேல்—இலை போன்றது, கூரியது.

## 90. சிவபிரான் பராக்கிரமம் [79]

(1) அரி, அயனை, அடக்கி, அவர்களுக்கு அருளியது (2) தேவர்களுக்கு அமுதளித்தது (3) சிலந்தியை அரசாள

வைத்தது (4) தாரகனை அட்டு, நடித்தது (5) தாருகா வனத்து இருடிகளை வழிப்படுத்தருளியது (6) பாலகனுக்குப் பாற்கடல் ஈந்தது (7) பிறை சூடியது. (8) முயலகனை அடக்கியது (9) கருடனைக் கொன்று பின்பு உயிர் அளித்தது. (10) மச்சாவதாரத்தில் மீனொடு பொருதது—ஆகிய சில பராக்கிரமங்கள் கூறப்பட்டுள. அட்ட வீரம் (தலைப்பு 65) முதலிய பிற பராக்கிரமங்கள் தனித்தனி கூறப்பட்டுள.

## 91. சிவபிரான் பலி ஏற்பது [80]

### பலி பொருட்டுத் திரிதல் [80 (1) (2)]

உண்பலிக் கென்று உழல்வார்; திருவடிச் சிலம்பு அலம்ப எங்குந் திரிவார்; மாயம் பேசித் திரிவார்; பலர் இகழத் திரிவார்; காலையிலும், பகல் முழுதும் பலி ஏற்பார்.

### பலிக்கு எழுகோலம் [80 (3)]

அக்கும் ஆமையும் பூண்டும், மத்தமலர் சூடியும், ஐந்தலை அரவைத் தோள்மேல் ஏகாசமாக இட்டும், ஓடு ஏந்தியும், கோவணமும் வெண்ணூலும் பூண்டும், உமையுடன், பிறை விளங்கச், சடைதாழ, நீறுபூசி, விடையேறி, நாகம் கச்சாக, அனல் ஏந்திக், கபாலம் ஏந்தித் திரிவர்; இல்லந்தோறும், ஊர்தோறும், உலகெங்கும் பிச்சையை இச்சித்துத் திரிவர்; பூதங்கள் சூழ்ந்து பாடத் தாம் பண்ணங்கள் பாடுவர். மறைபாடுவர், இசை பாடுவர், பலி ஏற்கச் செல்லுமிவர் மாதர்களின் வளைகொள்வர், நிறை கொள்வர்.

### பலிகோள் கலம் [80 (4)]

இவர் உண்ணும் கலம்—உக்கார்தலை, உடைதலை, உலந்தார்தலை, ஊனேறுதலை, ஓடு, கண்—பல் உக்க கபாலம், இறந்தவர்தலை, சில்லைச் சிரைத்தலை, செடியார்தலை, நகுதலை, பறிதலை, பல்லார்தலை, பல்லில் வெண்டலை, பாறேறு தலை,

பாம்புரம், பெரும்புலியூர், பெருவேளூர், மயிலாடுதுறை, மறைக்காடு (வேதாரண்யம்), மாற்பேறு, (அதிகை) வீரட்டம்—இவை சிவபிரான் விரும்பும் தலங்களாகக் கூறப் பட்டுள.

## 96. சிவபிரான்—வேடங்கள் [86]

ஆடல் வேடம், கங்காள வேடம், காபால வேடம், கோடால வேடம் (பிறைமாலை வேடம்), ஞான வேடம், பண்டரங்க வேடம், பலிதேர்விடங்க வேடம், பாசுபத வேடம், பிஞ்ஞக வேடம், பொல்லாத வேடம், விகிர்த வேடம், விடலை வேடம், வேட்டுவ வேடம், வேறணி வேடம் (புதுமை வேடம்) ஆகப் பல பல வேடத்தர் சிவபிரான்.

## 97. சிவபிரானை வைதல் (புகழாப் புகழ்ச்சி) [87]

ஊர்ப் பிச்சையான், ஐயமுண்ணி, கள்வன், கூற்றுவன், கொடியவன், கொல்லும் நஞ்சு, கொலையவன், துட்டர், படிறன், பித்தன், வஞ்சகக் கள்வர், வஞ்சகன், வெய்யன்—எனவரும் வைதற் சொற்கள் ஆளப்பட்டுள.

## 98. சிவனும் இசையும் [88]

ஆரியம், தமிழ், இசை—இவை மூன்றும் ஆனவர் சிவனார். கீதம் பாடின இராவணனுக்குச் சிவபிரான் அருள் புரிந்தார்; வாள் அளித்தார். தொண்டர்கள் இன்னிசை பாட இறைவர் இனிது கேட்பார்; வானுலகம் கொடுப்பார்; நரம்பு வாத்தியங்களுடன் இசைபாட இறைவர் மகிழ்வர்; ஏழிசை கேட்டு மகிழ்வர்; ஏழிசை யாழ், வீணை ஒலிக்கக் கேட்பர். இருவர் (தும்புரு, நாரதர், அல்லது கம்பளர், அசுவதரர்) இசைபாடித் தொழச் செல்வர்; வீணை ஏந்திக் காந்தாரப் பண் (நவரோஸ்), சீகாமரப்பண் (நாதநாமக் கிரியை) பாடிச் செல்வர்; பண் கொல்லி (நவரோஸ்) அவருக்குப் ப்ரீதி; சாமவேத கீதத்தை விரும்புவர். நிரம்ப இசைபாடுவாருக்கு ஞானத்தை அளிப்பார். பண் பஞ்சமம்

(அடிமரி) பாடி ஆடுவர்; அந்தப் பண்ணுடன் பாடி ஆடும் அடியவர்த்தினரின் பாவத்தைத் தீர்ப்பார்; பல கீதம் பாடுவார்; வேதம், கீதம் இரண்டும் கேட்பார்.

## 99. சிவனும் எண்ணும் [89]

பாதியாகவும், ஒன்றாகவும், இரண்டாகவும், மூன்றாகவும், பரம அணுவாகவும் விளங்குவார் இறைவர்.

அவர் ஊர்வது, அவர் கீள், அவர் கோவணம், அவர் கொக்கை (உடுக்கை வாத்தியம்), அவர் சூடும் மதி, அவர் உறையும் மலை, அவர் ஏந்தும் வெண்டலை—இவை எலாம் ஒன்று.

அவர் உருவம், அவர் ஏந்துவன, அவர் குழைகள், அவர் கோலம், அவர் செய்தொழில், அவர் பாதம்—இவை எலாம் இரண்டு.

அவர் கண், அவர் கணை-வில்-நாண், அவர் சூலத்தின் இலைகள், அவர் தொழில், அவர் எரித்த புரங்கள்—இவை எலாம் மூன்று.

அவர் உணர்ந்தோதியது, அவர் ஊர்தியின் பாதங்கள், அவர் ஆயும் வேதம், அவர் படைத்துள பிறப்புக்கள், அவர் காட்டிய நெறிகள், அவர் பாடின மறைகள்—இவை எலாம் நான்கு.

அவர்க்கு உரிய அபிடேகப் பொருள்கள், அவர் அணிந்துள்ள பாம்பின் படம், அவர் வென்றுள்ள புலன்கள், அவர் விளங்கும் பூதங்கள், அவர் தொழில், அவர்க்கு உள்ள மந்திர எழுத்து, திருமுகம், தத்துவம், அவர் எரித்த மன்மதனுடைய பாணங்கள்—இவை எலாம் ஐந்து.

அவர் படைத்த அங்கங்கள், சமயங்கள், சுவை, அவர் மைந்தனார் முகம், அவர் மாலையில் உள்ள வண்டின் கால்கள்—இவை எலாம் ஆறு.

அவர் ஆக்கின இசைகள், அவர் படைத்த உலகம், ஊழி, கடல், மலை, பிறப்பு—இவை எலாம் ஏழு.

அவர் குணம், அவர் படைத்த திசைகள், அவர் தோள், அவர் சூடும் மலர்கள்—இவை எலாம் எட்டு.

அவருடைய மூர்த்தி உருவங்கள், சடைகள், பூணூல் இழைகள், அவர் வகுத்த உடலில் உள்ள வாயில்கள், அவருடைய பூதகண வகைகள்—இவை எலாம் ஒன்பது.

அவருடைய அடியார்களின் செய்கைகள், அவர் பாம்பின் கண், பாம்பின் பல், அவர் நெரித்த இராவணன் தலை—இவை எலாம் பத்து.

அவர் கண்கள், சடைகள்—இவை எண்ணிலாதன.

அவர் பன்னிரு ஆதித்தராகவும், பதினெண் புராணங்களில் விளங்குபவருமாகத் திகழ்கின்றார்.

## 100. சிவனும் கதிர்களும் [90]

சிவன் (இறைவர்) கதிர்களில் விளங்குகின்றார். அவர்தான் கதிர்கள் இரண்டையும் விசும்பில் வைத்தவர். அக் கதிரோர்களால் அறியப்படாதவர் அவர். கதிர்களை (சந்திரன், சூரியன், அக்கினி) தக்கன் யாகத்தில் அவர் கோபித்துள்ளார்.

## 101. சிவனும் காளியும் [91]

சிவபிரானைக் காளி பூசித்த தலம் திருமங்கலக்குடி. காளி இறைவனுடன் நடம் ஆடினது.—தலைப்பு 88 பார்க்க.

## 102. சிவனும் கொன்றையும் [92]

இறைவர் அழகிய கொன்றை மலரில் வாசம் செய்கின்றார். கொன்றை மலர் பிரணவ ரூப மலர்; தாம் பிரணவப் பொருள் என்பதைக் குறிக்க இறைவர் அம் மலருள் உள்ளார். இதுவே அவர் கொன்றை சூடும் குறிப்பாகும்.

## 103. சிவனும் சித்தரும், சித்தியும் [93]

இறைவன் சித்தன். சித்தர்களுடைய வினையைத் தீர்ப்பவன். சித்தி செய்பவர்கள் முடிவில் சேரும் இடம் இறைவனே.

## 104. சிவனும் சுடரும் சோதியும் [94]

அண்டங்களைக் கடந்து ஒரு சுடர் விளங்குகின்றது. அந்தச் சுடரை யார் அறிவார். அறிந்தவர்கள் எல்லாம் அச் சுடரை 'வெண்திங்கட் கண்ணி வேதியன்' என்பர். அரியும் அயனும் துதித்து நிற்க விளங்குவது அந்தச் சோதி. அயனுக்கும் அரிக்கும் அரிய சோதி அது. அச் சோதி உளழித்தீப் போன்ற ஒளியை உடையது; தம்மைத் தியானிப்பவர்களின் கண்களிற் சோதியாய் நிற்பர் இறைவர். உணர்ந்தவர்களாலும் உணர ஒண்ணாத சோதி அவர்; உலகேழும் ஆய ஒருசுடர் அவர்; சோதியுட் சோதியாய் நின்ற சோதி அவர்; ஞானச் சுடர் அவர்; தூண்டாத, நுந்தாத பரஞ்சுடர், பளிங்கனைய சோதி, மாமணிச் சோதி, மாணிக்கக் குன்று அவர்; மூன்று சோதியும் அவரே.

## 105. சிவனும் ஞாயிறும் [95]

ஞாயிற்றை (சூரியனை) முழுமுதற் கடவுளாக எண்ணுதல் வேண்டாம்; வேண்டுமென்றால் ஞாயிற்றின் மூலமாய்ச் சிவனை அடைய வழிகாணலாகும்; ஞாயிறு சிவனது கூறுகளில் ஒன்று, அந்தி வேளையில் ஞாயிற்றின் பாதத்தைத் தொழுகின்றார்களே, அந்த ஞாயிறு சிவனது உருவினன் தானே. ஞாயிறு முதலிய தேவர்களுக்கு அரியவன் சிவன். திருமாலும் பிரமனும் காணமாட்டாத ஞாயிறுவான் சிவன். சூரியனுக்குக் கண்ணாய் மிளிர்வான் சிவன். சூரியனுக்கு ஒளி கொடுப்பவன் சிவன். சிவனது திருவடி உதயமாகும் பொற்சூரியனைப்போல விளங்கும். சிவனது ஒளி ஞாயிறு போன்றது; அவருடைய மூன்று கண்களும் முளைக்கின்ற ஞாயிற்றை ஒக்கும். (பன்னிரு) சூரியரும் சிவனது

வெற்றிவாயிலில் வற்றிக் காத்துக் கிடப்பர்; முப்போதும் சயசய என்று சிவனது இணையடியிற் பணிவர். ஞாயிற்றின் வெப்பத்தைத் தணிக்கும் முனிவர்கள் சிவபிரானை விரும்பிப் போற்றுவர். ஞாயிறு பூசித்த தலம் திருச்சோற்றுத்துறை.

## 106. சிவனும் தமிழும் வடமொழியும் [96]

ஆரியமும் (வடமொழியும்), (செந்)தமிழும் சிவபிராற்கு உகந்தவை. அவரே ஆரியன், அவரே தமிழன்; அவரே வடமொழியும், தென்தமிழும் (முத்தமிழும்), நான்மறையும். உண்மைப் பொருளைக் குறிக்கும் பெருமை பொருந்தியது தமிழ்.

## 107. சிவனும் தானவரும் [97]

தானவர்க்கு (அசுரர்களுக்கு)த் தலைவர் சிவனார். தானவர் அவரை மலர்கொண்டு நித்தம் பூசிக்கின்றனர். அப்படிப் பூசித்தும் தானவர்களால் அறியப்படாத தன்மையர் இறைவர். சிவனே தானவர்க்குச் செல்வம் ஆவான்.

## 108. சிவனும் திருநீறும் [99]

(i)

சிவபிரான் அமுதயோக நீற்றர். இளம்பிறைபோல வெண்ணீறு புனைந்துள்ளார் அவர்; நெருப்பனைய அவருடைய செம்மேனியில் வெள்ளை நீறு விளங்கும்; பவள நிறங் கொண்ட அவருடைய எட்டுத் தோள்கள் மீதும், மார்பிலும், உடல் முழுமையும் வெண்ணீறு பொலியும். தமது நெற்றியில் வெள்ளை நீற்றைப் பூசி, அதன்மேலே திங்களைப் (பிறையை)த் திலகம்போலப் பதித்துள்ளார்; பூதி அணிந்துள்ள பொன்னிறத்த மேனியர் அவர். திருமால், பிரமன் இவர்தம் உடல் வெந்து அவிய, அந்த நீற்றை அவர் அணிகின்றார். விலையில்லாத சாந்தமென்று திருநீற்றையே சாந்தமாக (சந்தனமாக) அணிந்துள்ளார். அவருடைய திருநீற்றின் வண்ணம் (பொலிவு) அவருடைய புகழ்பெற்ற ஊர்தியின் (ஏற்றின்) பொலிவை ஒக்கும்.

### (ii) சிவனும் சுடலைநீறும்

சுடலைநீறு அன்றி வேறு சாந்தம் அவர்க்கு இல்லை. பலாசம் (முருக்கமரம்) கொம்பின் சுள்ளி எரிந்த சுடலை வெண்ணீற்றை இறைவர் அணிவர்.

திருமால், பிரமன் இவர்தம் உடல் வெந்து ஒழிய அந்தச் சாம்பல் நீற்றினை இறைவர் அணிவர்.

## 109. சிவனும் திருமாலும் [98-1, 128]

திருமாலால் காண்பரிதாயவன், அறிய ஒண்ணாதவன் சிவன். திருமால் சிவத்யானம் உள்ளவர். அவர் உள்ளத்தில் விளங்குவர் சிவன். அவர் மறைபாடி, நட்டமாடிச் சிவனைப் போற்றுவர், பல்லாண் டிசைப்பர். திருமாலுக்குத் தலைவர் சிவபிரான். திருநீற்றை நிறையப் பூசி நித்தலும் ஆயிரம் பூக்கொண்டு சிவபிரானைப் பூசிக்க, ஒருநாள் ஒரு பூ குறையத் தமது கண்ணையே பறித்துப் பூசித்து, வக்கரனது உயிரை வவ்வச், சக்கரம் அருளப் பெற்றார். அந்தச் சக்கரம் சலந்தரனைப் பிளந்த சக்கரம். திருமாலிடம் சிவபிராற்கு மிகப் ப்ரீதி. திருமால் இராவணனைக் கொன்ற பாவத்தைச் சிவபிரான் நீக்கி அருளினர். திருமாலுக்கு இலக்குமியை ஈந்தது சிவன். சிவனார் தமது இடப்பாகத்தில் திருமாலை ஒன்று கொண்டுள்ளார். சிவனே திருமாலாய் நின்று விளங்குவர். திருமாலின் எலும்பைச் சிவபிரான் தோள் மேற் கொள்வார். திருமால் இடபமாய்ச் சிவனைத் தாங்குவர்.

## 110. சிவனும் தேவர்களும் [98—2]

### (i)

சிற்றம்பலத்தைத் தேவர்கள் செம்பொன்னினால் எழுதி வேய்ந்தார்கள். தேவர்க்குந் தேவன் சிவபிரான்; தேவர்களாலும் அறிய ஒண்ணாதபடி அப்பால் நிற்கும் சோதி அவன்; தேவர்களுக்குக் கிட்டுபவன், எட்டாதவன்; தேவர்களுக்கு அருள் செய்யும் நீதியான்; தேவர்கள்

நாயகன், அன்பன்; தேவர்களால் முப்போதும் தொழப்படுபவன்; தேவர்களின் கவலைகளை ஒழித்தவன்; அவர்களுக்கு அமுதம் ஈந்தவன்; அவர்களைப் படைத்தவன்; அவர்கள் சிந்தைக்குக் கரும்பும் தேனும்போல இனியவன்; அவர்கள் உலகை ஆள்பவன்; அரி, பிரமன், இந்திரன் இவர்களுக்கு அரியவன்; காலையும் மாலையும் மலர்தூவி இந்திரனால் தொழப்படுபவன். "உனது திருவடியல்லால் பற்று ஒன்று இலோம்" என்று தேவர்கள் முறையிட சிவன் நஞ்சை உண்டான்; சிவனது திருக்கோயிலின் கடைத்தலையில் தேவர்கள் புறக்காவல் இருக்கின்றார்கள். தேவர்கள் முடிக்குச் சிவனார் திருவடி மாணிக்கம் ஆம், மரகதம் ஆம், வயிரமாம், ஆணிக் கனகம் ஆம், அணிகலம் ஆம். கடவுள் என்று வழிபடப்பட்ட கடவுளர்க்கெல்லாம் மகாதேவனே கடவுள் ஆவான்; அவனன்றி வேறொருவர் கடவுளாகார். அங்கங்கே தேவன் என்று துதிக்கப்படுந் தேவர்களுக்கெல்லாம் தேவனாவார்.

### (ii) தேவர்களின் வழிபாடு

[தலைப்பு 184 பார்க்க]

## 111. சிவனும் நாளும் [100]

சிவபிரான் ஆதிரை நாள் உகந்தவன். ஆதிரை நாள் அவருக்கு உரியது; ஆதலால் அவரை 'ஆதிரை நாயகன்' என்பர். நேற்று, இன்று, நாளை எனப்படும் முக்காலங்களையும் ஏற்படுத்தி வழங்கினவர் அவரே.

## 112. சிவனும் பாட்டும் [102]

ஆரூர்ப் பெருமான் விரும்பும் (படிமக்கலம்) கையுறை தமிழ் மாலையே; ஆதலால், நெஞ்சமே நீ அவருக்குத் தமிழ் மாலைகளைச் சூட்டி உய்வாயாக; பெருமான் நல்ல பாடலை விரும்புவார்; அடியார்களுடைய பாடலை விரும்புவார். பண் விளங்கும் பாடலுடன் ஆடுவர். பத்தியுடன் பண் நிறைந்த பாடலைப் பாடும் அறிஞர்களுக்கு அமுதுபோல

ஒளித்திருப்பார்; அவர்களுடைய பாவங்களை ஒழிப்பார்; பதினெண் கணங்கள் பயின்று அறியாத பாடல்களைப் பாடுவார்; தும்புரு, நாரதர் முதலானோர் இறைவன் முன்னிலையிற் பாடுவார்கள். இறைவர் மாலையிலும், நள்ளிருளிலும் பாடும் ஒலியினர்; யாழுடன் வாசிக்கப்படும் பாட்டில் விருப்புடையவர்.

## 113. சிவனும் பார்வதிதேவியும் [103]

உமை உருவாய் விளங்குவார் சிவனார். உமையின் மாலையைத் தாம் அணிவார். தமது உடை கோவணம், தாம் எடுப்பது பிச்சை என்றிருந்தும் என்ன குடிவாழ்க்கை செய்ய இவர் மலைமகளை மணந்தார்; பெருமானது திருவடியைத் தேவி சூடிக்கொள்வாள். தேவிக்கு என்றும் இனியவர் சிவனார். தேவியின் அன்பு மணவாளன் சிவன்; உமையை விட்டுப் பிரியார் சிவனார்; தனது கடைக்கணாற் தேவி சிவனைப் பருகுவாள்; தேவி வருடச் சிவனுடைய கால்கள் சிவந்தன. தேவியின் தவத்தைச் சோதித்துச் சிவனார் அருள்புரிந்தார். தேவிக்கு உகந்த தாளம் முதலிய வாத்தியங்களுடன் சிவனார் விண்வழிச் செல்வர்; சிவபிரானுடைய யானைத்தோல், புலித்தோல்—இவைகளைக் கண்டும், இராவணன் கயிலையை அசைத்தபோதும், தேவி அஞ்சினள். சிவபிரான் கங்கையைச் சூடிய ஒலியைக் கேட்டுத் தேவி ஊடினள்; தேவியின் ஊடலை நீக்கப் பெருமான் சாமவேதம் பாடினர்; பாடிய பாணியாலே ஆடினர்.

## 114. சிவனும் பிரமனும் [104, 152 (3)]

சிவனே பிரமனுருவுடன் விளங்குகின்றார். பிரமனைப் பெற்றவன் சிவன். சிவனது உருவத்தில் மாலும், பிரமனும் அடங்கியுள்ளார்கள். பிரமன் நட்டம் ஆடிச் சிவனை எப்போதும் போற்றுகின்றான்.

## 115. சிவனும் மந்திரமும் [105]

(i)

சிவனது மந்திரம் 'நமச்சிவாய'; சிவனர் ஐந்தெழுத்தும் ஆயவர்; ஐந்தெழுத்தே அவரது திருநாமம்; அவரே மந்திரமும், தந்திரமும், மறைப்பொருளும் ஆவார்; மறை கலந்த மந்திரத்தால் அவரை நீர் ஆட்டி வழிபட்டால் அவர் வானாட்சியைக் கொடுப்பார்.

(ii) மந்திரம் [53-6 (3)]

திரிபுரத்தாரின் தேர் மந்திர சக்தியால் விண்ணிற் பறவை போலச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது.

## 116. சிவனும் மூவரும் [106]

சிவன் மூவரில் முதல்வன்; ஒருருவில் மூவுருவாய் ஒன்ருய் நின்றவன்; மூவர்க்கும் மூர்த்தி; மூவரும் ஆனவன்; மூன்று மூர்த்திகளுள் நின்று, தொழில் மூன்று இயற்றுபவன்; அயனுகி, மாலாகி அதற்கப்பால் ஒன்ருவான்.

## 117. சிவனும் வெண்மையும் [107]

சிவபிரான் உறையும் தலம் வெண்காடு; அவர் அணிவன வெண்டலை, வெண்ணீறு, வெண்ணூல், வெண் மதி, (ஏனத்தின்) வெள்ளெயிறு, வெள்ளெருக்கு; அவர் ஏந்துவது வெண்மழு; அவர் ஏறுவது வெள்ளேறு.

## 118. சைவ ஒழுக்கம், சின்னம் [108]

நித்தலும் புலர்வதன்முன் காலையில் எழுந்து, பூக்கூடையில் மலர்பறித்து வந்து, திருவெண்ணீறணிந்து, கண்டி பூண்டு, திருக்கோயிலுக்குப் போய்த், திருக்கோயிலைப் பெருக்கி, மெழுகி, நிரம்ப நீரும், நெய்யும், பாலும் கொண்டு ஆட்டி (அபிடேகம் செய்து), எருக்கு, குவளை ஆகிய பூமாலைகளைப் புனைந்து, தலையாரக் கும்பிட்டுச் சங்கரா போற்றி

போற்றி எனத் தமிழ்ப் பாடல்களை இசையுடன் பாடித் துதித்துப், பொய், வஞ்சனை, இவைகளை விலக்கி அட்டாங்கமாக வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

## 119. சொல்லழகு, பொருளழகு [109]

'அடுக்கல் எடுக்கல் உற,' 'கலந்து உலந்து அலந்து பாடும்,' 'காலை நன் மாலை கொண்டு' முதலிய 24 சொற்றொடர்கள் 'ஒளிநெறி'யிற் சொல்லழகு, பொருளழகுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டுள.

## 120. ஞாயிறு [110]

[சிவனும் ஞாயிறும் என்னும் தலைப்பு 105 பார்க்க.]

அருக்கன், ஆதித்தன், இரவி, கதிர், கதிரோன், ஞாயிறு, பகல், பரிதி, வெய்யவன் என்னும் சொற்கள் சூரியனைக் குறிக்க ஆளப்பட்டுள. ஞாயிறு அரனுருவத்தில் அமைந்தவன்; அவன் பாதத்தை அந்திப்போதில் வணங்குவர். ஞாயிறு செந்நிறத்தவன்; ஒளி பொருந்தியவன்; மலையில் உதயமாவான்; உலகு அவனைச் சூழும்; ஞாயிறு (பன்னிருவர்).

## 121. ஞானம்—சிவனும் ஞானமும் [111]

### (i)

திருவண்ணுமலையைத் தொழுபவர்கள் தவமும் ஞானமும் கைகூடி விளங்குவர். ஞானத்துடன் பூசைசெய்தல் விசேடம்.

### (ii) சிவனும் ஞானமும்

சிவனர் ஞானமும், ஞானப் பொருளும் ஆவார். கலைஞானத்தைத் தாம் கல்லாமே அடியார்களுக்கு அந்தக் கலைஞானத்தைக் கற்பிப்பார். கலை பயில்வோரின் ஞானக் கண் ஆவர் அவர். எல்லாக் கலைஞானமும் அவர். ஞானக்

கலைப்பொருள், ஞானப் பெருங்கடல் அவர். ஞான விளக்கை ஏற்றி உண்முகத்தால் உணர்பவரின் ஊனத்தை ஒழிப்பார் அவர். ஞானத் தீயால் கள்ளத்தை ஒழிப்பவர்களின் உள்ளத்து ஒளி ஆவர் பிரானார். 'ஐந்தெழுத்தாகிய 'நமசிவாய' என்பதே ஞானமும் கல்வியும்.

## 122. தலங்கள்: தலங்களைப்பற்றிய குறிப்புக்கள் [112]

பல தலங்களின் பெயர்களும்—தல விசேடமும கூறும் பதிகங்கள் 220, 264, 283, 284, 306—எண்ணுள்ள பதிகங்கள். இவையன்றிப் பல பாடல்களில் ஆங்காங்குத் தலங்கள் கூறப்பட்டுள. உதாரணமாக 178-5, 8; 215-1, 2; 226-1, 4; 282-7 எண்ணுள்ள பாடல்களைப் பார்க்கவும். பின்னும் வீரட்டம், ஊர், கோயில், காடு, வாயில், துறை, மலை, சுரம், ஆறு, குளம், களம், கா, குடி, பள்ளி—என முடியும் தலப் பெயர்களைக் கூறி [பதிகம் 284] —இத் தலங்களை வணங்குங்கள், இத் தலப்பெயர்களைக் கூறுங்கள், உங்களுடைய இடர்கள் தொலையும், பரலோகம் கிடைக்கும், நீங்கள் சிவன் தமர் என்று உணர்ந்து நமன் தமர்கள் உங்களிடம் அணுகாது விலகுவார்கள்; கொடிய வினைகள் உங்களைத் தொடராது விலகும்; நீங்கள் கயிலாய நாதனைக் காணலாகும்-எனத் தெளிவுடன் அப்பர் பெருமான் அருளுகின்றார். இனி, ஒவ்வொரு தலமாக, அப்பர் யாது கூறியுள்ளார் என்பதைக் கவனிப்போம். அவர் பாடியுள்ள தலங்கள், சொல்லியுள்ள தலங்கள் இவை என்பதை ஒளிநெறியின் முற்சேர்க்கையிற் காணலாகும்.

### தலங்கள்

#### 1. திரு-அண்ணமலை

இங்கு அருவிகள் பொன் சொரியும், பாம்புகள் உமிழ்கின்ற மணிகளின் சோதி விளங்கும்; அரி (சிங்கம், குரங்கு) இவைகள் நிரம்ப இயங்கும்; அருவி நீர், சுனைகளில் வீழும்;

வார்ந்த சோலைகள் சூழ்ந்து விளங்கும். கண்ணுக்கு இனிய மலை இது. தேவர்கள் ஏத்தும் மலை அணி அண்ணாமலை; அடியார்களின் அல்லலை ஒழிக்கும் மலை; மாட்சிமை மிக்க மலை; பிரமனும், திருமாலும் காணமுடியாத பெருமையைக் கொண்ட மலை; இத் தலத்தை வணங்க முந்துங்கள், எப்போதும் பணிமின்கள்; இத் தலத்தைத் தொழுதால் வினைகள் ஒழிந்துபோம், நல்லன நம்மை அடையும்; தவ நிலை, ஞானநிலை கூடும், நாம் செய்த பாவங்கள் ஒழிந்து போம்.

## 2. திரு-அதிகை

கெடில நதியின் வடகரையில் உள்ள தலம். இறைவன் திரிபுரத்தை எரித்த தலமாதலின் இது 'வீரட்டம்' என வழங்கும்; இறைவர் 'வீரட்டர்.' வயல்கள் சூழ்ந்த தலம்; தேவர்கள் தொழும் தலம்; அறம் நிலைபெற்ற நகர். இறைவனுக்கு உகந்த பதி; அலைகள் போலவரும் வலிய வினைக்கூட்டங்களை இத் தலத்துப் பெருமான் விலக்குவர். சித்தவடம் என்னும் தானம் அருகில் உள்ளது.

## 3. அம்பர்

கோயில் 'பெருங்கோயில்'களுள் ஒன்று. தீர்த்தம் அன்ன தீர்த்தம்' (அன்ன வடிவங்கொண்ட பிரமதேவன் உண்டாக்கிய தீர்த்தம் இது).

## 4. அரிசிற்கரைப் புத்தூர்

அரிசில் ஆற்றின் கரையில் உள்ளது. பொழில் நிறைந்த தலம். பசியை உணவு நீக்குவதுபோல இத் தலத்தை அடைந்தவர்களின் துயரை, இறைவர் நீக்கி அருளுவர்; அவர்களின் வினையைப் போக்குவர்; அவர்களுக்கு நன்னெறியைக் காட்டுவர்; இத் தலத்துப் பெருமானைச் சிந்தை செயச்செய அவர் கரும்பின் சாற்றிலும் அதிகமாக இனிமை தருவார்.

## 5. அன்பிலாலந்துறை

வயல்களும் பொழில்களும் சூழ்ந்த தலம். இத்தலத்துப் பெருமானை மறவாமல் அன்புடன் தொழுது போற்றுங்கள்; அங்ஙனம் போற்றுபவர் மெய்யர்கள், அறிஞர்கள்; அவர்கள் வினை மாயும். இத்தலத்தை வலம்வந்து வணங்குபவரை தேவர்கள் வலம்வந்து வணங்குவர்.

## 6. அன்னியூர்

இத்தலத்துப் பெருமான் அரவம் (பாம்பை) ஆட்டினவர்; அவரைத் தேவர்கள் விரும்பி வந்து வணங்குவர். தங்கள் வினைபோக வேண்டித் தொழுபவர்களின் அன்பராய் நிற்கின்றார் பெருமானார்.

## 7. 'ஆக்கூர்

இத்தலத்தில் இறைவன் சுயம்பு மூர்த்தி. "தான் தோன்றி அப்பர்" என விளங்குவர்.

## 8. ஆமாத்தூர்

இத்தலத்தில் தாமரை மலர்மீது வண்டு யாழ் வாசிக்கும். இத் தலத்துப் பெருமான் "அழகியர்". 'ஆமாத்தூர் அரனே' என்று அவரை அழைத்தால் தித்திப்புள்ள மாம்பழம்போல அவர் இனிப்பர்; இராமர் பூசித்த மூர்த்தி இவர். இப்பெருமானைச் சிந்தை செய்யாதவர்கள் தீவினையாளர்கள் உள்ளம் நொந்தவர்களின் ஐயப்பாடுகளை ஆமாத்தூர்ப் பெருமான் தீர்ப்பார்; அவரை நினைத்தவுடனே உள்ளத்தில் உள்ள வஞ்சனை எண்ணங்கள் வற்றி மறையும்; பத்தி வெள்ளம் பரந்து பாயும்.

## 9. திரு-ஆரூர்

இத் தலம் கரும்பும், புன்னை மரங்களும் நெருங்கிய சோலையைக் கொண்ட ஊர். இத் தலத்தில் உள்ள கமலா

யைம் என்னும் திருக்குளம், பூங்கோயில் எனப்படும் ஆலயம், செங்கழுநீர் ஓடை இவை ஒவ்வொன்றும் ஐந்து வேலி அளவினது; ஆதலால் 'அஞ்சணை வேலி ஆரூர்' என்றார் அப்பர். அழகிய வயல்களும், குளிர்ந்த பொழில்களும் சூழ்ந்துள்ள தலம் இது. ஆண் நண்டின் வரவைக் கண்டு பெண் நண்டு மகிழும் கழனிகளையும், பெரிய செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் எனப்படும் நெல் வகைகள் வளரும் கழனிகளையும், ஆம்பல் மலரும் பொய்கைகளையும், இருண்ட சோலைகளையும், குயில் கூவ மயில் ஆலும் மலர்ச் சோலைகளையும், தென்றலின் மணம் கமழும் இனிய, புகழத் தக்க மலர்ச்சோலைகளையும், பொழில்களையும், செந்தாமரை மலர்கின்ற நீர் நிறைந்த வயல்களையும், இறால், மலங்கு, வாளை, கயல், சேல், வரால், களிறு எனப்படும் பல வகைய மீன்கள் அடைந்துள்ள வயல்களையும், தெங்கு, கமுகு, வாழை, மா, மாதுளம் இவைகளின் தீங்கனி சிதறும் சோலைகளையும் கொண்டு விளங்கும் தலம் திருவாரூர். கனக மதில்களும், நிலவைத் தீண்டும் கொடிகள் விளங்கும் மாடமாளிகைகளும் விளங்கும் செல்வ மல்கியது திருவாரூர். திருவிழாக்கள் பொலியும் நகர் அது. பறை, கல்லவடம் முதலிய வாத்தியங்களின் பரந்த ஒலிகளைக் கேட்டு மயில்கள் மேக ஒலி என எண்ணி மகிழும் தலம் திருவாரூர்.

இது தேவர்கள் போற்றும் தலம். தேவலோகத்தை ஆள்வதை விட்டுத் திருவாரூரை ஆள விரும்பிவந்த பெருமான் (தியாகராச மூர்த்தி). அரம்பையர், திருவருள் பெற்றுப் பரமனைத் தொழும் அடியார்கள், உருத்திர கணத்தவர், விரிசடை விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், கபாலிகள் ஆதிய பண்பினர் தெருக்களிற் பொலியும் திருநகர் திருவாரூர். ஆடவல்ல மூர்த்தி (தியாகராசப்பெருமான்). இத்தலத்தில் திருவாதிரைத் திருநாள் விழா மிகச் சிறப்புடன் திகழும்; பங்குனி உத்திரத் திருவிழாவும் இத்தலத்திற் சிறப்புடன் நடைபெறும். இறைவனுக்கு உகந்த இருப்பிடம் இத்தலம். மூலவர் புற்றிடங்கொண்ட புனித மூர்த்தி. இத் தலத்தில்

நமிநந்தி அடிகள் நீர்கொண்டு திருவிளக்கேற்றின விசேடச் செயலை நாடெலாம் அறியும்; பெருமானுக்கு உறைவிடமான ஊர் எது என்னில் அது திருவாரூர்தான். இந்திரன் ஆதிய தேவர்கள் ஏத்தும் பெருமான் இத்தலத்து மூர்த்தி. இத்தலத்தை எல்லா உலகமும் ஏத்திப் புகழும். பெரிய தேரிற் பெருமான் எழுந்தருளுவார். தியாகப்பெருமானின் திருவடியைக் கிண்கிணிப் பணி அலங்கரிக்கும். இத்தலத்தில் உள்ள தீர்த்தத்தில் பெண்கள் குளிப்பார்கள், மூழ்குவார்கள், குடைந்து ஆடுவார்கள். தலையில் தீர்த்த நீரைத் தெளித்துக் கொள்ளுவார்கள். தியாகப்பெருமான் ஆடும் பொழுது கொக்கரை, குழல், வீணை, கொடுகொட்டி எனும் வாத்தியங்கள் ஒன்று சேர்ந்து ஒலிக்கும். ஆடல், பாடல் நிறைந்த தலம். திசைகள் எல்லாம் புகழும் திருநகர். திருக்கோயில் 'பூங்கோயில்' எனப்படும். நறுமணப்பூ, தூபம், தீபம், சாந்தம் இவைகொண்டு நாளும் வந்து சிறப்பொடு பூசிப்பார்கள் வானோர்கள்; தேர் செல்லும் நீண்ட தெருக்களை உடையது திருவாரூர். இத் தெருக்களில் வீதிவிடங்கத் தியாகர் பவனிவருவார். நாள்தோறும் தேவர்கள் வந்து துதிபாடி வணங்குவர்.

இறப்பதன்முன் புலன்களை அடக்கித் திருஆரூரை அடையுங்கள். அடைந்து தொழுதால் பழைய வல்வினைகள் இல்லாமல் ஓடிப்போகும்; துன்பம் ஒன்றும் அணுகாது. தூரத்தே இருந்து இத்தலத்தைத் தொழுதாலும் வினை தூளியாகி ஓடிப்போம். நெஞ்சு நிலைப்பட்டு நிற்கவேண்டில் 'ஆரூரா ஆரூரா' என்று அலறி அழைப்பாயாக. அதுவே பரகதிக்குச் செல்லும் வழி, செய்த பாவங்கள் போகும் வழி. திருவாரூர்க் கோயிலிற் பெருமான் எழுந்தருளின காலம் மிகப் பழமை உடையது போலும்; அக் காலம் (ஊழியந்தத்தில்) எல்லாம் அழிபட்டொழிய இறைவன் ஒருவனாய் நின்ற காலத்துக்கு முன்னோ பின்னோ; அவர் அரன், அரி, அயன் என மூவுரு எடுத்த காலத்துக்கு முன்னோ பின்னோ; காலனையும், காமனையும், திரிபுரத்தையும், தக்கனையும், பிரமனையும், சலந்தரனையும், இராவணனை

யும், யானையையும் தண்டித்த காலங்களுக்கு முன்னே பின்னே, பார்வதிக்கு இடப்பாகம் தந்ததற்கு முன்னே பின்னே, தேவர்களுக்கு அமுதம் ஊட்டினதற்கு முன்னே பின்னே, (அண்ணாமலையில்) தழற் பிழம்பாய் நின்றதற்கு முன்னே பின்னே, நஞ்சுண்டதற்கு முன்னே பின்னே, மதி சூடினதற்கும், மான் ஏந்தியதற்கும், அருச்சுனனோடு போர் புரிந்ததற்கும், தில்லைக்கூத்துக்கும், தாருகாவன முனிவர்களின் மயக்கத்தைத் தீர்த்ததற்கும், நால்வர்க்கு அறம் உரைத்ததற்கும், முயலவனை மிதித்ததற்கும், வேதப் பொருளை விரித்ததற்கும், சகரர் காலத்துக்கும், சண்டேசுரருக்கு அருளினதற்கும் முன்னே பின்னே—அறிகிலேன்.

## 10. ஆரூர் அரநெறி

மன்னவர், கின்னரர், வானவர் வணங்கும் தலம் ஆரூர் அரநெறி.

## 11. திரு-ஆலங்காடு

குளிர்ந்த பொழில்களையும், சேறுகொண்ட வயல்களையும் கொண்ட தலம் பழையனூர் ஆலங்காடு. இத்தலத்தில் பெருமான் காளிகாண ஆடினார். இலக்குமி பூசித்த தலம் இது. பலர் பாடிப் புகழ்ந்த தலம் இது. முழவம் முதலிய வாத்தியங்களின் ஒலி நீங்காத பொழில்களை உடைய புனித தலம் இது; இங்குக் குழி விழிப்பேய்கள் சூழ ஆலங்காட்டடிகள் ஆடுவார்.

## 12. திரு-ஆலம்பொழில்

வயல்களும், நீரும் நிறைந்தது தென்பரம்பைக்குடி. இங்குத் திருஆலம்பொழிற் பெருமான் எழுந்தருளியுள்ளார். எம்பெருமானே என வணங்கின் இவர் திருவைச் (செல்வத்தை)த் தருவார்.

## 13. திரு-ஆலவாய்

இது கூடல், மதுரை எனப்படும். கொடிமாடங்களைக் கொண்ட நீண்ட தெருக்களை உடைய திருநகர் இது.

## 14. திரு-ஆவடுதுறை

மயில்கள் ஆடும் சோலைகளை உடைய தலம் இது. இத் தலத்திற் 'சம்பந்தப் பெருமானுக்கு இறைவர் ஆயிரம் பொன் கொடுத்தருளினார்.

## 15. திரு-ஆனைக்கா

அழகிய ஊர் இது. காவிரி நதியாற் சூழப்பட்டது. பொழில்கள் சூழ்ந்தது. மதில் விசேடம் உடையது. பழமையான தலம். வெண்ணாவலின் நீழலில் பெருமான் எழுந்தருளியுள்ளார். இத் தலத்தில் ஒரு சிலந்தி சிவ பெருமானுக்குத் தன் நூலால் பந்தர் இட்டது. அந்த அறத்தின் பயனாய் அது இறந்தபின் அடுத்த பிறவியில் அதைக் கோச்செங்கட் சோழனாய் அரசாள வைத்தனர் பெருமான். இத் தலத்தில் இறைவர் 'நீர்த்திரளாய்' விளங்குகின்றார். அதனால் இத் தலம் பஞ்ச பூதத் தலங்களுள் 'அப்பு' ஸ்தலமாய் விளங்குகின்றது. (உறையூர்ச் சோழ ராசன்) காவிரிநீரில் விழவிட்ட ஆரத்தை (பொன்மாலையை) இத் தலத்துப்பெருமான் திருமஞ்சனக் குடத்தில் வரும்படி செய்து அபிடேகத்தின்போது குடத்தினின்றும் அந்த ஆரம் தன்மீது விழச் செய்து அதனை உகந்து ஏற்றுக்கொண்டார்.

## 16. திரு-இடைமருதூர்

பொழிலும் புனலும் நிறைந்த அழகிய தலம். தாமரை மலர் நிரம்ப வேலிபோல மலர, அகழியைக் கைதை (தாழம்பூ) சூழ்ந்து மலரும். காவிரி நதியின் தென்கரையில் உள்ள தலம் இது. இத் தலத்தில் அந்தணாளர் ஆகுதியின் மந்திரத்தால், தேவர்களும் போற்றச், சிவனை வழிபடுவார்; பூசநீர்க் குளியல் இத் தலத்தில் விசேடமானது. இத் தலத்தில் இறைவன் நீங்காது வீற்றிருப்பார். தேவர்கள் போற்றும் தலம் இது. உலகெலாம் இத் தலத்தை ஏத்தும். இத் தலத்துப் பெருமான் மதிக்கத்தக்க எண்ணயிரவராய்

விளங்குகின்றார். பறையின் ஓசை, பாடலின் ஓசை, மறையின் ஓசை—இவை இத் தலத்தில் என்றும் முழங்கும். பக்தர்கள் பாசங்களை விட்டு நாள்தோறும் மலரிட்டு இறைவனை வணங்குவர். இத் தலத்துப் பெருமானைத் தொழ வினைகள் பற்றற விலகும். 'இடைமருதா' என்று கூறி அவர் பாதத்தை ஏத்தினால் நம்முடைய பாவங்கள் நம்மை விட்டு ஓடிப்போகும். அவரை நினைத்தாலும் வினை நாசமாகும். இடைமருதீசரின் கழல் வானவரின் செல்வத்தை இம்மையில் நமக்கு உதவி, மறுமையில் பிறவித் துயரையும் ஒழித்து உதவும்.

## 17. இராமேசுரம்

கடல் சூழ்ந்த திடலில் உள்ளது இத் தலத்துக் கோயில். இங்குத் திரைகள் முத்துக்களை வீசி (இறைவனை) வணங்கும். இராவணன் ஆகிய அரக்கர்களைக் கொன்ற பின் திருமால் (இராமபிரான்) விரும்பி அமைத்த கோயில் இத் தலத்துக் கோயில். இத் தலத்தை நேரே தரிசிப்பவரின் நோயும் வினையும் நுணுங்கிச் சுருங்கும். நன்மை, நன்னெறி—பெறவேண்டின் இராமேசுரத்தைத் தொழுது உய்வோமாக. அத் தலத்தைக் கண்டு வணங்கினவர்கள் சாமீப பதவியை அடைவார்கள்.

## 18. இன்னம்பர்

ஈசர் சுயம்புமூர்த்தி—(தான்தோன்றி). பாண்டியன் பூசித்து இன்புற்ற தலம். மலர் தூவித் தொழுது, அழுது விரும்பி நிற்கும் அடியார்கள் இன்னார் என்னும் கணக்கையும், வீண் பொழுது போக்கிக் கடவுள் சிந்தனை யில்லாதார் இன்னார் என்னும் கணக்கையும் இத் தலத்துப் பெருமான் எழுதி வைத்துள்ளார்.

## 19. ஈங்கோய் மலை

ஏலத்தின் நறுமணம் வீசும் தலம் இது. இத் தலத்தில் மரகதாசலேசுவரர் இறைவர்.

## 20. எறும்பியூர்

மடைகளில் தாமரை மலர் நெருங்கி மலரும் தலம்; அறிஞர்களும், தேவர்களும், முனிகணங்களும் வணங்கி ஏத்தும் மலே. இறைவர் செழுஞ்சுடர் மாணிக்கமாய்த் தேவியுடன் இத் தலத்தில் வீற்றிருக்கின்றார். பிரமன், திருமால், இந்திரன் இவர்கள் மந்திரம் கூறிப் போற்றும் தலம் இது; அரி, அயன் இவர்தம் துயரை இறைவன் போக்கிய தலம். 'அன்பனே! அரனே!' என அரற்றி வழிபடுவோர்க்கு இன்பம் தருவார் இத் தலத்துப் பெருமான்.

## 21. ஏடகம்

நீர்வளம் கொண்ட தலம் இது.

## 22. திரு-ஐயாறு

காவிரியாறு சூழும் தலம். காவிரி நீரில் இளமங்கையர் ஆடுவர். மடுக்களில் வாளை பாயும்; பொழில்களில் குயில் கூவும்; சோலைகளில் மல்லிகை மலரும்; பொய்கைகள் தாமரை மொட்டுக்களைக் காட்டும். தேவர்கள் வந்து வணங்கும் தலம் இது. திருமால் மலர் கொண்டு பூசிக்கும் பதி. அந்திப் போதில் ஆடின பின் பெருமான் இத் தலத்திற் புகுவர்; முனிவர்கள், வருணன், வாலி, தேசத்தார் ஏத்தும் பதி இது. இத் தலத்தில் இறைவர் என்றும் நீங்காது உறைகின்றார். இத் தலத்தைத் தொழத் தவமிலை கூடும்; 'ஐயாறே, ஐயாறே' என்று கூறின், அல்லல் தீர்ந்து அமரர் உலகத்தை ஆள்வோம்.

## 23. திரு-ஒற்றியூர்

கடற்கரைத் தலம். திரைவீசும் திருநகர். வண்டு யாழ்பாடும் சோலைகளை உடையது. தனக்கு ஒப்பிலாத அருமைத் தலம். பொழில்களில் அன்னங்கள் மலர்மேல் தூங்கும். மயில்கள் மேகத்தைக் கண்டு மயங்கிக் கூசி நிற்கும்; சோலைகளுக்கு அருகிற் கரும்பு ஆலையும், செந்நெற்

கழனியும் விளங்கும்; கடலில் மரக்கலங்கள் காட்சி அளிக்கும். தமக்கு உரிய ஊராக இறைவன் இத் தலத்தை ஒற்றியாகப் பற்றிக்கொண்டார்; ஒற்றியாக, இறைவா, நீ, பற்றியுள்ள இத் தலத்தைக் கைவிடாதே. இதற்கு ஒப்பான தலம் வேறு இல்லை—என அப்பர் எச்சரிக்கின்றார். உத்திர நாள் தீர்த்தத் திருவிழா இத் தலத்தில் விசேடம்; வேத ஒலியும் ஓமஞ் செயும் ஒலியும் எப்போதும் உள்ள தலம். புலவர்கள் தொழும் தலம் இது. தேவர்களும் பிறரும் தொழும் பதி. வடிவுடை மங்கையும் தாமுமாக இறைவர் இங்கு விளங்குகின்றார். ஒற்றியூரை அடைய வேண்டும் என்னும் நினைவு கொண்டவரின் வினை சுருங்கி ஒழியும். ஒற்றியூரைத் தொழ வினையும் பாவமும் தொலைந்து போகும். ஒற்றியூரைப் பாடிப் புகழ்பவர்கள் உயர்ந்தோர் ஆவர்.

## 24. திரு-ஒத்தூர்

இத் தலத்தைவிட்டு இறைவன் ஒரு நாளும் நீங்குவதில்லை.

## 25. ஓமாம்புலியூர்

மதில் சூழும் தலம். மணிமாடங்கள் விளங்கும் வீதிகளை உடைய தலம். பொழில் சூழ்ந்த தலம்; நீர் நிறைந்த வயல்களைக் கொண்ட தலம். நாள்தோறும் தென்றல் மலியும் திருக்கோயில் வடதளி யெம்பெருமானை மிக்க புகழ்பெற்ற அந்தணர்கள் ஏத்துதலால் உலகோரின் தீமை விலகும் திருப்பதி. முத் தீ ஓம்பும் அந்தணர்கள்—நான்மறையாளர்கள்—உத்தமர்கள் பயிலும் மாடங்களை உடைய திருப்பதி இது. அக்கினி தேவன் பூசித்து அருள் பெற்ற தலம்.

## 26. கச்சி

கச்சி விசாலமான ஊர்; நறுமணம் வீசும் அழகிய பொழில்களை எட்டுத் திசைகளிலும் உடையது; மேகங்கள்

தவழும் மாடங்களை உடைய ஊர்; ஒலி நிறைந்த ஊர்; கொடி விளங்கும் மதில்களைக் கொண்ட—விசித்திரமான ஊர். குளிர்ந்த சோலைகளைக் கொண்டு 'பெருங் காஞ்சி' யாய்த் திகழ்வது இவ்வூர்.

தேவேந்திரனுடைய காப்பினைக் கொண்ட சேத்திரம் இந்த ஏகம்பம்; நாள்தோறும் தேவர்கள் அர்ச்சிக்கும் மூர்த்தி ஏகம்பர். அரிய தவத்தைச் செய்து வழிபட்ட உமையைப் பாகத்தில் ஏற்றவர் ஏகம்பர். 'தேவர்கள்," பிரமன் திருமால் இவர்கள் ஒழுங்காக வழிபட்டேத்தத் தேவியுடன் பெருமான் திகழ்கின்றார். பெருமான் உகந்த தலம் இந்த ஏகம்பம். ஏகம்பத்தை நாம் குறிப்புடன் சென்று தொழுதல் வேண்டும்; நாவினால் அன்புடன் புகழவேண்டும், இழிந்த மக்கள் கச்சியைக் குறுகார். செல்வத் திருவிழாக்களின் ஓசை ஒலி எப்போதும் முழங்கும் தலம் இது. பெருமான் காமாட்சியின் கொங்கைத் தழும்பலங்காரத்துடன் விளங்கு கின்றார் இங்கு. முனிவர்கள் போற்றக் கங்கையைப் பார் மேற் கொணர்ந்தவர் பெருமான். தேவியின் தவத்தின் உண்மையை இறைவன் அளந்து சோதித்த திருப்பதி கச்சி. ஏகம்பத்தில் உள்ள புண்ணிய சீலர்க்கு அடிமை பூண்டவர் களின் வலிய வினைகள் எல்லாம் மாய்ந்துபோம்; அச் சீலர் களைக் கைதொழுதலாலே கடுவினைகள் நீங்கும்; அவர்களைத் தலையால் வணங்கினவர்கள் தலைவர்களுக்கும் தலைவ ராவார்கள்: ஏகம்பரை நமது அஞ்ஞானம் கெடப் போற்று வோமாக; ஏகம்பத்து ஐயனைத் தொழுபவர்க்குத் துன்பமே வராது. ஐம்புலன்களின் கட்டை ஐயர் அவிழ்த்தருளு வார்; நோய், வினை, துயர் வராமற் காப்பார்; ஆதலால் ஏகம்பரின் தொண்டனாய்த் திரிவோமாக.

## 27. கச்சிமேற்றளி

கச்சிமேற்றளி காஞ்சிமா நகரில் உள்ளது. இத் தலத்திற் பாடலும் ஆடலும் விளங்கும்.

## 28. திருக்-கச்சூர்

திருக்கோயிலின் பெயர்—ஆலக் கோயில்.

## 29. கஞ்சனூர்

அக்கினிதேவன் பூசித்த திருப்பதி இது.

## 30. கடந்தைப் பெண்ணாகடம்

பெரிய சோலைகள் திங்களைத் தடவும். செந்தாமரை நிரம்ப மலரும் திருப்பதி. திருக்கோயில் தூங்கானை மாடம் என்பர். லிங்கம் சோதிலிங்கம்.

## 31. கடம்பந்துறை

காவிரி சூழ்ந்த பதி. சிவபெருமான் உறைகின்ற இத் திருப்பதியைப் பக்தர்கள் நினைந்து அடைய வேண்டும். இத் தலத்தை நினைய வல்லவர் வானுலகாள்வர்; இத் தலத்தின் பெயரைச் சொல்ல நம் தீவினை நாசமாம்; இத் தலத்தை நாம் சேர்ந்தால் நம் வினைகள் நாசம் அடையும். இத் தலவிசேடங்களைக் கூறும் நூல் கொண்டு இறைவனை நன்கு நினைத்தால் நோய் கெடும். வினை வீடும் (ஒழியும்).

## 32. கடம்பூர்

ஆற்றங்கரைத் தலம். [அப்பர் பெருமான் இத் தலத்தைத் தரிசித்த பொழுது சுவாமி பாலாலயத்தில் இருந்தார் அதனால் கடம்பை இளங்கோயில் எனப் பாடியுள்ளார்.] கோயில் 'கரக்கோயில்' எனப்படும். இசை பாடும் பறவையாம் கின்னரத்தின் பாட்டொலி நீங்காத தலம் இது. முல்லை, மல்லிகை மலரும் சோலைகளை உடைய தலம். வரால் மீன் குதிகொள்ளும் வயல்களை உடைய தலம் புன்னை, ஞாழல், தெங்கு வளர்ந்துள்ள தலம். தேவர்கள் தொழும் தலம்; இருக்கு வேதத்தை ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும் இளங்கோயிலை இருப்பிடமாகக் கொண்டுள்ளார் இறைவர். (பதினெண்) கணங்கள் பூசித்த திருப்பதி இது. கற்றோர் வாழ்ந்திருந்த பதி. தேவியொடும் பெருமான் இத் தலத்தில் வீற்றிருக்கின்றார். நாம் பணிசெய்து கிடந்தால் இறைவன் நம்மைத் தாங்கிக்

காப்பார். விரைவில் இத் தலத்தை அடைந்தால், வாழ்க்கைத் துன்பங்கள் ஒழியும்; இத் தலத்தை நினைத்தாலும், தொழுதாலும், உரைத்தாலும் வினை ஓய்ந் தொழியும்.

## 33. திருக்கடவூர்

இறைவன் கூற்றை உதைத்த வீரட்டத் தலம். பக்திக் களிப்பு நிறை பாடல்கள் எப்போதும் நிறைந்த தலம். இறைவன் விரும்பும் தலம்.

## 34. கடவூர் மயானம்

(மரவு) கடப்பமரம் நிறைந்த தலம். நால் வேதமும், கணங்களும் அடைந்து பூசித்த தலம்). இத் தலத்துப் பெருமான் காலனை உதைத்தவர்; அதனால் அவர் காலகாலர்.

## 35. கடுவாய்க்கரைப் புத்தூர்

கடுவாய் (குடமுருட்டி) ஆற்றின் கரையில் உள்ள தலம். பூச ஸ்நாநம் இத் தலத்தில் விசேடம். இத் தலத்து இறைவனைக் கண்டு தொழ—வினை ஒழியும், இன்பம் பெருக உய்யலாம்.

## 36. கண்டியூர்

காவிரியின் கரையில் உள்ள தலம். (பிரமன் தலையை இறைவன கிள்ளின) வீரட்டத் தலம். 'கண்டியூர், கண்டியூர்' என ஓதி உருப்போட்டால் நமது வல்வினை கழன்றுபோம்.

## 37. கயிலை

கல் மலிந்த உயர்மலை கயிலை. மேகம் படியும் சோலைகளை உடையது. நீண்ட சிகரங்களைக் கொண்டது. சுனைகள் நிரம்பியது. குளிர்ச்சியையும் அழகையும் கொண்டது. வெண்ணிறத்தது; ஆதியானது; இறைவனுக்கு இருப்பிடமானது; இது தெய்விகமான புனித மலை

பெருமை வாய்ந்தது. வடக்கே உள்ள விசித்திரமான மலை. தொண்டர் அடிப்பொடியைத் தொழுது இறைவன் திருவடியைத் தமது கியானத்திற் கண்ட அன்பர்கள் கண்டிருக்கும் மலை.

## 38. கரவீரம்

மணம் வீசும் தலம்.

## 39. கருப்பறியலூர்

மலை போன்ற கோயிலை உடையது. கோயில் 'கொகுடிக் கோயில்' எனப்படும்.

## 40. கருவிலி

நீர் நிறைந்த வயல்களையும், அழகிய, பெரிய, மணம் வீசும் பொழில்களையும் உடைய தலம். கல் மதில் சூழ்ந்த தலம். உருத்திர கணத்தவர் தொழுதேத்தும் தலம். மாதர்கள் நெருங்கித் தொழும் தலம். காலன் வருமுன் இத் தலத்தை அடையுங்கள், உங்களுடைய துன்பங்கள், நோய்க்கிடமாம் பிறப்பு இவை எலாம் நீங்கி உய்வீர்கள். வாடி வருந்தாமல், மாதர் மையலிற் பட்டுச் சுழன்று மயங்கி வருந்தாமல், தீங்கேதும் செய்து குலையாமல் கருவிலியைச் சேர்ந்து அங்குள்ள 'கொட்டிட்டை' என்னும் ஆலயத்தைத் தொழுது உய்வீர்களாக.

## 41. கழிப்பாலை

அழகிய கடற்கரைத் தலம். நறுமணம் வீசும் இடமான, கண்ணுக்கு இனிய, பொழில்களை உடைய தலம். முத்துக்களையும் பருத்த பவளத்தையும் கடல் அலைகள் கொணர்ந்து கரைமீது சிந்தும் தலம். மீன்கள் பாய்கின்ற கழனி, நீர்முள்ளிகளைக் கொண்ட தலம்; கருங்குவளைகள் பூக்கும் தலம். கடலின் ஓசையையும், கழிகளையும் கொண்ட தலம். வண்டுகள் பண்பாடும் பொழில்களையும், தாழைப்புதர் வேலியையும் கொண்ட தலம். மயில்கள் கூவும் சோலைகளைக்

கொண்ட தலம். நாரை தாழை மடலைத் தன் குஞ்சு என எண்ணி அணைக்கும் தலம். தாமரைப் பொய்கை உள்ள தலம்.

கழிப்பாலை அண்ணல் நாம் (உறங்கும்போதும்) சாம்போதும் துணை நிற்பார்.

## 42. கழுக்குன்றம்

அருவிகள் பாயும் மலை. மேகங்கள் நிறைந்து படியும் மலை. மலை உச்சியில் பெருமான் விரும்பி வீற்றிருக்கின்றார்.

## 43. கன்றாப்பூர்

இறைவன் 'நடுதறி' என்னும் நாமத்தவர். தொழுகின்ற அடியார்களின் நெஞ்சினுள் அவரை விளங்கக் காணலாம்.

## 44. காட்டுப்பள்ளி

உயிர் பிரிவதன் முன்னமே, இத் தலத்தை நண்ணி ஈசனைப் பணியுங்கள். ஞானிகளும், கற்றோர்களும், கான வேடர்களும் கருதித் தொழும் தலம் இது. இத் தலத்துப் பெருமான் நமது உடலுக்கு உற்ற துணை, அவரை நாள் தோறும் நினைந்து உய்ம்மின்கள். இத் தலத்தை அடைந்தவர்களின் வினை நாசமாகும்.

## 45. காரோணம்

[93 நாகை—என்னும் தலைப்பையும் பார்க்க.]

தெளிந்த அறிவுடையார்கள் தியானித்துப் போற்றும் தலம் காரோணம். இறைவர் இத் தலத்தில் என்றும் இருப்பார். [கச்சிக் காரோணம், குடந்தைக் காரோணம், நாகைக் காரோணம் எனக் காரோணத் தலங்கள் மூன்றுள.]

## 46. காவிரிப்பூம்பட்டினம்

இத் தலம் 'புகார்' எனவும் படும்.

## 47. காழி

(இது சீகாழி). பிரளயப் பெருவெள்ளத்தில் (தோணி [illegible]மை) மிதந்த சோதித் திருப்பதி இது. கடல் அருகில் உள்ள தலம். சோலைகளும், பொழில்களும், நீர் வயல்களும் சூழ்ந்த தலம். மடைகளில் நீர்ப் பறவைகள் நீங்கா திருக்கும் தலம். பாளைகள் விரியும்போது வண்டினங்கள் மது உண்ணும் தலம். மயில்கள் உலவும் தலம். கடல் அலையிற் கிடைக்கும் முத்துக்களை வாரிக் குவித்துப் பரதர் மக்களிர் கொண்டு வரும் பதி. கொடிகளை உடைய நீண்ட மாடங்கள் ஓங்கும் திருநகர். தலையாய்க் கிடந்த ராகு கேது இறைவனைப் பூசித்து உயர்வு பெற்ற தலம். பிரளய காலத்தின்போது நாலைந்து பறவைகள் (பறவைகளின் உருக்கொண்ட தேவர்கள்) இறைவன் வீற்றிருக்கும் தோணியைச் சுற்றித் தாங்கும் தலம். நாள்தோறும் திரு விழா நடக்கும் தலம். இத் தலத்தை அடைந்தவர்களை வினைகள் அடையா ; கழுமலத்திறைவரின் திருவடி நம்மை ஆள்வனவாம்.

## 48. காளத்தி

காளத்தி மலையில் கருநீல வண்டுகளின் ஒலி கேட்கும். தேவி—ஞானப் பூங்கோதையாள். இறைவன்—கற்பக காமத்தன்.

## 49. கானப்பேர்

வண்டுகள் வாழும் பொழிற் சோலைகளை உடைய தலம். இறைவனுக்கு உகந்த தலம்.

## 50. கானூர்

புதிய மதில்களைக் கொண்டிருந்த தலம். செல்வம் மல்கும் தலம். கானூர் முளை, கானூர்க் கரும்பு எனப் பட்டார் இறைவர். அவர் திருவடியை அடையத்தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். சித்தர்களும் பத்தர்களும் ஒன்று வணங்கும் தலம் கானூர் ; கானூர்ப் பெருமானை

வணங்க, இரவும் பகலும் கூடிய மட்டும் அவர் நாமங்களைக் கூறிப் புகழ, துயர் தீரும், வினை மாயும்.

## 51. கீழ்வேளூர்

இறைவன் திருநாமம் 'கேடிலி'. அக்கேடிலியை நாடிப் பணிபவர் கேடு அடையார்.

## 52. குடந்தைக் கீழ்க்கோட்டம்

[கும்பகோணம் நாகேசுர சுவாமி கோயில்]

வான் பிறையை எட்டும் கொடிகளைக் கொண்ட மாடங்களை உடைய ஊர் குடந்தை (கும்பகோணம்). காவிரிக் கரைத் தலம். தென்றல் வீசும் திருநகர், இத் தலத்தில் கூத்தர் (நடராச மூர்த்தியின்) சந்நிதி விசேடம். கோதாவிரி, காவிரி, யமுனை, கங்கை, சரசுவதி, (பொற்றாமரை) சரயு, புட்கரணி, கோவி (நறுமதை), குமரி எனப்படும் ஒன்பது தீர்த்தங்கள் வந்து கூடும் [1]மகாமக தீர்த்தத்தைக் கொண்டுள்ள தலம். மறையவர் வேள்வியின் புகை விண்ணிற் போய் மழையாய்ப் பொழியும் தலம். கழனிகளில் மாங்கனி சிதறத் தேன்பாயும் தலம்.

## 53. குடமூக்கு

[கும்பகோணம் கும்பேசர் கோயில்]

கங்கை, யமுனை, கோதாவிரி, சரமி, சரசுவதி, கோமி (கோமதி) எனப்படும் தீர்த்தங்களைக் கொண்ட தலம். கொக்கரை, கொடுகொட்டி வாத்தியங்கள் முழங்கும். குடமூக்கே, குடமூக்கே எனக் கூறித் தியானித்தால் கொடிய வினைகள் தீரப்பெற்றுச் சிவனை அடைய முடியும்.

## 54. குடவாயில்

மாடங்கள் உள்ள தலம்.

---

1. தாவி - கோதாவி - கோதாவிரி. பொற்றாமரை - சரயுநதி. புட்கரணி - பயோட்ணிநதி. கோவி - நறுமதை. [சித்தாந்தம் - 1956 ஏப்ரல்] தேவாரம் 6-75-10.

## 55. குரக்குக்கா

காவிரியின்கால் (கொட்டாறு) பாயும் தலம். குரங்குகள் குதித்து விளையாடும் தலம். கொக்கினம் பயிலும் சோலைகளையும், வயல்களையும் கொண்ட தலம். அழகிய மயில்கள் ஆடும் தலம்; அழகிய மாளிகைகளை உடைய தலம். முழவொலிக்கும் தலம். வானவர், திருமால், பிரமன் அளப்ப ஒண்ணாத கோயில் மாளிகையை உடைய தலம். இரவும் பகலும் இத் தலத்தை ஏத்தித் தொழுமின்கள். இத் தலத்தை அடையக் குற்றங்கள் கெடும், பாவங்கள் நீங்கும். இத் தலத்தில் விருப்பொடு இருப்பவர்க்கு இடர் ஒன்றும் இல்லை; இத் தலத்துப் பெருமானைத் தொழுபவர்க்குத் துன்பம் ஏதும் வராது; வினை நாசமாம், இடர் அணுகாது ஓடிப்போம்; வானுலகாட்சி கிட்டும்.

## 56. குரங்காடுதுறை (தென்)

காவிரியின் தென்கரையில் உள்ளது. குளிர்ந்த புனலையும் சோலைகளையும் கொண்டது. இறைவன் விரும்பி அமரும் தலம்: குரங்காடுதுறை அத்தன் எனக் கூறின், அவர் நமக்குக் கிட்டுவார்; அவரைத் தொழத் தீவினை நம்மை அணுகாமற் சிதறுண்டு ஓடிப்போம்.

## 57. குருகாவூர்

சுவாமி திருநாமம் 'வெள்ளடை'.

## 58. குற்றாலம்

குளிர்ச்சி பொருந்திய தலம். குரவ மலரின் மணம் நாறும் தலம். 'குழல்வாய் மொழி' தேவியின் திருநாமம். கூத்தப் பெருமான் சந்நிதி விசேடமானது. [பஞ்ச சபைகளுள் குற்றாலம் சித்திர சபை].

## 59. குறுக்கை

பூக்களைக் கோதி வண்டுகள் ஒலிக்கும் சோலைகளை உடைய தலம். (மன்மதனைப் பெருமான் எரித்த) வீரட்டத்

தலம். அட்டமி முன் 'ஏழு நாளும் இறைவன் (நடராசர்) கூத்தராய் (நடன மூர்த்தியாய்) வீதி உலா வரும் தலம்.

## 60. கொட்டையூர்

குராமரப் பொழிலை உடைய அழகிய தலம். குலைகளைக் கொண்ட தென்னஞ் சோலை சூழ்ந்த தலம். குவளைகள் மலரும் தலம். கொக்குகள் அமரும் வயல்களை உடைய தலம். மேகம் தவழும் கொடியாடு நெடுமாடங்களை உடைய தலம். இத் தலத்துக் கோயில் 'கோடீச்சுரம்' எனப்படும். நற்குணமுடைய நல்ல அடியார்கள் வாழும் தலம். நான்மறை, ஆறங்கம் இவைகளைக் கொண்டாடும் வேதியர்கள் வாழும் தலம். திருமாலும் நான்முகனும் அருள் பெற்ற தலம். முனிவர்கள் இறைவனை மருந்து எனப் பாராட்டித் தொழும் தலம்.

## 61. கொண்டீச்சுரம்

(பழக்) குலைகளும், தேன் நிறைந்த (மலர்களும்) நிறைந்த பொழில்கள், குயில்கள் நிறைந்த பொழில்கள், மணம் வீசும் பொழில்கள், சேல்மீன் பாயும் வயல்கள், நீர் நிறைந்த வயல்கள், உயர்ந்த மாடங்கள்—இவை விளங்கும் பதி—கொண்டீச்சுரம். இங்கு மாதர்கள் இறைவனை வழிபடுவார்கள். கொண்டீச்சுரத்துப் பெருமானை நினைப்பவர்களுக்கு ஊனம் ஒன்றும் வராது. பெருமானைத் தொழுது வணங்குவதால், தவம் கூடும், நல்லன வரும், பெருமை சேரும், பரலோகம் கிட்டும், வினை மாயும்.

## 62. கொள்ளம்பூதூர்

தங்கும் இடம். அறியாது, கொள்ளம்பூதூரில் இறைவர் பலநாள் இருப்பர்.

## 63. கொள்ளிக்காடு

நீர் நிறைந்த தலம்.

## 64. கோகர்ணம்

கடற்கரைத் தலம்; அழகிய கோபுரத்தை உடைய தலம்.

## 65. கோடி

திருமறைக்காடு (வேதாரணியத்துக்கு அருகில் உள்ளது). இறைவன் மகிழ்ந்து இருக்கும் தலம்.

## 66. கோடிகா

இத் தலத்துப் பொழில் குரங்குகள் சேர்ந்துள்ள பொழில்; மணம் வீசும் பொழில். சோலையில் வண்டினங்கள் குயில்போலக் கீதத்தைப் பாடும். இத் தலத்தில் உறையும் இறைவனைக் கூறாத நாள் எல்லாம் ஊர்க் காவலிற்பட்ட வீண் நாள்களாகக் கழியும்.

'கோடிகாவா' எனக் கூறின் எங்கும் இல்லாத இன்பம் எய்தும். ஊனம் ஒன்றும் வாராது.

## 67. கோணமலை

தெற்கே (இலங்கையில்) உள்ள தலம்.

## 68. கோயில் (தில்லை)

தில்லை அழகிய ஊர்; கண்ணுக்குக் கவர்ச்சியான பொழிலை உடைய ஊர். தேன் மணக்கும் சோலைகள், மேகம் படியும் சோலைகள், மணம் வீசும் பூஞ்சோலைகள்; மதத்து வண்டுகள் ஒலிக்கும் சோலைகள், நீலமலர் மலர் கின்ற வயல்கள், நீர்நிறை வயல்கள், வாளைமீன் பாயும் நீர் நிறைந்த வயல்கள், கொடி நிறைந்த மதில்கள், இவைகளைக் கொண்ட தலம் தில்லை. தேனை அனுபவித்து உண்டு வண்டுகள் பாடும் தில்லை; மதிதோயும் தில்லை; கமுகுகள் குலைறத்தோங்கும் தில்லை; பல மாடமாளிகைகள் நிரம்பி உள்ள தில்லை. இத் தலத்திற் சிற்றம்பலத்திற் கூத்தப்

பிரானுர் ஆடுகின்ருர். பொற்கழல் ஒலிக்க, அதிசயம் பொலிய, தேவர்கள் தொழுது போற்ற, எண்டிசையோரும் ஏத்த, அந்தியும் பகலும் அவர் ஆடுகின்ருர். அம்பலத்தையே அவர் கோயிலாகக் கொண்டுள்ளார். ஆடும் பிரானுடைய உந்தியின்மேல் அசைத்த கச்சின் அழகைக் கண்ட கண், நெற்றிக் கண்ணைக் கண்ட கண், உடுத்த துகிலைக் கண்ட கண், சிரித்த முகத்தைக் கண்ட கண், அவர் விரலை, அவர் திருவடியைக் கண்ட கண்—வேறு ஒரு பொருளையும் காணுது, காண விரும்பாது. தில்லைச் சிற்றம்பலம் அன்னம் கொடுக்கும், பொன் கொடுக்கும். இத் தலத்திற் சிவனுடைய திருவடியைத் தியானம் செய்யும் அடியார்கள் வாழ்கின்ருர்கள். பெரியோர்களும் தேவர்களும் வணங்கி வரம் பெறுகின்ருர்கள். இத் தலமானது செந்தீ ஓம்பி வேள்வியாற்றுதல் எப்போதும் உள்ள தலம். இலக்குமி வாசம் செய்யும் தலம். திருமிக்க சிற்றம்பலத்தை உடைய தலம். திருவுடைய அந்தணர்கள் வாழ்கின்ற தலம்; தினை அளவும் வேத ஒலி குன்ருத தலம்; தேர் விழா நடக்கும் தலம்; விடங்க வேடத்தினர் நிறைந்துள்ள தலம். செம்பொன்னிணுல் எழுதி மேய்ந்துள்ள சிற்றம்பலத்தைக் கொண்ட தலம்.

இறைவன் புலியூர்புக்க கோலத்தை விளக்குகின்ருர் அப்பர். ஒரு வீணை ஏந்தி, தீ ஏந்தி, பட்டு உடுத்து, தோல் போர்த்து, பாம்பொன்று அணிந்து, பூதங்கள் சூழ, புலால் வெண்டலை ஏந்தி, புலித்தோல் வீக்கி, சுடலையில் எரி ஆடி, சடைதாழ, வெண்ணீறணிந்து, பொன்தீ மணி விளக்குப் பூதம் பற்ற, விடைஏறி, வேதங்கள் ஓதி, திருவாரூரில் அந்திப் பொழுது ஆனதும் புறப்பட்டுத் தில்லையிற் சிற்றம்பலத்தே புகுகின்ருர் பெருமான்—என்கின்ருர் அப்பர். தில்லைக் கூத்தப் பிரானுடைய கூத்துக்கு இணையாக ஆடவல்லவர் ஒருவரும் இலர். ஞாலம் (பூமி) முழுதும் தில்லையில் அடங்கும். இக் கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதே நமது கடமையாகும். உலகத்துளே மிகச் சிரேஷ்டமானது தில்லைச் சிற்றம்பலம். ஆய்ந்த மலர்கொண்டு நீர் தூவிப் பெருமானைத் தொழுவீராக. தில்லைச் சிற்றம்பலத்—

பெருமானைத் தொழச் செல்லும் பெரியோரைக் காலன் அணுகான். பெருமானுடைய திருக்கூத்தைத் தொழச் செல்லுங்கள். அப்போது பெருமானுடைய முகத்தில் "என்று வந்தாய்" எனக் கேட்பது போன்ற ஒரு திருக் குறிப்புத் தோன்றும். அவர் திருக்கூத்தைக் கண்டுதான் உலகம் இன்புறுகின்றது. தில்லைத் தலம் உள்ள திசையைக் கைதொழுதாலும் தொழுபவர் வினை ஓடிப்போம் என்பது உண்மை. தொழுபவரை வான்பெற்று வாழவைப்பார், அவர்களுடைய பிணியைத் தீர்ப்பார் இறைவர். வினையால் வேதனைப் படுமுன் திருச்சிற்றம்பலத்தைத் தொழுது உய்வீர்களாக.

## 69. கோலக்கா

தாம் விரும்பிக் கொண்ட ஒரு கோலத்தோடு திருக் கோலக்காவில் கூத்தனார் (இறைவர்) வீற்றிருக்கின்றார்.

## 70. கோவலூர்

குராமரம், கோங்கு மரம் சூழ்ந்த தலம். குலைகுலையா யுள்ள மாங்கனிகள் சிந்தும் தலம். அலைவீசும் தெண்ணீரை யுடைய தலம். வீரட்டத் தலம் (அந்தகாசுரனைச் சூலத்தால் செற்ற தலம்). இறைவனுக்கு இருப்பிடமாம் தலம்.

## 71. கோழம்பம்

அன்னப் பறவைகளையும், குளிர்கொண்ட சேறுள்ள கொண்ட வயல்களையும் கொண்ட தலம். குயில்கள் நிறைந் துள்ள தலம். குரா, கோடல் (காந்தள்) பூக்கும் தலம். (கொட்டம்) ஒருவகைக் கிழங்கின் மணமும், தாழம்பூ மணமும் வீசும் பொழில்களை உடைய தலம். இத் தலத்தில் இறைவர் மகிழ்ந்து கூத்தாடுகின்றார். இத் தலத்தை யடைந்து இறைவனைத் தொழுபவர்கள், யாவர்க்கும் தலைவ ராவார்கள்; அன்பு செய்பவர்கள் தேவலோகத்தை ஆள்வார்கள்; வானோர் செல்வத்தினும் மேம்பட்ட செல்வர்க ளாவார்கள்.

## 72. கோளிலி

மலர் நிறைந்த, அழகிய, பெரிய, குளிர்ந்த, பொழில்களை உடைய தலம். பொழில்களில் கொக்குகள் வாழும் தலம். மேகங்கள் படியும் பொழில்களைக் கொண்ட தலம். செந்நெல் நிரம்ப விளையும் வயல்களைக் கொண்ட தலம். வண்டுகள் மலர்களைக் கோதி ஒலி செய்யும் தலம். (அவனி விடங்கத்) தியாகராச மூர்த்தி விளங்கும் தலம். இரவும் பகலும் இறைவன் புகழைப் பாடுவீர்களாக; அவருடைய திருவடிப் பெருமையைப் பேசுவீர்களாக; அவரை நினைப்பீர்களாக, விரும்புவீர்களாக. பண்ணொடு பாட வல்லவர்கள் பயின்ற தலம் கோளிலி; திருவிழாக்களின் ஒலி நீங்காத பொழில்களை உடைய தலம் கோளிலி.

கோளிலிப் பெருமானுடைய சேவடியைத் தொழ அல்லல் (துன்பங்கள்) ஒழியும், ஏழைமை நீங்கும் இடர்கள் தீரும், வினைகள் நாசமாம்.

## 73. சக்கரப்பள்ளி

சலந்தரனைப் பிளந்தழித்தவன் வாழும் தலம்.

## 74. சத்திமுத்தம்

லட்சுமீகரம் பொலியும் தலம். மலைமகள் (சத்தி) பூசித்து அருள் பெற்ற தலம்.

## 75. சாத்தமங்கை

இத் தலத்துத் திருக்கோயில் 'அயவந்தி' எனப்படும்.

## 76. சாய்க்காடு

கடற்கரைத் தலம். சங்குகளும் முத்துக்களும் திரைகளிற் புரளும். பொய்கையில் உள்ள மீன்கள் பாய வண்டுகள் இரிந்து ஓடும்; தேன் உண்ணும் வண்டுகள் உள்ள சோலைகளை உடைய தலம். இத் தலத்தில் இறைவன் இனிது வீற்றிருப்பார்.

## 77. சிராப்பள்ளி

உறையூர் (மூக்கீச்சுரம்) அருகில் விளங்கும் தலம். மலைச்சாரலில் மயில்கள் பொலிவுற்றிருந்த தலம். இறைவர் தமது சேர்வு (இடமாகக்) கொண்ட தலம். திரிசிராப்பள்ளி என்று சொன்னவுடன் நம்முடைய தீவினைகள் நம்மிடம் இராமல் ஓடிப்போம். சிராப்பள்ளியை விரும்புபவர்கள் அரி அயன் தொழும் பாக்கிய நிலையை அடைவார்கள். சிராப்பள்ளி நாயனார் என்று நாம் சொன்னால் நம் வினைகள் நாசமாம். இத் தலத்துப் பெருமான் பந்தங்களை நீக்கின பெரியோர்களுக்கு நல்லருள் பாலிப்பர்.

## 78. சிவபுரம்

சிவனது பெருங்கோயிலைக் கொண்ட தலம். வெள்ளைப் பன்றி பிரியாது பலநாளும் வழிபட்டேத்திய தலம்.

## 79. செம்பொன்பள்ளி

வண்டுகள் உண்ணும் மலர்த் தேன் என்றும் பொலியும் பொழிலை உடைய தலம். நெய்தல் (வெள்ளாம்பல்) மணக்கும் தலம். சேற்றிற் கமலங்கள் (தாமரைகள்) நிரம்ப மலரும் தலம். தேவர்கள் சென்று வணங்கும் தலம்.

## 80. சேய்நல்லூர்

வேதியர் வாழும் தலம்.

## 81. சேறை

செந்நெற் பயிர் விளையும் வயல்களைக் கொண்ட தலம் சேறை. சேறைத் திருக்கோயில் "செந்நெறி" எனப்படும். திருச்சேறைப் பெருமான் சித்தர்—சிறப்பர். அவர் (துணை) இருக்க, நாம் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை. அவரைத் தொழ, அவர் நாமத்தை (பயில) உருஏற்ற, கூற்றுவன் விலகுவான்; இடர்கள் வாரா; பிறப்பு, மூப்பு, பசி, பிணி,

இறப்பு இவை நீங்கும்; புண்ணியம் பூரித்து வரும், பொய் கெடும், அறிவு கைகூடும், இன்பம் எய்தும். சேறை அப்பர் துணையிருப்பதால்—நிலைமாறி வானும் பூமியும் நடுங்கினு லென்ன! அரசர் சீறிக் கோபித்தால்தான் என்ன! எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை.

## 82. சோற்றுத்துறை

வரால்மீன் பாயும் வயல்களையும், நறுமண மலர்கள் நிறையக் கொண்ட சோலைகளையும் உடைய தலம். காலையில் நறுமண மலர்களால் தேவர்கள் விரும்பித் தொழும் தலம். தொண்டர்கள் நெருங்கி, வணங்கி, மகிழும் தலம். சூரிய னும், முனிவர்களும் பூசித்த தலம். புகழ்பெற்ற விசேடத் தலம். 'சோற்றுத்துறை' எனக் கூறி, உரு ஏற்றினால் துயர் நீங்கும்: தூநெறி கிட்டும்.

## 83. தருமபுரம்

பலநாள் தருமபுரத்தில் இறைவர் தங்குவார்.

## 84. தலைச்சங்காடு

வளப்பம் கொண்ட பொழில் சூழ்ந்த தலம். இங்குக் கோயில் "பெருங்கோயில்".

## 85. தலையாலங்காடு

(பாண்டியன்) போர் செய்த தலம். இறைவர் பல ஊர்களிற் பலிக்குத் திரிந்து பலர் காணத் தலையாலங் காட்டில் நுழைகின்றார்.

## 86. துருத்தி

சோலைகளைக் கொண்ட தலம். ஆற்றிடை உள்ள தலம்.

## 87. நல்லம்

நான்மறையும் வல்லவர் வணங்கும் நல்ல தலம்; இறைவன் உறையும் பதி.

சிவநெறியை அணுக விரும்பினால் திருநல்லம் என்னும் தலத்தை அடையுங்கள். அத் தலத்தைப் பணிவாரோடு சேருங்கள், பணியாதவரை விட்டு விலகுங்கள். நல்லத்துப் பெருமானுடைய திருவடியைப் புகழத் துயர் நீங்கும்; மலர் தூவித் தொழ வினை ஒழியும், சிவகதி கூடும். நல்லம் என்னும் தலப் பெயரை நாவாற் சொல்லத் தூநெறி கிட்டும். மூப்பு வருமுன், காலம் கழியுமுன், நல்லம் என்னும் தலத்தை அடைந்து வணங்குங்கள். அதனால் நமக்கு நன்மை வரும்.

## 88. நல்லூர்

குளிர்ந்த பொய்கையை உடைய தலம். தாமரை, செங்கழுநீர், நெய்தல், கோங்கம், குரா, மகிழ், சண்பகம், கொன்றை, வன்னி, மரு இவை மணக்கும் தலம். தாமரைக் குளம் உள்ள தலம். நீண்ட கொடிமாடங்கள் மலிந்த தலம். தொண்டர்கள் சென்று தரிசிக்கும் தலம். கோவணத்தைக் காப்பாற்று என்று கூறி, மாயத்தில் அதை மறைத்து, (அமர்நீதி நாயனார் என்னும்) வணிகரை அவருடைய மனைவியுடன் இறைவன் ஆட்கொண்டருளிய தலம் நல்லூர். தொண்டர்கள் இன்னிசை பாடித் தொழுது அருள் நல்க இறைவனே என வணங்கும் தலம்; கன்னியர் வேறு எவரையும் நினையாமல் தமது கனவிடைக் காதலிக்கும் பெருமான் நல்லூர்க் கிருபாமூர்த்தி. அப்பர் பெருமானுக்கு இறைவர் தமது திருவடியைச் சிரசிற் சூட்டிய தலம். மறையோர் மகிழ்ந்தேத்திய தலம். தேவர்கள் தொழ இறைவன் இலயத்தொடு பாடி ஆடின தலம்.

இறைவன் வாழும் பதி - வடக்கே திருக்கயிலையும் தெற்கே திருநல்லூருமாம்.

## 89. நள்ளாறு

மணம் வீசும் பொழில்களை உடைய தலம். இறைவன் இத் தலத்திற் பிரியாது வீற்றிருப்பார். திருமால் பூசித்த தலம். திருமால், பிரமன் காணப், பெருமான் நாகம் பூண்டு

கூத்தாடுவார். (நள்ளாறு சப்த விடங்கத் தலங்களில் ஒன்று. தியாகராச மூர்த்தி 'நாகவிடங்கர்'—நடனம் உன்மத்த நடனம்). பெருமானை நாள்தோறும் வணங்கி வலம்வருவாருடைய வினை மாயும்; நள்ளாறு என்று சொன்னாலே நமது வினை நாசமாம்.

## 90. நறையூர்

திருக்கோயில் 'சித்தீச்சுரம்' எனப்படும். இறைவன் இத் தலத்தைவிட்டுப் பிரியார்.

## 91. நனிபள்ளி

செண்பகம், புன்னை, குரவம், வேங்கை இவை நெருங்கிய சோலை சூழ்ந்த தலம். நனிபள்ளியில் வாழும் இறைவர் தம்மை அடைந்தவர்களுடைய வினைகளைத் தீர்ப்பார், தம்மை நினைக்கும் நினைப்பைத் தருவார், மலத்தை அறுப்பார், நரகத்தில் வீழ ஒட்டார்.

## 92. நாகேச்சுரம்

உலகினர் வந்து போற்றும் புனித மூர்த்தி திருநாகேச்சுரவர். சந்திரன், சூரியர், ஐந்தலை அரவு—பூசித்த தலம் திருநாகேச்சுரம். நாவலம் பெருந் தீவினில் வாழ்பவர் வந்து வணங்கித் தமது வினை, பாவம், பற்று இவைகள் நீங்கப்பெறும் தலம். திருநாகேச்சுரத்துப் பெருமானைச் சேராதவர்கள் நன்னெறியிற் சேராதவர்கள். தம்மைச் சேர்ந்தவர்களின் வல்வினையைத் தீர்த்துக் குளிர்விப்பார் பெருமான்.

## 93. நாகை

[காரோணம் என்னும் தலைப்பு 45 பார்க்க.]

கடலையும் கழிகளையும் தழுவிய தலம். கப்பல்கள் சேரும் கடற்றுறைத் தலம். நறுமணம் வீசும் சோலை—பொழில்கள் சூழ்ந்த தலம். தாழை மணம் கமழும் கழனி

களைக் கொண்ட தலம். புன்னைகள் சூழ்ந்த தலம். நெடு மாடங்களையும் கல் மதில்களையும் கொண்ட தலம். பெரும் புகழ் வாய்ந்த மாதர்கள் பணிந்து பூசித்த தலம்; வானவர் பூசித்த தலம்; கற்றவர், அறிஞர்கள், வாழும் தலம். இறைவன் இத் தலத்தில் எப்போதும் வீற்றிருப்பார். மாதர்கள் வந்து வலஞ்செய்து சிறப்பான நடனங்களை எப் போதும் செய்யும் செல்வ நகர். இரவும் பகலும் இறைவனை அங்குக் கண்டு தரிசித்துக் களிப்புறலாம். நாகைக் காரோணத்தான் என்று நாம் கூறினால் நம் வினை ஒயும். நாகைக் காரோணம் என்று சிந்தை செய்வாரை இலக்குமி பிரியாள். நாகைக் காரோணத்தைக் கருதி ஏத்தப்பெற்றவர் பிறந்தவராவர்; இனிப் பிறப்பும் இலாதவராவர். நாகைக் காரோணம் கோயில் கொண்ட இறைவனை நாள்தோறும் ஏத்தினால் துன்பம்போய் இன்பம் கூடும்; அவரை நினைத்தால் உய்தி கிட்டும்; அவரது திருவடியை நாம் அணைந்து சிந்தித்தால் காலன் நம்மைத் தொடர அஞ்சுவான்; வினை நீங்கும். அவரை நாம் தொழ நமது அல்லல் அறும், வினை கழலும், துயர் கெடும்; அவரைப் புகழ்ந்தால், வலம் வந்தால், வினை சோர்ந்து ஒழியும்.

## 94. நாட்டியத்தான்குடி

குளிர்ந்த (பெருமை வாய்ந்த) தலம்.

## 95. நாரையூர்

பூமியிற் சிறந்த தலம். ஆடுகின்ற மயில்கள் உள்ள தலம். மணம் நிறைந்த பொழில்களை உடைய தலம். நண்டுகள் நீர்த்திரைகளிற் காணப்படும் தலம். நீர்த் திரைகள் ஒலி செயும் தலம். கழுகும் இராமபிரானும் பூசித்த தலம். நல்லவர்கள் தொழுது போற்றும் தலம். அடைந்தவர்தம் துயரைத் தீர்ப்பார் நாரையூர் அண்ணலார்.

## 96. நாவலூர்

அழகிய பொழில்களை உடைய தலம்.

## 97. நின்றியூர்

நீர் நிறைந்த வயல்களை உடைய தலம். பொழில்கள் நிறைந்த தலம். பறையின் ஓசை, பாடலின் ஓசை, மறையின் ஓசை இவை நிறைந்த தலம். அழகிய பெரிய மதில் சூழ்ந்த தலம். பயத்தினாலாவது பத்தியினாலாவது நின்றியூரை நினைத்தல் வேண்டும். அது திரிமூர்த்தி தலம். மங்கையர்கள் ஆடல்புரியும் தலம். அன்புடன் இத் தலத்தைத் தொழுது போற்றுபவர்களுடைய வினை சுருங்கும், ஒழியும்; அவர்களை வினை, பாவம் பற்றா.

## 98. நீடூர்

வரிசையாய் அமைந்துள்ள நல்ல மணிமாடங்களை உடைய தலம். நெல்விளையும் கழனிகளை உடைய தலம். நீரின் ஒலி கொண்டதும்; நீர்ப்பூக்கள் நிறைந்தனவுமான கழனிகளைக் கொண்ட தலம். நெய்தல் மலர் (ஆம்பல்) பூக்கும் நீர் நிறைந்த கொல்லைகளை உடைய தலம். தேவி— அதிகாந்தி அம்மை.

## 99. நீலக்குடி

நிழல் தரும் பொழில்களை உடைய தலம். நெல் விளையும் வயல்களைக் கொண்ட தலம். இறப்பதன்முன் நீலக்குடி அரனைக் கைதொழுது உய்வீர்களாக. கொன்றை சூடிய பெருமானை 'மலைமகளொடு விளங்கும் நீலக்குடி அரனே' என்று (இப்போதே) போற்றுங்கள், இறக்கும் பொழுது இந் நினைவு (இந்த அறிவு) வாராதாதலின். நீலக்குடி அரனை நினைக்கின்ற சித்தம் இருந்தாற் சிவகதியைக் கூடலாகும்; அவர் திருநாமத்தைக் கூறினால் உய்யலாம்; அவர் திருவடியைப் போற்றினால் நம் இடர்களை அவர் போக்குவார்; மறவாமல் அன்புடன் அவரை நினைக்கும் மனத்தவர்களுக்கு அவர் உள்ளங்கை நெல்லிக்கனி போல இனிது விளங்குவர். நித்தம் நீலக்குடியரனை நினைக்கும் சித்தமுடையவர் சிவகதி சேர்வர்.

## 100. நெடுங்களம்

நிழல்தரும் சோலைகளை உடைய தலம். இறைவன் நீங்காது வீற்றிருக்கும் தலம்.

## 101. நெய்த்தானம்

ஊழிக்காலு முதல் நிலைத்து விளங்கும் தலம் நிறை நீர்க் காவிரியின் கரையில் உள்ள தலம். பொழில் சூழ்ந்த கோயிலைக் கொண்ட தலம். தேன் நிறைந்த மலர்களில் வண்டுகள் பாயும் தலம். சேல்மீன்கள் ஒன்றோடொன்று போர்புரியும் தலம். பூமியிற் சிறந்த தலம். வயல் நிறைந்த தலம். நெல் மலிந்த தலம். மதி உரிஞ்சும் உயர்ந்த மாடங்களை உடைய தலம். மேன்மையாய் விளங்கும் அழகிய, குளிர்ந்த, பொழில் சூழ்ந்த தலம்; உமையுடன் பெருமான் இட்டமாய் வீற்றிருக்கும் தலம். தேவர்கள் தெரிந்து வந்து வணங்கும் திருவிளங்கி நிற்கும் தலம். பெருமானது ஆடல் நிலையம் நெய்த்தானம். கழல்கள் ஒலிக்க அவர் ஆடும் தலம்; வாழ்த்துவார் வாயில் பெருமான் உறைவார். பத்துவார்க்கு அருள்புரிவார்; தம்மை அடைந்தவர் தம் வினையைத் தீர்ப்பார்: நெய்த்தான நன்னகர் என்று பத்தி நின்று நினைத்தால் உய்யலாம்; அத்தகைய அடியவர்கள் இறைவனைக் கூடலாகும். 'நெய்த்தானம், நெய்த்தானம்' என்று சொல்லி உருப்போட்டால் அழியும் தன்மை உள்ள இப் புலால் உடம்பைத் தரும் பிறப்பை ஒழிக்கலாம். நெய்த்தானத்தை நினைத்த நெஞ்சம் நல்வாழ்வைப் பெறும். பெருமானை இசைப்பாடல் பாடி அன்புடன் பணிபவர் வினை சிதறி ஓடிப்போம்; ஆசையுடன் தொழுபவர் வினை நீங்கி இன்பம் உறுவர்; தேவராய் மேலுலக வாழ்வுகளைப் பெறுவார்.

## 102. பட்டீச்சுரம்

இரவில் பட்டீச்சுரத்தைவிட்டு மணற்கால் என்னும் தலம் புகுவர் பெருமானர்.

## 103. பரங்குன்றம்

நல்ல பண் பாட வல்லவர்களின் பாடலும் ஆடலும் நீங்காத தலம் திருப்பரங்குன்றம்.

## 104. பராய்த்துறை

களி வண்டுகள் பண்பாடும் தலம். மணற்குன்றின் மேல் விழுந்த மழைத் துளிகள் பாய்ந்திழியும் தலம். இறைவன் உகந்து வீற்றிருக்கும் தலம். அவரை வணங்கித் தொழுதல் (நன்மை பயக்கும்), இது வாய்மை. பராய்த் துறைப் பெருமானுடைய சேவடியை அடைந்து போற்ற, வினை உள்ளன அழிந்துபோம்—அற்று ஒழி

## 105. பரிதிநியமம்

பன்னிருநாள் பரிதிநியமத்திற் பெருமான் தங்கினர் என்பர் அப்பர்.

## 106. பருப்பதம்

வடக்கே உள்ள தலம்; இருண்ட பொழிற் சாரலில் விளங்கும் தலம். பல ஊழிக் காலமாய் இத் தலத்தே இறைவர் வீற்றிருக்கின்றார்; கடல் கடைந்த மந்திரமலை போன்றது திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்). இத் தலத்தையும் இத் தலத்தைப் பரவித் தொழும் தொண்டர்களையும் இறைவர் விரும்புகின்றார்.

## 107. பழனம்

அழகிய ஊர். பொழில் சூழ்ந்த ஊர்; காவிரி ஆற்றங் கரைத் தலம். அன்னங்கள் நிறைந்து ஒலி செய்யும் தலம்; வண்டுகள் பண்ணுடன் ஒலிக்கும் பொழில்கள் சூழ்ந்த தலம். பருத்த வரால் மீன் பாயும் வயல் சூழ்ந்த தலம். மாமரங்கள் நிறைந்த தலம். பலரும் பயின்று பாடும் தலம். பாட்டொலி நீங்காத் தலம். பழனத்தானுடைய ஆயிரம் நாமங்களையும் எண்ணித் தியானியுங்கள். அந்தப்

பெருமானது திருஅருளால்தான் தேவர்கள் திருவைப் பெறவேண்டும்; திருப் பழனத்தைத் தம்முடைய பழம்பதி என்பர் இறைவர். பழனத்துப் பெருமானிடத்திற் பொய்மையாக நடப்பவர்கள் வீண் காலம் போக்கினவராவார்கள். பழனத்துப் பெருமானை உலகம் பரவும்; அவர் திருமால் தொழுதேத்த இத் தலத்தில் இருக்கின்றார். தம்மைத் தியானிப்பவர்களுடைய பாவம், பந்தம், வினை இவைகளை அவர் தீர்ப்பார். அவருடைய தாள்களை அண்மித் தலைவணங்காதவர்கள் நல்ல மார்க்கத்தை உணரமாட்டார்கள். 'பழனம், பழனம்' என்று செபித்தால் நமது பழவினை நோய் நம்மைவிட்டு விலகிப்போம்.

## 108. பழையாறை

பழையாறை வடதளி அழகிய ஊர். நிறைநீர்ப் பொழில்களைக் கொண்ட ஊர். ஆறைவடதளிப் பெருமானைத் தொழுதால் துயர் தீரும், வினை நாசமாம், நோய்கள் வாரா. ஆதலால் அவருடைய திருவடியைத் தொழுது உய்வீர்களாக.

## 109. பள்ளியின் முக்கூடல்

இத் தலத்துப் பெருமானைப் பயின்று தொழாமல் என் நாளைப் பாழ்நாளாக்கித் திரிந்தேனே என வருந்துகின்றார் (அப்பர்).

## 110. பறியலூர்

இது வீரட்டத்தலம் (தக்கனை அடக்கிய தலம்).

## 111. பனங்காடு

பழிக்கத்தக்க யாதொரு குற்றமும் இல்லாத தலம் பனங்காடு.

## 112. பாச்சிலாச்சிராமம்

இத்தலத்தை முன்னதாகவே கோயில்கொண்டார் இந்தவர்.

## 113. பாசூர்

அந்திக்கோன் (சந்திரனுக்கு) அருள்பாலித்தவர் பாசூர்ப் பவளமன்ன பரமனார். அவர் நீண்டதும் தீயதுமான பட அரவைப் பிடித்தாட்டினவர்; பலரும் பயின்று தாழும் பதி பாசூர். பொழுதின் ஒரு பாகமெல்லாம் பாசூரிற் பெருமான் தங்குவார். மண்ணோரும் விண்ணோரும் அவரைத் தொழுது போற்றுவார்கள்

## 114. பாண்டிக்கொடுமுடி

இத்தலம் கொங்கு நாட்டைச் சேர்ந்தது. தேவர்கள் இருக்கு வேதம் சொல்லிப் பணிந்தேத்திய பதி இது. இது இறைவனுக்கு உகந்த ஊர். திருக்கொடுமுடி என்று சொன்னவுடனே வினை அடியோடு கெட்டொழியும். இது கைகண்ட (பிரத்தியக்ஷமான) உண்மை. கொடுமுடிக் கூத்தப்பிரானைத் தொழ நம் வினை நாசமாம்.

## 115. பாதிரிப்புலியூர்

இத் தலத்துப்பெருமான் "தோன்றாத் துணைவர்." தேசமெல்லாம் இறைஞ்சும் தலம் திருப்பாதிரிப்புலியூர். இத்தலத்து அந்தணர்கள் பிரமனே போல்வர். பண் நிறைந்து அமைந்த பொருள்கள் (இசைக் கருவிகள், இசைப் பாடல்கள் பலவகையனவும்) பயிலும் தலம் பாதிரிப்புலியூர். சூரியனது ஒளியையும் சந்திரனது தண்மையையும் கொண்டவர் வாழும் பதி இது. திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமானுடைய அடியார்களின் வழி வழி அடியார்களுக்குக் கிடைக்கமாட்டாத அரிய பொருள் ஏதேனும் உண்டோ? (ஒன்றும் இல்லை என்றபடி).

## 116. பாம்புரம்

இறைவன் காதலிக்கும் தலம் பாம்புரம்.

## 117. பாலைத்துறை

மல்லிகை, சண்பகம் இவற்றின் புதிய பூக்களை அடித்துக்கொண்டுவரும் நீரையுடைய காவிரிக் கரைத்தலம்

பாலைத்துறை. காவிரி நீரில் கூட்டம் கூட்டமாய் எங்கும் மூழ்கிக் கன்னியர் போற்றி அடிதொழ வீற்றிருக்கின்றார் பாலைத்துறை இறைவர். பாலைத்துறை இறைவரை வானவர் திசை நோக்கித் தொழுவர். இத்தலத்தைக் கைகூப்பித் தொழுபவர்தம் வினை ஒய்ந்தொழியும்.

## 118. புகலூர்

குளிர்ந்த தலம். பழைய தலம்; தனக்கு ஒப்பிலாத பொழில் சூழ் தலம். புன்னை வனத் தலம்; புன்னை மரத்தில் வண்டு உறங்கும் தலம். மலர் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த தலம். தீர்த்த விசேடமான பொய்கையை உடைய தலம். இறைவர் ஏறேறிப் புகலூருக்குப் போயினர்; புகலூரைவிட்டு நீங்கார். 'புகலூர்ப் புராணர்', 'புகலூர் மேவிய புண்ணியர்', 'அறம்புரிந்த புகலூரான்'—என்கின்றார் அப்பர். புகலூர்ப் பெருமானை 'என் அத்தா' என்று அழைத்தால் நமது இடர் தீரும்.

## 119. புத்தூர்

நல்ல பொழில்சூழ் தலம். தென்றல் வீசும் தலம். நல்ல வயல் சூழ் தலம். கொன்றை பொன்போன்ற மலரைக் காட்ட, அருகிலிருந்த காந்தள் கையை நீட்டுவதுபோல மலரைக் காட்ட, அதைக்கண்டு வண்டு (தேன்) இசைப் பாட்டைப் பாடும் செழுமை வாய்ந்த முல்லைநிலத்துத் தலம்; வளம்கொண்ட எருமைகள் மேட்டில் ஏறி மடுவிற் படியும் தலம். சீர்பொருந்திய தலம்; தேர் செல்லும் நீண்ட வீதிகளை உடைய தலம். இத்தலத்தில் இறைவர் விருப்புடன் என்றும் வீற்றிருக்கின்றார்.

## 120. புள்ளிருக்குவேளூர்

இறப்பதன்முன் புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானை வாழ்த்துங்கள். அவர் திருவடியை உள்ளத்தில் வைக்காதவர்கள் நரகக் குழியின் நடுவில் இருக்கவேண்டி வரும். புள் (சம்பாதி—சடாயு)பூசித்த தலம் புள்ளிருக்குவேளூர். கூற்றம் வருவதற்குமுன் புள்ளிருக்கு வேளூரைப் போற்றி

ஞல் நம்மீது சேறிவரும் (வினை முதலாயின) அற்றுப்போம். புள்ளிருக்குவேளூர் என்று கூறினாலே இடர்கள் வாரா. அத்தலத்தை விருப்புடன் தொழுபவர்களின் வினை அழியும். அத்தலத்தை நினைந்து உருகி நைபவர்களின் உள்ளம் குளிர்ந்திருக்கும். அத்தலமீது பற்றுவைப்பவர்களின் பாவம் ஓடிப்போம். அத் தலத்துப் பெருமானை வாழ்த்த இன்பம் பெருகும்.

## 121. புறம்பயம்

புறம்பயத்தைத் தமது ஊர் என்பர் இறைவர். புறம்பயத்தில் இறைவன் அறம் புரிந்ததாக வரலாறு.

## 122. புன்கூர்

வயல்களில் கயல்மீன் பாயும். தாமரை நிரம்ப மலரும். நிழல்தரும் சோலைகள், பொழில்கள் உண்டு. இறைவர் 'சிவலோகநாதர்' எனப்படுவர்.

## 123. புனவாயில்

கடற்கரைக்கு அருகில் உள்ள தலம். பற்று அற்ற பெரியோர் சேரும் பழம்பதி.

## 124. பூந்துருத்தி

மலர்நிறை பொழிலை உடைய தலம். நீர் நிறைந்த செல்வத்தை உடைய தலம். இறைவர் "பூந்துருத்திப் பொய்யிலி" எனப்படுவர். அறச்செயல்கள் நடைபெறும் தலம். 'பூந்துருத்தி, பூந்துருத்தி' என்று ஜெபித்தால் பொல்லாத இந்தப் புலால் துருத்தியாகிய உடல் இனி வாராது—பிறப்பு அறும் என்றபடி.

## 125. பூவணம்

பொழில் விளங்கும் தலம்.

## 126. பூவனூர்

வெண்ணியாற்றின் தென்கரையில் உள்ள தலம். பூவனூரிற் புகுந்தவர் வினைபோம்; பூவனூர் எனக்கூறினும் வினைபோம். அத்தலத்தைப் போற்றுபவர்கள் மனிதரிற் சிறந்த மனிதர். பூவனூர் சிவபிரானுடைய ஊர். இறந்துபடுமுன் பூவனூர் ஈசன் பெயரைக் கற்று வாழ்த்துவீராக. பூவனூர்ப் பெருமானுடைய திருநாமத்தை நாவினால் நூறு லட்சம் தரம் கூறினவர் பாவங்கள் எல்லாம் நீங்கப்பெற்றுத் தேவேந்திரனைக் காட்டிலும் மிக்க செல்வபோகத்தர் ஆவார்கள்.

## 126-A. பெண்ணாகடம்

கடந்தை (தலம் 30)—பார்க்க.

## 127. பெருவேளூர்

புருக்கள் (பெண்ணும்—ஆணும்) நீங்காத தலம். இத்தலத்துக் கோயிலில் இறைவர் விரும்பி உறைகின்றார். பெரியோர் இத்தலத்தைப் பத்தியுடன் போற்றுவர்.

## 128 பேணுபெருந்துறை

அரிசில் ஆற்றின் கரையில் உள்ள தலம். இத்தலத்தில் இறைவர் ஆட்சி கொண்டுள்ளார்.

## 129. பேரெயில்

மிக்க களிப்புடன் உழைத்து உள்ளத்துள் இறைவனுடைய திருவுருவை நிறுத்தி 'எந்தை பிரானே' என்று இரவும் பகலும் அவரை அழைத்து அன்பு செய்யும் அடியார்களின் குற்றங்களை நீக்குவர் பேரெயில் இறைவர்.

## 130. பைஞ்ஞீலி

தாழைப்பொழில் சூழ்ந்த தலம். கோடல், கோங்கம் முதலிய முல்லை நிலத்து மரங்களில் வண்டின் இசைப்பாடல் ஒலி கேட்கும். நீர் நிறைந்த வயற்பகுதிகள் சூழ்ந்த தலம்;

## 136. மழபாடி

மறை ஒலி கலந்த மாடங்களை உடைய தலம். மேகம் சேர்ந்துள்ள வான் விளங்கும் தலம். பசும்பொன், முத்து, வயிரப்பலகை இவைதம் குவியல்கள் மலைபோல் நிறைந்த தலம் மழபாடி. நான்கு மறைகளும் பூசித்து வரம்பெற்ற தலம். இறைவன் "மழபாடி மணாளர், மழபாடி மழுவாளனார், மழபாடி வயிரத்தூண்"—எனப் பாராட்டப்பட்டுள்ளார். மழபாடிப்பெருமான் புலியோர்க்கு என்றும் வரம் கொடுக்கும் பெருமான்; வழித்துணையாகும் பெருமான்.

## 137. மறைக்காடு

அழகிய ஊர்; கடலின் முத்தலைவும் அலைகள் தெற்கிலிருந்து மோதும் தலம். ஒலிகொள் தலம். சங்கு வந்து அலைக்கும் கடலிற் கப்பல்கள் வந்து சூழும் தலம். நல்ல சங்குகள் முத்துக்களை ஈனும் தலம். தாழைகள் பூக்கும் பொழில் அமைந்த தலம். நெய்தல், ஆம்பல், நிறைந்த வயல் சூழ் தலம். சுரபுன்னை, புன்னை, ஞாழல் வளரும் தலம்; முல்லை நிலத்து அருகே உள்ள மக்கள் வலம் செய்து வணங்கும் பழைய தலம். நான்கு வேதங்களும் பூசித்த தலம். மாதர்கள் வலஞ்செய்து வணங்கும் தலம்; வண்டுகள் தேனுண்டு பாடும் தலம். செல்வ மல்கு திருவிழாக்களுக்கு வருபவர்கள் வலஞ்செய்து வணங்கும் தலம்; படுக்கையிலும் தூங்காது இறைவனைப் போற்றும் பக்தர்கள் வலம்வந்து வணங்கும் தலம். தேவியுடன் இறைவன் வீற்றிருக்கும் தலம்; தேவர்களும் விரும்பி எதிர்கொள்ளும்வகையில் மண்ணினூர் வணங்கும் தலம். இறைவன் *நட்டம் ஆடியும் நான்மறை பாடியும இட்டமாக வீற்றிருக்கும் தலம் திருமறைக்காடு. இத்தலத்தில் விளக்கின தீபத்தைத் தூண்டி எரியச்செய்த எலிக்கு உலக ஆட்சியைக் கொடுத்தார் இறைவர்; திருமறைக்காட்டுப் பெருமானை விரும்பிக் கருதும் அடியார்களின் பாதத்தைப் பணிய நம் பாவம் ஒழிந்துபோம்.

---

* இங்குத் தியாகராஜப்பெருமான்—புவனிவிடங்கர், ஹம்ஸ பாத நடனத்தினர்.

## 138. மாற்பேறு

அழகிய ஊர். மந்திகள் பாயும் பொழிலையுடைய ஊர். வண்டுகள் ஒலிக்கும் பொழில்களை உடைய ஊர்; பூராசொலி ஒலிக்கும் பொழில்களை உடைய ஊர். உயர்ந்த மாடங்களைக்கொண்ட ஊர். *நால்வர்க்கு அறம் ஆலநிழலில் உரைத்த பெருமான் வீற்றிருக்கும் தலம்; பொரவல்ல சக்கரப் படையைப் பெறுதல் வேண்டிப் பூசித்த திரு மாலுக்கு அருள்செய்த பெருமான் இத்தலத்துப் பெரு மான். அவருடைய திருநாமங்களை மகிழ்ந்து உரைத்துப் பத்திமேலிட்டால் அழவல்லார்க்கு அவர் அருள் புரிவார். நல்வழியில் நின்று விருப்பத்துடன் பெருமானைத் தியா னிக்கும் மாதவர்கள் வாழும் பதி திருமாற்பேறு. திருமாற் பேற்றைக் கைதொழும் அன்பர்கள் நம்மை ஆளுடைய பெரியோர்கள்; 'கைப்புள்ள விடத்தை உண்ட கண்டனே' என்றால் பெருமான் சேமித்து வைத்த நிதிபோல உதவுவர்; 'காட்டில் மாநடம் ஆடும் பெருமானே! காத்தருள்' என்றால் நமது வாட்டத்தைத் தீர்த்து உதவுவார் அவர்; கூற்றை விலக வைத்து நம்மை ஆளும் மாற்றிலாச் செம் பொன் அவர்; அவருடைய இரண்டு பாதங்களையும் நினைத் தால் உலகையே ஆள வைப்பார் அவர். திருமாற்பேற்றைக் கண்டு கைதொழுதால் பழவினை ஒழிந்துபோம்; சிவ பிரானே தொழத்தகு பாத்திரம் என உணர்ந்து பணிந் தால் அவர் மாத்திரை நேரத்தில் அருள்புரிவார். நோய் பிணிகளைப் போக்கவல்ல மருந்து அவர். திருமாற்பேற்றை அன்புடன் தொழுபவர்க்குத் துயரம் இல்லை, துன்பம் இல்லை, இடர் இல்லை, கவலை வாராது, வினை பீடியாது, வினை தேய்ந்துபோம், பாவம் ஒழிந்துபோம். இத்தலத்தைப் பாடுவார் பரலோகம் பெறுவார். அருத்தியால் தொழு வார்க்கு இல்லை அல்லல். 'மாற்பேறு' எனக் கூறினோர்க் முடிவிலாத இன்ப நிலைகூடிடும்.

---

* திருமாற்பேறுக்கு அருகில் உள்ள கோவிந்தவா தக்ஷிணாமூர்த்தி சந்நிதி விசேடம்.

## 139. மீயச்சூர்—மீயச்சூர் இளங்கோயில்

மீயச்சூரில் பழையகோயில், புதியகோயில், வேறு கோயில்கள் இருந்தன. இறைவனுக்கு இளங்கோயிலே (புதிய கோயில்) மிக உயர்ந்தது; அக்கோயிலை விட்டு நீங்காதிருந்தார் இறைவர் தேவியுடன்: [பழைய கோயிலுக்குப் பழுது பார்த்திருந்த காலம் அப்பர் சுவாமிகள் மீயச்சூருக்குச் சென்ற காலம். சுவாமி பாலாலயத்தில் (இளங்கோயிலில்) பூசிக்கப்பட்டு வந்தார். ஆதலால், "மீயச்சூர் இடைகொண்டேத்த நின்றார்" என்றார் அப்பர்.] மக்களுடைய துன்பத்தைத் தீர்க்க, குற்றங்களை நீக்க, இறைவர்—இளங்கோயிலில் இடங்கொண்டுள்ளார்.

## 140. முண்டீச்சுரம்

தென்பெண்ணை நதி இருகரையும் பரந்து பெருகும் தலம். சிவபெருமான் 'சிவலோகன்' எனப்படுவார்.

## 141. முதுகுன்றம் (விருத்தாசலம்)

இது இறைவனுடைய பழைய ஊர்.

## 142. முருகன் பூண்டி

இது முல்லை நிலத்துக் (காட்டகத்துத்) தலம்.

## 143. மூக்கீச்சுரம் (உறையூர்)

திரிசிராப்பள்ளிக்கு அருகில் உள்ள தலம்.

## 144. வலஞ்சுழி

காவிரிக்கரைத் தலம்; மயில்கள் ஆடிக் கூவும் பதி. மலங்கு மீன்வகை பாயும் வயல் சூழ்ந்த பதி. மாமரம் ஆதிய மரங்களைக்கொண்ட சோலையை உடைய பதி வண்டு பண் முரலும் பதி. வண்டலொடு மணலைக் கொண்டுவரும் (பொன்னி) காவிரி நீரைக்கொண்ட பதி. மாடவீதிகள் உள்ள பதி. தேவர்களும் முனிவர்களும் உமையும் பூசித்த பதி. திருவலஞ்சுழியை வலம் வந்து வணங்கினவர்களின்

திருவடி என் தலைமேல்—என்கின்றார் அப்பர். வலஞ்சுழி யீசனை வணங்காத சில பாவிகளும் உளரே என வருந்து கின்றார் அப்பர். மூப்புற்று உடல் கூனும்போது வலஞ்சுழி நாதனைச் சரணை (ஆதரவென)க் கருதி உய்வீர்களாக. அவருடைய திருவடியை ஏத்தினால் நமது பாவம் ஓடிப் போம் 'வலஞ்சுழியே, வலஞ்சுழியே' என்று நீங்கள் உருப் போட்டால் வல்வினைகள் ஒழியும். வான் ஆட்சி கிட்டும்.

## 145. வலம்புரம்

ஒருபுறம் குவளை, செந்நெல், ஆம்பல், நெய்தல்; தெருவினில் தென்னையும் மாமரமும், தோட்டங்களிற் பழங்கள்—இங்ஙனம் விளங்கும் வலம்புரம் என்னும் தலம். நீர்ப்பறவைகள் ஒன்றுகூடி ஆரவாரித்து இறகுகளை உலர்த்தி நிற்கும் இடங்கள் உள்ள தலம் வலம்புரம். வளப்பம் பொருந்திய வயல்களையும், மதி தவழும் மாட வீதிகளையும் கொண்ட தலம் வலம்புரம். செழிப்புள்ள வயல்சூழ் தலம்; கப்பல்கள் உலவும் கடலின் பக்கத்தில் உள்ள தலம். அடியார்கள் மலர் தூவிக் கீதம் பாடும் தலம்; நல்ல கலைவல்ல மறையவர்கள் காணக் காண, இடபம் ஏறிப் பூதங்கள் சூழத் தமக்கு உகந்த மலைமகளோடும் வலம்புரத் திற் புக்கு வீற்றிருக்கின்றார். பண் நிரம்பப் பாடிய சம்பந்தப் பெருமானும் தாமும் (அப்பரும்) தலங்களை ஒன்றின்பின் ஒன்றாகத் தரிசித்து இறைவனைத் தொடர்ந்து பின்வரும் போது பெருமான் வலம்புரத்திற் புகுந்து வீற்றிருந்தருளி னார். பின்னாலேயே வந்திருந்த தன்னைப் (அப்பரை) புறக் கணித்து, ரகசிய மாயப்பேச்சைப் பேசி, 'வா வா' என உரைத்து வலம்புரமே புக்கு மன்னினார் இறைவர். மங்கல மனை விசேடத்தைக் கொண்டவர் வலம்புரத்து அடிகள்; அவரை வளைபயில் இளையர் கன்னியர் ஏத்திப் பணிவர்.

## 146. வலிவலம்

தேவர்கள் வணங்கி ஏத்தும் தலம்.

## 147. வன்னியூர்

இத்தலத்தில் தாமரை மலரும் வயல்களில் கயல்மீன் பாயும்; அருகே அன்னங்கள் மேயும்; மணங் கமழும் மாடங்களும், மதிலும் சூழ்ந்த தலம் இது. தமது தாளை அடைந்தவர்களுக்கு வான் அளிப்பார் வன்னியூர்ப் பெருமான்; உண்மையுடன் தம்மை நினைப்பவர்களின் வல்வினையைத் தீர்ப்பார் அவர்.

## 148. வாஞ்சியம்

குளிர்ந்த வயல்கள் எதிர் எதிரே கூடி விளங்கும் தலம்; பூம்பொழில்கள் சூழ்ந்த தலம். வட்டமாயும் எதிர் எதிரேயும் உள்ள மாடங்களை உடைய தலம். வேதம், வேதாங்கம் இவைகளுடன் செய்யும் வேள்வியாளர்களும், யாகம் செய்பவர்களும் பயிலும் தலம். செங்கண்மால் இடங்கொண்டு (பூசித்த) தலம். சூரியன், அக்கினிதேவன், யமன், தேவர்கள் போற்றும் திருவடியை உடைய பிரான் திகழ்ந்து வாழும் சிறப்பினை உடைய தலம்; கற்றுச் சேர்தரும் அடியார்கள் கருதும் தலம்; விரும்பும் அடியார்கள் பிரிதற்கரிய தலம். இத்தலத்தில் தங்குபவர்கள் தேவர்க்குத் தேவராவர்; இத்தலத்தைப்பற்றிப் பாடுபவர்களுக்குப் பாவமே கிடையாது; இத்தலத்தை அன்புடன் அடைபவர்களுக்குத் துயர் ஒன்றும் வாராது. இத்தலத்தின் பெருமை தெரிந்து வாழ்பவர்க்குச் செல்வம் உண்டாகும்.

## 149. வாட்போக்கி

கின்னரம் என்னும் இசைப்பறவைகளின் ஒலி கேட்கும் தலம். ஆடல் பாடல் விரும்பினவர் வாட்போக்கி நாதர். நிரம்ப அருள்பாலிப்பவர். ஒளிப்பவர்களிடம் தாமும் ஒளிப்பார். குற்றமற்றவர்களிடம் உண்மையுடன் நிற்பார். சீலத்துடன் இருப்பவர்களிடம் செம்மை காட்டுவர். ஆதலால் வாட்போக்கியாரிடம் அன்புவைத்து அவருடைய இணையடிகளை ஏத்தித் துதியுங்கள்; அவருடைய புகழ்களை எடுத்து உரைப்பீர்களாக; அவரைத் துதித்து இன்புறு

வீர்களாக. அவர் திருக்கோயிலில் திருவிளக்கை உங்கள் இருள் (அஞ்ஞானம்) நீங்க ஏற்றி வைப்பீர்களாக. அவரை மனங்கசிந்து ஏத்தினால் நமது வாட்டம் நீங்கும். அவரைச் சிந்திப்பவர்களுடைய வினையை அவர் தீர்ப்பார்.

## 150. வாய்மூர்

தென்னைமரங்கள் உள்ள தலம். பொழில் சூழ்ந்த தலம். நீர்நிலைகள் அருகில் உள்ள கோயிலை உடைய தலம். வேத ஒலி சிறந்திருந்த தலம்.

குறிப்பு: 'புனற்கே பொற்கோயில் புக்கதும்' [6-50-9] என்றதனால், அப்பரைத் திருவாய்மூருக்குப் பெருமான் அழைத்துச் சென்ற நாள் பூராடநாள் போலும்; புனல்=பூராடம்.

## 151. வான்மியூர்

வண்டு சேர்பொழிலை உடைய தலம். மாதர்கள் வணங்கி ஏத்தும் தலம். 'அருள்புரியும் ஆதியாய்' என்றலும் நமது மருளை வான்மியூர் ஈசன் அறுத்திடுவார். 'உமை பங்க' என்று அஞ்சி மலர் தூவி அழுதால்—நமது வஞ்சப் புத்தியைத் தீர்த்து, நமது வாட்டத்தைத் தீர்த்து, புனிதமாக்குவர் வான்மியூர் ஈசர். 'எந்தை ஈசன்' என்று ஏத்தினால் எதிர்தோன்றி அருளுவர். நமது வினைகளை, வேதனைகளைத் தீர்ப்பார்; பாவங்கள் ஒழிந்துபோம்.

## 152. விசயமங்கை

மங்கல வாசகர் (மாணிக்க வாசகர்? அல்லது மறை ஓதும் முனிவர்கள்) வாழ்த்தத் தேவியுடன் பெருமான் இத்தலத்தில் வீற்றிருக்கின்றார். [கோவந்தபுத்தூரில் உள்ள கோயிலையும் விஜயமங்கை என்பர் ஆராய்ச்சியாளர்]. வெள்ளிடை பூசித்து அருள்பெற்ற தலம். அருச்சுனன் பூசித்து வரம்பெற்ற தலம். 'விஜயமங்கைச் செல்வ போற்றி' எனத் துதித்தால், தென்திசை எல்லையோர் (இயமனும் இயமன் தூதுவரும்) நம்மைத் துதித்து இன்சொல்

பேசுவர்; நமது பாவங்கள் அழிபடும்; நன்மைகள் பெற லாகும், இறைவனுக்கு உரியவராகி உய்யப்பெறுவோம்; விஜயமங்கையை வலஞ்செய்வோர்களும், வாழ்த்துவோர் களும் நன்னெறியை விரும்பி நலம்புரிவார்கள்.

## 153. வீழிமிழலை

அழகிய ஊர். குளிர்ந்த ஊர். நீர் நிறைந்த ஊர்; செல்வ மல்கும் ஊர்; உயர்ந்த பொழில்கள் உள்ள ஊர். வேள்வி இயற்றும் அந்தணர்கள் தொழும் தலம். திருமா லுக்குச் சிவபிரான் சக்கரம் தந்த தலம்; சக்கரத்தைப் பெற்ற திருமால் விண்ணினின்றும் கீழே கொண்டுவந்த விமானத் தில் (விண்ணிழி விமானத்தில்) சிவபிரான் வீற்றிருக்கும் தலம்; சிவபிராற்கு இருப்பிடமாகிய தலம். மண்ணுளோர் நித்தலும் விரைந்து சென்று தொழும் தலம். பத்தியாற் சிறப்புற்ற அந்தணர்கள் வாழும் தலம். தேவர்கள் மாலைப் பொழுதில் வந்து பாலையாழொடு செவ்வழிப் பண்ணில் (யதுகுல காம்போதி இராகத்தில்) பாடி இறைவனை வழிபடும் தலம். புல்லாங்குழல் செய்வோர் அதைப் பிடித்துத் திரியும் தலம். தேவர்களும் அறிஞர்களும் விரும்பி ஏத்தும் தலம். தேவர்கள் இரவும் பகலும் போற்றித் துதிக்கும் தலம். தடை கூறாது தருமம் செய்வோர் வாழும் தலம். வினையற்றவர்கள் தொழுகின்ற தலம்; தழல் ஓம்பும் அந்தணர் வாழும் தலம். வேத ஒலியும் வேள்விப் புகையும் நீங்காத தலம். தமது தியானத்தை விண்ணிழி விமானத்தில் வைத்தவர், சிவ வேடத்தவர், குருச்சேத் திரத்தார் (சிறந்த தல வாசிகள்), பாடும் அடியார்கள், பழிப் பாரின் பழிப்பிலாத வேடத்தவர்கள் தொழுகின்ற தலம். சிவனடியார்கள் தம் வினை அழிய நாடிச்செல்லும் தலம்; பிறப்பு இறப்பு விலக விரும்பினவர்கள் தொழும் தலம். வீழிப் பெருமானுடைய திருவடியைச் சார்ந்தவர்கள் விண் ணுலகை ஆள்வர். அத்தலத்தைச் சிந்தியாதவர்கள் தீநெறி யிற் சிந்தையைச் செலுத்துபவராவர். 'மிழலை மணாளர்' என இத்தலத்துப் பெருமான் பாராட்டப்படுவர். திருவீழி

திருமுல்லையில் ஏழு நாள் தங்கினர் இறைவர் என்பர். மீண்டு சொல்வதும் அத்தலத்துக்கே என்பர்.

## 154. வெண்காடு

மேகம் தவழும் உயர்ந்த சோலைகள் சூழ்ந்த தலம். நறும் பொழிலும் சூழ்ந்த தலம். கொன்றை மலர்களைச் சொரிந்து காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று போதிலும் கனைத்து நின்று தவஞ்செய்து பூசித்த வெள்ளானை வேண்டிய வரத்தைக் கொடுத்த பிரான் வீற்றிருக்கும் தலம். அடியார் நாவினில் தேன்போல இனிக்கும் தலம் தமது பாவம் நீங்கப் பாவையர்கள் குளிக்கும் பொய்கையை உடைய தலம். மாதர்கள் ஒன்றுகூடி விரும்பி மகிழ்ந்தாடும் தலம். நெஞ்சமே! திருவெண்காட்டை அடைந்து உய்வாயாக. 'வெண்காடே, வெண்காடே' என்று கூறுவீர்களானால் தொலையாத வினைநோய்கள் தொலைந்து போகும்.

## 155. வெண்ணி

பழைய தலம் இது. இத்தலத்தைத் தலைவணங்கி எத்தினோர்களின் வினை கெடும்.

## 156. வெண்ணெய் நல்லூர்

பெண்ணை ஆற்றங்கரைத் தலம். திருக்கோயில் 'அருட்டுறை'—எனப்படும்.

## 157. வேட்களம்

பெரியோர் சேரும் தலம். திருவேட்களத்தை நாள் தோறும் விருப்பத்துடன் இனிதாக நினையுங்கள்; வேட்களத்தை அடையுங்கள்; நெஞ்சமே! திருவேட்களத்தைக் கைதொழுது விரும்பி இருப்பாயாக. அத்தலத்தைக் கைதொழுதால் துயரம், துன்பம், இடர் வாரா; கொடிய வினை பிடியாது; திருவேட்களத்துச் செல்வர் வல்வினையைத் தீர்த்துக் குளிர்விப்பார்; ஆதலின் அவரைத் தொழுவீர்களாக; என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம். மலர்

கொண்டு அவருடைய பொன்னடியைப் போற்றினால் அவர் நம்மைக் காத்தளிப்பர்.

### 158. வேதிகுடி.

கொன்றை, தாமரை, நீலோற்பலம் இவைகளின் மணம் கமழும் தலம். பொழிலும், பொழில்களிற் சேறும் கொண்ட தலம். வயல்களில் வாளை மீன்கள் பாய்ந்து குதிக்கும் தலம். தேனுண்டு வண்டுகள் ஆடும் தலம். பிரமன் பூசித்த தலம். திண்ணிய வினைகளைத் தீர்க்கும் பிரான் திருவேதிகுடிப் பிரான்.

## 123. தலங்கள் : ஆற்றங்கரைத்தலங்கள் [113]

அரிசிலாற்றின் கரையில் அரிசிற்கரைப்புத்தூர், பேணு பெருந்துறை; கடுவாய் (குடமுருட்டி) ஆற்றின் கரையில், கடுவாய்க்கரைப்புத்தூர்; காவிரிக் கரையில் ஆனைக்கா, இடைமருது, ஐயாறு கண்டியூர், குடந்தைக் கீழ்க் கோட்டம், குரக்குக்கா, குரங்காடுதுறை, துருத்தி, நெய்த் தானம், பராய்த்துறை, பழனம், பாலைத்துறை, மங்கலக் குடி, வலஞ்சுழி; கெடிலநதிக் கரையில் திருஅதிகை; கொட்டாற்றங்கரையில் (காவிரியின் கால்) குரக்குக்கா; கொள்ளிட நதிக்கரையில்—கோவந்தபுத்தூர் விசய மங்கை; பெண்ணையாற்றின் கரையில் திருமுண்டீச்சரம், திரு வெண்ணெய்நல்லூர் அருட்டுறை; மண்ணி நதிக்கரையில் ஆப்பாடி; வெண்ணியாற்றங்கரையில் திருப்பூவனூர்— ஆற்றங்கரைத் தலங்களாக—கடம்பூர், திருமாற்பேறு— கூறப்பட்டுள.

## 124. தலங்கள்—கடற்கரைத் தலங்கள்—கடல் அண்மையில் உள்ள தலங்கள் [114]

இராமேசுரம், (திரு)ஒற்றியூர், கழிப்பாலை, கோகரணம், சாய்க்காடு, நாகைக்காரோணம், திருப்புனவாயில், மங்கலக் குடி?, மறைக்காடு (வேதாரணியம்), (திரு)வலம்புரம்—

...நகரைத் தலங்களாகக் கூறப்பட்டுள. கோகரணத்துக்கு அருகில் உள்ள கடலை 'மாகடல்' எனக் கூறியுள்ளார். ...கடற்றுறையில் கப்பல்கள் நிறைந்திருந்தன. ...ஆரணியம், வீலம்புரம் என்னும் தலங்களிலும் கடற் ...றையிற் கப்பல்கள் நிறைய இருந்தன.

## 125. தலநாமங்களைக் கூறுதலின் விசேடம் [115]

தலங்களின் பெயரைக் கூற, கூறிப் போற்ற, இடர்கள் ...தொலையும், வினை மாயும், பரலோகத்து இனிய வாழ்வு ...ட்டும். தலப் பெயர்களைக் கூறிச் செபிப்போரை அணுகி வரும் நமன் தமர் 'இவர்கள் சிவன் தமர்' என்று ...கண்டுணர்ந்து (அஞ்சி) அகன்றுபோவர்.

## 126. தலப்பெயர்ப்படி பாகுபாடு [116]

தலப்பெயர்களின் முடிவைக்கண்டு அதன்படி பாகு ...படுத்தி 'அடைவு திருத்தாண்டகம்' என்னும் பதிகம் ...ன்று (284) அப்பர் அருளியுள்ளார்.

...உதாரணம்:

(1) ஆறு—என்னும் முடிவுக்கு ஐயாறு, பழையாறு, முதலிய 6 தலங்கள்.

(2) ஈச்சுரம்—என்னும் முடிவுக்கு இராமேச்சுரம், ...கேச்சுரம் முதலிய 15 தலங்கள்.

(3) ஊர்—என்னும் முடிவுக்கு ஆரூர், ஒற்றியூர் முதலிய 19 தலங்கள்.

(4) களம்—என்னும் முடிவுக்கு அஞ்சைக்களம், ...ங்களம் முதலிய 3 தலங்கள்.

(5) கா—என்னும் முடிவுக்கு ஆனைக்கா, கோடிகா முதலிய 4 தலங்கள்.

(6) காடு—என்னும் முடிவுக்கு மறைக்காடு, வெண் காடு முதலிய 8 தலங்கள்.

(7) குடி—என்னும் முடிவுக்கு கற்குடி, விற்குடி முதலிய 19 தலங்கள்.

(8) குளம்—என்னும் முடிவுக்கு இடைக்குளம், வளை குளம் முதலிய 4 தலங்கள்.

(9) கோயில்—என்னும் முடிவுக்கு ஆலக்கோயில் (கச்சூர்), கரக்கோயில் (கடம்பூர்) முதலிய 8 தலங்கள்.

(10) துறை—என்னும் முடிவுக்கு ஆவடுதுறை, மயிலாடுதுறை முதலிய 12 தலங்கள.

(11) பள்ளி—என்னும் முடிவுக்குக் காட்டுப்பள்ளி, சக்கரப்பள்ளி ஆதிய 10 தலங்கள்.

(12) மலை—என்னும் முடிவுக்கு அண்ணுமலை காளத்திமலை ஆதிய 17 தலங்கள்.

(13) வாயில்—என்னும் முடிவுக்கு புனவாயில், முல்லை வாயில் முதலிய 9 தலங்கள்.

(14) வீரட்டம்—என்னும் முடிவுக்கு அதிகைவீரட்டம், குறுக்கைவீரட்டம் ஆதிய 8 தலங்கள் கூறப்பட்டுள.

இவ்வாறு இத் தலங்களின் பெயர்களைக் கூறி செபிப்போமாகில் நாம் சிவன்தமர் என உணர்ந்து உடனே அகன்று போவர் நமன்தமர்.

## 127. தலமும் கோயிற் பெயரும் [117]

காரோணத் தலங்களாக—(கச்சியும்), நாகையும்; வீரட்டத் தலங்களாக—அதிகை; கடவூர், கண்டியூர், குறுக்கை; கோவலூர், வழுவூர்; பெருங்கோயிலுள்— அம்பர், தலைச்சங்கை கூறப்பட்டுள; சில தலங்களில் உள்ள கோயில்களின் சிறப்புப் பெயர்களும் கூறப்பட்டுள.; உதாரணம்—ஆக்கூர்த் தான்தோன்றி மாடம். ஆரூர்ப் பூங்கோயில், கச்சூர் ஆலக்கோயில், கடந்தைத் தூங்கானை மாடம், கடம்பூர்க் கரக்கோயில், கடம்பை இளங்கோயில், கருப்பறியலூர்க் கொகுடிக் கோயில், கருவிலிக் கொட்

[illegible]டை, கொட்டையூர்க் கோடீச்சுரம், சாத்தமங்கை அயவந்தி, சேறைச் செந்நெறி, தில்லைச் சிற்றம்பலம், நறையூர்ச் சித்தீச்சரம், மீயச்சூர் இளங்கோயில், (வெண்ணெய் நல்லூர்) பெண்ணை அருட்டுறை, வைகல் மாடக் கோயில்.

## 128. தலம்—ஸ்வாமி பெயர்—தேவிபெயர் [118]

தமது பதிகங்களில் அப்பர் பெருமான் சிற்சில தலத்து இறைவன் திருநாமத்தையும், தேவி திருநாமத்தையும் எடுத்தோதி உள்ளார்; உதாரணம்—

ஆக்கூர்த் 'தான்தோன்றி', ஆமாத்தூர் 'அழகர்', ஆனைக்கா 'பின்னிரக்கம் செய்வான்', 'கச்சிக்கம்பன்' காளத்தி 'கணநாதன்', கீழ்வேளூர்க்கேடிலி, குற்றாலம் 'குழலார் கோதை', திருப்புன்கூர்ச் 'சிவலோகன்', மழபாடி 'வயிரத்தூண்'.

## 129. தலத்துக்கு ஏற்ற ஸ்வாமி திருநாமம் [119]

இறைவனைக் குறிக்கும் பதங்களுள் அந்த அந்தத் தலங்களுக்குப் பொருத்தமான மோனை அழகு செறி பதங்களை அப்பர் பெருமான் ஆண்டுள்ளார். உதாரணமாக:—ஆரூர் அப்பன், ஆலங்காட் டடிகள், இன்னம்பர் ஈசனார், ஒற்றியூர் உத்தமன், காளத்திக் கற்பகம், குடந்தைக் குழகன், துருத்தித் தூமணி, பராய்த்துறைப் பசும்பொன், பாசூர்ப் பரஞ்சுடர், புத்தூர்ப் புனிதன், மருகல் மாணிக்கம், வெண்ணி விகிர்தனார், வேள்விக்குடி வேதியன்.

## 130. தலப்பெயரே கடவுளின் பெயர் [120]

காளத்தி, குடமூக்கு, மணஞ்சேரி, வாட்போக்கி—இவைபோன்ற தலப் பெயர்கள் இறைவனையே குறிக்கும் பெயர்களாக ஆளப்பட்டுள்ளன. அவிநாசி—இது கடவுளின் பெயர் தலப்பெயராயிற்று.

## 131. தேர்விழாத் தலங்கள் [121]

திருவாரூர், திருப்புத்தூர், திருப்பைஞ்ஞீலி என்னும் தலங்களில் (தேர் விழாவுக்குத்) தேர்கள் இருந்தனவாகத் தெரிகின்றது.

## 132. தலமும் பதிக எண்ணும்
### (முற்சேர்க்கை II, III)

அப்பர் பெருமானுடைய தேவாரப் பதிகங்கள் பெற்ற தலங்கள் 125. அத் தலப்பதிகங்களின் மொத்த எண் 275. பொதுப் பதிகங்கள் 37 ஆக அப்பர் பாடிய பதிகங்களின் மொத்த எண் 275+37=312. தேவாரம் பெற்ற தலங்களுள் அப்பரது தனிப் பதிகம் இல்லாது, அவரது பதிகங்களில் ஆங்காங்குச் சொல்லப்பட்ட தலங்கள் 102.

தேவாரப் பதிகமே இல்லாது அப்பர் தேவாரப் பதிகங்களில் வைப்புத் தலங்களாகக் கூறப்பட்ட தலங்களின் எண் 161.

மேற்சொன்னவற்றில் தலவிளக்க விவரம் ஒளிநெறியின் முற்சேர்க்கை II, III இல் காணலாகும்.

முற்சேர்க்கை II-இல் இருந்து சிற்சில விளக்கம் இங்குக் கூறுவோம் ;

| தலம் | | தனிப் பதிகம் (மொத்தம்) | வேறு தலங்களிற் சொல்லப்பட்ட இடங்கள் (மொத்தம்) |
|---|---|---|---|
| 1. | அதிகை | 16 | 15 |
| 2. | ஆரூர் | 21 | 32 |
| 3. | இடைமருதூர் | 5 | 10 |
| 4. | ஐயாறு | 12 | 17 |
| 5. | கச்சி | 7 | 44 |
| 6. | கயிலை | 4 | 43 |
| 7. | திருவீழிமிழலை | 8 | 5 |
| 8. | திருவெண்காடு | 2 | 15 |

## 133. (1) திங்கள் [122]

திங்களுக்கு — அந்திக்கோன், இந்து, சந்திரன், சோமன், திங்கள், நிலா, பிறை, மதி என்னும் பெயர்கள் உண்டு.

திங்கள் வானில் விளங்கும். சிவபிரானது திருமுடியில் இடம் பெற்றதே—திங்களுக்குச் சிறப்பு. சிவபிரானது (சடையில் உள்ள) பாம்பைக்கண்டு (திங்கள்) பிறை அஞ்சும். திங்களை ஒரு மின்னல் எனக்கருதி (அது இடிஇடிக்குமோ என அஞ்சிச்) சிவபிரானது உடலிற் கிடக்கும் பாம்பு ஒடுங்கி அடங்கும்.

### (2) திங்களும் சிவனும் [123]

தக்கனால் ஏற்பட்ட சாபம் நீங்கவேண்டி அஞ்சி அழுத திங்களின் சாபப் பற்றினைச் சிவபிரான் நீக்கி அருளினார்; குறைமதியத்தை வளர வைத்தார்; பாம்புடனே திங்களை நெருங்கப் பயில வைத்தார். திங்களும் ஞாயிறுமாகச் சிவனே விளங்குகின்றார். மாலை எழுந்த மதிபோலத் துலங்குகின்றார். தக்கன் வேள்வியிற் சந்திரன் தண்டனையும் அடைந்தான்; அருளும் பெற்றான்.

## 134. தியானம்—அதன் பயன் [124]

உள்ளத்தை வெளிச் செய்திகளில் ஈடுபடாதபடி—ஒன்றுமுகமாக ஒடுக்கி—இறைவனைத் தியானித்து உணர்ந்தால் நமது கள்ள வினைகளை அவர் ஒழித்து உதவுவர்.

உள்ளத்தை ஒடுக்கிச் 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்தைத் தியானித்திருந்தால் ஒழிய இறைவன் திருவருள் கிட்டாது. பெருமான் என் உள்ளே விளங்க வீற்றிருந்தும், அந்தோ! என் உள்ளே அவரை நினையமாட்டேன்—என்ன பாவம்; ஏனோ நான் பிறந்தேன்.

## 135. திருநீறு [125]

(i) சங்கொத்த நீறு, சாம்பல், சுடலைப்பொடி, சுண்ண வெண்ணீறு, தவளப்பொடி, தூநீறு, பால் வெண்ணீறு, பொடிநீறு—எனத் திருநீறு குறிக்கப்பட்டுளது.

(ii) திருநீற்றின் பெருமை, திருநீறு இடும் முறை

விலையிடமுடியாத பெருமை வாய்ந்தது திருநீறு. விரதிகளுக்கு அணிகலமாக விளங்குவது திருநீறு. அறிவைத் தருவதும் விரும்பத்தக்கதுமான செயல் எது என்றால் நாளும் திருநீறு அணிவாரை நினைத்துப் போற்றுதலே. விரதிகளுக்குத் திருநீறே (வெந்த நீறே) அருங்கலமாம். வாய் குளிரச் செபமையாகச் 'சிவாயநம' என்றுகூறித் திருநீறிடுதல் வேண்டும். திருமந்திரம் ஆகிய 'நமசிவாய' என்னும் திருஐந்தெழுத்தைக் கூறிக்கொண்டே திருநீறணிந்துகொண்டால் அழலிற்பட்ட விறகுபோல நமது வினைநோய் வெந்து அறும்; கெட்ட நோய்கள் கெட வேண்டில், வெண்ணீறு அணிதல் வேண்டும். வெண்ணீறு அணியாதவர்க்குச் செத்துச் செத்துப் பிறப்பதே தொழிலாகும்.

## 136. திருமால் [126—127]

[தலைப்பு 109 பார்க்க]

திருமாலின் அவதாரங்களுள்—அவர் (1) வராகமாய்ப் பூமியை இடந்ததும், (2) நரசிம்மமாய் இரணியனைக் கொன்றதும், (3) குறளனாய் - வாமனனாய் மாவலியிடம் மண் இரந்ததும், நீண்டு பூமியைத் தாவி அளந்ததும், அந்த வாமனரது உடல் உதிரத்தைச் சிவன்கொண்டு அவரை வணங்கவைத்ததும், (4) இராமாவதாரத்தில் இராவணனை இராமர் கொன்றதனால் அவருக்குநேர்ந்த இடரையும், பாபத்தையும் சிவபிரான் நீக்கினதும், (5) கிருட்டிணாவதாரத்தில் அவர் ஏழு விடைகளை அடக்கியதும், குருந்து ஒசித்ததும்,

குழல் ஊதியதும், பூமியை உண்டதும், பேய்முலை உண்டதும், மலையைக் குடையாகக் கொண்டதும், குதிரையின் வாயைப் பிளந்ததும், (6) பத்து அவதாரங்கள் எடுத்ததும் கூறப்பட்டுள.

திருமாலுக்கும் அழிவு உண்டு. அவருடைய ஆயுதங்கள் சக்கரமும் சங்கும். அவரது இருப்பிடம் வைகுந்தம். அவர் இலக்குமியின் கணவர்; அவர் தாமரைக்கண்ணர்; கடலையும் பூமியையும் காப்பவர்; குடக்கூத்து ஆடுபவர்; அவர் வாகனமும் கொடியும் கருடன்; அவருக்கு உரிய நாள் திருவோணம்; அவர் நிறம்—கறுப்பு, கடல் நிறம், மேக நிறம்; நீல நிறம் என்று கூறப்பட்டுளது. (கடல் நஞ்சு அவரைத் தாக்கினதற்கு முன்பு) அவர் நிறம் வெள்ளை. அவர் திருநீற்றை நிறையப் பூசுவர். தம் கண் மலர் கொண்டு சிவனைப் பூசித்துப் பெற்ற சக்கரத்தால், சக்கரன் என்பவனது உயிரை வௌவினார். அவர் பாற்கடலில், ஆலிலையில், பாம்பணையிற் பள்ளிகொண்டுள்ளார். அவரைத் தேசமெல்லாம் தொழுது பரவும். தேவகணங்கள் அவரைத் தொழுது ஏத்தும். அவர் பழிப்பு இலாதவர். அவர் மாயை வல்லவர். அவர் எங்கும் வியாபித்துள்ளார். அவருடைய திருநாமங்களாகக் கூறப்பட்டவைகளுள்: அரவணையான், ஆழியான், ஓணப்பிரான், கடல்வண்ணன், கண்ணன், கருடத் தனிப்பாகன், காணிக் கிரந்தவன், குடமாடி, கேசவன், கொண்டல்வண்ணன், கோவலன், கோளரி, திருமகள்நாயகன், தீர மிக்கான், நாரணன், மாதவன், மாயன், மால்—என்பன முக்கியமாகக் கூறலாம்.

## 137. திருவிளையாடற் சரிதங்கள் [129]

சொக்கநாதருடைய அறுபத்துநான்கு திருவிளையாடல் களுள் (எல்லாம் வல்ல) சித்தரானது, தருமிக்குப் பொற்கிழி யளித்தது, நரிபரியாக்கியது, (பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுக்கப்) பன்றியானது, வைகைக் கரையில் மண் சுமந்தது, வளையல் விற்றது, (நந்தியை) மாணிக்கவாசக

ராகக் கொண்டது, விருத்தகுமார பாலரானது—என்னும் திருவிளையாடல்கள் கூறப்பட்டுள.

## 138. தீர்த்தங்கள்; தீர்த்தங்களும் சிவனும் [130]

ஈசன் உளன் என்னும் உணர்ச்சி இல்லாதவர்க்குக் கங்கை, காவிரி, குமரி, கடல் முதலிய தீர்த்தங்களில் ஆடினும் பயனில்லை. சிவனிடத்து அன்பில்லாதவர்கள் கோடி தீர்த்தம் கலந்து குளித்தாலும் அச்செய்கை, ஓடும் நீரை ஓட்டைக்குடத்தில் மூடிவைத்த மூர்க்கன் செயலை நிகர்ப்பதாகும்.

### (ii) தீர்த்தமும் சிவனும்

நாம் சென்று ஆடுகின்ற தீர்த்தங்களாகவே விளங்குகின்றார் இறைவர்; தீர்த்தங்களைத் தந்து பல பக்தர்களின் ஊழ்வினையை இறைவர் நீக்குகின்றார், நீக்கி நல்வினையைப் பெறச்செய்கின்றார்; கங்கை என்னும் தீர்த்தத்தை அவர் தமது திருமுடியில் வைத்துள்ளார்.

### (iii) தலங்களும் தீர்த்தங்களும்

அம்பர் என்னும் தலத்தில் 'அன்னப்பொய்கை' என்னும் தீர்த்தம் உள்ளது. திருவாரூரில் சிறந்த தீர்த்தங்கள் உள. அடியார் தமது மேலைவினை கெடவேண்டி அத்தீர்த்தங்களில் குளிப்பார், மூழ்குவர்; தீர்த்த நீரைச் சிரசில் தெளித்துக்கொள்வர்: மாதர்களும் தமது முடிமீது அங்ஙனம் தெளித்துக்கொள்வர்.

திருஆனைக்காவில் காவிரித் தீர்த்த ஸ்நாநம் விசேடம்.

திருஇடைமருதூரில்—காவிரியில் (தைப்) பூச ஸ்நாநம் விசேடம்.

திருஒற்றியூரில் (பங்குனி) உத்திர ஸ்நாநம் விசே...

கடுவாய்க்கரைப்புத்தூரில் (குடமுருட்டியாற்றில்) பூசஸ்னானம் விசேடமானது.

குடந்தைக்கீழ்க்கோட்டத்தில் (கும்பகோணத்தில்)

(தாவி) கோதாவிரி, காவிரி, யமுனை, கங்கை, சரசுவதி, பொற்றாமரை (சரயு), புட்கரணி (பயோஷ்ணி என்னும் நதி), கோவி (நருமதை), குமரி முதலிய தீர்த்தங்கள் வந்து கூடும் (மஹாமக) தீர்த்த ஸ்நானம் விசேடம்.

திருவெண்காட்டில் உள்ள பொய்கையில் (முக்குள நீரில்) தமது பாவம் நீங்க மாதர்கள் ஸ்நாநம் செய்வார்கள்.

## 139. தென்றல் [131]

தென்றல் குளிர்ந்து வீசும்; தென்றல் மன்மதனுக்குத் தேர்; புதியது; இனிமை தருவது; மகிழ்ச்சி தருவது; பெரும்புலியூர் வடதளி என்னும் தலத்தில் தென்றல் நிரம்ப வீசும்.

## 140. தேவர்—தேவதைகள்—முதலானோர் [132]

அமிர்தர், பேரமுதம் உண்டார்கள், அண்டவாணர், அமரர், இமையவர், உம்பர், வானவர், பொன்னுலகத்தவர்—எனத் தேவர்கள் குறிக்கப்பட்டுளர். "எண்ணிறந்த கோடி அமரர் ஆயம்"—எனக்கூறப்பட்டுளது. இயக்கர், கந்தருவர், கின்னரர், விச்சாதரர், சித்தர்—கூறப்பட்டுளர். தேவர்களுள்—அயன், மால், ருத்ரமூர்த்தி, (கால) பைரவர், இந்திரன், ஏகாதச ருத்திரர், குபேரன், வசுக்கள். பகன்—ஆதித்தன் (சூரியன்), சோமன் (சந்திரன்), அங்கி (அக்கினி), சாத்தன், நந்தி, தண்டி, சுந்தரன், குண்டோதரன், சங்குகன்னன், நிருதி, புதன், காமன், காலன், மாகாளர், வருணன், வாயு, வியாத்திரன்; தேவதைகளுள்—சாமுண்டி, இலக்குமி, காளி, வீரி, ரதி, பூமிதேவி—கூறப்பட்டுளர்.

## 141. தொகை [133]

எண்களில்—ஒன்றில்—இறைவனும்; இரண்டில்—திசை, பிறப்பு, பேறும்; மூன்றில்—உலகு, காலம், தமிழ், தீ, மூர்த்தியும்; நான்கில்—திசை, பொருள், மறையும்; ஐந்தில்—ஆனஞ்சு, எழுத்து, புலன், பூதமும்; ஆறில்—அங்கம், சமயம், சுவையும்; ஏழில்—இசை, உலகு, கடல், நரகம், பிறப்பு, மலையும்; எட்டில்—கலை, குணம், திசை, மலர், மூர்த்தி, வசுக்களும்; பத்தில்— அடியார் செய்கையும், திசையும்; பதினெட்டில்—கணமும்; முப்பத்துமூன்றில்—தேவர்களும்; அறுபத்துநான்கில் — கலையும்; எழுபத்தெட்டில்—பெருங்கோயில்களும், தொண்ணூற்றாறில்—தத்துவங்களும், தொண்ணூற்றெட்டில்—நோய்களும்; பல—என்பதில்—உயிர், ஊழி, கணம்; கீதம், சாத்திரம், பிறவி முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

## 142. நகைகள் [134]

அரைஞாண், ஆரம், கங்கணம், கழல், காஞ்சி, கிண்கிணி, குண்டலம், குழை, சிலம்பு, தோடு, தோள்வளை, பட்டம், பாடகம், மேகலை—எனப்படும் நகைகள் கூறப்பட்டுள.

## 143. நடையழகு, கவி சாதுர்யம் : நகைச்சுவை [135]

(1) இராவணனுடைய பத்துத் தலைகளைத் தாளால் ஊன்றி நெருக்கின சிவபிரானுடைய பக்தர்கள் நிற்குமிடத்திலும், கால தூதர்களே! சுருக்கென்று போகாமல் விலகுங்கள்; சுருக்கென்று போவீர்களானால் பெருமானது திருவடி உதை உங்களுக்குக் கிடைக்கும்.

(2) இராவணனை நெருக்கி அவன் கண்களில் ரத்தம் என்னும் சிவப்புச் சாந்து அலங்காரத்தைப் பண்ணித்

அகன்ற மார்பில் திருநீறு என்னும் வெள்ளைச் சாந்து அலங் காரம் செய்துகொண்டார் பெருமானார்.

(3) அரையிற் கோவணம், உண்பது பிச்சை, இவர் நிலை இப்படி இருக்க என்ன குடிவாழ்க்கை செய்ய மலை மகளை இவர் மணஞ்செய்து கொண்டனர்?

(4) உலகில் அரைக்கண் உடையவர் யாரும் இல்லை; பார்வதிக்கு 'அரைப்பாகம் கொடுத்துத் தான்' ஒன்றரைக் கண்ணன் ஆயினார் பெருமானார்.

(5) பெருமான் திருவடி இராவணன் முடிக்குக் கொடுக்கப்பட்டது. என் உச்சிமேல் பெருமான் வைத்த கால் வருந்துமே என்று நான் வருந்தி வாடுகின்றேன்.

(6) நான் எண்ணும் எண்ணங்களை எல்லாம், இறைவா! நீ என்னுள் உடன் இருந்தே அறிந்து கொள் கின்றாய் என்பதைத் தெரிந்து நான் வெட்கமுற்று, என் விலாமுறியச் சிரித்தேன்.

(7) ஊரோ ஒற்றிவைக்கப்பட்ட ஒற்றியூர். நீ ஆள் வதோ உலகமுற்றும்!

(8) பாம்பைக் கண்டு (மதி) திங்கள் ஒற்றியூரும், பாம்பும் அம்மதியைக் கண்டு ஒற்றியூரும்.

(9) கபாலம் ஏந்தி வீடுதோறும் பிச்சைக்குப் புகும் நீ, மலைமகளை மணஞ்செய்த அந்நாளிற்கூட உமக்கு ஆடை கோவண ஆடைதானே!

(10) கஞ்சி உண்ணும் சாக்கியரைச் சோறு உண் ணாவகை (பிறவாதபடி) வாளை வைத்தார் பெருமான்.

(11) பெருமானே! வில்லைப் பிடித்த கை தேவியின் கை; நாணை இழுத்த கை உனது கை. இப்படி இருக்க, நீ எப்படித் திரிபுரத்தை எரித்தாய்!

(12) பெருமானே! உனது சடையில் தனக்கு அருகில் பாம்பு கிடப்பதைக் கண்டு அரிவை கங்கை அஞ்சி

னள். கங்கையின் சாயலைக்கண்டு அவள் ஒரு மயில் என்று எண்ணி அந்தப் பாம்பு ஐயுற்று நின்றது; அந்தப் பாம்பைக் கண்டு பிறையும் ஒருபுறம் அஞ்சினது; இந்தக் கூத்தைக் கண்டு வெண்டலை சிரித்தது.

(13). கங்கையைச் சடையிற் சூடிய ஒலியைக்கேட்ட நங்கை பார்வதி ஊடினள்; அவ்வூடலை ஒழிக்கப் பிரானுர் சாமவேதம் பாடினர்; பாடலுக்குத் தக்க ஆடலும் ஆடினர்.

(14) யானை, குதிரை இருக்கப் பிரானுர் ஏனை வெள்ளெருது ஏறினர்?

(15) பெருமானே! நீ என்னைப் பிறப்பிக்காவிட்டால் 'துன்பம்' என்பதற்கு வேறு இடம் ஏது (குடியிருக்க)

(16) தேவி பார்வதி பார்த்துவிடுவாளோ என்று அஞ்சிக் கழுத்தில் உள்ள மணமாலையை இவர் கொடுக்க மாட்டார்; கங்கை பார்த்துவிடுவாளோ என்று அஞ்சி முடியில் உள்ள மாலையைக் கொடுக்கமாட்டார்; இப்படி இருக்க இந்தப் பெண்ணுக்கு எங்கிருந்த மாலையை இவர் எப்படி எடுத்துக் கொடுத்தார்.

(17) பிரமனும் மாலும் பெருமானது உருவை (அடி முடியைக்) காணமுடியாது தவித்தனர். அப்படி இருக்க அவரது திருவடியைக் காலன் அறிந்தான் (உதைபட்டு).

(18) பெருமானே! ஒரு விண்ணப்பம்: கங்கையை நீ சடையுள் ஒளித்து வைத்துள்ளாய்; அக் கள்ளத்தை உமை நங்கை அறிந்தால் வம்புதான் விளையும்.

(19) பெருமானே! உனது ஒட்டை வெண்டலையைத் தேவி பார்த்தால் வாட்டம் உறுவாள்.

(20) திருநீறுதான் விலையின்றிக் கிடைக்கும் என்று உணர்ந்தோ திருநீற்றை நீர் பூசுகின்றீர்.

(21) விற்கப்படும் ஊனைக்கூட வாங்க முடியாத வறுமையன், பெருமானே நீ;

(22) வீரட்டரே! திங்கள் என்னும் இளங்குழவி கங்கை அலையிற் சிக்கிக்கொள்ளாமல் அதைப் பாதுகாத்துக் கொள்ளும்.

(23) வெண்டலை ஏந்திப் பிச்சை ஊர்தொறும் எடுக்கின்றீரே ஒழிய அவர் அதை உண்டது இல்லை; அவர் உண்டது நஞ்சை

(24) நான் உறங்கும்போது, ஏதோ என்னைக் கேட்பது போல என்னுள் புகுந்து நின்றார் பெருமானார்; யார், ஐயா, புகுந்த நீர் ஒரு கள்ளரோ என வினவினேன்; நான் கள்ளர் அல்லர் வெள்ளர்தாம் என்றார் பெருமானார்.

## 144. நாகரிக நிலை [136]

### (அப்பர் காலத்தவை)

(1) வேதாரணியம் கடற்கரையிற் கப்பல்கள் உலவின.

(2) செருப்புகள் தோலால் அமைக்கப்பட்டவை.

(3) செல்வத்துக்கு அறிகுறியாக விளங்கினவை—கொடி, விதானம், கவரி, பறை, சங்கம், கைவிளக்கு.

(4) புல்லாங்குழல் செய்பவர்கள், வாசிப்பவர்கள் திருவீழிமிழலையில் இருந்தனர்.

## 145. நாடும், நிலமும் [137]

அமரர் நாடு, கெடில நாடு, கொங்கு, சோணாடு, நாவலந் தீவு, மருத வைப்பு—என்பன கூறப்பட்டுள.

இலங்கை — இருசுடர்மீதோடாத இலங்கை, உயர் இலங்கை, கடல்சூழ் இலங்கை, கருவரைசூழ் இலங்கை, தென் இலங்கை, மதில்சூழ் இலங்கை—என விவரிக்கப் பட்டுளது.

## 146. நாயன்மார் [138]

### 1. அப்பூதி அடிகள்

கலியும் நடுங்கி ஒடும்படி முத்தீயை ஓம்பி வளர்த்தவர் அப்பூதி. சிவபிரானது திருவடி அப்பூதியின் சிரமலராக விளங்கிப் பொலிவுற்றது.

### 2. அமர்நீதி நாயனார்

நல்லூர் என்னும் தலத்தில், "இந்தக் கீளார் கோவணத்தைக் காப்பாற்றிக் கொடு" என்று சொல்லிப் பொய் விளையாடல் ஒன்று விளையாடி வணிக அடியாராகிய அமர்நீதியாரை அவரது மனைவியுடன் பெருமான் ஆட்கொண்ட திருவிளையாடலை உலகினர் (இன்றும்) பேசுவர்.

### 3. கண்ணப்ப நாயனார்

தனிமையில் இருந்த பெருமானைக் காப்பதற்குக் கையில் வில்லும் அம்பும, பெருமான் உண்பதற்குக் கையில் இறைச்சிப் பாரமும், வாயிற் கொண்டு வந்த நீர் பெருமானது திருமஞ்சனத்துக்கும் ஆக விளங்கின கண்ணப்பர், சிவபெருமானது கண்ணில் ரத்தம் பெருகுவதைக் கண்டு தமது தோற் செருப்பால் இறைவனது கண்ணிடத்தே அடையாளம் வைத்துக் கொண்டு தமது கண்ணைப் பேர்த்தெடுக்க அம்பைக்கோத்தபோது சிவபிரான் கண்ணப்பரது கையைப் பிடித்துக் கண்ணைத் தோண்டாவண்ணம் காத்தளித்துக் கண்ணப்பரைத் தேவனாக ஆக்கி மகிழ்ச்சியுடன் சேர்த்துக்கொண்டார்.

### 4. கணம்புல்ல நாயனார்

கணம்புல்லரது அருமையான தவநிலைக்கு இறைவன் உகந்து அவர்க்கு அருள்பாலித்தார்.

### 5. காரைக்கால் அம்மையார்

பேய்த்தொழிலைப் பூண்ட அம்மையாரைப் பெற்றுள்ளார் பெருமானார்.

## 6. கோச்செங்கட் சோழன்

திருஆனைக்காவிற் பெருமானுக்கு நூலால் பந்தல் அமைத்து, சருகால் மேய்ந்து இறந்த சிலந்தியின் திருப்பணிக்கு உகந்து அந்தச் சிலந்தியை மறுபிறப்பிற் சோழ நாட்டில் சோழ அரசர் குலத்திற் பிறப்பித்தார். அந்தச் சோழனே கோச்செங்கட் சோழன்.

## 7. சண்டேசுர நாயனார்

அந்தணர் குலத்து ஒரு பிரமசாரியாம் அன்பர் ஆத்திமர நீழலில் அன்புடன் மண்ணால் ஒரு லிங்கத்தை அமைத்து, அந்த லிங்கத்துக்குப் பசும்பால் அபிஷேகம் செய்து கொன்றைமாலை சூட்ட—அந்த அன்பரின் தந்தையார் அச்செயலைக் கண்டு பொறாது (அபிஷேகத்துக்கு வைத்திருந்த பாலைக் காலால் இடறிப்)பிழை செய்ய, அந்த அன்பர் கோபித்துத் தமது தந்தையின் காலைக் கூர்மையுள்ள மழுவை வீசி வெட்ட, சிவபிரான் அந்த அன்புக்கு மகிழ்ந்து உடனே தன் முடிமீதிருந்த கொன்றைமாலையை அந்த அன்பருக்குச் சூட்டிச் 'சண்டேசர்' என்னும் அரிய பதத்தைத் தந்து உலகெலாம் போற்ற அவர்க்கு அருளினார்.

## 8. சாக்கிய நாயனார்

கஞ்சி உண்ணும் சாக்கிய சாதி அன்பர் மறவாது கல்லை எறிந்து (தம்மைப் பூசிக்க) அந்தக் கல்லையே புதுமலராக ஏற்றுக்கொண்டு அந்த அன்பருக்கு வானுளும் பதவியை அருளினன் இறைவன்.

## 9. ஞானசம்பந்தர்

இவர் கழுமல (சீகாழி) ஊரர். இவர் பண் மலிந்த பாடல்களைப் பாடி பக்தி செய்த வித்தகர். இவருக்குத் திருவாவடுதுறை ஈசர் ஆயிரம் பொன் அளித்தார்; இவரும் நாவும் (அப்பரும்) தலங்களைப் பணிந்து இறைஞ்சிச் சிவனைது பின் செல்ல, சிவனார் திருவலம்புரம் என்னும் தலத்திற் புக்குத் தங்கி நின்றார்.

### 10. தில்லைவாழ் அந்தணர்

இவர்கள் உலகுக்கு எல்லாம் திருவுடைய அந்தணராவர். இவர்களுடைய சிந்தையில் சிவபிரான் வீற்றிருக்கின்றார்.

### 11. நமிநந்தி அடிகள்

இவர் தொண்டர் ஆணி. திருவாரூரிலே பங்குனி உத்திர நாளில், ஊரும் உலகும் தத்தம் உள்ளம் அசைய, இறைவன் இவரைத் தம்பாற் படுத்தி ஆட்கொண்டார்: இவர் நீராலே திருவிளக்கு ஏற்றிப் பணிபுரிந்த பெருமையை உலகெலாம் அறியும். பெருஞ்செல்வம் கூடியிருந்த போதிலும் திருவாரூரில் தாம் வழிபடும் பெருமான் வீற்றிருந்தபோதிலும் (நமிநந்தி எனப்பட்ட) இவர் தம் மிடை இல்லாதபோது தொண்டர்குழாம் இருளிற்பட்டது போலக் கருதி வருந்தும். திருஆரூர்ப் பெருமானுக்கு நந்தி என்கிற இந்த அடித்தொண்டன் உளன்.

## 147. நீதிவாக்கியங்கள், பழமொழிகள் [139]

நீதிவாக்கியங்களும் பழமொழிகளும் 101 உள்ளன: இவற்றுட் சில—

### 1. கடவுளைப் பற்றியவை

(1) பெருமானது புகழைப் பேசாத நாள் எல்லாம் பிறவாநாளே.

(2) பெருமானது திருவடி உள்ளிருக்கும் உணர்ச்சியிலாதவர் நரகிடை வீழ்ந்து கிடப்பர்.

(3) பசுவுக்குச் சிறப்பு அதனிடை வரும் ஐந்து பொருள்களுடம்—[பால், தயிர், நெய், கோமயம், கோசலம்] இறைவனுக்குப் பயன்படுதலே.

(4) ஆனைக்காவை அணையாதவர் ஊனைக்காவித் (சுமந்து) திரிவர்.

(5) ஈசன் எங்கும் உளன் என்னும் உணர்ச்சி யிலாதவர் கங்கை, காவிரி, குமரி தீர்த்தம், கடல் இவைகளில் மூழ்குவதால் ஒரு நற்பயனையும் பெறார்.

(6) இறைவன் திருநாமங்களை ஓத நமக்கு வாயும் நாவும் உள

(7) உயிர் பிரியும்போது இறைவனன்றி உற்றார் ஆர் உளர்?

(8) சிவன் என்னும் ஓசையே எல்லாச் செம்மையையும் தருவது.

(9) நமன் நரகர்க்கு, சிவன் நமக்கு.

(10) நாவினுக்குச் சிறப்பைத் தருவது 'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்து.

(11) பாதிரிப்புலியூர்ப் பெருமானது அடி அடியார்க்கு. அரியது ஒரு செயலும் இல்லை.

## 2. பொது நீதிகள், உண்மைகள்

(1) அன்பு ஒன்றே போதுமானது.

(2) ஈசன் தமராகிய நாம் எதையும் அஞ்சுவதும் இல்லை; அஞ்சும் படியாகவும் நம்மிடம் ஒன்றும் வாராது.

(3) உயிர் போனால் இமைக்கும் போதும் இராது இவ்வுடல்.

(4) என்னைவிட எனக்கு இனியவர் யாரும் இல்லை.

(5) தம்மை அடைந்தவரின் வினையைத் தீர்ப்பது தான் பெரியோர் கடமை.

(6) முடிக்க வேண்டும் என்னும் முயற்சி யிருந்தால் முடியாதது ஒன்றும் இல்லை.

(7) திருக்கோயில் இல்லாத ஊரும், திருநீற்றைப் போற்றி அணியாதவர் உள்ள ஊரும், பத்தியொடு பாடாதவர்கள் உள்ள ஊரும், பல ஆலயங்கள் இல்லாத ஊரும், விருப்புடனே சங்கம் ஊதி வழிபடாத் ஊரும், கொடி, விதானம் (மேற்கட்டி) இவை இலாத ஊரும் ஊர்கள் அல்ல ; பெருங்காடே ஆம்.

(8) பொருள் இல்லாதவரை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள்.

(9) தமக்கு நல்லது தம்முயிர்.

(10) முற்பிறப்பிற் செய்த பாவங்கள் இப் பிறப்பில் வந்து தாக்கினால் ஏன் வருந்த வேண்டும்.

## 3. ஒழுக்க விதிகள்

(1) அந்தணர்க்கு அழகும் சிறப்பும் தருவன மறையும் ஆறங்கமும்.

(2) திருநாமமாம் ஐந்தெழுத்தையும் ஓத வேண்டும். சிவனது திருப்புகழைச் செப்ப வேண்டும். திருக்கோயிலை ஒரு முறையேனும் சூழ்தல் வேண்டும். உண்ணும் முன்பு (இறை பூசனைக்கு) மலர் பறித்தல் வேண்டும். நோய் விலகத் திருநீறு அணிதல் வேண்டும்—இவை செய்யாதவர்கள்தாம் பிறப்பு இறப்பில் ஈடுபட்டு வருந்துவர்.

(3) நெஞ்சை இறைவனுக்கு இருப்பிடமாக ஆக்க வேண்டும்.

## 4. பழமொழிகள்

(1) அறமிருக்க மறத்தை விலைக்குக் கொள்வது போல.

(2) அறுகயி றாசல் போல.

(3) ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடுதல் போல.

(4) இருட்டறையில் மலட்டு மாட்டைக் கறத்தல் போல.

(5) இருதலைக் கொள்ளியின் இடையகப்பட்ட எறும்புபோல.

(6) இன்றுளார் நாளை யில்லை.

(7) உலைநீரில் திளைத்து விளையாடின ஆமை போலத் தெளிவிலாதேன்.

(8) உழுத சால் வழியே உழுவான்.

(9) உற்றலால் கயவர் தேறார்.

(10) ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி மூடி வைத்திட்ட மூர்க்கன்.

(11) கரும்பிருக்க இரும்பு கடித்தெய்த்தவாறே.

(12) கழியிடைத் தோணி போன்றேன்.

(13) கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன் நானே.

(14) காம்பிலா மூழை (அகப்பை) போல.

(15) கூவலாமை குரைகடலாமையைக் கூவலோடொக்குமோ கடல் என்றல் போல்.

(16) கையில் உள்ள நெல்லிக்கனி போல.

(17) கொத்தைக்கு மூங்கர் வழி காட்டுதல்.

(18) தவமிருக்க அவஞ்செய்து தருக்கினேனே.

(19) தழலை நீர் மடிக் கொள்ளன்மின்.

(20) நரி வரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தொக்கது.

(21) நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர் கட்கே.

(22) பனி நீராற் பரவை செயப் பாவித்தேன்.

(23) பாம்பின்வாய்த் தேரைபோல

(24) பாழுக்கே நீரிறைத்து.

(25) பாழூரிற் பயிக்கப் (பிச்சை)புக் கெய்த்தவாறே.

(26) மத்துறு தயிரே போல மறுகுமென் உள்ளம்

(27) மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரம் எய்தி.

(28) முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே.

(29) மோத்தையைக் கண்ட காக்கை போல.

(30) விளக்கத்திற் கோழி போன்றேன்.

(31) விளக்கிருக்க மின்மினித் தீக் காய்ந்தவாறே.

## 148. நெஞ்சம்—மனம்—அதன் குணம் [140]

நெஞ்சம் ஊசல்போல ஒன்று விட்டு ஒன்றைப் பற்றும். ஐம்புலன்களின் சேட்டையால் மத்துறு தயிர் போல நெஞ்சம் மறுகும். ஐம்புலன்கள் வேண்டும் பொருள்களையே நெஞ்சமும் வேண்டுகின்றது. தக்கதல்லாத நெறியிலேயே மனம் திகைத்து நிற்கின்றது. இறைவனை நினைக்கும் நெஞ்சமே! உன்னை நான் விரும்புகின்றேன். உள்ளத்தைப் பொற்பீடமாக்கி இறைவனை ஆங்கு இருத்தித் தியானிக்க நமது வினை நாசமாம்; இறைவன் திருவருளால் கள்ள நினைவுகள் ஒழிய, மனம் ஒன்றுபட்டு இறை ஒளி உள்ளத்தே விளங்கும்.

நெஞ்சத்தை அறிவிலா நெஞ்சு. இழுதை நெஞ்சு, ஏழை நெஞ்சு, நன்னெஞ்சு, நிலையிலா நெஞ்சு, பாவி நெஞ்சு, பேதை நெஞ்சு, மடநெஞ்சு, வன்னெஞ்சு—என்றெல்லாம் கூறியுள்ளார் அப்பர்.

## 149. நோயீ—நோய் தீரும் வழி [141]

### 1. நோய்கள்

நோய்களுள்—இருமல், ஈளை, சூலை, மூலநோய் கூறப்பட்டுள: நம்மைச் சூழும் நோய்கள் 50 + 48 = 98 எனப்பட்டுள. உலகிற் பிணிகளை வைத்தவர் இறைவரே. சூலைநோய் வயிற்றைக் கலக்கி மலக்கிக் குடரைப் பறித்துப், புரட்டி, அறுத்து, இழுத்து, முடக்கி வலிக்கும்படி சுடும், ஆட்டுவிக்கும்; நஞ்சு போலவும், யமன் போலவும் வேலை செய்யும்; வேதனை பொறுக்க முடியாது வேர்த்துப், புரண்டு, விழுந்து, எழச் செய்யும்.

### 2. நோய் தீர்த்தருள் எனும் வேண்டுகோள்

பெருமானே! அமுதம் போன்று என் நெஞ்சினுள் நீ இருப்பதால், நோய்வரின் நீ காத்தருள வேண்டும்; உனது அடியார்களுக்குப் பிணி நோய் வராமல் விலக்கியருளுக.

### 3. யாரை நோய் பீடிக்கும்

ஐந்தெழுத்தை ஓதாதவர்கள், இறைவனைக் குறித்து ஒரு முறையேனும் பேசாதவர்கள், ஒரு முறையேனும் திருக்கோயிலைச் சூழாதவர்கள், உண்பதற்கு முன்பு (இறைவன் பூசைக்காக) மலர் பறித்துவிட்டு உண்ணாதவர்கள், நோய் வராதபடி திருவெண்ணீறு அணியாதவர்கள்—இவர்கள் தாம் பெருநோய்களுக்கு ஆளாகி இறப்பதும் பிறப்பதுமே தங்களுக்கு ஏற்பட்ட தொழிலாகி—உலகில் இறக்கின்றார்கள்.

### 4. நோய் விலக—தீர

(1) வெண்ணீறு அணிதல் வேண்டும்.

(2) திரு இராமேசுரம், பழையாறை வடதளி என்னும் தலங்களை விரும்பிப் பணிந்தவரை நோய் அணுகாது.

(3) திரு ஆவடுதுறைப் பெருமான் நோய் தீர்ப்பார்; ஆதலால் நெஞ்சமே நீ பெருமானுக்கே பணிசெய்வாயாக.

(4) பெருமானை நன்கு தியானித்தால் நோய்கள் விலகும்; எத்தகைய பொல்லாத பெரிய பிணிகளையும், இறைவன் தீர்ப்பார்; நோய், பிணி இவைகளைத் தீர்க்கும் மருந்து அவர். 'சிவாய நம' என்னும் மந்திரத்தை ஓதித் திருநீறணிந்திருந்தால் வினையும் நோயும் எரிகின்ற விறகிற் பட்டவை போலத் தொலைந்தழியும்.

## 150. பஞ்சம் [142]

நீண்ட காலம் வெப்பத்தாற் கொதித்து, கடல நீர் சுருங்கிப், பல நெடுங்காலம் மழையின்றிப் போமாகில் பஞ்சம் உண்டாகும்.

## 151. பதிக வகைகள் [144]

### (i) பண்களும், பதிக வகைகளும்

இந்தளம், காந்தார பஞ்சமம், காந்தாரம், (சி)காமரம், குறிஞ்சி, கொல்லி, சாதாரி, பழந்தக்க ராகம், பழம் பஞ்சுரம், பியந்தைக் காந்தாரம்—எனப்படும் பத்துப் பண்களிற் பதிகங்கள் உள.

பண்களுள் பஞ்சமமும், செவ்வழியும் பாடல்களின் இடையே கூறப்பட்டுள. பஞ்சமம் பாடி ஆடும் தெளிவு கொண்ட அடியார்களின் கள்ளத்தை ஒழிப்பார் இறைவர். பண் செவ்வழியுடன் பாடி, மாலை வேளையில் வானவர் ஈசனைத் திருவீழிமிழலையில் வழிபடுவார்.

### (ii) இயற்றமிழின்படி பதிகவகை [143]

4 சீர்களில் உள்ள பதிகங்கள் 109, 5 சீர்ப் பதிகங்கள் 35, 6 சீர்ப் பதிகங்கள் 64, 8 சீர்ப் பதிகங்கள் 102, முற்றும் இசை வகையன 2-ஆக 312 பதிகங்கள்.

## 152 பதிகங்களின் பாகுபாடு [145]

### (பொருள் வழி)

அகப்பொருட் பதிகங்கள், அங்கமாலைப் பதிகம், அட்டபுட்ப பூசைப் பதிகம், அடியார் பொருட்டு விண்ணப்பப் பதிகம், (சிவனது) அழகு கூறும் பதிகம், உபதேசப் பதிகம், உலக மாயைகளை வெருட்டும் பதிகம், (கயிலாயக்) காட்சிப் பதிகம், ஐம்புலன்களின் சேஷ்டையைக் கூறும் பதிகம் ஒன்று முதல் பத்துவரை கூறும் பதிகம், காலதூதருக்கு எச்சரிக்கை கூறும் பதிகம், குறுந்தொகையுள்— [ஆதிபுராணத் திருக்குறுந்தொகை, இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை, உள்ளத் திருக்குறுந்தொகை, காலபாசத் திருக்குறுந்தொகை, சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை, தனித்திருக் குறுந்தொகை, பாவநாசத் திருக்குறுந்தொகை, மனத்தொகைத் திருக்குறுந்தொகை, வண்ணக் குறுந்தொகை]; சிவனெனும் ஓசைப் பதிகம், தசபுராணப் பதிகம், தலங்கள் பல கூறும் பதிகம், திருத்தாண்டகத்தில்— [அடையாளத் திருத்தாண்டகம், அடைவு திருத்தாண்டகம், ஏழைத் திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், திருவடித் திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம், பலவகைத் திருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம், பெரிய திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், மறுமாற்றத் திருத்தாண்டகம், வினாவிடைத் திருத்தாண்டகம், க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்]; திருநேரிசையில்— [குறைந்த திருநேரிசை, கொப்புளித்த திருநேரிசை, தனித் திருநேரிசை, நினைந்த திருநேரிசை;] திருவாதிரைத் திருப்பதிகம், திருவிருத்தத்தில்— [ஆருயிர்த் திருவிருத்தம், சரக்கறைத் திருவிருத்தம், தனித் திருவிருத்தம், பசுபதித் திருவிருத்தம், பொதுத் திருவிருத்தம்;] நமச்சிவாயப் பதிகம், பழமொழிப் பதிகம், பாவநாசத் திருப்பதிகம், பொதுப் பதிகங்கள், விடந்தீர்த்த திருப்பதிகம், க்ஷேத்திரக் கோவைப் பதிகம்— என்னும் பதிக வகைகள் உள்ளன.

## 153. பயனற்ற செயல்கள் [146]

ஈதல் என்னும் அறத்தைக் கைப்பிடித்தவர்களாயிருந்தாலும், ஊன் உண்ணுதலை ஒழித்து வான்பெற விரும்பினவர்களாயிருந்தாலும், எட்டெழுத்து—பிரணவம்—பதி—பசு இலக்கணம் உணர்ந்தவர்களாயிருந்தாலும், கங்கை, கடல், காவிரி, குமரி தீர்த்தம், கோடி தீர்த்தம் முதலிய தீர்த்தங்களில் ஆடினவர்களாயிருந்தாலும், காடு, நாடு திரிந்தவர்களாயிருந்தாலும், சாத்திரங்கள்—நீதி நூல்கள் கற்றவர்களாயிருந்தாலும், பட்டினி கிடந்து விரதங்களை அநுட்டித்து ஊனை வருத்தினவர்களாயிருந்தாலும், விதி வழி ஒழுகும் நியமத்தினராயிருந்தாலும், வேதம், அங்கம் ஓதினவர்களாயிருந்தாலும், வேள்விகள் செய்தவர்களாயிருந்தாலும்-ஈசன் என்னும் பக்திச் சிந்தனையில்லாதவர்கள் யாதொரு நற்பயனையும் அடைய மாட்டார்கள்.

## 154. பழக்க வழக்கங்கள் [147]

### 1. உயிர் பிரிந்தபின் செயப்படும் செயல்கள்

உயிர் பிரிந்தவுடன் வீட்டில் உள்ளவர்கள் பிணத்தின் கையையும் காலையும் கட்டி, மையினாற் கண் எழுதி, மாலை சூட்டிச், சுடுகாட்டிற் பிணத்தைச் சேர்ப்பர்: சேர்த்து விறகு கொண்டு தீமூட்டிவிட்டுப் போய்விடுவார்.

### 2. கழனிகளின் நிலை

கழனிகள் நீர் நிறைந்து இறால், மலங்கு, வாளை, கயல், சேல், வரால், களிறு ஆதிய மீன் வகைகளுடன் பொலியும்; கழனிகளிற் பெரிய செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் ஆதிய நெல் வகைகள் விளையும்.

### 3. குலம், கோத்திரம்

குலம் - கோத்திரம். இவை கதிதரா. நற்கதி தருபவர் சிவன் என உணர்ந்து அவரைப் பணிவீர்களாக.

## 4. கொடி

திருவாரூர் போன்ற பெரிய ஊர்களில் மாடங்களிலும் மாளிகைகளிலும் மிக உயரமான கொடிகள் பறந்துலவும்.

## 5. சங்கொலி

காலையிற் சங்கொலி கேட்பதாகும்.

## 6. சாத்திரம் பேசுதல்

சாத்திரமே பேசுவதாற் பயன் இல்லை. சிவனே பாத்திரப் நற்கதி அளிப்பவர்—என உணர்ந்து பணிவீர்களாக.

## 7. செல்வம்

பெருஞ் செல்வத்தைக்—கொடி, விதானம், கவரி, பறை, சங்கம், கைவிளக்கு—இவைகள் காட்டும்.

## 8. சுத்தி செய்தல்

பால் தலையில் தெளித்தால் பரிசுத்தம் ஏற்படும்.

## 9. பாவம் போக

வினை, பாவம் இவை தொலைய வேண்டிப் புனித தீர்த்தங்களில் அடியார்கள், பெண்கள் முதலானோர் குளித்தல், முழுகுதல், தீர்த்தத்தைத் தலையிற் தெளித்துக் கொள்ளுதல் ஆகிய வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அத்தகைய தீர்த்தம் திருவாரூர் ஆதிய தலங்களில் உள்ளது.

## 10. மறையவர் பூசை

இருக்கு ஆதிய வேதம் ஓதி மறையவர்கள் கோயிலில் வழிபட்டனர்.

## 11. குங்குலியம்

நெருப்பிற் குங்குலியப் புகை கூட்டித் திருக்கோயிலில் வழிபடுவர்.

## 12. மாதர்கள் ஸ்நாநம் செய்தல்

கெடில நதியில் மாதர்கள் குளித்து மகிழ்வர்.

## 13. திருவிழா

திருவாரூர்த் தெருவினில்—மாதர்கள், பெரியோராய அடியார்கள், விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், கபாலிகர் ஆகிய பலரையும் காணலாகும்.

## 155. பழங்கள் [148]

அத்திப் பழம், நெல்லிக்கனி, மாதுளங்கனி, மாம்பழம், வாழைப்பழம்—கூறப்பட்டுள.

## 156. பாடல் விசேடங்கள் [149]

அகப்பூசை பாடல் [76-4]; அர்த்தநாரீச சொரூபப் பாட்டு [8-10]; நடன கோலப்பாட்டு [214-3]; மலைத் தலங்களைக் கூறும் பாட்டு [284-9]; வீரட்டத் தலங்களைக் கூறும் பாட்டு [284-2] முதலிய பிறவற்றை ஒளிநெறித் தலைப்பு 149 இற் காண்க.

## 157. பாடல் அமைப்புக்கள் [150]

ஈசன் தன்மை, பெருமை, உலகுக்கு உபதேசம், நெஞ்சுக்கு உபதேசம், போற்றி நூற்றெட்டு முதலிய பல வகை அகவற்பாக்கள், கரந்துறை பாடல்கள்—அப்பர் திருவாக்கினின்றும் அமைக்கப்பட்டவை—ஒளிநெறியிற் காணலாகும்.

## 158. பார்வதி தேவி [151]

[தலைப்பு 113 ஆம் பார்க்க]

(i) தேவியின் திருநாமங்களிற் சில: தேவியைக் குறிக்கும் சொற்றொடர்களிற் சில:

அருந்தவத்தாள், ஆரணங்கு, ஏழை, காமக்கோட்டி, செல்வப் பாவை, தையல் நல்லாள், நீலி, பார்ப்பதி, பெண்ணி

காலையாள், பெருந்திரு, பேதை, பொருப்பரையன் மடப் பாவை, மனோன்மணி, மோடி;

## (ii) தேவியின் அங்க லக்ஷணம்

அடி—பஞ்சின் மெல்லடி.

அல்குல்—அரா அல்குல்—பரவை அல்குல்.

இடை—கொடியிடை, துடியிடை, மின்னிடை, இல்லையிலா இடை.

உருவம்—வடிவுடை மங்கை.

கண்—அஞ்சனக் கண், அரிதரு கண், கருங்கண், காவியங்கண், கெண்டை, சேல்போன்ற கண், படைக் கண், மான் கண், மாவடு அனைய கண், வாட்கண், வேற்கண்.

கூந்தல்—அஞ்சனை கூந்தல், ஏலங்கமழ் கூந்தல், கருங்குழல், குராமன்னு குழல், சுரிகுழல், தெய்வ மணம் கமழும் குழல், நெறிதரு குழல், மட்டுவார் குழல், வண்டார் குழல், வார்குழல்.

கை—வளைக் கை, செங்கமலக் கை.

சடை—மிக நீண்ட சடை.

சாயல்—மயிலின் சாயல், மாப்பிணை—சாயல், தளிர்ச் சாயல்.

தோள்—மூங்கில் அனையது.

நடை—அன்ன நடை.

நிறம்—நீல மலர் நிறம்—தளிர் நிறம்.

நுதல்—பிறை நுதல்.

பல்—முல்லை, முத்து அனைய வெண்ணகை.

புருவம்—வில்லுக்கு ஒப்பு.

முலை—சாந்தணிந்தது, தேமல் கொண்டது, வட்டமானது, வார் அணிந்தது, அரும்பு போன்றது.

மொழி—கரும்பு, தேன், பால், குழல், யாழ், பண்—போல இனிமை வாய்ந்தது.

வாய்—கொவ்வைக் கனி போன்றது.

விரல்—பஞ்சு போன்றது, பந்து ஏந்துவது.

### (iii) தேவியின் அணிகள்

கிண்கிணி, குழை, சிலம்பு, பாடகம், மேகலை, வளை.

### (iv) தேவியின் அழகு

எழுதலாகாத அழகு வாய்ந்தவள்.

### (v) தேவியின் மாலை

குவளை மாலை, நறுமண மாலைகள்.

### (vi) தேவியின் வாகனம்

பசு.

### (vii) தேவியின் சிறப்புக்கள் முதலிய பிற விஷயங்கள்

தேவி இறைவனுடைய யானைத்தோல், புலித்தோல் இவைகளைக் கண்டு அஞ்சினள்; ராவணன் கயிலையை அசைத்தபோது அஞ்சினள்; தேவியே திருமால்; திருமாலே தேவி-பூந்துகில் அணிபவள், கருணை வாய்ந்தவள்; நினைக்க இனியவள்; தேவியின் தவத்துக்கும், பூசைக்கும் மகிழ்ந்து சிவபிரான் தமது உடலில் ஒரு பாகத்தைத் தேவிக்கு அருளினர். தேவி இறைவன் கண்களை மூடி விளையாடினவள்; பழையவள்; மாறிலாதவள்; தொன்றுதொட்டுப் புகழ் வாய்ந்தவள்; தாருகனைச் சங்கரித்தவள். சிவபிரானது வாக்கை விரும்புபவள்; முருகவேளின் தாய். விநாயகர் சகிதமாய்த் தேவி அப்பருக்குக் காட்சி அளித்தவள்.

## 159. பிரமன் [152]

அயன், சதுர்முகன், திசைமுகன், நான்முகன், பிரமன், மறையவன் எனப் பிரமதேவன் கூறப்பட்டுள்ளான். பிரமன்—செந்தாமரை மலரில் வீற்றிருப்பவன். அம் மலர் அல்லி, எழில் முளரி, கடிக்கமலம், தண்தாமரை, நறுமலர், பங்கயம், புண்டரிகம், மௌவல் மலர் என விளக்கப்பட்டுள்ளது.

பிரமனுக்கு அழிவு உண்டு. நூறுகோடி பிரமர்கள் மாண்டுள்ளார்கள். பிரமன் எண்கண்ணன்; அன்னக் கொடி, அன்ன வாகனம்—கொண்டவன்; பொன்னிறத்தவன்; பஞ்ச கிருத்தியங்களின் இலக்கணத்தைப் படித்தவன்; படைத்தல் தொழிலைப் பூண்டு, நான்கு வேதங்களையும் ஓதித் தெரிந்துகொண்டு உலகங்கள் எல்லாவற்றையும் படைத்தவன்; மறையோர்க்குப் புகலிடம் ஆனவன்.

## 160. பூதம்—பூதமும் சிவனும் [154]

சிவபிரான் பூதப் படையினர்; அவருடைய பூதங்கள் ஒன்பது வகையன; பெருமான் பூதங்கள் பலசூழப் போவார்: போகும்போது ஒரு பூதம் மணிவிளக்கு ஏந்தி உடன் செல்லும்; குடமுழவம், வீணை, தாளம், கொக்கரை, குழல், கொடுகொட்டி, இவைகளைப் பூதங்கள் முழக்கிப் படை ஆர்க்க, இறைவர் கூத்தாடுவார்; பூதங்கள் வேதம் பாட, நடமாடுவார்; பூதங்கள் பணிசெய்யப் பலிகொள்வார்; பூதங்கள் அவரை ஏத்திப் பணியும்; அவர் பூதநாதன், பூத நாயகன்; பூதத்து அம்மான்.

### 2. பூதங்களின் வர்ணனை

பூதங்கள் இடிக்குரல்வாயை உடையன; இளம்பூதங்கள் குண்டைப் (குறுகித் தடித்த) பூதங்கள், குறட்பூதங்கள்; குறுநடைய பூதங்கள், சிறுகட் பூதங்கள், திண்டி வயிற்றுப் பூதங்கள், பகுவாய்ப் பூதங்கள், பொல்லாத பூதங்கள் என பூதங்கள் வருணிக்கப்பட்டுள

## 161. பேய்கள்—பேய்களும் சிவனும் [155]

பேய்கள் காட்டில் வாழும்; அவை அகன்ற வாயின; பிலம் போன்ற வாயின; பிறை போன்ற பற்களை உடையன; பறை போன்ற குழி விழிகளைக் கொண்டன.

சமணர்களைச் 'சாத்திரப் பேய்கள்' எனவும், தொண்டர்களைப் 'பேய்த் தொண்டர்' எனவும் கூறியுள்ளார் அப்பர்.

### (ii) பேய்களும் சிவனும்

பிரானார் தாம் விரும்பும் காட்டில் ஒரு நாளும் பேயை விட்டுப் பிரியார்; அவருக்கு உறவு பேய்க்கணம்; படை பேய்க்கணம்; சுற்றும் பேய் சுழலச் சுடுகாட்டில் எரி ஆடுவார்; பேய்க்கணம் ஆர்க்க ஆடுவார்; இரவில் ஆடுவார், பேய்க்கணங்கள் பிரானைப் பரவி ஏத்தும்.

## 162. பொழில்—சோலை [156]

பொழில்கள் அழகியன; குளிர் கொண்டன; தாழம் பூவின் மணம் வீசுவன; நிழல் தருவன; மேகம் படிவன; இருள் சூழ்ந்தன; குரவம், செண்பகம், தாழை, புன்னை, மல்லிகை, வேங்கை, மா, தெங்கு நிரம்பியன;

வண்டுகள் ஒலிப்பன, பாடுவன; குயில், குரங்கு, கொக்கு வாழ்வன; மயில்கள் ஆலுவன; பறை ஓசை, முரசு ஓசை, பாடலின் ஓசை, மறையின் ஒலி இவை பெருகத் திருவிழாக்கள் ஓசை ஒலி நீங்காது விளங்குவனவாய்ப் பொழில்கள் பொலியும்.

## 163. பொன்—மணி முதலிய [157]

பவளம், பொன், மணி, மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வெள்ளி கூறப்பட்டுள.

## 164. போற்றி எனவரும் துதிகள் [158]

| | |
|---|---|
| இத் துதிகளின் மொத்த எண்— | 354 |
| இவை தம்முள்— | |
| சிவபிரான் அணிவனவைப் பற்றி வருவன | 31 |
| அவர் அரியர் என்பன | 11 |
| அவருடைய கருணை, அருள்— | |
| இவைதமைக் குறிப்பன | 26 |
| அவருடைய ஆடல், பாடல், இசை— | |
| இவை குறிப்பன | 18 |
| அவருடைய உருவம், தோற்றம் குறிப்பன | 47 |
| அவரது உறைவிடத்தைக் குறிப்பன | 17 |
| அவருடைய தன்மை, பெருமை குறிப்பன | 52 |
| அவருடைய நாமங்களைக் குறிப்பன | 10 |
| அவருடைய படைகளைக் குறிப்பன | 4 |
| அவரது பரத்தைக் குறிப்பன | 54 |
| அவருடைய கொடி, வாகனத்தைக் குறிப்பன | 6 |
| அவருக்கு உகந்தனவையைக் குறிப்பன | 4 |
| அவருடைய வீரச் செயல்களைக் குறிப்பன | 31 |
| பிற செயல்களைக் குறிப்பன | 17 |
| தம்மை (அப்பரை)ப்பற்றி வருவன | 26 |
| ஆக மொத்தம்— | 354 |

## 165. மக்களைக் குறிப்பன [159]

அருள்பெற்று நின்றவர், ஆளானவர்கள், இட்டுண்பவர், உண்மை தங்கும் பெருநிலைக் குறியினர். தமர், உரிமையுடன் தொழுபவர், எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர், கூரிய குணத்தினர், தக்கோர், தகவுடையார், நல்லார், நலஞ்சிறந்தார், நற்பதத்தார், புலன்கள் ஐந்தும் வென்றவர், மருவினியார், மருளாதார், மனிதரில் தலையாய மனிதர், மிக்கோர்கள் என நற்பண்புடைய மக்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

(ii)

அறம்புரியாத் துரிசன், ஆளாகார், புகலிழந்த குருடர், உயர்கதிக்கு வழிதேடிப் போகமாட்டாதவர்கள், உள்ளத்திற் கொடுமை நீங்காதார், ஏதும் ஒன்றும் அறிவிலர், ஒருத்தனை உணரமாட்டாதார், ஒன்றலாத் தவத்தார், கயவக் கணத்தோர்கள், கல்மனவர், குற்றங்கூடிக் குணம் பல கூடாதார், சாத்திரம் பல பேசும் சழக்கர்கள், தீவினையாளர், செத்துச் செத்துப் பிறக்கும் தேவர்களைப் பத்தி செய்யும் மனப் பாறைகள், பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார், தீவினையாளர், துகிலுடுத்துப் பொன் பூண்டு திரிவார், தெண்ணர்கள், தெருளாதார், நன்னெறிக்கட் சேராதார், நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலிகள், பாவகாரிகள், புகலிழந்த குருடர், பேதைகள், பேயர், பொக்கமிக்கவர், பொய்த் தவத்தார், பொய்ந் நடை செலுத்துகின்றவர்கள், பொறியிலிகள், மட்டுண்பார்கள், மடந்தையர் வாட்கண்ணுல் கட்டுண்பவர்கள், மாநரகக் குழிவாய் விழுபவர், மாயன் மாயத்துட் பட்ட மனிதர், வஞ்ச மனத்தவர், வருபிறப்பொன் றுணராது மாசுபூசி வழி காணுதவர், வாதுசெய்து மயங்கு மனத்தர்—என நற்பண்பிலாத மக்கள் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

## 166. மரமும் மலரும் [160]

### (i) மரம், செடி, கொடி

(1) அடும்பு—நெருப்பனைய செந்நிறப்பூ.

(2) ஆத்தி—தழைத்திருக்கும்.

(3) ஆல்—காய் பவளநிறம்; இலை பெரிது.

(4) எருக்கு—வெள்ளெருக்கு மலர்ந்து மணம்தரும்.

(5) கமுகு—இலை, பாளை உடையது.

(6) கரும்பு—(கருப்பங்) கட்டியைத் தரும்.

(7) கழுநீர்—தேன் பெருகும்.

(8) கள்ளி—காட்டில் வளரும்.

(9) காந்தள்—விரிந்த கைபோல் இருக்கும்.

(10) குரா—திரண்ட பூக்களை உடையது.

(11) கூவிளம்—(வில்வம்) ஒருவிதக் கள்—சாறு உண்டு.

(12) கொன்றை—(இதழி, கடுக்கை) இதன் மலர் அழகுள்ளது; மணமுள்ளது; பொன் நிறத்தது; பொற் காசு போன்றது, (கள்) தேன் கொண்டது; கார்காலத்தில் மலர்வது; மாலைபோலக் கொத்தாக மலர்வது; வண்டு மொய்ப்பது.

(13) கோங்கம்—நிறமுள்ளது.

(14) தாமரை (அரவிந்தம், அல்லி, கமலம், புண்டரிகம், முளரி),—அழகுடையது, அன்னம் வீற்றிருப்பது; மணம் கொண்டது; காடுபோலப் பூப்பது; செந்நிறத்தது, இலக்குமி வாசம் செய்வது; சேற்றில் வளர்வது; தூயது; வண்டு மொய்ப்பது; நீர்நிலையில் வளர்வது; ஏடுகளை உடையது; நாளும் மலர்வது.

(15) தாழை—மணம் உள்ளது.

(16) தெங்கு—குலையாகக் காய்க்கும்.

(17) நாவல்—வெள்ளை நாவல் உண்டு.

(18) நீலம்—வயல்களிற் பூக்கும், நீர்ப்பூ.

(19) நெய்தல்—இது நீர்ப்பூ.

(20) நெல்—கெந்தசாலி, திப்பியம், பிரம்புரி, பெரிய செந்நெல் என்னும் வகையது.

(21) பானல்—நீர்ப்பூ; கருநிறம்.

(22) புன்னை — மணலில் கானலில் வளரும்; புன்னை ஒரு சாதி.

(23) மத்தம்—முத்து, வயிரம், மாணிக்கம் இவை விளங்கும் தூய மலர்.

(24) மல்லிகை—மணங்கொண்டது.

### (ii) மலர்கள்

எண்வகை மலர் (அட்ட புட்பம்) கூறப்பட்டுளது: [இவை—புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை: ஞானபூசை செய்வார்க்குக் கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன அட்ட புட்பங்களாம்.]

## 167. மலரும் சிவனும் [161]

சிவபிரான் தாமரை மலரின் நறுமணத்தில் விளங்குகின்றார்; தேனாருங் கொன்றையிற் பொலிகின்றார்: நறுமணமுள்ள மலரின்கண் திகழ்கின்றார்: மணமுள்ள மலர்களைத் தூவித் தொழுகின்ற அடியார்களின் நெஞ்சகத்தே அவரைக் காணலாகும்.

## 168. மழை—மேகம் [162]

மறையவர் இயற்றும் வேள்வியின் புகை விண்ணிற் போய் மழையாகப் பொழியும்.

## 169-1. மறை—'வேதம்' [163 (1)]

[தலைப்பு 192 பார்க்க]

## 169-2. மறையோர்—அந்தணர்—வேதியர் அவர் தொழில் [163 (2)]

### (i)

அந்தணர்க்கு அழகும் சிறப்பும் தருவன மறையும் அங்கமும்; காலையிலும் மாலையிலும் பசுநெய் கொண்டு விருப்புடன் எரி உருவராம் சிவனை எரி ஓம்பிப் போற்றுவர் அந்தணர்; அதனால் கலி அஞ்சி விலகுகின்றது; அந்தணர்

அளவிற் குறையாத அவி உணவை ஆக்குவர்; தெருவில் விளங்குவர் திருவாரூரில்; உலகுக்கெல்லாம் மங்கலப் பொலிவைத் தரும் அந்தணர் தில்லையில் (சிதம்பரத்தில்) வாழ்வர்; அழிவுக்கு இடம் தராமல், முத்தீ ஓம்பி, நால் வேதமும் அங்கமும் கலைகளும் பயின்று, உலகு புகழ் உயர் புகழ் வாய்ந்த அந்தணர்கள் ஓமாம்புலியூரில் விளங்கினர்; மிக்க திறல் வாய்ந்தவர், மேலானவர்; மாதீர்த்தம் (பரிசுத்தம்) வாய்ந்தவர் என்று புகழப்பட்டுள்ளார்; நல்லூர் மறையவர்கள் குறிக்கப்பட்டுளர்; செல்வ மல்கு சிவநியமத்தரான சிறப்புற்ற மறையோர் திருமங்கலக் குடியில் வாழ்ந்தனர். திருப்பாதிரிப்புலியூரில் அந்தணர் பிரமனை நிகர்ப்பர்.

### (ii) சிவனும் மறையோரும்

சிவபிரான் உயர்புகழ் அந்தணர் ஏத்த ஓமாம்புலியூர் வடதளியில் விளங்குகின்றார்; செழுமறையோர் தொழத் தேவியொடும் திருமங்கலக்குடியில் திகழ்கின்றார். நல்ல மறையவர்கள் கண்டு கண்டு களிக்க வலம்புரத்தில் மன்னி மகிழ்கின்றார்; வேதியர்களின் வேள்வியின் பயனாய் விளங்குகின்றார்: வேதம் பயில்வோர் விரும்ப நின்றார்; வேதியர்க்கு நாயகன் அவர்.

## **170.** மாணிக்கவாசகர் [165]

[தலைப்பு 137 பார்க்க]

## **171.** மாதர்கள் [166]

இளையர், ஏழைமார், கன்னியர், காரிகையார், கொம்பனார், தையல், கோதை, நங்கை, நல்லார், நேரிழை, பாவை யன்னார், பெண்கொடி, பெய்வளையார், பேதைமார், பைங்கொடி, பொன், மங்கையர், மடந்தையர், மடவார், மாதர் மாது—இவை பெண்களைக் குறிக்கும் சொற்கள்.

## (i) அவயவ வர்ணனை—ஒப்புப் பொருள்கள்

அடி—பஞ்சு.

அல்குல்—அரவு.

இடை—கொடி, மின்.

கண்—காவி, கெண்டை, குவளை, சேல், மானை (மாவடு), மான், வாள், வேல்: குளிர்ந்திருக்கும், நீண்டிருக்கும், பெரிதாய் அகன்றிருக்கும்.

குழல்—நறுமணம் உடையது, வண்டு மொய்ப்பது, தாழ்ந்து நீண்டிருப்பது, மலர் அணிந்துள்ளது, நெருங்கியுள்ளது.

சாயல்—மயிலுக்கு ஒப்பு.

சொல்—குழல், யாழ், தேன், பண்.

தோள்—வேய்.

நகை (பல்)—முல்லை.

நடை—அன்னம்.

நுதல் (நெற்றி)—பிறை.

முலை—அரும்பு, யானை மருப்பு, அணிகள் பூண்டது, குவிந்துள்ளது, தேமல் படர்ந்தது, பருமை, மென்மை, இளமை, காட்டுவது; வார் (கச்சு) அணிந்தது.

வளை—கையில் வரிசையாய் நெருக்கமாய் அணியப்பட்டது.

வாய், வாயிதழ்—இலவு, பவளம்.

## (ii) பழக்க வழக்கங்கள்

கண்ணுக்கு மையிட்டுக்கொள்ளுதல், கொங்கையிற் சந்தனம் அணிதல், விலைபெறு மாலைகளைப் பூணுதல், கூறப்பட்டுள.

'மாமருதா' என்று தலைவியும் தோழியர் கூட்டமும் இறைவன் திருநாமங்களைப் பயில்வர்; ஆலய வழிபாடு செய்வர்; திருக்கோயிலை வலம்வந்து இறைவன் முன்னிலையில் நடனம் ஆடுவர். காவிரி நீரில் மூழ்கி இறைவனைப் போற்றிப் பாடுவார்கள்.

(iii) பெண்களைப் பற்றிய

பெண்ணாசை மனத்தைக் கலக்கும்; அவர்களே தஞ்சமெனக் கொள்ளும் கட்டு நீங்க வேண்டும்; அவர்கள் மேலுள்ள நினைவால், கடவுளை நினைக்க முடியாது போகின்றது.

## 172. மார்க்கண்டேயர் [167]

மார்க்கண்டர் சிறந்த அருமையான அந்தண முனி சிரேஷ்டர். இவர் மாதர் ஆசையை அறவே விட்டுச் சிவபிரானிடம் அன்பு ததும்பிய மனத்தினராய், திருநீறு நிரம்பப் பூசினவராய், சிவபிரானது திருவடியே தஞ்சமென்ற நெஞ்சினராய், தவமுமலும் அன்புடனும் நித்தம் நியமத்துடனும் குளிர்ந்த சிந்தையுடனும் ஆற்றுநீர், வாசநீர், பால், நல்ல தயிர் இவைகொண்டு நிரம்ப ஆட்டியும், மலர்ப்பூசனை செய்தும், அஞ்செழுத்தை ஓதியும் இறைவனுக்கு அருச்சனை புரிந்தவர். இவரைப் பிடிக்க வந்த கூற்றினை உயிர்மாள உதைத்து இறைவர் இவருக்குச் சாவா வரத்தைத் தந்தருளினர்.

('காலனை உதைத்தது' என்னும் தலைப்பு 65(3) பார்க்க)

## 173. முனிவர்கள் [168]

பெருந்தவ முனிவர்கள் பெருமானை ஏத்துவர். மாதவத்தாரின் மனத்துள்ளார் பிரானார். அவரது திருக்கோயிலின் கடைவாயிலில் அரி, அயன் ஆகிய தேவர்கள் காத்து நிற்கின்றனர்; முனிவர்கள் புலம்பி நிற்கின்றனர். தூய முனிவர் பொருட்டுப் பெருமான் பூமிசை (இந்தப் பூமிக்கு)

வருகின்றார். மாதவர்களின் அன்புக்கு உறைவிடம் பெருமானார்; மாதவர்தம் நாயகன் அவர், மருந்து அவர்; முனிவர்கள் தம்மைச் சூழ முற்றம் தோறும் வீணை வாசித்துக் கொண்டு செல்வார் அவர். ஞாயிறு (சூரியனது) வெம்மையைப் பொறுக்கின்ற முனிவர்கள் விரும்பிப் போற்றும் நல்லவர் பெருமான்.

குசை (தருப்பை), கோசம் (புத்தகம்) கரத்திற் கொண்ட மங்கல வாசகர் பெருமானை வாழ்த்துகின்றார்.

முனிவர்களுள்—அகத்தியர், உபமன்யு, தாருகாவன முனிவர்கள், சப்த ரிஷிகள், பிருங்கி இருடி, மார்க்கண்டேயர் சொல்லப்பட்டுள்ளார்கள்.

## 174. முருகவேள் [169]

முருகவேள் சிவனாரின் திருமகனார்; முருகவேள் சரவணத்தில் தோன்றியவர்; அவருக்குத் திருமுகங்கள் ஆறு; கண் பன்னிரண்டு; அவர் படை வேல்; அவர் கொடி கோழி; அவர் வாகனம் மயில்; அவர் செந்தூரில் வீற்றிருப்பவர்; சிவபிரானைப் போற்றிசைப்பவர்; போருக்கு வந்த சூரபன்மாவைக் கடலில் அட்டவர்; குறத்தி வள்ளியை மணந்தவர்; அப்பர் பெருமானுக்குக் காட்சியளித்தவர்; அப்பர் பெருமானால் நங்கடம்பன், நஞ்செந்தின் மேய வள்ளி மணாளன், செல்வக் குமரவேள் என மகிழ்ந்து கூறப் பட்டவர். வள்ளி மணாளன், வேலன், அறுமுகன், கடம்பன், குமரன், கோழிக்கொடியோன், சரவணத்தான், மயிலூர்தி, முருகவேள், வள்ளி மணாளன், வேலன்— என்னும் திருநாமங்களால் முருகவேள் கூறப்பட்டுள்ளார்.

## 175. யாக்கை—வாழ்க்கை—பிறப்பு—இறப்பு [170]

### 1. யாக்கை வர்ணனை [170 (1)]

ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டது ஆக்கை. உயிர் பிரிந்தால் இவ்வுடலை ஊரார் வெறுப்பர். இவ் வுடலுக்கு ஊன்

வீடு; வாசல் ஒன்பது; எலும்புகள் தூண்; உடல் ரோமத்தால் மேயப்பட்டது; 96 தத்துவங்களுக்கு இடமானது; ஒரு முழம் உள்ள ஒரு மடு; அது ஒன்பது துறைகளை உடையது; அரை முழம் அதன் அகலம்; அதில் வாழ்வன ஐந்து முதலைகள்; ஒரு ஓட்டை மாடத்துக்கு ஒன்பது வாசல்; முதலில் கரு—குழம்பாயிருந்து, மூளை, நரம்பு, எலும்பு இவைகள் சேர்ந்து ஓர் உருவாகி, ஒருத்தியால் வளர்க்கப்பட்டு இறுதியில் மறைகின்றது; கால்கள் வைத்து, இரண்டு கைகள் ஏற்றி, (எலும்புக்) கழிகளை வரிசையாய் அமைத்து, மாமிசம், தோல் மேய வைத்து, ரத்தம் என்னும் செந்நீர் கொண்டு சுவர் எடுத்து, இரண்டு வாசற்படி, ஏழு ஜன்னல் (பலகணி) அமைத்து, மாயையை ஊட்டி, இவ்வுடலில் ஆவியைப் புகுத்தியுள்ளார் கடவுள். இந்த உடல் மொக்குள் போலத் தோன்றி மறையும். நிலைத்திராத உடல்; நிலைத்திராத உயிர்; உடலானது பிணி—நோய்க்கு இடமானது; புழுநாற்றம் கொண்டது; பொத்தல் மண்சுவர் போன்றது; புலால் நாற்றத்தது; மண்ணுவது; மலம் தாங்குவது; மாயமானது; இவ் வுடலென்னும் நகரத்தில் ஐந்துபேர் வியாபாரம் செய்ய, தொண்ணூற்றறுவர் மயக்குவிப்பார்.

## 2. மூப்பு வர்ணனை [170 (2)]

இளமை கைவிட்டு அகல, மூப்பு வருகின்றது, வளமை ஒழிகின்றது; உரை தளர்கின்றது; உடல் நடுங்குகின்றது; பிணி வருகின்றது; மெய் தளர்கின்றது; தடி ஊன்ற வேண்டி இருக்கின்றது.

## 3. வாழ்க்கை வர்ணனை [170 (3)]

ஐம்புலன்களால் ஆட்டப்பட்டு, நோய்க்கு இடமாவது இவ் வாழ்க்கை: பொருள், மனைவி, மக்கள் இவை பொருத்தமில்லாமல், அழிவுடைத்தாயது வாழ்க்கை. இந்த வாழ்க்கைக்கு இரைதேடி வேதனைப்படுகின்றோம். மாயப் பிறப்பில் துன்பக் கடலிடைப்பட்டு இளைப்புறுகின்றோம்.

பாசப் பிறப்பு இது. இன்றுளார் நாளையில்லை என்பதை மறந்து திரிகின்றனர் பலர்; நம்மைப் பெற்ற தாய், தந்தை, மனைவி, மக்கள் எல்லாரும் நம்மைவிட்டுப் பிரிதலைக் கண்டும், வாழ்க்கையில் களிப்புறுகின்றோம். கூற்றம் வந்து பிடிக்கும்போது தெளிவான அறிவு ஏது? வாழ்க்கையில் மெய்யாக உள்ளன ஐயமும் (அச்சமும்) சாவும். சாவைத் தடுத்து உதவுபவர் ஒருவருமில்லை; தந்தை ஆர்? தாய் ஆர்? உடன்பிறந்தார் ஆர்? மனைவி மக்கள் ஆர்? தாம்தாம் ஆர்? ஏன் வந்தோம், எப்படி வந்தோம், ஏன் மாய்கின்றோம்—எல்லாம் ஒரே மாயம்: இங்ஙனம் இருக்க, வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏது! உயிர் ஓடிப்போம் கூடு இவ்வுடல், இதை ஒருபொருளாக எண்ணி உலகெலாம் ஆளலாம் என்னும் பேராசைக்கும் அகங்காரத்துக்கும் இந் நெஞ்சு இடம் தருகின்றது.

சுகமிலாத இந்த மனிதர் வாழ்க்கையிற் குற்றங்கள் பல ஏற்படுகின்றன. சீ சீ! இந்தப் பிறவி ஒழிவதாக. இந்தப் பிறவியைப் பிச்சு எறியவேண்டும். பிறத்தல், பிறந்தால் பிணியிற் படுதல், இறத்தல்—இது என்ன வாழ்க்கை! இழிவுடையதே இப் பிறவி! பிறந்தாலும் பிறையணி பெருமானை மறப்பனோ என்று என் உள்ளம் கலங்குகின்றது.

ஆக்கைக்கு இரைதேடிப் பொழுதைப் போக்குகின்றார்கள் பலர்; அந்தோ, பூ ஏந்தி அரன் திருவடியைப் பூசிக்கின்றார் இல்லை; நாவினால் அவன் நாமத்தை நவில்கின்றார் இல்லை: காக்கைக்குத்தான் இவ்வுடல் ஈற்றில் இரையாகின்றது.

நமது வாழ்க்கையானது கடலிற் பயணம் போன்றது. மனம் என்கின்ற தோணியிற் போகின்றோம். மதி - அறிவு என்கின்ற ஓடக்கோலை ஊன்றிச் செல்கின்றோம். தோணியில் உள்ள சரக்கு சினம் - கோபம் என்பதே. அங்ஙனம் போகும்போது காமம் என்கின்ற பாறையில் தோணி தாக்குண்டு உடைகின்றது. அப்போது ஒன்றும் தோன்றாது மாய்கின்றோம்.

### 4. பிறப்பை அறுக்கும் வழி [170 (4)]

பிறப்பை ஒழிக்க விரும்பினால், தொண்டு செய்க, அடியாரோடிணங்குக. மயிலாடுதுறை இறைவனைப் போற்று பவர்க்குப் புவி வாழ்க்கை வாராது.

### 5. இறைவனிடம் முறையீடு [170 (5)]

நமன் தமர் கையிற்பட்டு நான் இறக்கும்போது, இறைவா! நான் உம்மை மறந்தாலும் நீர் எம்மைக் குறிக்கொண்டு அருள்வீராக; இந்தப் பிறவிச் சுழியிற் கலக்குண்டு உம்மை நான் மறக்கினும் என்னைக் குறிக்கொண்டருள் வீராக. விக்கி ஐந்தெழுத்தை ஓதுதலைக் கைவிட்டு உம்மை நான் மறந்தாலும் என்னைக் குறிக்கொண்டருள்வீராக.

### 6. பிறவி எப்போது துன்பம் தராது; பிறவியும் விரும்பத்தக்கதே, எப்போது [170 (6)]

இறைவன் திருவடியிற் சிந்தனை நிலைத்துப் போற்றுத லொழியாதிருப்பின் இந்தப் பொல்லா வாழ்க்கையிற் குறைவு ஒன்றும் வாராது.

தில்லைக் கூத்தப்பிரானது திருப்புருவம், செவ்வாய், புன்சிரிப்பு, பனிச்சடை, பவளமேனி, வெண்ணீறு, எடுத்த திருவடி—இவை தமைத் தரிசிக்கும் பேறு கிடைத் தால், மனிதப்பிறவியும் வேண்டியதுதான் இவ்வுலகில். அத்தகைய பிறவியும் மதிக்கத்தக்கதே.

## 176. ஸ்ரீ ராமரும் ராமாயணமும் [171]

மலைகளால் கடலை அடைத்துச் சேது பந்தனம் செய்து சேனையுடன் சென்று புக்குப் போர் செய்து அரக்கன் இராவணனை வென்றார் இராமர். வன்கண்ணராம் அரக்கர் களை எல்லாம் அழித்தார்; அப்படி அழித்த பின்னர் திருக்கோயில் அமைத்துச் சிவபிரானை மலர்கொண்டு

விருப்புடன் பூசித்தார் இராமர்; அவர் அங்ஙனம் பூசித்த தீவுத் (தலம்)தான் திரு-இராமேச்சுரம்; சிவபிரானும் இராமரது சகலை எல்லாவற்றையும் தவிர்த்தருளினர்.

## 177. ராவணன் [172]

### 1. இராவணனைக் குறிக்கும் சொற்களும்—சொற்றொடர்களும்: இவற்றுள் முக்கியமானவை [172(1)]

அடர்ப்பரிய இராவணன், உறைப்புடைய இராவணன், ஒருவரும் நிகரிலாத ஒண்திறல் அரக்கன். கலிவலம் மிக்கோன், கோள்பிடித்தார்த்த கையான், சனியும் வெள்ளியும் திங்களும் ஞாயிறும் முனிவனாய் முடிபத்துடையான்; யாரையும் மேலுணரா ஆண்மையான் மிக்கான்.

### 2. இராவணனது வர்ணனை [172 (2)]

(1) தோள்—இருபது; மலையனைய தோள்கள்.

(2) நிறம்—கறுப்பு.

(3) பல்—மின்னல் போன்ற வெள்ளைப் (எயிறுகள்) பற்கள்.

(4) தலை—முடி; பத்துத்தலை. பொன்முடி, மணிமுடி, முத்திலங்கு முடி; வரைகள் போல உயர்ந்த முடி.

(5) வாய்—பத்து வாய்.

(6) மேனி—கடுத்த மேனி.

### 3. இராவணனது வீரம் [172 (3)]

ஆண்மையால் மிக்கவன்; கிரகங்களையும் ஆட்டி வைத்தவன்; கலிபுருடனுடைய வன்மையைக் கொண்டவன்; நிகரற்ற திறல் உடையவன்; குபேரனிடம் இருந்த புட்பக விமானத்தைக் கைப்பற்றினவன்.

## 4. இராவணனுடைய அறிவீனம், குறைகள் [172 (4)]

உணர்விலா அரக்கன்; 'எம்பெருமான்' என்று ஏத்தாது, தேவியும் பிரானும் வீற்றிருக்கும் திருமலை என்று போற்றாது, தன் தோள் வலியையே பெரிதாகக் கருதித், தருக்கு மிக்கு, மதிகெட்டுக், கயிலையை வந்தியாது எடுக்க முயன்றவன்.

## 5. இராவணனது தேர் [172 (5)]

செல்லும்போது பேரொலி எழுப்பிச் செல்லும் இயந்திரத் தேர்; வானவூர்தி; வலிய சக்கரங்களைக் கொண்டது; இந்தத் தேர் கயிலையைத் தாண்ட முடியாது தடைபட்டு நின்றது.

## 6. தேர் தடைபட்டபோது தேர்ப்பாகன் கூறியதும், இராவணன் மறுமொழியும் [172 (6)]

'இது கயிலாயம்; இறைவன் இருப்பிடம்; இங்கு உன் வீரத்தைக் காட்டாதே; தேரை முடுக்குவது தருமம் அன்று'—என்றெல்லாம் தேர்ப்பாகன் நற்புத்தி கூற—இராவணன் அவன்மீது கோபித்து "விடு விடு தேரை" என்று கூறித் தேரைச் செலுத்த தேர் ஓடாமையைக் கண்டு வெகுண்டு தன் தோள்களைக் கொட்டிக்கொண்டு கயிலைமலையையே எடுக்க முயன்றான்.

## 7. கயிலைமலையின் வர்ணனை [172 (7)]

கயிலை உயர்ந்த மலை; அழகிய மலை; குளிர்ந்த மலை; சிவனது திருமலை; மலைகளுட் சிறந்தது; பொன்மலை; பெருமை வாய்ந்த மலை.

## 8. இராவணன் கயிலையை எடுத்த வகை [172 (8)]

தனது வான ஊர்தியாகிய தேரைச் செலுத்தி 'யார் இவன்' இந்த மலைமீதிருப்பவன் என்று கூறி, தனது புய

வலியை நம்பி அஞ்சாமற் பாய்ந்து ஆர்ப்புடன் கண் சிவக்க ஓடிப் பற்களை இறுகணிவத்து, மிகவெகுண்டு, வேகமாய்த் தன் இருபது கைகளாலும், கைந் நரம்புகள் எழ மலையை எடுக்கலுற்றான்; அப்போது மலை துளங்கிற்று; திசைகள் நடுங்கின; வானோர் அஞ்சினர்; பூதங்கள் இரிந்து ஓடின; தேவி அஞ்சினள்.

9. இராவணன் இங்ஙனம் தனது மலையை அசைத்தபொழுது சிவனது செய்கை [172, 9—16]

இராவணன் கயிலையை எடுத்தபோது உமை அஞ்சுவதைக்கண்டு சிவபிரான் புன்சிரிப்புச் சிரித்து, 'அஞ்சாதே' எனக் கூறித் தமது கால் பெருவிரல் நுனியால் மலையைச் சிறிது ஊன்றினர். மலையின்கீழ்ச் சிக்குண்டான் இராவணன். அவனுடைய இருபது தோள்களும், பத்துச் சிரங்களும் நெரிப்பு உண்டன; கண்கள் பிதுங்கின, விழுந்தான் அரக்கன்; நோய் தாழமுடியாமல், 'கச்சி ஏகம்பமே' என்று கதறி அலறினன். பத்து வாயாலும் அழுதான்; முன்பு அஞ்சி ஓடின பூதங்கள் எல்லாம் அவன் மலையின் கீழ்ச் சிக்குண்டு படும்பாட்டைக் கண்டு சிரித்தன; இறைவன் சிறிது அழுத்தாமல் நன்ருய் ஊன்றி அழுத்தியிருந்தால் இராவணன் பிழைத்திருக்கவே மாட்டான்.

10. இராவணன் உய்ந்து அருள்பெற்றது [172, 17—18]

'இறைவா' என்று புலம்பின இராவணன் கைந் நரம்பு கொண்டு வேத கீதங்களை இறைவன் மகிழும்படி பத்து வாயாலும் பாடினன். நரம்பின் இன்னிசை கேட்டு மகிழ்ந்த பெருமான் இராவணன்மீது இரக்கம் கொண்டு, அவனுக்கு வாழ்நாளையும், இராவணன் என்ற பெயரையும், வாட்படையையும் கொடுத்தருளினர்.

## 178. வண்டு [173]

வண்டுக்கு ஆறுகால். வண்டு கருநீல நிறத்தது. புன்னை மலரின்மீது வண்டு உறங்கும். பொய்கையில்

வாளை பாய வண்டினம் இரிந்து ஓடும். தேவி கூந்தலில் வண்டு உலவும். வன்னி, கொன்றை, செந்தாமரை, கழுநீர் மலர், இவைகளில் வண்டு அணையும். வண்டின் சிறகு ஒன்றுவதால் கொன்றை மலர் விரியத் தேன் (மது) ஒழுகும்.

வண்டுகள் பாளை விரியும்தோறும் மது உண்ணும்; பண் பாடும்; கோடல், கொன்றை, கோங்கு, முல்லை இவைகளின் மீதில் வண்டின் பாடல் இசை கேட்கலாம். தெத்தெனா என்று வண்டுகள் இசைபாடும்; குழல் ஒத்த கீதம் பாடும். தாமரை மலர்மீதிருந்து யாழ் வாசிப்பது போல ஒலி செய்யும்.

## 179. வயல்—கழனி [174]

வயல்கள் சேறு உள்ளன; அன்னங்கள், கொக்குகள், நிறைந்தன; வரப்புகளை உடையன; செந்நெல் நிறைந்தன; நீர் நிறைந்தவை; தாமரை, நெய்தல், ஆம்பல் நிறைந்தன; பறை ஓசை, பாடல் ஓசை, மறை ஓசை உள்ளன.

கழனியில் இருல், கயல், களிறு, சேல், மலங்கு, வரால், வாளை எனப்படும் மீன் வகைகள் நிறையும்; ஆண் நண்டு வரக்கண்டு பெடை அதனுடன் திளைத்து மகிழும்; பெரிய செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் என்ற நெல் வகைகள் விளையும்.

வேள்வியின் புகைபோய் விண்மழை பொழியக் கழனியில் மாம்பழங்கள் சிதறித் தேன்பாயும்.

## 180. வர்ணனைகள் [175]

### 1. எருமை

தாமரைத் தடாகத்தில் தாமரைகளின்மீது எருமை பாய்வதால் தாமரை கிழிபட்டுத் தேன் சொரியும். கொழுத்த எருமை உயரத்தில் ஏறி மடுவிற் படியும்.

## 2. குருகு

கடற்கரை ஓரத்தில் குருகுகள் (நாரைகள்) தமது குஞ்சு என் நினைத்துத் தாழையின் மடல்களை நெருங்கி அணையும்.

## 3. கெடில நதி

தேன் உண்ட வண்டு பண்பாடுவதைக் கண்டு கெடில நதி வீசும் திரைகள் ஊசல்போல (ஊஞ்சல் போல) ஆடும். அன்னம் உறங்கும்.

கெடில நதிக்கரையில் தவளை பறைகொட்ட மடுவிற் குவளைமீது மூச்சுவிட்டுக்கொண்டு குஞ்சுகள் அருகே உலவிச் சேரும்.

## 4. சிவபிரான்

1. தேவிக்குப் பாதிப்பாகம் கொடுத்த காரணத்தால் ஒற்றியூர்ப் பெருமான் ஒன்றரைக் கண்ணன் ஆவான்.

2. யானையைச் சங்கரித்தபோது ஒடிந்துபோன வெண்கொம்புபோல இருந்தது அவர் (சிவன்) சூடிய இளம் பிறை; அதைச் சுற்றிக்கிடந்த பாம்பு, அந்தத் தந்தத்தைச் சுற்றியுள்ள கிம்புரியை ஒக்கும். அவரது நெற்றிக்கண் அந்தக் கொம்பிலிருந்து வீழ்ந்த முத்தை நிகர்க்கும்.

## 5. சிவபிரானது திருமுடி

சிவபிரானது திருமுடி கொன்றை விளங்குவதால் முல்லை (காட்டு) நிலமாகும்; வெண்டலை கிடப்பதால் சுடுகாடு ஆகும்; கங்கையிருப்பதால் கடலை ஒக்கும்; அரவு (பாம்பு) இருப்பதால் புற்றை நிகர்க்கும்; திங்கள் விளங்குவதால் வானை நிகர்க்கும்.

## 6. சிவபிரானது வெண்டலை

பெருமானது தலையில் தனது அருகே பாம்பு இருப்பதைக் கண்டு கங்காதேவி அச்சமுற்றாள்; அவளை ஒரு

மயில் என மயங்கி அந்தப் பாம்பு அச்சமுற்றது; பாம்பைக் கண்டு சடைமீதிருந்த பிறையும் மனம் குலைந்து ஏக்கம் உற்றது; இந்தக் கூத்தைக் கண்டு அவர் தலையிற் சூடியிருந்த வெண்டலை சிரித்தது.

### 7. நெய்தல் நிலம்

கடற்கரையிற் சங்கம் அருகில் ஏறி முத்தை ஈனும்.

### 8. மயில்

சங்கும், பறையும், கல்லவடமும் கலந்து பேரொலி செய்ய, மேகம் வந்துளதுபோலும் என்று எண்ணி மயில் களிப்புடன் வந்து ஏமாறும்.

### 9. மீன்கள்

மடுக்களில் வாளை பாய, வண்டினம் சிதறுண்டு ஓடின. பொய்கைகளில் பெண் யானை ஆண் யானைபோல வரால்கள் ஆணும் பெண்ணும் அணைந்து மகிழும்.

வண்டுகளால் வெளிப்பட்ட இனிய தேனைக் கயல்மீன் பருகி அநுபவிக்க, கெண்டை மீன்கள் ஒருபுறம் நீரில் வெளித் தோன்றும்.

### 10. முல்லை நிலம்

கொன்றை தன்னிடம் உள்ள பொன்னைக் காட்ட (இதோ பொன் எனக் காட்டுவது போலப் பொன்போலும் மலர்களைக் காட்ட), காந்தள் (அப்பொன்னைப் பெறவேண்டுவதுபோலக்) கையை விரித்துக் காட்ட, வண்டுகள் பாடகர் போலத் தேன் எனப் பாடல்களை ஒலிக்கும்—செழுமிய முல்லை நிலம்.

## 181. வரலாறுகள்—சரித்திரங்கள் [176]

தேவர்க்கும் தானவர்க்கும் சிவபிரான் அமுதளித்தது; பகீரதன் கொடிய தவம் செய்து வரம்பெற்றுக் கங்கையை

வரவழைத்தது; கங்கை விசையொடும் பாய்ந்து, அமரர் ஏத்த, ஆயிர முகங்களாய் வையகம் நெளிய, வெஞ்சினத் துடன் (வானின்று) இழிந்து வந்தது; சிலந்தி—திருஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து இறந்தபின் (கோச்செங்கட்) சோழனாகப் பிறந்தது; கச்சியில் தேவி தழுவச் சிவபிரான் தமது மார்பில் தேவியின் கொங்கைத் தழும்பைப் பெற்றது, நரி வாயிலிருந்த தசையை இழந்த வரலாறு, (உபமன்யு முனிவராம்) பாலகனார்க்குப் பரமன் பாற்கடல் ஈந்தது, மால் பூசித்துச் சக்கரம் பெற்றது—ஆகிய சரித்திரங்கள் குறிக்கப் பட்டுள.

## 182. வழிபட்டுப் பேறு பெற்றோர் [177]

சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றோருள் சகல சீவராசிகளும் அடங்கும்.

(1) தேவர், தேவதைகள், சிவகணங்களுள்—கணபதி, முருகன், உமை, காளி, இலக்குமி, திருமால், பிரமன், இந்திராதி தேவர்கள், சூரியர், சந்திரன், அக்கினி, யமன், வருணன், புதன், தண்டி, (விடை) நந்தி, குண்டோதரன், சங்கு கன்னன்.

(2) கணங்களுள்—பதினெண் கணங்கள், இயக்கர், கந்தருவர், கின்னரர், விச்சாதரர்.

(3) முநிவருள்—முனிகணங்கள், சப்த இருடிகள், அகத்தியர், பிருங்கி, மார்க்கண்டேயர்.

(4) அரசருள்—இராமர் முதலிய அரசர்கள்.

(5) உலகோர் — அடியார்களுள் — இசைபாடுவோர், ஏழுலகோர் எல்லோரும், எண் எழுத்துக் குறி அறிபவர், கற்றவர், சிட்டர், சீரார், சீலத்தார், தவத்தோர், நல்லவர், பித்தர், மறையோர், கன்னியர், மாதர்.

(6) பறவைகளுள்—கழுகு.

(7) ஊர்வனவற்றுள்—பாம்பு, சிலந்தி.

(8) பிறருள்—சித்தர், தானவர், வாலி.

(9) பிறவற்றுள்—கலைகள், மறைகள், வெள்ளானை.

## 183. வழிபாடு, பூசை முதலிய [178, 179]

### I. பூசைக்குரிய சாதனங்கள்

(1) அகப் பூசைச் சாதனங்கள்—காயம், ஞானம், துதிகள், நிறை, நேயம், புலனடக்குதல், மனம், வாய்மை.

(2) புறப் பூசைச் சாதனங்கள்—அகிற்புகை, அட்ட புட்பம், அலகிடுதல், *ஆனஞ்சு (பால், நெய் முதலிய), குங் குலியப் புகை, குங்குமக் குழம்பு, திலகம் தீட்டுதல், தீபம், தூபம், தூமம், நீர், புகை, பன்மலர், மெழுகுதல்.

(3) பூசை வாத்தியங்கள்—குழல், சங்கு, மொந்தை, யாழ், வீணை.

(4) வழிபடும் நேரம்—இரவும் பகலும், துஞ்சும்போது துயிலின்றி, நாள்தோறும், முப்பொழுதும்.

(5) துதிகள்—இருக்கு வாய்மொழி, மந்திரங்கள், வரிமுரி பாடல்.

(6) மலரும் மாலையும்—*அட்ட புட்பம், எருக்கங் கண்ணி, குவளைமலர்ப் பிளவு, கொன்றை, கந்தமாமலர், துணைமாலை, தேனைய மலர், நாள்மலர், பன்னூறுமலர், வண்ண நன்மலர், விரையாரும் மலர்.

### II. வழிபடுவோர்

அடியார், அமரர், இந்திரன், கந்தருவர், பிரமன், மறையவர்கள், மால்.

---

* **அட்ட புட்பம்:** அகப்பூசை (ஞான பூசை) செய்வார்க்கு: கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன: புறப்பூசைக்கு: புன்னை, வெள் ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை.

## III. வழிபடும் வகை

(1) அகங்குழைதல், அட்டாங்கமாகப் பணிதல், அன்புகூர்தல், ஐந்தெழுத்தோதுதல், காலை எழுந்து மலர் கொய்தல், குங்கிலியப் புகை காட்டுதல், கூத்து ஆடுதல், கைகூப்பித் தொழுதல், சங்கு ஒலிப்பித்தல், சாம்பலைப் பூசுதல், தரையிற் புரளுதல், தலையாரக் கும்பிடுதல், சிவனே என்றல், செஞ்சொன்மாலை சாத்துதல், தூயலர் தூவுதல், நீரில் மூழ்கி வருதல், நைந்துருகுதல், பண்ணிறுடன் துதித்தல், பாசம் அறுதல், புகழ்ந்து பாடுதல், புலம்பி நோக்குதல், மலர்தூவிப் பத்தியுடன் அழுதல், மறைகலந்த மந்திரம் ஓதுதல், முகமெலாம் கண்ணீர் மல்குதல், வஞ்சகம் அற்றிருத்தல்.

(2) ஆப்பிநீர், அலகு கொண்டு திருக்கோயிலைச் சுத்தி செய்தல், இண்டை முதலிய மாலைகளைக் கட்டுதல்; கட்டுவாங்கம், குண்டி, கபாலம், தாளம் இவைகளைக் கைக்கொள்ளுதல்; கல்லவடம் வாசித்தல்; கோவணம், திலகம், அணிதல்; சங்கம் ஊதுதல்; தியானித்துத் துதித்துப் பாடுதல், திருநாமங்களை ஓதுதல், திருநீறிட்டு நினைதல், பொய் முதலிய இல்லாமை, மந்திரத்தொடு நீர், நெய், பால் கொண்டு முழுக்காட்டுதல், மாலை, தூபம், சாந்தம், மலர் பறித்துப் பூக்கூடை சுமத்தல்; இவைதமை இரவில் கைவிளக்கேந்திச் சென்று புனைதல்.

## 184. (தேவர்களின்) வழிபாடு [180]

இந்திரன், பிரமா, அக்கினி, அட்ட வசுக்கள், கந்தருவர் முதலான தேவகணங்கள் சிவனை வழிபடுவார்கள். எத்திசையிலும் நின்று அன்புடன் தொழுவார்கள்; நித்தமும் ஏத்துவார்கள்; எப்பொழுதும் ஏத்துவார்கள்; மலரிட்டு முப்போதும் தொழுவார்கள்; சந்தி வேளையில் மலரிட்டுத் தொழுவார்கள்; தோத்திரங்கள் சொல்லிப் பரவுவார்கள்; எந்தையே சரணம் எனப் பரவுவார்கள்; இருக்கு வேதம் முறைமுறை கூறி ஏத்துவார்கள்; மலர்

கொண்டு கணங்கள் போற்றும். மந்திரங்கள் ஓதி வணங்குவார்கள்; ஒன்றுகூடி நின்று நான்கு வேதங்களையும் ஓதிப் பணிவார்கள்; காலையில் எழுந்து நறுமலர் தூவித் தொழுவார்கள்; வலம் வந்து வாழ்த்துவார்கள்; திருமால், பிரமன் முதலான தேவர்கள் ஒன்றுகூடி வேதமொழி கூறித், தூப நீராட்டித், தோத்திரங்கள் பல சொல்லித், தூபங்காட்டி "நாம் செய்யும் குற்றேவலைக் கருத்திற் கொள்வாரோ எம்பெருமான்" என்று இரங்கப், பெருமான் அவர்கள் வேண்டிய வரங்களை அளிப்பார்; வானில் கந்தருவர், அமரர் மத்தக், குழல், மொந்தை, வீணை, யாழ், வேத மந்திரங்கள் இவையுடன் நீர்கொண்டு வழிபடுவாரை இறைவன் வாழவைக்கின்றார்.

## 185. வழிபாட்டினால் வரும் பயன் [181]

இறைவன் திருவடிகளை உணர்ந்த உள்ளத்தவர்தாம் உணர்ந்த ஞானிகளாவர். இறைவன் வீற்றிருக்கும் தலங்களை அடைந்தவர்களை, தொழுதவர்களை, போற்றினவர்களை வினைகள் கூடா; இடர்கள் நலியா; பாவம் பீடியாது; இதற்குச் சான்று திருமாலும் பிரமனும்; இறைவனைத் தொழுது வணங்கினால் இம்மையிற் செல்வம் கூடும்; அம்மையிற் பிறவித் துயர் நீங்கும்; சேமித்த பொருளை நிரம்ப இழக்கநேரிடினும், இயமன் விரைய அழைக்கினும், 'கூத்தப் பிரானே! காத்தருள்' என்றால் பெருமான் நமது வாட்டத்தைத் தீர்த்தருளுவார். இறைவனுக்கு அடிமைப்படின் துன்பக் கடலைக் கடந்து உய்யலாம். 'எந்தையே எம் பிரானே' எனச் சிந்தித்தால் தீவினை தீரும். ஏறேறும் பெருமானுடைய கழலை ஏத்தினால் இயமன் அணுகாவண்ணம் அவர் நம்மைக் காத்தருளுவார். சிவபெருமானது திருக்கோயிலைத் தாழ்ந்து இறைஞ்சினால் தீவினைகள் தீரும். கள்ளத்தனமான எண்ணங்களை விட்டு அவரைத் தியானித்தால் ஞான ஒளியைப் பெறலாம். அவருடைய இரண்டு திருவடிகளைத் தியானித்தால் உலகத்தை ஆளவைப்பார் அவர். பலகாலம் அவர் நாமத்தைப் பயின்று

ஏத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நம் வினைகள் பறந்துபோகும். *சிவவேடம் பூண்டவர்களைத் துணை கொண்டு சிவத்தொண்டு செய்பவர் பிணியொடு கூடிய யாக்கையை ஒழிப்பர் - இனிப் பிறவார் என்றபடி.

## 186. வாத்தியங்கள் [182]

### (i)

உடுக்கை, கல்லலகு, கல்வடம், (பண் சுவைமிக்க) கின்னரம், குடமுழவம், குழல், கொக்கரை, கொடுகொட்டி, சங்கம், சச்சரி, தக்கை, தகுணிச்சம், தமருகம், தாளம், துடி, பறண்டை, பறை, பிடவம், முரசம், முழவு, மொந்தை, யாழ், வீணை ஆக இருபத்து மூன்று வாத்தியங்கள் சொல்லப் பட்டுள.

### (ii) வாத்தியமும் அடியார்களும்

அடியார்கள் தாழ்விலும் வாழ்விலும் கல்வடம், கின்னரம் முதலிய வாத்தியங்களைச் (சிவசந்நிதியில்) வாசிப்பர்.

### (iii) வாத்தியமும் சிவனும்

சிவபிரானிடம் உடுக்கை, கல்லலகு, கின்னரம், குழல், கொக்கரை, கொடுகொட்டி, சச்சரி, தக்கை, தமருகம், தாளம், துடி, பறை, யாழ், வீணை ஆகிய வாத்தியங்கள் உள்ளன. அவருக்கு நந்தீசர் குடமுழவு வாசிப்பர். கின்னரம், குடமுழவு, குழல், கொக்கரை, கொடுகொட்டி, சச்சரி, தாளம், பறண்டை, பறை, பிடவம், முழவு, மொந்தை இவைகளின் ஒலி முழங்க, ஒலிக்கு ஏற்ப, அவர் கூத்தாடுவர். மகிழ்ச்சியுடன் கேட்போர் காணப் பண் ணுடன் பல வாத்தியங்கள் முழங்கப் பெருமான் பாடுவர். யாழ், வீணை வாசிப்பர். குடமுழவு, குழல், கொக்கரை,

---

* சிவபிரான்—முருகவேள் இவர்களுடைய துணைப் பலத்தால் தொண்டு செய்பவர் இனிப் பிறவார் எனவும் பொருள் காண இங்கு இடந்தரும். [V. 97 - 24]

கைத்தாளம், மொந்தை இவற்றின் ஒலியுடன் குறட்பூதம் முன்பாடத் தாம் ஆடுவர். பல்லாயிரக் கணக்கான கருவிக ளுடன் பூதங்கள் இசை பயின்று இவருடனு ஆடும். சிவ பிரானது காது கேட்கும்படி பூதங்கள் கொடுகொட்டி, யாழுடன் பாடல்கள் பாடும். யாழுடன் பாடின் சிவனார் மகிழ்வர். அவரது (இடது) கையில் வீணை உண்டு; யாழ் உண்டு. சிவபிரான் சாம வேதம் முதலிய வேதங்களை வீணை யிசையுடன் பாடி ஆடுவர். சிவனது இணையடி நீழல் மாசில்லாத வீணையை நிகர்க்கும். இராவணன் கின்ன ரத்துடன் கீதம் பாட, அவனுக்குச் சிவபிரான் இரங்கினார். கின்னர வாத்தியத்துடன் பாடியாடும் பக்தர்களின் கண் ணுள் ஜோதியாய் விளங்குவர் பெருமான். சிவனது சந்நிதி யில் வாசிக்கப்படும் குழல், கொக்கரை, கொடுகொட்டி, தக்கை, தகுணிச்சம், தாளம், மொந்தை, வீணை இவை களின் முழங்கொலி அப்பர் பெருமானது நெஞ்சகத்தே குடிகொண்டு கூத்தாடி ஒலித்தன.

### (iv) வாத்தியமும் தலமும்

கின்னரத்தின் பேரிசை ஓயாது கேட்டிருந்த தலம் கடம்பூர். முழவொலி மிக்கிருந்த தலங்கள் குரக்குக்காவும், மணஞ்சேரியும்.

### (v) வாத்தியமும் பூசையும்

குழல், மொந்தை, யாழ், வீணை—இவை பூசையின் போது வாசிக்கப்படும்.

## 187. விழாக்கள் [184]

### 1. திருவிழாக்கள்—விழா அலங்காரங்கள்

விழாக்களாக அட்டமி முன் ஏழுநாள், ஆதிரை நாள், உத்திர நாள், பங்குனி உத்திர நாள், தேர்விழா கூறப் பட்டுள. கொடியேற்றத்துடன் திருவிழா நடைபெறும். திரு விழாக்களில் மணிப்பொற் கவரி வீசுதல், வீதிகள்தோறும்,

வெண்கொடிகளைப் பறக்கவிடுதல், சுடர்மணித் தீபங்களை ஒளிவீச வைத்தல், பவளமாலை, முத்துமாலை, வரிசைகளையும், முத்து விதானங்களையும் விளங்கவைத்தலங்கரித்தல் ஆதிய வழக்கங்கள் இருந்தன.

## 2. திருவிழாக் கூட்டத்தின் இயல்

வயதில் மூப்பு அணுகாதவர்கள் முன் செல்வர், மங்கையர்கள் பின் செல்வர்; திருநீறிட்டுப் பாடும் தொண்டர் கூட்டம் புடைசூழும். பக்தர்கள் முத்து விதானங்களை ஏந்துவர்; மங்கையர் மணிப்பொற் கவரிகளை வீசுவர்; திருவிழாக் கூட்டத்திற் பணியும் பக்தர் கூட்டம் ஒருபால், வெண்டலை மாலை அணியும் விரதியர் கூட்டம் ஒருபால். 'எம்பெருமானே! உன்னை ஏத்தும் நாள்தான் இன்பம் தரும் நாள், உன்னைத் தொழாத நாள் துன்பம் தரும் நாள்' என்று கூறுபவர் ஒரு சார்; இறைவனுடைய குணங்களைப் பாடிப் பரவிப் பித்தரைப் போலப் பிதற்றுபவர் ஒருசார்; ஆடல் பாடல் செய்து ஆனந்தம் மேலிட்ட அன்பர்கள் ஒருசார்; பரவசப்பட்டுத் தந்நிலை அழிந்து முட்டும் பக்தர்கள் ஒருசார்; பிணி தீரவேண்டிப் பணிபவர் ஒருசார்; பக்தி மேலீட்டால் விம்மி விம்மி அழுபவர் ஒருசார்; இறைவனது சேவடியையே சிந்திக்கும் மாதர் கூட்டம் ஒருசார்; 'இக் கூட்டத்தில் உமது பின்னே எம்மையும் அழைத்துச் செல்லும்' என வேண்டுபவர் ஒரு சிலர்; ஆணும் பெண்ணும் இக் கூட்டத்தில் எப்படி அண்மையிற் சென்று தரிசிப்பது என மயங்குபவர் ஒருசிலர்.

## 3. வாத்தியங்கள்

விழாக்களில் கல்லவடம், வெண்சங்கு, பறை—இவைகளின் பேரொலி நிறைந்திருக்கும். ஆனைகளின்மேல் முரசவாத்தியம் முற்படும்.

## 4. விழாநடக்கும் தலங்கள்

(1) திருவாரூரில்—திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா.

(2) திருஒற்றியூரில்—உத்திர நாள் தீர்த்த விழா.

(3) கச்சியில் — செல்வம் திகழும் விழாக்களின் பேரொலி எப்போதும் கேட்கும்.

(4) திருக்குறுக்கையில்—அட்டமி முன் ஏழு நாளும் கூத்தப்பிரான் வீதியில் திருவுலாப் போவர்.

(5) திருக்கோடிகாவில்—ஒய்வின்றித் திருவிழாக்கள் நடைபெறும்.

(6) திருக்கோளிலி—என்னும் தலத்தில் திருவிழாக் களின் ஒலி நீங்காது முழங்கும்.

(7, 8) திருப்புத்தூரிலும், திருப்பைஞ்ஞீலியிலும்—தேர் விழா நடக்கும் வீதிகள் விளங்கும்.

(9) திருமறைக்காட்டில்—செல்வமலி திருவிழாக்கள் திகழ்வனவாகும்.

### 5. விழாவும் சிவனும்

விழாக்களின் ஒலியாகவும், வேள்விகளின் ஒலியாகவும் சிவபிரான் விளங்குவார்.

## 188. விஞக்கள் : விஞவிடைகள் [185]

### 1. விஞக்கள்

இனியஞகிய ஈசன் ஏன் இராவணனைக் காலால் ஊன்றி வருத்தினர் ?

ஏன் திங்களையும் பாம்பையும் ஒன்றின் அயலிலேயே ஒன்றை வைத்துள்ளார்?

### 2. விஞவிடை

விஞக்கள் :

(1) யார் தேவர்க்கும் தேவராவார் ?

(2) யார் ஞானிகளாவார் ?

(3) பிறப்பு ஒழிதற்கு வழி எது ?

(4) வாழ்வு எது?

(5) எந்த எந்த ஊர்கள் காட்டினை நிகர்க்கும்?

(6) யாரிடம் காலன் வர அஞ்சுவான்?

(7) யார்க்கு இனிப் பிறப்பு இல்லை?

(8) மனிதரில் தலையாயவர் யார்?

(9) யார்க்கு அல்லல் இல்லை?

(10) யார் மீண்டும் மீண்டும் இறந்து பிறந்து உழல்வார்கள்?

(11) ஞானம் எது, விரும்ப வேண்டுவது எது?

(12) யார்க்கு வீடு எளிதாகக் கிட்டும்?

விடைகள் :

1. திருவாஞ்சியத்தில் தங்கி வாழ்பவரும், சிவனது திறத்தைப் பாராட்டி வாழ்பவரும், தேவர்க்கும் தேவராவார். அவர்களே செல்வர்; அவர்களுக்குத் துன்பம் இல்லை. பாவம் இல்லை.

2. சடைப்பெருமான் திருவடியை உணர்ந்த உள்ளத்தினரே உணரும் ஞானிகளாவர்.

3. 'திருக்கொடுமுடி' என்று அத்தலத்தின் பெயரைச் சொன்ன அளவிலே வினைக்கிடமாம் பிறப்பு ஒழியும்; பிறப்பு ஒழிதற்கு அதுவே கைகண்ட யோகவழி.

4. இறைவனது கழலை வாழ்த்தல்தான் வாழ்வாவது.

5. சிவனது திருக்கோயில் இல்லாத ஊர், சிறப்புடன் பல கோயில்கள் இல்லாத ஊர், திருநீறு அணியாதவர் வாழும் ஊர், பக்தியுடன் இறைவனைப் பாடாதவர்கள் வாழும் ஊர், பூசை வேளையில் சங்க ஒலி இல்லாத ஊர்; கொடி, விதானங்களுடன் திருவிழாக்கள் நடவாத ஊர், பூசைக்கு மலர் பறியாது உண்பவர்கள் வாழும் ஊர்— இவையெல்லாம் ஊர்கள் அல்ல, பெருங்காடே.

6. சிவனது திருவடியை உள்ளத்தில் வைத்தவர்களிடம் காலன் வர அஞ்சுவன்.

7. திருமருகற் பெருமானின் திறங்களை நினைப்பவர்க்கு இனிப் பிறப்பு இல்லை.

8. திருப்பூவணூர்ப் பெருமானைக் கனிந்த மனத்துடனும் கண்ணீர் மல்கவும் போற்றுபவரே மனிதரில் தலையாயவர்.

9. பஞ்சாங்கேசரி வள்ளலின் அடியார்க்கு அல்லல் இல்லை.

10. ஐந்தெழுத்தை ஓதாதவர்கள், சிவன் புகழைச் சற்றும் பேசாதவர்கள், திருக்கோயிலை வலம் வராதவர்கள், உண்பதன் முன் இறைவன் பூசைக்கு மலர் பறியாதவர்கள், நோய்தீரத் திருநீறிடாதவர்கள்—மீண்டும் மீண்டும் இறந்து பிறந்து உழல்வார்கள்.

11. திருநீறு நித்தலும் அணியும் அடியார்களை நினைப்பதே ஞானமும், விரும்ப வேண்டுவதும் ஆகும்.

12. திருமருகற் பெருமானது திருவேடத்தைத் தொழ வீடு எளிதாகக் கிட்டும்.

## 189. வினை—வினைபோம் வழி [186]

ஊழ்வினை, கலக்கும வினை, கொடுவினை, சிறை கொண்ட வினை, திண்ணென்வினை, தொடர்ந்த வல்வினை, படைகள் போல்வினை, பந்தித்து நின்ற பழவினை, மேலை வினைகள், வீடாத வல்வினை நோய், வெய்ய வினைப்பகை—என்றெல்லாம் வினை விளக்கப்பட்டுளது. ஆட்டிறைச்சியைக் கண்ட காக்கைபோல வினைகள் நம்மை மொய்க்கும், நிரைகள்போல வரும்; அட்ட புட்பங்களைக் கொண்டு வழிபட்டால் வினைகள் அகலும்; ஐந்தெழுத்தை ஓதித் திருநீற்றை அணிய, வினைகள் தீயிற்பட்ட விறகுபோல அழியும். 'எம்பா' எனக் கதறினால் தீவினைகள் தீர்ந்தொழியும்.

அண்ணுமலை, அதிகை, இடைமருது, ஒற்றியூர், கடம்பந்துறை, கடம்பூர், கொண்டீச்சுரம், செம்பொன்பள்ளி, திருவேட்களம், தில்லை, நல்லம், நின்றியூர், பராய்த்துறை, பாலைத்துறை, புகலூர், மயிலாடுதுறை ஆகிய தலங்களை வழிபடின் வினை மாய்ந்துபோம்; சிவனென்று மெள்ள நினைக்க வினைகெடுவது மெய்ம்மை.

## 190. விசயன் [186]

நாற்பத்தாறு இடங்களில் அருச்சுனனைப் பற்றிய விஷயங்கள் கூறப்பட்டுள அருச்சுனன் என்னும் பெயர் 2 இடங்களிலும், தனஞ்செயன் என்னும் பெயர் 3 இடங்களிலும், பார்த்தன் என்னும் பெயர் 23 இடங்களிலும், விசயன் என்னும் பெயர் 17 இடங்களிலும், 'பாண்டுவின் மகன்' என ஓரிடத்தும் வந்துள்ளன.

நெடுங்காலம் இறைவன் திருவடியைத் தியானித்து விஜயன் தவநிலையில் இருந்தான். அவனது தவத்துக்கு இறைவர் இரங்கினர். அவனது உயர் தவத்தின் நிலையையும், அவனது பத்தியையும், பலத்தையும் அறியும் பொருட்டுத் தாமும் பார்வதியும் ஆக இருவரும் வேட உருக்கொண்டனர். தாமொரு தோலுடை கட்டி, கோணிக் கொண்டையராய், வில் ஏந்திப், பலத்த சீழ்க்கை (விளி) யிட்டும், துடி முழக்குடனும், கொம்புடைய ஒரு பன்றியைக் காட்டில் வெருட்டி அதன்பின் சென்றார். விசயன் அதன்மீது அம்பு எய்தபோது தாமும் அப்பன்றியின் மீது அம்பு எய்து அதை அட்டனர். அது சம்பந்தமாக விசயனெடு போர்புரிந்தார். அவனது மெய் யம்பைத் தமது பொய்யம்பால் தடுத்தார். அவன் மார்பிற் படும்படி ஓர் அம்பு எய்தார். அவனைக் கலங்க வைத்தார். அவன் வலிமையைத் தேய்வித்தார். அவனுடைய தவத்துக்கும் பக்திக்கும் இரங்கி அவனுக்கு அம்பும், வில்லும், அம்பறுத் தூணியும், பாசுபதம் முதலிய படைகளும், கொடி நெடுந்தேரும் தந்தருளினர். தூய

மந்திரங்களையும் உபதேசித்தார். வேண்டிய வரங்களைத் தந்தார். சிவனது இவ் வேட உருக்கோலத்தையும் அப்பர் பெருமான் தரிசித்து மகிழ்ந்துள்ளார்.

## 191. வேசையர் [187]

காளையர்களைக் கண்டவுடனே இனிமையாய்ப் பேசி அவர்களை ஏமாற்றி வாழும் விலைமாதர்களுடன் சேர்தல் ஆகாது.

## 192. வேதமும் மறையும் [188]

### 1. வேதம் [188-1]

வேதமானது மறை, ஆரணம், சுருதி எனப்படும். வேதங்களுள் இருக்கு, சாமம் கூறப்பட்டுள. ஈசனை நினையாதவர்கள் வேதம் ஓதியும் பயனில்லை; வேள்விகள் செய்தும் பயனில்லை; திருவீழிமிழலை என்னும் தலத்தில் வேத ஒலியும் வேள்விப் புகையும் எப்போதும் ஒழிவின்றி விளங்கின.

### 2. வேதமும் சிவனும் [188-2]

சிவபிரானுடைய திருவடிகள் வேதப்பொருள்களை விளக்கி நின்று ஆடின; ஆறங்கம், நால் வேதம் இவைகளுக்கு அப்பால் விளங்குவர் பெருமான். அவரே ஆறங்கம் நால்வேதமாகவும் உள்ளார்; அவைகளை எடுத்து உரைத்தவரும் அவரே; இருக்கு ஆதிய நான்கு மறைகளும் ஈசனையே தொழுகின்றன என்ற கருத்தினை நினையாதவர்கள் கல் மனத்தர்கள். ஒலி சிறந்த வேதமும் வேள்வியுமாய் விளங்குவது ஐயாற்றப்பனுடைய திருவடித்தலம். பெருமான் ஓதாதே வேதங்களை உணர்ந்தவர். அவருடைய திருவடியில் நான்கு வேதங்களும் கழலணியாக நின்று “எங்கள் பெருமான் சுயம்பு மூர்த்தி, தாணு, என்றும் நிலைத்தவர்” என ஒலித்துக் கூறுகின்றன. பெருமான் சாமவேதமாய் விளங்குகின்றார். சாமவேதத்தைக் கூத்தொடும் பாட

வைத்தார் சாமுண்டியை; வேதத்தின் உச்சியில் அவர் விளங்குகின்றார்; நான்கு வேதங்களையும் கரைகண்டவர் அவர். இராவணன் தனது முன்கை நரம்பை வெட்டி இருக்குவேத இசைகளைப் பாட அவனுக்குப் பெருமான் அங்கை வாள் ஒன்று அருளினார்; வேதங்களைப் பண்ணி னவர் அவர்; விரித்தவர் அவர். அவர் கேட்கும் வீணை வேதப்பொருள் கொண்டது. அவர் வேதகீதர், வேதநாதர், வேத நாயகர், வேத நாவர், வேதப் படையர், வேத வித்து, வேதம் வல்லவர், வேத விதிகளைக் காட்டினவர், வேதக் கேள்விகளை விளங்க வைத்தவர்.

## 3. சிவபிரான் வேதம் ஆய்தல் [188-3]

நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் ஆய்ந்தவர் பெருமான்.

## 4. சிவபிரான் வேதத்தைப் பாடுதல், ஓதுதல், விரும்புதல் முதலிய [188-4]

தேவியின் ஊடலை ஒழிக்க வேண்டிப் பெருமான் சாம வேதம் பாடினர். உலகமெல்லாம் ஒடுங்கிய பின்பு வேதத் தொலி கொண்டு வீணை கேட்பார். சாமவேத இசையை வீணையைத் தடவி எழுப்புவார். சாமவேத இசை அவருக்கு விருப்பம். சாமவேதம் பாடுவார். நான்கு வேதங்களையும் எப்போதும் பாடுவார்.

## 5. வேதப்பொருள் சிவன் [188-5]

இருக்கு வேதத்தின் பொருளாவார் பெருமான்; வேதங்களின் விழுப்பொருள் அவரே.

## 6. மறை [188-6]

மறையும் ஆறங்கமும் அந்தணர்க்கு உரிய அரும் பொருளாவன. திருஒற்றியூர் என்னும் தலத்தில் ஓமாதிகள், நான்மறைகளை ஓதுதல்—இவை எப்போதும் நடைபெறும்.

## 7. மறையும் சிவனும் [188-7]

பெருமானே நான்மறைகளும் ஆறு அங்கமும் ஆனவர். தேவர்களும் காணாத மறையைப் பெருமான் ஊகித்துள்ளார். பெருமானுடைய மொழியெல்லாம் தூய மறைமொழி. நான்கு மறைகளுக்கும் இறைவர் அவரே. மறைவல்லவர் அவர்; நான்மறைகளும் காண இயலாத தன்மையர் பெருமான் என்றுணர்ந்து தேவர்கள் அவரை ஏத்தி வணங்குவார்கள். நான்மறைகளையும் ஆறங்கங்களையும் விரித்துக் கூறினவர் அவரே.

மறை ஓசை வழியெலாம் கேட்கும். மறை ஓதித் தம்மை நினைப்பவர் உள்ளத்தில் பெருமான் உறைவார். முத்தமிழும் நான்மறையும் அவரே.

## 8. சிவபிரான் மறைபாடுவது, ஓதுவது முதலிய [188-8]

பெருமான் மறை ஓதும் நாவர். அழகிய நான்கு மறைகளையும் அவர் பாடினார்; மறை நான்கையும் அங்கம் ஆறினையும் ஆய்ந்தார் அவர்; ஓதினார் அவர்; நான்மறையுடன் பலவகையான கீதங்களையும் பாடினார் அவர். மறைபாடலோடு ஆடலும் செய்வர். மறைபாடிப் பிச்சைக்கு என்று வீடுகள்தோறும் திரிந்து வாழ்வார். மறையுடனே சிறந்த கீதங்களைக் கேட்டவர் அவர்; மறைகளைத் தமது வாக்கால் விரித்து உரைத்தவர் அவர்; நான்கு மறைகளையும் அங்கம் ஆறினையும் விரித்தவர் அவர்.

## 9. மறைப்பொருள் சிவன் [188-9]

தூய மறையின் பொருளாவார் பெருமான். மறைகள் சொன்ன ஒவ்வொரு துறையின் தூய பொருள் அவரே. மந்திரமும் அவர், மறைப்பொருளும் அவர். நான்மறையின் நற்பொருள் அவர்.

## 10. வேதமும் மறையும் [188-10]

மறையுடைய வேதத்தை விரித்தவர் பெருமான். அவரே வேதமும் மறையுமாய் விளங்குகின்றார்.

### 11. வேதம் ஓதி, மறை ஓதிப் பூசித்தல் [188-11]

தேவர்கள் இசையுடன் இருக்கு வேதம் சொல்லி இறைவனைப் பணிந்தேத்துவர். மறையவர்கள் இருக்கு வேதம் ஓதி வழிபட்ட கோயில் (மீயச்சூர்) இளங்கோயில் (பால ஸ்தாபன கோயில்). இருக்குவேதம் சொல்லி ஏத்துபவர் துயரைச் சுருக்குவார், புகழைப் பெருக்குவார் இறைவர். இருக்குவேதத்தை ஓதித் தூய காவிரியின் நன்னீரால் இறைவனுக்கு அபிஷேகம் (முழுக்காட்டு) செய்வார் தொண்டர்கள்; மறைஓதிப் பலபல பூசைகளைச் செய்வார்கள். மறைகலந்த மந்திரங்களை ஓதி நீர்கொண்டு வழிபடுபவர்களுக்கு வான் ஆட்சியை இறைவர் கொடுப்பார். நான்கு வேதங்களாலும் தேவர்கள் பெருமானை விருப்புடன் பரவி ஏத்துவார்.

### 12. வேதம் (மறை) இறைவனைப் பூசிப்பது [188-12]

இருக்கு வேதம் முதலிய வேதங்கள்—(நான்மறைகள்) ஈசனையே தொழுதேத்தும். நான்கு மறைகளும் ஓலமிட்டுப் பூசித்து இறைவனிடத்தே வரங்களைப் பெற்றன.

### 13. அங்கமும் சிவனும் [188-13]

ஆறு அங்கங்களையும் ஆக்கினவர், ஆய்ந்தவர், ஓதினவர், ஓத வைத்தவர், பாடினவர், விரித்தவர் ஆறு அங்கங்களே தாமாக விளங்குபவர்—இறைவர். அந்தணர்களின் அரும் பொருளாவன ஆறங்கங்களும்; ஆறு அங்கங்களுக்கு அப்பாற்பட்டவர் பெருமான்; ஈசனை நினையாதவர்கள் ஆறு அங்கங்களை ஓதி உணர்ந்தாலும் பயன் ஏதும் பெறார்.

## 193. வேள்வி [189]

(i)

திருவாஞ்சியம் என்னும் தலத்தில் நான்மறை ஆறங்கம் ஓதி வேள்வி பயிலும் அந்தணர் வாழ்ந்தனர். அந்த வேள்வியின் புகைபோய் மேகமாய் மழை பொழியும்.

## (ii) வேள்வியும் சிவனும்

காலையிலும் மாலையிலும் பசுவின் நெய் கொண்டு அந்தணாளர் வெந்தழல் உருவனாம் சிவனை வேள்வி செய்து வழிபடுவர். ஐவேள்வியும் ஆறங்கமும் சிவபெருமானே; தம்மைப் புறக்கணித்து இந்திரன் செய்த வேள்வியை அவர் அழிப்பித்தார். தக்கன் யாகத்தில் யாகமூர்த்தியின் தலை அறும்படி செய்தார்; வேள்வியின் பயன் சிவபிரானே. வேள்வி போற்றுவதும் சிவனே. வேள்வியின் ஒலியும் அவரே; வேள்வியுள் விளங்குபவரும் அவரே.

# 194 சீவராசிகள் [190]

['மக்கள்' தனித் தலைப்பு 165 பார்க்க]

## I. ஊர்வன

**1.** சிலந்தி—திருஆனைக்காவில் தன் வாய் நூலால் பந்தர் இழைத்து வழிபட்ட சிலந்தியை அரசாள அருளினார் பெருமானார். [நாயன்மார் என்னும் தலைப்பு 146 இல் 'கோச்செங்கட் சோழன்' என்னும் தலைப்பைப் பார்க்க.]

**2.** எறும்பு—இரண்டு முனைகளிலும் எரிகின்ற கொள்ளியின் இடையே அகப்பட்ட எறும்புக்கு உவமிக்கின்றார் தமது உள்ளத்தை அப்பர்.

**3.** பாம்பு—பாம்பு மணியை உமிழும்; நெருப்பை உமிழும்; அது படத்தை உடையது; படத்திற் புள்ளிகள் உண்டு, ரேகைகள் உண்டு; வாள்போலக் கூரியது பல்; பாம்பு கொல்ல வல்லது; படம் எடுத்து ஆடும்; அதன் கண் பயங்கரமாயிருக்கும்; சிவபிரான் தலையில் உள்ள பாம்பு அவர் தலையில் உள்ள கங்கையை மயில் என்று அஞ்சி நடுங்கும்.

**4.** புழு—நமது உடலிற் புழுக்கள் உள்ளன. தாம் புழுவினும் கடையர் என்றும், புழுவுக்குக் குணம் நான்கு; எமக்கும் குணம் நான்கு—என்றும் கூறுகிறார் அப்பர்.

## II. நீர் வாழ்வன

ஆமை—'எரியின்மேல் உள்ள உலைநீரில் உள்ள ஆமை தனக்கு நேரிடப்போகும் தீங்கை அறியாமல் மகிழ்வது போலத் தெளிவற்றவனாய் நான் உள்ளேன்' என்கின்றார் அப்பர். கிணற்றில் உள்ள ஆமை கடல் ஆமையைக் கண்டு என் கிணற்றுக்கு உன் கடல் ஒப்பாகுமா எனக் கேட்கின்ற அறியாமையை ஒக்கும் பாவிகள் சிவன் பெருந்தன்மையைக் காண்பதரிது என்பது.

தவளை—தவளை பறைகொட்டுவது போல ஒலி செய்யும்.

தேரை—பாம்பின் வாயிற் பட்ட தேரை பல பல நினைக்கும்.

நண்டு—வளையினின்றும் வெளியே போயிருந்த ஆண் நண்டு திரும்பிவரக் கண்டு பெண் நண்டு மகிழும் (வயல்களில்).

மீன்களுள்—பல்வகை கூறப்பட்டன—அவை தாம—இருல், கயல், களிறு, கெண்டை, கொய், சுறா, சேல், மலங்கு, வரால், வாளை. இருல் மீன் முடங்கி இருக்கும். கயல் செந்நிறம், வண்டுகள் உமிழ்ந்த மலர்த் தேனைப் பருகிப் பாயும். சேல் மீன்கள் கயல்மீன்களுடன் கூடி இனிய பழங்களை உண்ண விரும்பித் தாம் உள்ள குளத்தை விட்டு நீங்கிப் பெரிய தடாகத்தை அடைய, 'அங்கே பெண்கள் குதித்து விளையாடுதலைக் கண்டு பழம் கிட்டாது என மனம் புழுங்கி ஏமாறும். களிறு என்னும் மீன் கழனிகளில் இருக்கும்; கெண்டை மீன் பெண்களின் கண்ணுக்கு ஒப்பாகும்; காவிரி வெள்ள நீரில் "கொய்" எனபபடும் மீன்கள் வரும்; சுறாமீன் மன்மதனுக்குக் கொடி; மலங்கு' மீன் வயலிற் கிடக்கும்; வரால் மீன் வயல் நீரில் இருக்கும்; அதை நரி உண்ணும்; பெண் யானையும் ஆண் யானையும் போல வரால் மீன்கள் ஆணும் பெண்ணும் அணைந்து மகிழும்; வாளை மீன்கள் மடுக்களில் பாய்ந்து குதிக்கும்; சேல் மீனாய் நின்றதை (மச்சாவதாரத்து திருமாலை)ச் சிவபிரான் அட்டனர்.

ஈநலே—ஐம்புலன்கள் ஈமுதலேக்கு ஒப்பிடப்பட்டுள.

## III. பறவை

அன்னம்—தாமரையில் வீற்றிருக்கும்; நீர் அலைகள் ஊசல்போல ஆட்ட மலர்மேல் உறங்கும்; அன்னம் உறங்க வண்டு பண்பாடும்.

கருடன்—திருமாலின் வாகனம்; இது பறவைகளின் அரசு. இதைக் கொன்று பின்பு உயிர் அளித்தார் பெருமான்.

கழுகு—இறந்துபட்ட உடலே அரித்துத் தின்னும்.

காக்கை—இறந்துபட்ட உடல் காக்கைக்கு இரை யாகும்; 'முயல்விட்டுக் காக்கைப் பின் போவது' என்பது ஒரு பழமொழி. ஆட்டை (ஆட்டிறைச்சியை)க் காக்கை விரும்பும்.

கிளி—ஆண் கிளி பெண் கிளியோடு ஆடி மகிழும். தேன்போல் இனிய மழலைமொழி பேசும்.

கின்னரம்—பெரிய ஒலியுடன் பாடும்.

குயில்—பொழில்களில் குயில் தனது மெல்லிய குரலேக் காட்டும். பேடையொடு விளையாடும்.

குருகு—நீர்ப் பறவைகள் ஒன்றுகூடி விளையாடி இறகு களை உலர்த்தும். தனது குஞ்சு என நினைத்துத் தாழை மடலேப் புல்கும்; இதன் கால் செந்நிறம்; (காஞ்சி) பூஅரசு மரத்தில் உட்காரும்.

கொக்கு—வயல்களிற் காணலாம். மரக்கொக்கு மரத் தின் மீதிருந்து கூச்சலிடும்.

கொதுகு—(சமணர்) கண்களில் எப்போதும் நீங்கா திருக்கும்.

கோழி-சேவல்—இது முருகவேளின் கொடி; பேடை யொடு கூடிவரும்.

நாரை—பேடையொடு விளையாடும்; கடற்புறம்போய் இரைதேடும். வெண்ணிறத்தது; கால் செந்நிறம்.

பகன்றில்—அழகிய பட்சி. ஆணும் பெண்ணும் பிரியாதிருக்கும்.

பருந்து (பாறு)—வெண்டலையை நாடி உண்ணவரும்.

புறு—பெடையொடு விளையாடும்.

பூவை—மழலைமொழி பேசும்.

மயில்—கங்கையை மயில் என்று அஞ்சி நாகம் அடங்கும். மயில் நடிக்கும். அழகிய சாயலை உடையது; தழைத்த பீலிகளைக் கொண்டது. (மழை) மேகத்தைக் கண்டு மகிழ்ந்து கூச்சலிடும். முருகனுக்கு வாகனம மயில்.

வண்டு—தனித் தலைப்பு 178 பார்க்க.

## IV. விலங்குகள்

ஆ-(பசு)—பால் தரும்; இது தரும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் சிவபிரானுடைய அபிஷேகத்துக்கு உதவும்.

எருது-(ஏறு)—சிவபிரானது வாகனம்.

ஏனம்-(பன்றி)—வளைந்த பற்களை உடையது; வெண்ணிறமான மருப்பினை உடையது; சேற்றிற் கிடக்கும். திருமால் ஏனமாய்ப் பூமியை இடந்தார்; சிவபிரான் வேடனாய்ச் சென்று பன்றியை எய்தார்.

ஓரி-(நரி)—சுடுகாட்டில் வெண்டலைகளைக் கடிக்கும்; குறுநரிகள் ஊளையிடும். வரால் மீனை நரி உண்ணும்.

குதிரை—தேர்களுக்குப் பூட்டப்படும்; நரியைக் குதிரை ஆக்கினர் இறைவர்.

குரங்கு—பொழில்களிற் குதித்து விளையாடும்.

நாய்—இழிவான பிராணி.

பிடியும் களிறும்—இன்வ காதலுடன் பிணை பயிலும் (கூடும்).

மந்தி—வண்டுகள் மூலம் ஒழுகி விழும் தேனை மந்திகள் நுகரும்.

மான்—சிவபிரான் மான்தோலே அணிந்துள்ளார். மானைக் கையில் ஏந்தியுள்ளார். பெண்களின் கண்ணுக்கு மானின்கண் உவமை.

முயல்—முயலைவிட்டுக் காக்கையின் பின் போனது போல—என்பது ஒரு பழமொழி.

மேதி-எருமை—தாமரைக் குளத்தில் எருமை பாயத் தாமரை கிழிபட்டுத் தேன் சொரியும்.

திருச்சிற்றம்பலம்.